வரு.76 இல. 28 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

28 பக்கங்கள் 100/-

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

තිනකරන් වාරමන්ජරී

2024 ஜூலை 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை July 21 Sunday, 2024







/ Thinakaran.lk / ThinakaranLK













# பல்கலை கட்டமைப்புக்குள் அச்சுறுத்தும் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும்



## பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்க வேண்டியது அவசியம் – மட்டு. பூனானையில் ஜனாதிபதி

பல்கலைக்கழகக் கட்டமைப்புக்குள் அச்சுறுத்தல் அரசியலை இல்லாதொழிக்க வேண்டுமெனவும், மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்க வேண்டுமானால் பல்கலைக் கழக முறைமையை மறுசீரமைக்க வேண்டுமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களைச் சீர்குலைக்காமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற்றுவதற்கான காலம் வந்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பு பூனானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தை நேற்று (20) மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னர் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக்

06

## கொழும்பு ஆடி வேல் விழா





கொழும்பு ஆடிவேல் விழாவின் வெள்ளி ரதபவனி நேற்றுக் காலை கொழும்பு செட்டியார் தெரு புதிய கதிரேசன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டுச் சென்று, பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை அடைந்தது. இவ்வாலயத்தில் எழுந்தருளியுள்ள சுவாமிக்கு இன்று (21) காலை 10.30 மணி முதல் மாலை 6 மணி வரை விஷேட பூஜைகள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து முருகப் பெருமான் கதிர்காமத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் வீற்றிருந்து அருள் பாலிப்பார்.

(படங்கள்: வட கொழும்பு தினகரன் நிருபர், எம். நசார்)

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர்

# ஹட்சனுக்கு ஜே.வி.பி கொலை அச்சுறுத்தல்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவை இலக்கு வைத்து ஜே.வி.பி மத்திய குழு உறுப்பினரும் தேசிய மக்கள் படையின் தேசிய செயற்குழு உறுப்பினருமான வசந்த சமரசிங்க விடுத்த மரண அச்சுறுத்தல் காரணமாக ஹட்சன் சமரசிங்கவின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வசந்த சமரசிங்க விடுத்துள்ள கொலைமிரட்டல் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வருகின்றதுடன், அதன் உள்ளடக்கத்தில் ஹட்சன் சமரசிங்கவின் உயிருக்கு பெரும் ஆபத்து உள்ளது. தேர்தலின் மூலம் இந்த கொடுக்கல் வாங்கலை தீர்த்துக்கொள்வதாகவும் நாட்டை விட்டு தப்பிச் செல்ல இடமளிக்கப்போவதில்லையெனவும் ஒளிந்துகொள்வதற்கு இடம் கிடைக்க மாட்டாதென்றும் அவ்வாறு நாட்டை விட்டு தப்பிச் சென்றாலும் அந்த நாடுகளிலும் இருப்பது தமது கட்சியினரே என்றும் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சட்டத்தின் முன் தப்பிக்க முடியாதென்றும் குறிப்பிட்டுள்ள வசந்த சமரசிங்க, உலக நாடுகளிலுள்ள இலங்கையர் தமது திசைகாட்டி கட்சியுடன் கைகோர்த்து நிற்கிறார்கள் என்றும், ஹட்சன் போன்றோர் சந்திரனில் தான் இருக்கவேண்டிவரும் என அச்சுறுத்தும் தொனியில் அவர் தெரிவித்துள்ளார். இந்நாட்டின் மிகவும் அனுபவம் வாய்ந்த இலத்திரனியல் ஊடக தொடர்பாளர்களில் ஒருவரான ஹட்சன் சமரசிங்க, அனுபவமிக்க ஊடக நிர்வாகி ஆவார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான இவர் ஆறாவது முறையாகவும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியைப் பெற்றுள்ளார்.



## கொஹுவலை வாகன நெரிசலுக்கான தீர்வு



கொஹுவலை சந்தியில் நிலவும் வாகன நெரிசலை கட்டுப்படுத்தும் நோக்கில் ஹொரன - கொழும்பு பிரதான வீதிக்கு மேல் கொஹுவலையில் அமைக்கப்பட்ட மேம்பாலம் பிரதமர் தினேஷ் குணவர்தன, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன ஆகியோரால் (17) திறந்து வைக்கப்பட்ட போது...



06

## ஸ்ரீ லங்கன் விமான சேவை விற்பனை திட்டம் இரத்து

தனியார் மயமாக்கல் நிறுவனம் அறிவிப்பு

## ரூ.1,700 சம்பளம் கிடைக்கும் வரை ரூ.5,000 இடைக்கால கொடுப்பனவு

ஜனாதிபதியிடம் CWC தலைவர் செந்தில் கோரிக்கை



செய்தி 06ஆம் பக்கம்

## பாராளுமன்றம் 23ஆம் திகதி முதல் 26 வரை கூடும்

செயற்கை நுண்ணறிவு சபை ஒத்திவைப்பு விவாதம் 24ஆம் திகதி



அரச நிதி முகாமைத்துவம் சட்டமூலம் மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் (18) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக

06

## நாட்டில் 18 இலட்சம் பேரின்

# மின் கட்டண பட்டியல் ரூ. 280 வரை குறையும்



மின்சார கட்டணத்தில் வழங்கப்பட்ட நிவாரணத்தின் படி 18,43,762 மின்சார பாவனையாளர்களுக்கு அதிகபட்சம் மாதாந்தம் 280 ரூபாவை மட்டுமே மின் கட்டணமாக செலுத்த வேண்டி ஏற்படுமென

06

## அலி சப்ரி ரஹீம் MP கைதாகி பிணையில் நேற்று விடுவிப்பு

நாளை நீதிமன்றில் ஆஜராகவும் உத்தரவு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தினால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் நேற்று (20)

06



06

## தீர்வுக்காக வன்முறையற்ற ஜனநாயக வழிமுறை

மக்கள் அணி திரண்டால் நானும் தயார்



06

## யாழ். நகரிலிருந்து கதிர்காமம் சென்ற பஸ் மூதூரில் விபத்து

சாரதி உட்பட 54 பேர் காயம்

## எங்கள் கருத்து...

### பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்துகளை விதைக்கும் எதிரணி!

மக்களிடமிருந்து வரி அறவிடுவதென்பது உலகுக்குப் புதுமையானதல்ல. உலக நாடுகளின் அரசாங்கங்கள் சாதாரண மக்களிடமிருந்து மாத்திரமன்றி, வர்த்தகர்களிடமிருந்தும் வரிகளை அறவிடுகின்றன.

உலக நாடுகளில் ஜனநாயக ஆட்சிமுறைமை தோற்றம் பெறுவதற்கு முன்பாகவே வரி அறவிடும் நடைமுறையானது அமுலில் இருந்தமைக்கு ஆதாரங்கள் உள்ளன. பண்டைய மன்னராட்சிக் காலத்தின் போது விவசாயிகள் உட்பட அனைத்துத் தொழிலாளர்களிடமிருந்தும் அரசனால் வரி அறவிடப்பட்டு வந்துள்ளது. அதாவது மக்கள் தாங்கள் பெறுகின்ற வருமானத்தின் சிறியளவான ஒரு பகுதியை அரசுக்கு வரியாகச் செலுத்த வேண்டுமென்பது உலக நியதியாகும்.

06

## இந்தியாவின் குஜராத்திலிருந்து

# இலங்கை நோக்கி புறப்பட்ட சரக்குக் கப்பலில் தீ விபத்து

கோவாவுக்கு தென்மேற்கே சம்பவம்

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது



இந்தியாவின் குஜராத்திலிருந்து இலங்கை நோக்கி புறப்பட்டு வந்து கொண்டிருந்த சரக்குக் கப்பலில்

06

# ஜனாதிபதி தேர்தலுக்கு ரூபா 1,000 கோடி

## வாக்குச் சீட்டுகளை அச்சிட ரூ. 80 கோடி

தேர்தல் செலவுகள் ஒழுங்குமுறை சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும்




இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு 1,000 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதுடன், வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்காக 80 கோடி ரூபா செலவாகுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.எல்.

06

# பங்களாதேஷில் வன்முறை; ஊரடங்கு சட்டம் அமுல்

50 பேர் பலி; 1,000 பேர் வரை காயம்



பங்களாதேஷ் முழுவதும் இடம்பெற்று வரும் வன்முறை சம்பவங்களை தடுக்கும் வகையில் அங்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டாக்காவில் சுமார் 15 நாட்களாக நடைபெற்று வரும் மாணவர் போராட்டத்தை ஒடுக்க அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்போது இடம்பெறும் வன்முறை சம்பவங்களால் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன்

06

# கொழும்பு ஆடிவேல் விழா நிகழ்வுகள்



சம்மாங்கோடு, பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகள் கோவில் ஆடிவேல் விழா நிகழ்வுகள் இன்று (21) காலை 6.30க்கு வெள்ளவத்தை மாணிக்க கங்கை சங்கமத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்றதைத் தொடர்ந்து காலை 10.00 மணிக்கு மிருதங்க வித்துவான் பிரம்ம ஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மாவின் இசையுடன் சிறப்பு இசை நிகழ்ச்சி நடைபெற்று 11.30 க்கு விஷேட பூஜை நடைபெற்று கதிர்காமக் கந்தனின் விபூதி பிரசாதம் வழங்கப்பட்டு அமுது வழங்கப்படும்.

மாலை 4 மணிக்கு துர்க்கை அம்மனுக்கு நவ சங்காபிஷேகம் நடைபெறும் வழமையான பூஜைகளைத் தொடர்ந்து வேல்விழா அர்ச்சனை நடைபெறும். கலைமாமணி மாலதி, லக்ஷ்மன் சுருதி இசைக்குழுவினரின் இசையில் மதிச்சியம் பாலா அருணா சகோதரிகள் வழங்கும் பக்தி இசை நிகழ்ச்சிகள் அதனைத் தொடர்ந்து இடம் பெறும்.

**ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில், பம்பலப்பிட்டி.**

பம்பலப்பிட்டி ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் இன்று (21) காலை 10.30 மணிக்குத் பூஜைகள் ஆரம்பமாகும். மாலை 6 மணி வரை விஷேட பூஜைகள் நடைபெற்று முருகப் பெருமான் கதிர்காமத்தில் வீற்றிருக்கும் திருக்கோலத்தில் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார்.

**ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி**

கொழும்பு 13 ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் இன்று 21ஆம் திகதி காலை 7.00 மணிக்கு பன்னீர் காவடி கட்டி முத்திரை தரித்து அபிஷேகத்துக்குரிய பால் குடம் எடுத்து வீதி வலம் வந்து அபிஷேகம் நடைபெற்று மகேஸ்வர பூஜையுடன் விழா நிறைவு பெறும். மாலை 6.00 மணிக்கு வசந்த மண்டபத்தில் சண்முகார்ச்சனை நடைபெறும்.

**ஆடிவேல் விழா கதிர்காம முருகனின் ஆடி மாதத்தில் நடைபெறும் மூன்றாம் திருவிழாவின் இறுதியிலே கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடப்படும் ஒரு விழாவாகும். இவ்விழா 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமானது என்று கருதப்படுகிறது.**

**திங்கட்கிழமை(22) நிகழ்வுகள்**

பம்பலப்பிட்டி சம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் காலை 7 மணிக்கு பூஜைகள் நடைபெற்று ஆடிவேல் விழா அர்ச்சனை நடைபெறும். 11.30 மணிக்கு விஷேட பூஜை நடைபெற்று மாலை 6.30க்கு சுவாமி சித்திரத் தேரில் எழுந்தருளி காலி வீதி வழியாக அடியார்களுக்கு அருள்பாலித்து காலிமுகத்திடலை வந்தடைவார்.

ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி சிவசுப்ரமணிய சுவாமி கோவிலில் வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சித்திரத் தேரில் சுவாமி எழுந்தருளி ஜிந்துப்பிட்டி தெரு, மேட்டுத்தெரு, ஆட்டுப்பட்டித் தெரு, கபோஸ் லேன், சென் ஜோன்ஸ் வீதி, பிரதான வீதி, 5ஆம் குறுக்குத் தெரு, நொரிஸ் வீதி, 4ஆம் குறுக்குத் தெரு, கெய்சர் வீதி, செட்டியார் தெரு, ஸ்ரீ கதிரேசன் வீதி வழியாக வலம் வந்து ஜிந்துப்பிட்டி ஆலயத்தை வந்தடைவார்.

இந்த ஆலய நிகழ்வுகளில் அடியார்கள் கலந்து கொண்டு முருகப்பெருமானை வழிபட்டு அருட்கடாட்சம் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

**எச்.எச். விக்கிரமசிங்க**



150ஆவது வருட ஆடி வேல் விழா வெள்ளிரதபவனி 2024 நேற்றுக்காலை செட்டியார் தெரு, புதிய கதிரேசன் ஆலயத்தில் இருந்து புறப்பட்டு செல்லுகையில் பிடிக்கப்பட்ட படங்களை காணலாம்

# ஜனாதிபதி ரணிலின் இரண்டு வருட சாதனைகள்



நெருக்கடிகள் வரும் போது சிலர் பாதுகாப்பை பலப்படுத்திக்கொள்கிறார்கள். ஒரு சிலர் சிறகு தேடுகிறார்கள். அதனால் நெருக்கடிகளில் இருந்து தப்பியோடவும், நழுவிச் செல்லவும் முடியுமே தவிர உக்கிரமடையும் சவால்களை வெற்றி கொள்ள முடியாது.

நெருக்கடிகளை சபிப்பதாலும் அதற்கான காரணத்தை கண்டு பிடிப்பதாலும் நெருக்கடியின் பலன் கிடைக்காது. மாறாக சரியான முகாமைத்துவம் மட்டுமே உலகத்தினதும், நாட்டினதும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிவகுத்தது.

அந்த வகையில் தடம் புரண்டு ஓடிய இலங்கையின் பொருளாதாரத்தை சரியான தடத்தில் ஏற்றி வைத்தவர் என்றே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை காண முடிகிறது.

2022 ஆண்டில் நாட்டின் பொருளாதாரம் 7.8 சதவீதத்தினால் திண்டாட்டம் கண்டது. வெளிநாட்டு கையிருப்பு வற்றிப் போய், பணவீக்கம் உக்கிரமாக காணப்படும் நாடுகள் வரிசையில் இலங்கை நின்ற வேளையில், நாட்டு மக்கள் உணவுக்காகவும், எரிபொருளுக்காகவும், உரத்துகாகவும் வரிசையில் காத்துக்கிடந்ததை எளிதில் மறந்து விடமுடியாது.

வியாபாரங்கள் முடங்கிப் போனதால் வருமான வழிகளும் மறைந்து போயின வைத்தியசாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு பாடசாலைகள் மூடிக்கிடக்கிடந்தன. நாளாந்தம் 10–12 மணித்தியாலங்கள் மின் வெட்டு என்று மக்களின் அத்தியாவசிய வாழ்க்கைக்கு தேவையான பல விடயங்களை இழந்து தவித்ததால் நாட்டின் செயற்பாடுகள் தலைகீழான நிலைமையில் காணப்பட்டன.

**கடன் செலுத்த முடியாமல் அல்லல் பட்ட நாடு!**

மேற் சொன்ன விடயங்களோடு நின்றுவிடாமல் 2022 ஆம் ஆண்டில் பல வகைகளில் இலங்கைக்கு ஆபத்துகள் நேர்ந்தன. அந்த ஆண்டில் படுகடனை செலுத்த முடியாமல் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டது. அது வரையில் இந்த நாடு அப்படியொரு நிலையை கண்டிருக்கவில்லை. ஒரு நாடு என்ற வகையில் வெளிநாடுகள் கொடுக்கல் வாங்கல்களை நிறுத்திக் கொண்டன. வெளிநாடுகளின் கடன் உதவியில் நடைமுறைப்படுத்திய அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் அந்த நாடுகள் இடைநிறுத்திக் கொண்டன.

இப்படியே ஆறு காலாண்டுகள் அல்லாடிக் கொண்டிருந்த நாட்டின் பொருளாதாரம் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் சிறு வளர்ச்சியை காட்டி நசுங்கி கிடந்த நாட்டுக்கு மூச்சு விட வழிகாட்டியது. அதற்கு ஆதாரமாக 5500 மில்லியன் டொலர்களாக நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு உயர்வை காட்டியது. 70 சதவீமாக எகிறிக் குதித்த பணவீக்கம் 0.9 சதவீதமாக சரிவடைந்தது.

இவ்வாறான செயற்பாடுகள், வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்கும் முயற்சிகள், கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் எமக்கு கிடைத்த வெற்றி. சர்வதேசத்தின்



மத்தியில் இலங்கை இழந்து தவித்த அங்கீகாரத்தை மீண்டும் பெற்றுத் தந்தன. கடந்த இருவருடங்கள் செய்த கடுமையான அர்ப்பணிப்பின் பலனாக 2043 வரையில் கடன் செலுத்துவதற்காக காலத்தை நீடித்துக்கொள்ள முடிந்துள்ளமையும் சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை ஆரம்பித்து 15 மாதங்கள் என்ற குறுகிய காலத்துக்குள் கடன் மறுசீரமைப்புச் செய்து முடித்த நாடுகள் வரிசையில் இலங்கை முன்னணியில் நிற்பதும் பெரு வெற்றியாகும்.

**தொங்கு பாலத்தில் பயணம் தொடரும்**

பொருளாதார நெருக்கடியால் நசுங்கிக் கிடந்த நாடு இப்போது ஸ்திர நிலையை எட்டியிருக்கிறது.

நெருக்கடியை பற்றி ஜனாதிபதிக்கு இருந்த தெளிவு, அதற்கான தீர்வுகளையும் தேடித்தர வழிவகுத்தது. அதனால் ஆபத்தான தொங்கு பாலத்தை கடந்து இலங்கை அன்னை மீட்டு வருவதாகச் சொன்ன ஜனாதிபதி வார்த்தைகளாக விட்டு விடாமல் நடைமுறையில் அதனை செய்து காட்டினார்.

தொங்கு பாலத்தில் கடந்து வந்த பயணம் கடினமாக இருந்தது. ஆனால் அந்த பயணத்தில் திரும்பிச் செல்லாமல் நேர் வழியில் பயணத்தை தொடர்வதே சாணக்கியமாகும்.

அந்த பாதையை திரும்பிப் பார்க்க ஆசைப்பட்டால் மீண்டு வர 25 – 30 வருடங்கள் நெருக்கடியில் சிக்கித் தவிக்க வேண்டியிருக்கும்.

**மக்களுக்கு உரிமை!**

இந்நாட்டில் பல ஆட்சியாளர்களும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதாகக் கூறினாலும் அது நடைமுறையில் நடந்ததா என்பது கேள்விக்குறியாகும். மக்கள் ஆர்ப்பாட்டத்தில் தமது வீடு தீக்கிரையானது என்பதையும் மறந்துவிட்டு இந்நாட்டில் வாழும் 20 இலட்சம் மக்களுக்கு அரச காணிகளின் உறுதிகளை இலவசமாக வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நகர பகுதிகளின் மாடிக் குடியிருப்புக்களில் வாழும் மக்களுக்கும் அந்த வீட்டு உறுதிகளை வழங்கினார். சுதந்திரத்தின் பின்னர் தரிசு நிலச் சட்டத்தின் கீழ் இவ்வாறானதொரு முயற்சி, இலங்கையில் மேற்கொள்ளப்பட்டது இதுவே முதல் முறையாகும்.

இலங்கையில் பல ஆண்டுகளாக அரிசி உற்பத்தியில் தன்னிறைவு கண்டிருந்தாலும், அந்த நிலையை உருவாக்கிய விவசாயிகள் காணி உறுதியின்றி பட்ட கஷ்டங்களை நிவர்த்திக்கவே ஜனாதிபதி இந்த திட்டத்தை செயற்படுத்தினார்.

அதேபோல் மலையகத்தில் நாட்டின் முதுகெலும்பாகவிருந்து பொருளாதாரத்தை கட்டிக்காக்க உதவிய தோட்ட தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளை கிராமங்களாக பிரகடனப்படுத்தி அவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் தீர்மானத்தையும் ஜனாதிபதி செயற்படுத்த ஆரம்பித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டங்கள் முழுமைப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டில் 70 சதவீதமான மக்கள் காணி உறுதியுள்ளவர்களாக மாற்றப்படுவர்.

**நவீன விவசாயம்**

வறுமை பெருமளவில் காணப்படுவது விவசாயம் செய்யும் பகுதிகளிலாகும். அந்த வகையில் இப்பகுதிகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவே விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகிறது. இந்த செயற்பாடுகளுக்காக 2024 வரவு செலவுத் திட்டத்திலும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதோடு, ஏற்றுமதி பொருளாதாரத்தை நோக்கி விவசாயத்தை நகர்த்தும் முயற்சிகளையும் ஜனாதிபதி ஆரம்பித்துள்ளார். இவ்வாறான நவீனமயப்படுத்தல் முயற்சிகளின் ஆரம்ப கட்டமாகவே இருபது இலட்சம் பேருக்கு காணி உறுதிகள் வழங்கும் உறுமய வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுகிறது.

**24 இலட்சம் பேருக்கு அஸ்வெசும!**

சாத்தியமான அபிவிருத்தி பாதைக்குள் பிரவேசிப்பதற்கு ஒரு நாட்டின் அனைத்து மக்கள் மீதும் கவனம் செலுத்த வேண்டும். அதன்படி சமுர்த்தி நலன்புரித் திட்டத்தின் சலுகைகளை மூன்று மடங்காக அதிகப்படுத்தி அஸ்வெசும பயனாளிகள் எண்ணிக்கையை 18–24 இலட்சமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் அங்கவீனமானவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கும், முதியவர்களுக்கும் இந்த சலுகைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.



**ஜனாதிபதி நிதியம்**

2022 ஆம் ஆண்டில் ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் முற்றாக ஸ்தம்பித்து போனது. வைத்திய உதவிகளை கோரி விண்ணப்பித்திருந்த 9000 க்கும் அதிகமானவர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்க முடியாத நிலைமை காணப்பட்டது. ஓகஸ்ட் டிசம்பர் வரையில் 4000 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

அதற்காக சகல கொடுப்பனவுகளும் 2023 ஆண்டில் வழங்கப்பட்டிருப்பதால் 4917 நோயாளர்களின் விண்ணப்பங்களுக்கான 915 மில்லியன் ரூபாய் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் மூன்று மாதங்கள் காலம் தாழ்த்தி வழங்கப்பட்ட சலுகைகள் 3 – 5 நாட்களுக்குள் கிடைக்கும் வகையில் ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் எளிதாக்கப்பட்டுள்ளன.

2024ஆம் ஆண்டிலிருந்து சகல வைத்திய நிவாரணங்களும் 50–100 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக பாடசாலை மாணவர்களுக்கான புலமை பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

அதன்படி 2024 ஜனாதிபதி நிதியத்தின் புலமை பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 116,000 மாணவர்களுக்கு புலமை பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 2015ஆம் ஆண்டு பிரதமராக பதவி வகித்த காலத்தில் வழங்கிய 10 ஆயிரம் ரூபாய் சம்பள அதிகரிப்புக்கு பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மீண்டும் அரச ஊழியர்களுக்கு 10,000 ரூபாய் சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டது. சம்பள பிரச்சினைகளை தீர்ப்பதற்கான குழுவொன்றும் தற்போது நிறுவப்பட்டுள்ளது.

அதேபோல் பொருளாதார நெருக்கடியால் மூடப்படும் நிலையிலிருந்த சிறு வியாபாரங்களும் மறுமலர்ச்சி கண்டு வருகின்றன. அவற்றுக்கான கடன் சலுகைகளை பெற்றுக்கொடுக்க வங்கிகளுடனும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அரச வருமானம் உயரும் போது மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் ஜனாதிபதி மறந்துவிடவில்லை.

அதேபோல் கல்வி மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் முயற்சிகளுக்கான செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்தி எதிர்காலத்துக்கு தேவையான கல்வியை வழங்குவதற்கான முன்னெடுப்புக்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான முயற்சிகள் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் இதுவரையில் காணப்படாத புதிய வகையிலான அரசியல் கலாசாரம் ஒன்றை தோற்றுவித்துள்ளார்.

அது பற்றிய புரிதல் அனைவருக்கும் ஏற்பட வேண்டியது அவசியம். நாட்டை கட்டியெழுப்ப ஒத்துழைக்க வேண்டும் என்ற சிந்தனை சகலருக்கும் வர வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று 02 ஆண்டுகள் பூர்த்தியாகும் இவ்வேளையில் இந்த சாதகமான விடயங்களை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.





கைல் அபேசிங்க
நீச்சல் – ஆடவர் 100 மீற்றர் ப்ரீ-ஸ்டைல்

விரேன் நெத்தசிங்க
பெட்மின்டன் – ஆடவர் தனிநபர்

கங்கா செனவிரட்ன
நீச்சல் – மகளிர் 100 மீற்றர் பெக்-ஸ்ட்ரோக்

தருஷி கருணாரட்ன
மெய்வாண்மை – மகளிர் 800 மீற்றர்

அருண தர்ஷன
மெய்வாண்மை – ஆடவர் 400 மீற்றர்

நதீஷா தில்ஹானி லேக்கம்கே
மெய்வாண்மை – மகளிர் ஈட்டியெறிதல்

SRI LANKA

PARiS 2024

## இலங்கையின் ஒலிம்பிக் கனவுகளை நனவாக்க வழிவகுத்தல்

மூன்று தசாப்தங்களுக்கு மேல் வேலைத்தளத்திலும், விளையாட்டு மைதானத்திலும் சம்பியன்களை போஷித்து வளர்த்த பெருமை MAS ஐச் சாரும். உலகப் புகழ்பெற்ற நிறுவனங்களுடன் கைகோர்த்து ஒலிம்பிக், பரா-ஒலிம்பிக் போட்டியாளர்கள் முதற்கொண்டு தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு வீர-வீராங்கனைகள் விளையாட்டு அரங்குகளில் வலுவுடன் சிகரங்களைத் தொட வழிவகுத்தோம்.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை அணிக்கு உத்தியோகபூர்வமாக ஆடை பங்காளராக திகழ்ந்து, தேசத்தின் கூட்டுக் கனவு நிறைவேற MAS வழிவகுக்கிறது.

சகல சவால்களுக்கு மத்தியிலும் வெற்றிக்கு முயலும் விளையாட்டு வீர-வீராங்கனைகளை சிரந்தாழ்த்தி பாராட்டுகிறோம்.

2024 பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகளில் இலங்கை அணியின் உத்தியோகபூர்வ ஆடை பங்காளர்.

MAS
துணிவே மாற்றம்



பெங்களூரிலிருந்து கன்னடா கலாலயா அமைப்பின் சார்பாக இருபத்தைந்து பேரைக் கொண்ட குழுவினர் கலாசார நல்லெண்ண நட்புறவு பரிமாற்ற அடிப்படையில் சுற்றுப் பயணமாக இலங்கை வந்துள்ளனர். இந்த "தர்ஷனா பிரதர்ஷனா" குழுவினர் வழங்கிய கண்கவர் கலாசார நாட்டிய நடன நிகழ்வொன்றும் கொழும்பு பம்பலப்பிட்டிய மாணிக்கப் பிள்ளையார் மண்டபத்தில் நடைபெற்றது. மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ் சிவலிங்கம் பிரதம அதிதியாகவும், நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் இணைச் செயலாளர் காமினி லக்ஷ்மன், இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் அ.அனியுத்தரணன், மேல்மாகாண ஆளுநரின் செயலாளர் ருவன் தனன்சூரிய, எச் விக்கிரமசிங்க உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# அநுரவுக்கு மஹிந்த விடுத்த அழைப்பு

**அடுத்த ஜனாதிபதி தேர்தல் இடம்பெறும் திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படும் என சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளதால் அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.**



### வார இறுதி நாட்களை கொழும்புக்கு வெளியே கழித்த ரணில்

ரணில் தேர்தலை ஒத்திவைக்க முயற்சிக்கிறார் என்ற கருத்தை பிரபலப்படுத்த எதிர்க்கட்சிகள் முயற்சித்தும், அது தோல்வியடைந்துள்ளமை, பாராளுமன்றத்திலும் முக்கிய கூட்டங்களிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி ரணில் வார இறுதி நாட்களை கொழும்புக்கு வெளியே கழித்தார். அநுராதபுரம் சென்ற ஜனாதிபதி ரணில், ஜய ஸ்ரீ மஹா போதி உள்ளிட்ட வளாகங்களை கார்பன் ஜீரோ மின்சார அமைப்பு மூலம் ஒளியேற்றினார். அதன் பின்னர் தம் புத்தேகமவிற்குச் சென்ற அவர் அங்கு உறுமய காணி உறுதிகளை வழங்கினார். அதன் பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் குழுவை அவர் சந்தித்தார். ஞாயிற்றுக்கிழமை, திகவாவிக்குச் சென்ற அவர், அங்கு நடந்த நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் பின்னர் மஹியங்கனைக்கு உறுமய காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டார். ஆதிவாசி தலைவர் உருவரிகே வன்னிலத்தோவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார்.

### சஜித்துக்கு ரணிலிடமிருந்து செய்தி

அவர் அன்று மாலை கண்டிக்கு விஜயம் செய்தது அரச வேலைத்திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு அறிவிக்கும் "ஒன்றுபட்டு வெற்றி பெறுவோம்" என்ற கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகும். கண்டி பொது சந்தைத் தொகுதிக்கு முன்னால் இந்தப் பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஐக்கிய தேசிய கட்சியும், பொதுஜன பெரமுனவும் சரிக்குச் சமனாக இந்தக் கூட்டத்திற்கு மக்களை அழைத்து வந்திருந்தன.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, சஜித் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்திக்கு செய்தி ஒன்றை விடுத்து கூட்டத்தை நிறைவு செய்தார். ஜனாதிபதி திங்கட்கிழமை காலை அரசியல் அலுவலகத்திற்குச் சென்று சில கூட்டங்களிலும் கலந்து கொண்டார். அன்று மாலை அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றதோடு, அங்கு 22ஆவது அரசியலமைப்புத் திருத்தம் மற்றும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு மத்தியில் கடமைக்குச் சென்றவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்கும் அமைச்சரவைப் பத்திரம் உள்ளிட்ட இன்னும் சில விடயங்களும் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டது.

ஜனாதிபதியிடம் சட்டத்தரணிகள் என்ன கேட்டார்கள்?

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 5 வருடங்களாக நிர்ணயிக்கும் அரசியலமைப்பு திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதன் பின்னர், அது வரும்நாட்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதேவேளை, நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து பேசுவதற்காக ஜனாதிபதி ரணில் சட்டத்தரணிகள் குழுவொன்றைச் சந்தித்தார். பிரதான பேச்சுக்கள் முடிந்ததன் பின்னர், ஜனாதிபதி ரணில் பிரதான மேடையிலிருந்து இறங்கி சட்டத்தரணிகளுக்கு அருகில் சென்று பேசுவதற்கு மறக்கவில்லை. இதன் போது சட்டத்தரணி ஒருவர் எழுந்து, "சேர், இப்போது இரண்டு வேட்பாளர்கள் களம் இறங்குகிறார்கள். சேர் எப்போது இந்தப் போட்டிக்கு வருவீர்கள்?" எனக் கேட்டார்.

"இல்லை, இங்கு தெரிவது இரண்டு வேட்பாளர்களும் ஒரு ஜனாதிபதியும் ஓட்டப்போட்டியில் ஓடுவதேயாகும்" என ஜனாதிபதி கூறியதும் அனைவரும் சிரித்தனர்.

### நிழல் பிரதமர் ஒழிந்த முறையை கூறிய ரணில்

"எதிர்க்கட்சித் தலைவர் பிரதமர் பதவியைப் பொறுப்பேற்கச் செல்வதற்கு முன்னர், நீங்கள் பொறுப்பேற்றுக் கொண்டீர்கள் என ஹர்ஷ கூறியிருந்தார்" என சட்டத்தரணி தினேஷ் விதானபத்திரன வினவியது, ஜனாதிபதி அவர்களுக்கு அருகில் வந்த சந்தர்ப்பத்திலாகும்.

"அவர் பொறுப்பேற்க முடியாது எனக் கூறியதால்தான் எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. எல்லோரும் முடியாது எனக் கூறியதால்தான் நான் பொறுப்பேற்றேன். பொதுவாக பதவியிலிருக்கும் பிரதமர் இராஜினாமாச் செய்தால் அதன் எதிர்க்கட்சித் தலைவரே பொறுப்பேற்பார். காரணம் அவர்தான் நிழல் பிரதமர். எனினும் அவர் ஒளிந்து கொண்டார். நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்பது பஸ் சாரதி ஒருவர் அல்லவே" என ஜனாதிபதி கூறியபோது அங்கிருந்தவர்களால் சிரிப்பை அடக்க முடியாமல் போனது.

### ஜனாதிபதியுடன் செல்பி எடுத்துக்கொண்ட பாடசாலை மாணவர்கள்

மறுநாள் ஜனாதிபதி ரணில் ஆனமடுவ, ஜயசூரிய கல்லூரியின் மாணவர்கள் குழுவை ஜனாதிபதி அலுவலக வளாகம் எனும் பழைய பாராளுமன்ற கட்டடத்தைப் பார்வையிட வந்த போது சந்தித்தார். ஜனாதிபதி ரணிலும் தனது கடமைகளை முடித்துக் கொண்டு வெளியேறும் வேளையில் அந்த மாணவர்களுடன் உரையாடியதோடு, அவர்களது பாடசாலையின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் தலையிட்டார். ஜனாதிபதி ரணில் அம்மாணவர்களுடன் சில செல்ஃபிக்களையும் எடுத்துக் கொண்டார். அன்று பகல் ஜனாதிபதி ரணில் யுனெஸ்கோ அமைப்பின் பணிப்பாளர் நாயகம் ஒட்ரி அசுலேவை ஜனாதிபதி மாளிகையில் சந்தித்தார். இலங்கை யுனெஸ்கோ அமைப்பின் அங்கத்துவத்தைப் பெற்று 75 வருடங்கள் நிறைவையொட்டி அவர் இந்நாட்டிற்கு வந்திருந்தார். ஜனாதிபதி ரணில் அவருக்கு பகல் உணவு விருந்தளித்ததுடன், அங்கு இடம்பெற்ற நட்பு ரீதியிலான சந்திப்பின் போது, பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவாக வெளியேறியதற்காக அவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

### நாட்டைக் காப்பாற்றிய நான்கு பெண்கள்

"இலங்கையை பொருளாதார நெருக்கடியிலிருந்து காப்பாற்றுவதற்காக மூன்று பெண்கள் தலையிட்டனர். அமெரிக்காவின் திறைசேரியின் செயலாளர் ஜேனட் ஹெலன், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோஜிவா மற்றும் இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரே அவர்களாவார். இந்த மூன்று பேரும் இல்லாவிட்டால் எம்மால் இவ்வாறு மீண்டிருக்க முடியாது" என ஜனாதிபதி உணர்ச்சிகரமாக கூறினார்.

"சேர், நான்காவதும் ஒரு பெண் உள்ளார்" என ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கா கூறியபோது, அனைவரது முகங்களிலும் கேள்விக் குறி எழுந்தது. "யூ.எஸ். எயிட்டின் சமந்தா பவர் எங்களுக்கு இலவசமாக உரம் வழங்கியதால் விளைச்சல் அதிகரித்தது" என ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்க கூறியதும் அனைவரும் தலையசைத்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் பணிப்புரைக்கு அமைய ஜனாதிபதி அலுவலகத்தில் பிக்குகள் ஒருங்கிணைப்பு பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் "ரண்தொர" தேசிய வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் அன்று மாலை சுகததாச உள்ளக அரங்கிற்குச் சென்றார்.

சரியான முறையில் சோசலிசம்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில், சோசலிசம் சரியான முறையில் செயற்படுவது தற்போதைய அரசாங்கத்தின் கீழாகும் எனச் சுட்டிக்காட்டினார். எனவே நிலத்தின் உரிமையை மக்களுக்கு வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தற்போதைய அரசாங்கத்தின் கீழாகும் என ஜனாதிபதி கூறியது அனைவரின் கரகோசத்திற்கு மத்தியிலாகும். பெருந்தோட்ட மக்களுக்கு வீட்டு உரிமைகளை வழங்குவது தொடர்பில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடினர். தோட்ட லயன்ஸ் அறைகளுக்குப் பதிலாக தனியான வீட்டு உரிமையை அவர்களுக்கு வழங்குவதற்கு, அவர்களுக்கான கிராமங்களை நிர்மாணிக்க வேண்டுமென ஜனாதிபதி அங்கு சுட்டிக்காட்டினார். தான் முயற்சிப்பது அத்தகைய கிராமங்களை உருவாக்கி புதிய வீடுகளை நிர்மாணித்து அதன் உரிமையினை அந்த மக்களுக்கு வழங்கும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கேயாகும் எனக் கூறினார்.

அதற்கு எவரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லையென்றாலும், எதிர்க்கட்சி குழு இது குறித்து அச்சமடைந்துள்ளதாக அங்கு வந்த ஆளும் கட்சியின் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்துக்களைக் கூற ஆரம்பித்தனர். ஜனாதிபதி ரணில் வியாழக்கிழமை பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

### அநுரவுக்கு மஹிந்தவிடமிருந்து அழைப்பு

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் பாராளுமன்ற வளாகத்துக்குள் நுழைந்தபோது, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல எம்.பி.க்களை கீழ் தளத்தில் சந்தித்தார். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, மதுர விதானகே, அஜித் மான்னப்பெரும உள்ளிட்ட பல பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேசிக்கொண்டு வந்ததோடு, லிப்ட்டுக்கு அருகில் சென்ற போது தற்போது எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்சன யாப்பா அவருக்கு எதிரில் வந்தார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

*எம். எஸ். முஸப்பிர்*

## ஜனாதிபதி நிதியம்

# பொது மக்களுக்கு வழங்கும் ஏராளமான நிவாரணங்கள்!

**இலங்கையர்களுக்கு மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நிதி உதவிகளை வழங்குதல், மத ஸ்தலங்களுக்கு உதவியளித்தல், கல்விப் புலமைப்பரிசில்கள் வழங்குதல் போன்றவற்றுக்கு நிதியுதவிகளை வழங்கும் அரச துறை நிறுவனமாக ஜனாதிபதி நிதியம் பாரிய செயற்பாடுகளைச் செய்து வருகின்றது. சமீபகாலமாக, மருத்துவ நிதி உதவிகள் வழங்குவதைத் துரிதப்படுத்தி மக்களுக்கு செயற்திறன்மிக்க சேவையை வழங்குவதற்கு இந்த நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இதற்கு மேலதிகமாக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான கல்வி உதவித்தொகைகளையும் வழங்கி வருகிறது. இந்த நிதியத்தின் மூலம் தற்போது செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள், அவை செயற்படுத்தப்படும் முறைகள் மற்றும் நிவாரணங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர், ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர், திறைசேரியின் பிரதிச் செயலாளர் டபிள்யூ. ஏ. சரத்குமார ஆகியோருடன் மேற்கொண்ட நேர்காணலே இதுவாகும்.**



**ஜனாதிபதி நிதியம் எதனை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது? அதன் மூலம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது?**

ஜனாதிபதி நிதியம் 1978ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க ஜனாதிபதியின் நிதிச் சட்டத்திற்கு அமைவாக 1978ம் ஆண்டு நவம்பர் 24ம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது ஜனாதிபதி செயலகத்தின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனமாகும். பல நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. வறுமைக்கு நிவாரணம் வழங்குதல், கல்வி அல்லது அறிவினை வளர்த்தல், மதங்களை வளர்ப்பதற்காக மதப் பழக்கவழக்கங்களை முன்னெடுத்துச் செல்லல், தேசத்திற்காக சேவை செய்தவர்களுக்காக மானியங்கள் வழங்குதல் மற்றும் ஜனாதிபதியின் மற்றும் நிதியத்தின் எண்ணங்களுக்கு அமைவாக பொது மக்களின் நலன் அல்லது நல்வாழ்வுக்கான வேறு சில செயற்பாடுகளும் அவற்றுள் அடங்கும். அதேபோன்று, ஜனாதிபதி நிதியத்தின் நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகள் என்பன நிர்வாகக் குழுவினால் மேற்காள்ளப்படுகின்றது. இந்தக் குழுவில் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் உள்ளனர்.

**எந்தெந்த துறைகளுக்கு இந்நிதியத்தின் நிதி ஒதுக்கப்படுகிறது? ஜனாதிபதி நிதியத்தின் மூலம் தற்போது மக்களுக்கு என்ன சேவைகள் வழங்கப்படுகின்றன?**

ஜனாதிபதி நிதியத்தின் மூலம் இதற்கு முன்னர் வைத்திய சிகிச்சைக்கான நிதி உதவி வழங்கும் முறை மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட்டது. எனினும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிற்கு அமைய சிறந்த கல்வியின் மூலம் எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி நிதியத்தின் கொள்கைத் தீர்மானங்களின் அடிப்படையில், இலங்கை மக்களின் சுகாதார மேம்பாட்டிற்காக மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான நிதியுதவி வழங்குதல், தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வித் தரத்தினை உயர்த்தும் நோக்கில் க.பொ.த உயர்தரக் கல்விக்காக நிதி உதவி வழங்குதல் மற்றும் ஏனைய திட்டங்களுக்காக நிதி உதவியளித்தல் என்பன தற்போது செயல்படுத்தப்படுகின்றன. இதனடிப்படையில் வைத்திய சிகிச்சைக்கான நிதி உதவி வழங்கும் செயற்பாட்டின் கீழ் இருதய சத்திரசிகிச்சை, சிறுநீரக மாற்று சத்திரசிகிச்சை மற்றும் இரத்த சுத்திகரிப்பு, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் (சத்திர சிகிச்சை, மருந்துகள் மற்றும் ஊசிகள்), இடுப்பு, தோள்பட்டை, முழங்கால் மற்றும் முழங்கை மூட்டு எலும்பு மறுசீரமைப்பு, முதுகுத் தண்டு குறைபாடு திருத்த சத்திர சிகிச்சை, முதுகெலும்பு அறுவை சிகிச்சை, கோக்லியர் உள்வைப்பு சத்திரசிகிச்சை, மூளை சத்திர சிகிச்சை, எலும்பு மாற்று சத்திர சிகிச்சை, தலசீமியா நோயாளிகளின் சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், கண் சத்திர சிகிச்சை, பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை, சுவாச கருவிகள் கொள்வனவு செய்தல் மற்றும் காது கேட்கும் கருவிகளைக் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்காக மருத்துவ நிதியுதவிகள் வழங்கப்படுகின்றன. கடந்த 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும் போது ஜனாதிபதி நிதியத்தின் செயற்பாடுகள் செயலற்றிருந்ததன் காரணமாக சுமார் 8,000 மருத்துவ நிதி உதவிக்கான விண்ணப்பங்கள் நிதியுதவி வழங்கப்படாமல் தேங்கிக் கிடந்ததோடு, அந்த விண்ணப்பங்களுக்கான நிதி உதவி வழங்கும் நேரத்தில் அவற்றுள் 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். அந்த ஆண்டு ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை மேலும் 4,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அந்த 12,000 விண்ணப்பங்களுக்கும் 1,342 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று 2023ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இன்று வரைக்கும் 4917 விண்ணப்பங்களுக்காக 915 மில்லியன் ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 2023ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறைகளினுள் 3 முதல் 5 கடமை நாட்களுக்குள் வைத்திய நிதி உதவி விண்ணப்பங்களுக்கான நிதி உதவிகளை வழங்குவதற்கு தற்போது முடிந்திருக்கின்றது. இதற்கு முன்னர் இதற்காக சுமார் ஆறு மாத காலம் எடுத்திருக்கின்றது. எனினும் அதே செயற்பாட்டை மேற்கொண்டு தற்போது ஒரு வாரத்தினுள் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முடிந்திருக்கின்றது. ஜனாதிபதி நிதியத்தின் அனைத்திற்கும் ஜனாதிபதியின் அனுமதி கிடைக்க வேண்டும். அதற்காகத்தான் சில காலம் தேவைப்பட்டது. அந்தக் காலத்தில் வவுச்சர்கள்தான் வழங்கப்பட்டன. கொடுப்பனவுகளைச் செய்வதற்கு நீண்ட காலம் எடுத்தது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏகநாயக்கா ஆகியோரின் முறையான ஒருங்கிணைப்புடன் இதற்காக வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் காரணமாக ஒரு வாரத்திற்குள் பணம் செலுத்த முடிந்திருக்கின்றது. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அனைத்து மருத்துவ நிதியுதவி தொகைகளையும் 50 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் செயன்முறை எவ்வாறானது?**

வைத்திய நிதியுதவிக்காக விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் குறித்த நோயாளிகளாலேயே பூரணப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை நோயாளி வசிக்கும் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்து சிபார்சினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பின்னர் பிரதேச செயலாளரின் சிபார்சினைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு சிபார்சுகளைப் பெற்றுக் கொண்ட விண்ணப்பங்களை எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். அதனடிபடையில் நாம் மூன்று அல்லது ஐந்து நாட்களினுள் அந்த விண்ணப்பத்திற்கான கொடுப்பனவினை வழங்குவோம். எப்படியாயினும் ஒரு வாரத்தினுள் கொடுப்பனவினை வழங்கி முடிப்போம். முறையாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும். அதனடிப்படையில், செயற்திறன்மிக்க செயல்முறையைப் பின்பற்றுவதன் காரணமாக ஒரு வாரத்திற்கும் குறைந்த காலத்திற்குள் கொடுப்பனவினைச் செய்வதற்கு முடிந்திருக்கின்றது. விண்ணப்பத்திற்கான அனைத்து அனுமதிகளையும் ஒரே நாளில் பெற்றுக் கொள்கிறோம். அதனால்தான் மூன்று முதல் ஐந்து நாட்கள் உள்ளிட்ட காலத்திற்குள் கொடுப்பனவுகளை வழங்க முடிந்திருக்கின்றது. விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன், விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை குறுஞ்செய்தி (SMS) மூலம் அறிவிப்போம். பின்னர் நோயாளியின் வங்கிக் கணக்கில் பணம் வைப்புச் செய்யப்படும். பணம் வரவு வைப்பிலிடப்பட்டுள்ளது SMS மூலமும் அறிவிக்கப்படும். இந்த செயன்முறை இன்று பயனுள்ளதாகியிருக்கின்றது.

இன்று வரிசையின்றி மிகக் குறுகிய காலத்தில் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். எங்கள் இணைய தளத்திலிருந்து விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அத்துடன், இது தொடர்பான அறிவுறுத்தல் கையேடும் உள்ளது. முன்னணி மருத்துவமனைகளிலும் விண்ணப்பங்கள் உள்ளன. பொதுமக்களின் வசதிக்காக சுகாதார அமைச்சின் பரிந்துரையின் பேரில் உள்ளூர் மருத்துவமனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த மருத்துவமனைகளில் பெறும் சிகிச்சைகளுக்காகவும் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. பிரதேச செயலக அலுவலகங்களிலும் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். கடந்த 2 ஆண்டுகளாக பொதுமக்களிடம் இருந்து முறைப்பாடுகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. இதற்கு முன்னதாக அரசியல்வாதிகளின் ஆதரவும் இதற்காகப் பெறப்பட்டது. ஆனால் இன்று யாருடைய உதவியும் தேவைப்படப் போவதில்லை.

**ஜனாதிபதி நிதியத்திற்கு எவ்வாறு நிதி திரட்டப்படுகிறது?**

அபிவிருத்தி லொத்தர் சபையின் மூலம் கிடைக்கும் வருமானமே ஜனாதிபதி நிதியத்திற்கான பிரதான வருமான வழியாகும். அந்த வருமானத்தின் ஒரு பகுதி அதற்கான சட்ட ஏற்பாடுகளின்படி மஹாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியத்துக்கு வழங்கப்படுகின்றது. இதன் பிரகாரம், அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கும் பணத்தில் சுமார் 50 வீதம் மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்துக்கு வழங்கப்படுகின்றது.

**இந்த ஒவ்வொரு துறைக்கும் ஆண்டுக்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்படுகிறது?**

பொதுவாக மருத்துவ உதவிக்காக வருடாந்தம் 1500 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்படுகின்றது. அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றாலும் தேவையான மருந்துகள், மருத்துவ பரிசோதனைகள் போன்றவற்றிற்காக பணம் செலவிட வேண்டியேற்பட்டால் அதற்காகவும் ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நிதி உதவி வழங்கப்படுகின்றது. அதேபோன்று ஜனாதிபதி புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்காக 5000 மில்லியனுக்கும் அதிக தொகையினை வழங்க வேண்டியுள்ளது. க.பொ.த உயர் தரம் கற்கும் மாணவர்கள் 6000 பேருக்காக மாதத்திற்கு 6000 ரூபா வீதம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்காக 824 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. முதலாம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரையான ஒரு இலட்சம் மாணவர்களுக்காக மாதம் 3000 ரூபாய் வீதம் 12 மாதங்களுக்காக வழங்கப்படும் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை 3600 மில்லியன் ரூபாயாகும்.

பிரிவெனாக்கள் மற்றும் சீலமாதா கல்வி நிலையங்களில் கல்வி கற்கும் மாணவர் துறவிகள், பெண் துறவிகள் மற்றும் சாதாரண மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்திற்காக 288 மில்லியன் ரூபாவும், க.பொ.த. உயர் தரத்தில் தகவல் தொலைத்தொடர்பு தொழில்நுட்ப பிரிவில் கற்கும் மாணவர்களுக்கான தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவும் ஜனாதிபதி நிதியமும் இணைந்து வழங்கும் புலமைப்பரிசில் திட்டத்திற்காக 720 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் பாடசாலை மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கும் ஜனாதிபதி நிதியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. கல்விக்காக என்ன நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன?**

(19ஆம் பக்கம் பார்க்க)

*மஹிந்த அளுத்கெதர*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*





## அரசியல் அரங்கம்

அர்ஜூன்

# இந்தியாவுடனான தொடர்புகளை மேம்படுத்துவதில் இலங்கை ஆர்வம்

## வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய பேட்டி

**இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியினால் நீண்டகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்களே மீண்டும் பாதிக்கப்படுகின்றனர் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இருநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவதன் ஊடாகவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்தார். பிம்ஸ்டெக் வெளிவிவகார அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள இந்தியாவுக்குச் சென்றிருந்த இராஜாங்க அமைச்சர், இந்தியாவின் என்.டி தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இதனைத் தெரிவித்திருந்தார்.**

**கே: பிம்ஸ்டெக் அமைப்பின் விரிவாக்கம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கருத்துத் தெரிவித்திருந்ததுடன், நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் குறித்துப் பிரதமர் நரேந்திர மோடியும் வலியுறுத்தியிருந்தார். இது ஏன் முக்கியம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

பதில்: இந்த மாநாட்டில் பல்வேறு கருத்துகளையும், நிலைப்பாடுகளையும் முன்வைத்துக் கலந்துரையாடக் கூடியதாகவிருந்தது. விரிவாக்கத்தின் முக்கியம் உள்ளிட்ட புதிய யோசனைகளை இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் முன்வைத்திருந்தார். இதில் பல விடயங்கள் இணங்கக் கூடியவகையில் அமைந்தன. இந்தியப் பிரதமர் வெளிவிவகார அமைச்சர்களைச் சந்தித்த போது, தெற்காசிய நாடுகள் இருக்கும் நிலையையும், ஐரோப்பிய ஒன்றியம் இருக்கும் நிலையையும் ஒப்பிட்டிருந்தார். நாடுகளுக்கிடையிலான தொடர்புகளின் காரணமாகவே ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெற்றிபெற முடிந்திருந்தது என்பதையும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். இந்த அடிப்படையில் இந்தியாவுடனான தொடர்புகளை மேம்படுத்துவதில் நாம் ஆர்வமாக இருக்கின்றோம். இலங்கை ஐந்து விடயங்களில் இந்தியாவுடனான இணைப்புகளை மேம்படுத்த எதிர்பார்த்துள்ளது. மக்களுக்கிடையிலான தொடர்புகள், கடல் மற்றும் ஆகாய மார்க்கமான தொடர்புகள் மற்றும் எரிசக்தித்துறையிலான தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தியாவின் தரப்பிலிருந்து பார்க்கும்போது இலங்கையுடன் மாத்திரமன்றி, தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகள் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடனான இணைப்புக்களை வலுப்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்துகின்றது.

**கே: வெளிவிவகார அமைச்சராக ஜெய்சங்கர் மீண்டும் பதவியேற்றதும் முதன் முதலில் இலங்கைக்கே விஜயம் மேற்கொண்டிருந்தார். இது இருநாட்டுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான பாலமாக அமைந்தது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான இணைப்புகளை வலுப்படுத்துவதில் காணப்படும் மூலோபாய முக்கியத்துவம் என்னவாக இருக்கும் என்று நினைக்கின்றீர்கள்?**

பதில்: இலங்கையின் தரப்பிலிருந்து பார்க்கும் போது இது முக்கியமானது. விரைவாக வளர்ச்சியடைந்துவரும் இந்தியாவின் மாநிலங்களில் நான்கு மாநிலங்கள் தென்பகுதியில் காணப்படுகின்றன. இவை இலங்கைக்கு மிகவும் நெருக்கமானதாகக் காணப்படுகின்றன. சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இவற்றின் ஒத்துழைப்புக் கிடைப்பது இலங்கைக்கு முக்கியமானது. தமிழ்நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகள் இருக்கின்றனர். இராமேஸ்வரம் எமக்கு மிகவும் அருகில் உள்ள பகுதியாகும். இராமேஸ்வரத்துக்கும் மன்னாருக்கும் இடையில் கப்பல் சேவைகளை ஆரம்பித்தால் பெரும் எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளை இரு நாட்டிலிருந்தும் ஈர்க்க முடியும்.

**கே: இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுக்கு மத்தியில் சீனாவின் பிரசன்னம் குறித்த இந்தியாவின் கரிசனையை எவ்வாறு இலங்கை கையாள்கின்றது? சீனாவின் உளவுக் கப்பலொன்று இலங்கைக்கு வந்திருந்தது அல்லவா?**

பதில்: கப்பலுக்கான நிரப்பும் சேவையைப் பெறுவதற்காகவே வந்திருந்தது. துருக்கி மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளிலிருந்தும் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தந்திருந்தன. அவை யாவும் கப்பலுக்கு அவசியமான நிரப்புதல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வந்தவையாகும். அவை எமக்கு சேவை செய்வதற்காக வரவில்லை என்பதில் நாம் தெளிவாக இருக்கின்றோம்.

**கே: சீனா இலங்கையுடன் கொண்டிருக்கும் உறவுகள் தொடர்பில் இந்தியா பாதுகாப்பு ரீதியிலான கரிசனையைக் கொண்டிருக்கவில்லையென்று நீங்கள் கருதுகின்றீர்களா? ஏதாவது முறையில் இலங்கையை சீனா பயன்படுத்திக் கொள்ளவில்லையென நினைக்கின்றீர்களா?**

பதில்: இந்தியாவுக்குப் பாதுகாப்புக் குறித்த கரிசனைகள் இருக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நீங்கள் பெரியதொரு சக்தியாக உருவாகும்போது, உலக அரசியலில் முக்கிய தொரு வகிபாகத்தை வகிப்பவராக இருக்கும் போது, பல்வேறு விடயங்கள் குறித்து கரிசனைகள் மற்றும் கவலைகள் கொள்ள வேண்டி ஏற்படுவது இயற்கையானது. எனினும், இலங்கையின் பார்வையில், இந்தியாவின் பாதுகாப்புக் குறித்த கரிசனைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு நாடும் இலங்கையைப் பயன்படுத்தாது என்பதை உறுதிப்படுத்துவதாக உறுதியளித்துள்ளோம். அதற்காக நாம் சீனாவுடன் வர்த்தக உறவுகளை மேற்கொள்ள விரும்பவில்லையென அர்த்தப்படாது.

**கே: மறைமுகமான நிகழ்ச்சி நிரல்களில் இலங்கை சிக்கியிருப்பதாகக் குறிப்பாக கடன்பொறி போன்றவை இலங்கையைப் பொருளாதார ரீதியில் பாதிப்படையச் செய்திருப்பதாக இந்திய வெளி விவகார அமைச்சர் முன்னர் சுட்டிக்காட்டியிருந்தார். இது பற்றி நீங்கள் நினைப்பது என்ன?**

பதில்: இந்திய வெளிவிவகார அமைச்சர் உறுதியாக என்ன கூறினார் என்பது எனக்குத் தற்பொழுது தெளிவாக இல்லை. எனினும், கடன்பொறி எனக் கூறும்போது கடன்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சீனா எங்களை கட்டாயப்படுத்தியது என நான் நினைக்கவில்லை. கடன் குறித்த பிரச்சினை காணப்படும்போது இந்த நாட்டையும் அந்த நாட்டையும் குறை கூறுவதில் அர்த்தமில்லை. இவ்வாறானதொரு நிலைக்கு நாம் தள்ளப்பட்டமைக்கு எமது செயற்பாடுகளே காரணமாகும். இவ்வாறான நிலையில் வேறு நாடுகளைக் குற்றம் சுமத்துவதில் பயனில்லை. இலங்கைக்கு சீனக் கடன்பொறியே காணப்படுவதாக சில மேலைத்தேய நாடுகளில் சித்தரிக்கப்படுவதைப் பார்க்கக் கிடைத்தது. எனினும், நான் இவ்வாறானதொரு சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும் போது இலங்கையின் வெளிநாட்டுக் கடனில் 10 வீதமே சீனாவின் கடனாகக் காணப்பட்டது. எனவே, இன்னாருவர் மீது குற்றஞ்சாட்டும் நிலைக்குச் செல்வதை நான் விரும்பவில்லை. நாம் அவ்வாறானதொரு நிலைக்குச் சென்றமைக்கு நாமே காரணம். வேறு எவருடைய தவறும் காரணமல்ல.

**கே: இரு நாடுகளுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்துக் கதைக்கும்போது, இந்திய மீனவர்களின் கைது தொடர்பில் தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் இந்தியப் பிரதமருக்குக் கடிதமெழுதியுள்ளார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பதில்: இரு நாட்டுக்கும் இடையில் காணப்படும் இந்த விவகாரம் பல வருடங்களாகக் காணப்படும் பிரச்சினையாகும். வெளிவிவகார அமைச்சர் என்ற ரீதியில் பழைய பதிவுகளைப் பார்க்கும்போது இந்தியாவின் அப்போதைய பிரதமர் நேருவுக்கும், சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்புக்களின் போது கலந்துரையாடப்பட்ட முதலாவது விடயமாக இந்த மீனவர் விவகாரம் காணப்பட்டது. எனவே, அந்தக் காலத்திலிருந்து காணப்படும் பிரச்சினையாக இது உள்ளது. எனினும், ஒரு சில மீனவர்கள் எல்லைதாண்டி வந்து மீன்பிடியில் ஈடுபடும் பிரச்சினை இல்லை இது. ஆயிரக்கணக்கான மீனவர்கள் வந்து மீன்பிடிக்கின்றனர். யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்து தமிழக அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மாத்திரமன்றி இந்திய மீனவர்களின் மீன்பிடி முறை அதாவது 'பொட்டம் ட்ரோலிங்' போன்ற முறைகள் நிறுத்தப்பட வேண்டும். எனவே இரு நாடுகளும் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைத் தேடிக்கொள்ள வேண்டும். எனவேதான் இரு நாடுகளுக்கும் இடையிலான இணைப்புக்களை வலுப்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகளைத் தேட முடியும்.

**கே: பூகோள அரசியலில் உலக ஒழுங்கு மீண்டும் வடிவமைக்கப்பட வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது. குறிப்பாக ஐ.நா பாதுகாப்புச் சபை உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களில் நாடுகளின் நிலைகள் குறித்த மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனக் கூறப்படுகிறது. தெற்கு உலகின் தலைவர் என்ற ரீதியில் இந்த உலக ஒழுங்கு மாற்றத்தில் இந்தியாவின் வகிபாகம் எவ்வாறானதாக இருக்கும் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

பதில்: தற்போதைய உலக ஒழுங்கைப் பார்த்தால், இது இரண்டாம் உலகப் போர் வெற்றியாளர்களின் கழகமே காணப்படுகின்றது. உதாரமாக 1945 ஆம் ஆண்டில், இங்கிலாந்து உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 வீதத்தைக் கட்டுப்படுத்தியது. எனினும், தற்போது அந்த நிலைமை மாறியுள்ளது. சனத்தொகை போன்றவை முக்கியமானவையாக கருதப்படவில்லை. இது இந்தியாவின் பிரச்சினை மாத்திரமன்றி, ஆபிரிக்க நாடுகள் போன்றவற்றை எடுத்துக் கொண்டாலும் ஐ.நா பாதுகாப்புச் சபை போன்ற அரங்குகளில் அவற்றுக்கு குரல்கொடுப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அந்த நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் இல்லை. எனவே, நிச்சயமாக, அரசியல் மற்றும் நிதி கட்டமைப்புகள் இரண்டும் மாற வேண்டும். மேலும் இந்தியா நிச்சயமாக ஒரு மிகப்பெரிய பாத்திரத்தை வகிக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அது உலகளாவிய தெற்கில் ஒரு தலைவராக இருந்து வருகிறது.

ஆனால், சில சமயங்களில், உலகளாவிய தெற்கின் நலன்களுக்கு எதிராக இந்தியாவும் தனது நலனை சமரசம் செய்து, தலைமை நிலையை எடுக்க வேண்டும்."

**யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் குறித்து தமிழக அரசாங்கம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது மாத்திரமன்றி, இந்திய மீனவர்களின் 'பொட்டம் ட்ரோலிங்' போன்ற மீன்பிடி முறைகள் நிறுத்தப்பட வேண்டும்**

# கசப்படைந்து செல்லும் டில்லி–தமிழக உறவுகள்!

## தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதாக குற்றம் சுமத்தி பா.ஜ.க வகுக்கும் வியூகம்!

**தமிழ்நாடு மாநில அரசுக்கும், இந்திய மத்திய அரசுக்கும் இடையேயான உறவுகள் படிப்படியாக மோசமடைந்து செல்வதையே நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.**

ஐந்து நாள் பயணமாக டெல்லி சென்றிருந்த தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்துப் பேசியுள்ளார். தமிழகத்தில் நிகழும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் உள்ளிட்டவை குறித்து அவர் விரிவாக எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழகத்தில் அண்மைய நாட்களாக கொலைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. மேலும் போதைப்பொருள் நடமாட்டம் வழக்கத்தை விட அதிகமாக இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. இது தொடர்பாக தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

அதேவேளை பொலிஸ்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக ஆம்ஸ்ட்ரோங் கொலைச் சம்பவத்தை அடுத்து சென்னையின் பொலிஸ் ஆணையராக இருந்த சந்திப் ராய் ராத்தோர் இடமாற்றம் செய்யப்பட்டார். அது மட்டுமல்லாமல் சட்டம் ஒழுங்கை கவனிக்க டேவிட்சன் தேவசீர்வாதம் ஏ.டி.ஜி.பி ஆகவும் நியமிக்கப்பட்டார். இந்நிலையில் தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து மாதந்தோறும் அறிக்கை தயார் செய்யப்பட்டு மத்திய உள்துறைக்கு ஆளுநர் ரவி அனுப்புவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில்தான் ஆம்ஸ்ட்ரோங்கொலைச்சம்பவம்பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இது தொடர்பாக சி.பி.ஐ விசாரணை நடத்த வேண்டும் என அ.தி.மு.க, பா.ஜ.க உள்ளிட்ட கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன. இது மட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி சட்டவிரோத மதுபானம் ஏற்படுத்திய மரணங்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாக பா.ஜ.கவினரும், அ.தி.மு.கவினரும் ஆளுநரை நேரில் சந்தித்து புகார் கொடுத்தனர். இந்த நிலையில்தான் தமிழக ஆளுநர் ரவி சில தினங்களுக்கு முன்னர் டெல்லி புறப்பட்டுச் சென்றார்.

பா.ஜ.க தலைமையிலான அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பிரதமர் நரேந்திர மோடி, அமித்ஷா உள்ளிட்டோரை ஆளுநர் ரவி இதுவரை சந்திக்கவில்லை. இந்த நிலையில் ஐந்து நாள் பயணமாக அவர் டெல்லி சென்றார். பிரதமர் நரேந்திர மோடி, அமைச்சர்கள் கிரண் ரிஜிஜு, தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோரையும் ஆளுநர் ரவி சந்தித்துப் பேசினார். இந்த நிலையில் மத்திய அமைச்சர் அமித் ஷாவுடன் ஆளுநர் ரவி நடத்திய சந்திப்பு முக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பின் போது தமிழகத்தில் நிலவும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்து விவாதிக்கப்பட்டதாகவும், தமிழகத்தில் நிகழும் கொலைகள், சட்டவிரோத மதுபான மரணம் உள்ளிட்டவை குறித்து ஆளுநர் ரவி, அமித் ஷாவிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இது இவ்விதமிருக்க, இந்திய மத்திய அரசு மேற்கொண்ட இரண்டு முடிவுகள் தமிழ்நாட்டிற்கு எதிராக திரும்பி உள்ளன. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இரண்டு விஷயங்களில் தமிழ்நாட்டிற்கு எதிரான முடிவுகளை மத்திய அரசு எடுத்துள்ளது.

முதல் கட்டமாக சென்னை மெட்ரோ ரயில் லிமிடெட் (சி.எம்.ஆர்.எல்) மற்றும் மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டத்தின் (எம்.ஆர்.டி.எஸ்) ஒருங்கிணைப்பு பின்னடைவை சந்தித்துள்ளது. அதாவது சென்னை மெட்ரோ இயக்கம் திட்டத்தை மத்திய ரயில்வே கிடப்பில் போட்டுள்ளது.

சென்னை மின்சார ரயில் செயற்பாடு நாளுக்குநாள் மோசமாகி வரும் நிலையில் அதை மெட்ரோ செயல்படுத்த திட்டமிட்டிருந்தது. கடந்த பெப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்ட இந்தத் திட்டம், ரயில்வே வாரியத்தின் முறையான ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. ஆனால் இதற்கு ஒப்புதல் அளிக்காமல் மத்திய அரசு கிடப்பில் போட்டுள்ளது.



இன்னொரு பக்கம் சென்னை மெட்ரோ 2 ஆம் கட்டப் பணிகளுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கியதாக சென்னை ரோட் ஷோவிற்கு இடையே பிரதமர் மோடி ட்விட் செய்து இருந்தார்.

இந்த நிலையில் மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மத்திய அரசு இரண்டு வருடமாக பணமே தரவில்லை என்று தி.மு.க தெரிவித்துள்ளது.

மத்திய அரசு நிதி இல்லாமலே வெறும் மாநில அரசின் நிதியிலேயே மெட்ரோ கட்டப்பட்டு வருகிறது. மத்திய அரசு நிதி ஒதுக்காமல் கைவிரித்து வரும் நிலையில், கூடுதல் நிதிகளை பல்வேறு சர்வதேச வங்கிகளிடம் இருந்து தமிழ்நாடு அரசு பெற்று வருகிறது. இவர்களின் உதவியுடன்தான் தமிழ்நாடு அரசு மெட்ரோ சேவை கட்டுமானங்களை மத்திய அரசின் உதவி இல்லாமலே மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில்தான் சென்னை மெட்ரோ 2 ஆம் கட்டப் பணிகளுக்கு இப்போதைக்கு பணம் கொடுக்க முடியாது, நிதியை விடுவிக்க வாய்ப்பு இல்லை என்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் தி.மு.க ராஜ்யசபா எம்.பி வில்சனின் கேள்விக்கு மத்திய அரசு அளித்த பதிலில், "சென்னை மெட்ரோ இரண்டாம் கட்ட திட்டத்திற்கான தமிழ்நாடு அரசின் முன்மொழிவை இன்னும் ஆய்வு செய்து வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. சென்னை மெட்ரோவின் 118.9 கிமீ கட்டம் II கட்டுமானப் பணிகள் ஏற்கனவே மாநில நிதி மற்றும் JICA இன் வெளி நிதியுதவியுடன் தொடங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. திட்டத்தின் முதல் ரயில் டிசம்பர் 2025 இல் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எஸ்.சாரங்கன்...



அமித் ஷாவை நேரில் சந்தித்து தமிழக ஆளுநர் ரவி கூறிய விடயங்கள்!

நாவலப்பிட்டி

# ஆடிவேல் திருவிழா

நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

நாவலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயிலின் ஆடிவேல் திருவிழா கடந்த 13.07.2024 ஆரம்பமாகியது. தொடர்ந்து 12 நாட்களுக்கு தினமும் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி முதல் பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

நேற்று 20ஆம் திகதி காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாடு நடைபெற்று காலை 8.30 மணிக்கு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலிருந்து பாற்குட பவனி ஆரம்பமாகியது.

காலை 10.00 மணிக்கு சகஸ்ர சங்காபிஷேகமும் பகல் அன்னதானமும் வழங்கப்பட்டது.

இன்று அதிகாலை 4.00 மணிக்கு அஸ்டோத்திர சத சங்காபிஷேகம் நடைபெற்றது.

தொடர்ந்து தேர்த் திருவிழாவும் 22.07.2024ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு அஸ்டோத்திர சத சங்காபிஷேகமும் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# மறைந்த முன்னாள் எம்.பிக்களுக்கு 26ஆம் திகதி அனுதாபப் பிரேரணை

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம். அலவி, எம்.என். அப்துல் மஜீத், பாலித தெவரப்பெரும மற்றும் மில்ரோய் பெர்னாந்து ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணைகளை 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 மணி வரையான நேரத்தை ஒதுக்குவதற்கும் பாராளுமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் (18) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

# யாழ். நகரிலிருந்து கதிர்காமம் சென்ற பஸ் மூதூரில் விபத்து

## சாரதி உட்பட 54 பேர் காயம்



மூதூர் தினகரன் நிருபர்

யாழ்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு யாத்திரிகர்களை ஏற்றிச்சென்ற பஸ்சொன்று விபத்துக்குள்ளானதில் 54 பேர் காயமடைந்துள்ளனர்.

திருகோணமலை – மட்டக்களப்பு வீதியில் தனியார் பஸ் வீதியை விட்டு விலகியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து மூதூர் – கெங்கே பாலத்துக்கருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

பஸ்சில் பயணித்த யாத்திரிகர்கள், சாரதி உட்பட 51 பேர் காயமடைந்து மூதூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

## எங்கள் கருத்து...

# பொதுமக்கள் மத்தியில் தவறான கருத்துகளை விதைக்கும் எதிரணி!

மன்னராட்சி யுகம் படிப்படியாக முடிவுக்கு வந்து, ஜனநாயக ஆட்சிமுறைமை தோற்றம் பெற்ற போதிலும், வரி நடைமுறையானது இன்னுமே தொடர்கின்றது. அதற்கான காரணமும் இல்லாமலில்லை.

மக்கள்நலத் திட்டங்களை குறைவின்றி முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு ஒரு அரசாங்கத்துக்கு உள்ளது. முதியோர், நலிவடைந்த மக்கள், வறியோர் போன்றோருக்கான நலன்திட்டங்கள், இலவசக் கல்வி, இலவச சுகாதாரம், மக்களுக்கான அடிப்படைச் சேவைகள் போன்ற பல்வேறு திட்டங்களுக்காக அரசாங்கம் பெருமளவு நிதியைச் செலவிட வேண்டியிருக்கின்றது.

இ.போ.ச பஸ் சேவை, ரயில் சேவை உட்ப பலவிதமான துறைகள் நஷ்டத்தில் இயங்குகின்ற போதிலும், பொதுமக்களின் நலன் கருதி அச்சேவைகளை அரசாங்கம் குறைவின்றி மேற்கொண்டு வருகின்றது. இந்த நஷ்டத்தை ஈடு செய்வதற்காக அரச நிதியிலிருந்தே பணம் செலவாகின்றது.

நாட்டு மக்களுக்கான இலவச சேவைகளை குறைவின்றி செயற்படுத்துவதற்குத் தேவையான நிதிக்கு அரசாங்கம் எங்கே போவது? நிதியை ஒதுக்குவதென்பது வெறுமனே பணநோட்டுகளை அச்சிடுவதல்லவே! பல்வேறு வழிகளிலும் வரிகளைச் சேகரித்துக் கொண்டே மக்களுக்கான சேவைகளை அரசாங்கம் தொடர வேண்டியிருக்கின்றது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வரிகள் குறைக்கப்பட்டதே, அன்றைய பொருளாதார வீழ்ச்சிக்குப் பிரதான காரணமென்பது அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், இன்றைய அரசாங்கம் மக்களிடமிருந்து வரியை அறவிடுவதாக அரசுக்கு எதிரான சக்திகள் குற்றம் சாட்டி வருகின்றன. மக்களிடமிருந்து வரிகளை அறிவிடாமல் நாட்டின் நிர்வாகத்தை எவ்வாறு நடத்துவதென்ற ஆலோசனைகள் எதனையும் எதிரணிகள் முன்வைக்கவில்லை. மாறாக, வரி அறவிடக் கூடாதென்றே கோஷம் எழுப்புகின்றன.

இலவச மருத்துவம், இலவசக் கல்வி, வறுமை ஒழிப்புத் திட்டங்கள், விசேட தேவையுடையவர்களுக்கான உதவித் திட்டங்கள், மக்களுக்கான அத்தியாவசிய சேவைகள் போன்றவற்றை முன்னெடுப்பதற்கான நிதியை எங்கு போய்த் திரட்டுவதென் ஆலோசனையை எதிரணியினர் முன்வைக்கவில்லை.

அரசாங்கத்தைக் குறை கூற வேண்டுமென்ற குறிக்கோள் ஒன்றையே எதிரணியினர் கொள்கையாகக் கொண்டுள்ளனர். அதற்காகவே வரி என்ற விடயத்தை கோஷமிட்டு வருகின்றனர். அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ள நாட்டை மீட்டெடுத்துள்ள இன்றைய அரசாங்கத்தின் திறமையை அவர்கள் பாராட்டாமல் விட்டாலும் பரவாயில்லை. தவறான கருத்துகளை மக்கள் மத்தியில் விதைப்பதை எதிரணியினர் நிறுத்திக் கொள்வது அவசியம்.

# தீர்வுக்காக வன்முறையற்ற ஜனநாயக வழிமுறை

## மக்கள் அணி திரண்டால் நானும் தயார்



பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்காக வன்முறையற்ற ஜனநாயக வழியில் மக்கள் அணி திரண்டால் தீர்வைப் பெற்றுத்தர எப்போதும் தயாரகவே இருக்கின்றேனென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஈவினை கிராமத்தின் வளர்ச்சி அந்த மக்களின் வழ்வாதார மேன்பாட்டுக்காக அவர்களின் குரலாக தன்னுடைய பங்களிப்பு எப்போதும் இருக்குமெனவும் அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துள்ளார்.

இளம் விவசாய தொழில் முனைவோர் கிராமமாக ஈவினை கிராமம் தெரிவாகியுள்ளதையடுத்து அதன் அங்குரார்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் விவசாய முயற்சியாளர்களுக்கான விவசாய உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. முன்பதாக இளம் விவசாய முயற்சியாண்மை கிராமமாக யாழ் மாவட்டத்தில் ஈவினைக் கிராமம் அன்றையதினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் இளைஞர்களை தொழில் முயற்சியாளர்களாக மாற்றும் திட்டத்தில் இளம் விவசாய முயற்சியாண்மை கிராமம்' என்ற திட்டம் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் அடிப்படையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பரிந்துரையில் யாழ். மாவட்டத்தில் உடுவில் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ஈவினை கிராமம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைகளின்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன்மொழிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட இந்த இளம் விவசாய முயற்சியாண்மை கிராமமான ஈவினை கிராமம் தெரிவாகியிருந்ததன் காரணமாக அதன் அங்குரார்ப்பண நிகழ்வை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

முன்பதாக இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராமமாக ஈவினை கிராம் தெரிவாகியுள்ள நிலையில் அதன் அங்குரார்ப்பண நிகழ்விற்கு சென்றிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈவினை கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூஜை வழிபாடுகளிலும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

குறித்த நிகழ்வில் யாழ் மாவட்ட அரச அதிபர், வலி தெற்கு பிரதேச செயலர், மாகாண விவசாய பணிப்பாளர், கமநல சேவைகள் பணிப்பாளர், மற்றும் துறைசார் அதிகாரிகள் விவசாய மக்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர்.

# ஸ்ரீலங்கன் விமான சேவை விற்பனை திட்டம் இரத்து

மூன்று சாத்தியமான கொள்வனவாளர்களை பட்டியலிட்ட போதிலும், கடன் சுமைக்கு உட்பட்டுள்ள அதன் தேசிய விமான சேவையான ஸ்ரீலங்கன் விமானச்சேவையை விற்பனை செய்யும் திட்டத்தை இலங்கை இரத்துச் செய்துள்ளதென அரசாங்கத்தின் தனியார் மயமாக்கல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்தாண்டு சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய கோரிக்கையான ஸ்ரீலங்கா ஏர்லைன்ஸை விற்பனை செய்வதற்கு, கடந்த செப்டம்பர் மாதம் ஏலம் விடுவதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனையடுத்து 2022 2023 நிதியாண்டின் இறுதியில் 2.0 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான தொகையை கடனாகக் கொண்டிருந்த, விமான நிறுவனத்தில் பங்குகளை எடுக்க ஆறு நிறுவனங்கள் ஆரம்பத்தில் விருப்பம் தெரிவித்தன.

மலேசியாவின் ஏர் ஏசியா உட்பட மூன்று சாத்தியமான முதலீட்டாளர்களின் பட்டியலை அரசாங்கம் ஏப்ரல் மாதம் அறிவித்தது.

இருப்பினும், கடந்த வெள்ளிக்கிழமை, அரசுக்கு சொந்தமான நிறுவன மறுசீரமைப்புப் பிரிவு விற்பனையை நிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. எனினும் இதற்கான காரணம் வெளியிடப் படவில்லை.

## பாராளுமன்றம் 23ஆம் திகதி...

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார். இதற்கமைய பாராளுமன்றம் நாளை மறுதினம் 23ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை கூடவிருப்பதுடன், 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தம்) (இரண்டாவது மதிப்பீடு) சட்டமூலம் மற்றும் நீதித்துறைச் சட்டமூலத்தின் கீழான இரண்டு ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதன் பின்னர் பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

24ஆம் திகதி புதன்கிழமை மு.ப 9.3 மணி முதல் பி.ப 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், மு.ப 10.30 மணி முதல் பிற்பகல் 5.30 மணி வரை பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மதுர விதானகேயுனால் கொண்டுவரப்படும் “தேசிய பாதுகாப்பு, அனைத்து மதங்கள் மற்றும் நாட்டின் கலாசாரம் ஆகியவற்றில் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் மற்றும் உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்” குறித்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்துகாக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

25ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 9.30 மணி முதல் பி.ப 5.30 வரை அரச நிதி முகாமைத்துவம் சட்டமூலம் மற்றும் பொருளாதார நிலை மாற்றம் சட்டமூலம் ஆகியவை தொடர்பான இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடத்தப்படவுள்ளது.

குறித்த விவாதத்துக்கு மேலதிக நேரத்தை வழங்கும் முகமாக அன்றையதினம் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கான நேரத்தை ஒதுக்காதிருக்கவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது. அத்துடன், சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காகவும் நேரத்தை ஒதுக்காதிருக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## மின் கட்டண பட்டியல்...

மின்சக்தி, எரிசக்தி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மொத்த உள்நாட்டு மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கையில் 39 வீதமெனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனை விட 17,27,828 மின்பாவனையாளர்கள் மாதாந்த அதிகபட்ச மின்சாரக் கட்டணமாக 700 ரூபாவை மட்டுமே செலுத்த வேண்டியுள்ளதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி, மொத்த வீட்டு மின்சார பாவனையாளர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பெருமளவு குறைக்கப்பட்ட மின் கட்டணத்தைச் செலுத்தி பெரும் நிம்மதியைப் பெற்றுள்ளனர்.

மொத்த உள்நாட்டு மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை 60,51,301 ஆக உள்ளதுடன் இதில் 1,99,142 மின்சார பாவனையாளர்கள் மாத்திரமே முழு நாட்டிலும் அதிக மின்சார பாவனையாளர்களாக பதிவாகியுள்ளனர்.

## அலி சப்ரி ரஹீம் MP கைதாகி...

காலை கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். வழக்கொன்றுக்கு ஆஜராகாததால் அலி சப்ரி ரஹீமை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும், மாவட்ட நீதவானுமான திருமதி அயோனா விமலரத்ன கற்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றத்தில் திறந்த பிடியாணை ஒன்றை கடந்த 08 ஆம் திகதி பிறப்பித்திருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் நேற்று (20) காலை 9.30 மணியளவில் கற்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஆஜராக சென்றிருந்த போது, அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர், புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் இந்திக தென்னகோன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது அவரை இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கி உத்தரவிட்டுள்ளார். அத்துடன், எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் அலிசப்ரி ரஹீம் எம்பிக்கு உத்தரவிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் சார்பில் சட்டத்தரணிகளான முஹம்மது இப்திகார் மற்றும் முஹம்மது அஸீம் ஆகிய இருவரும் ஆஜராகியிருந்தனர். கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சிப்பிட்டியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் பொறுப்புக் கூறும் வழக்கு கடந்த 8 ஆம் திகதி கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காததால் நீதவான் இவ்வாறு திறந்த பிடியாணை உத்தரவை வழங்கியிருந்தார்.

## ரூ.1,700 சம்பளம் கிடைக்கும் வரை...

நீதிமன்ற தீர்ப்புகளின் பின் தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும் வரை, தற்காலி தீர்வாக 5,000 ரூபாவை இடைக்கால கொடுப்பனவாக மாதாந்தம் அரசு வழங்க வேண்டுமென இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

1,700 ரூபா சம்பளம் தோட்ட தொழிலாளர்களுக்கு கிடைக்கும் வரை இடைக்கால கொடுப்பனவாக 5,000 ரூபா வழங்க மாவட்ட வாரியாக தொழிலாளர்களின் பட்டியல், நிரந்தர தொழிலாளர்கள், தற்காலிக தொழிலாளர்கள் என அனைத்து ஆவணங்களையும் செந்தில் தொண்டமான் ஜனாதிபதியிடம் நேற்று சமர்ப்பித்தார்.

செந்தில் தொண்டமானால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஆய்வு செய்து கோரிக்கையை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். 1,700 ரூபா சம்பளத்தை விரைவில் வழங்குவதற்கான வாய்ப்பை ஆய்வு செய்யுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலுக்கு...

ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார். 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதற்கான செலவு நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாகவும், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பு காரணமாகவே இம்முறை இத்தொகை அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல்களின் போது இலஞ்சம், கப்பம், ஏமாற்றுதல், அழுத்தம் போன்றவற்றிலிருந்து விடுபட்டு மக்களின் உண்மையான விருப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்கில் நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க தேர்தல்கள் செலவின ஒழுங்குமுறைச் சட்டம் இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அமுல்படுத்தப்படுமென்றும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஜனவரி 24, 2023க்குப் பிறகு எந்தத் தேர்தலும் நடைபெறவில்லை என்பதால், வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில்தான் முதன்முறையாக சட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாகவும் அதன்படி, ஒரு அரசியல் கட்சி மற்றும் வேட்பாளருக்குசெலவிடக்கூடிய அதிகபட்ச தொகையை சட்டம் கட்டுப்படுத்துகிறது என்றும் தெரிவித்தார்.

வேட்புமனுவை ஏற்றுக்கொண்ட 05 நாட்களுக்குள், அரசியல் கட்சிகளின் செயலாளர்களை அழைத்து, வேட்பாளர்கள் எவ்வளவு செலவு செய்ய முடியும் என்பதை நிர்ணயம் செய்து, வாக்களிப்பு நிறைவுற்றதும் அனைத்து வேட்பாளர்களும் தங்களது செலவு அறிக்கையை 21 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

வரம்பு மீறும் அல்லது சட்டவிரோதமான செலவுகள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் எவரும் முறைப்பாடு செய்ய முடியுமெனவும் சட்ட மாஅதிபர் ஊடாக சட்டத்தை ஆராய்ந்து நடைமுறைப்படுத்தவும், வழக்குகளை தொடரவும் பொலிஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முகநூல், யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்கள் ஊடாக வேட்பாளர்களின் பிரசாரங்களை முடிந்தவரை கட்டுப்படுத்துவதற்கு உரிய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை நோக்கி புறப்பட்ட...

பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. குஜாத் மாநிலம் கட்சு மாவட்டத்திலுள்ள அதானி குழுமத்தின் முந்த்ரா துறைமுகத்திலிருந்து வெள்ளிக்கிழமை இரவு இலங்கை தலைநகர் கொழும்பு நோக்கி சரக்கு கப்பல் புறப்பட்டது. கோவாவுக்கு தென்மேற்கே 102 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்த போது சரக்குக் கப்பலில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து குறித்து கடலோர காவல்படையினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது.

தகவலறிந்த மும்பை பிரிவு கடலோர காவல்படையினர் விரைந்து சென்று சரக்குக் கப்பலில் பற்றி எரிந்த தீயை பலமணிநேரம் போராடி அணைத்தனர். கப்பலிலிருந்த மாலுமிகளையும் பத்திரமாக மீட்டனர்.

## பங்களாதேஷில் வன்முறை;...

1,000 க்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு நாட்டிலுள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கலவரத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்க தொலைக்காட்சிக்கு தீ வைத்ததாகவும், நாட்டிலுள்ள அனைத்து தொலைக்காட்சி செய்தி சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. நாடு முழுவதும் இணைய இணைப்புகள் மற்றும் தொலைபேசி இணைப்புகளும் முடங்கியுள்ளன.

## பல்கலை கட்டமைப்புக்குள் அச்சுறுத்தும்...

குறிப்பிட்டார். பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்து பல்கலைக்கழகத்தை மாணவர்களிடம் கையளித்த ஜனாதிபதி, அதனைப் பார்வையிட்டதுடன், மாணவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

இதன்போது, பல்கலைக்கழக நிர்வாகம் மற்றும் இலங்கையிலுள்ள உயர் கல்வி நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வையொட்டி நினைவு முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

''1985 இல் ஹிஸ்புல்லாஹ்வை நான் முதன் முதலில் இளைஞர் சேவை மன்றத்தில் சந்தித்தேன். அவர் இன்று இந்த சர்வதேச பல்கலைக்கழகத்தை ஆரம்பித்துள்ளார். இந்த பல்கலைக்கழகம் நமது பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நமது நாட்டில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும். தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான அறிவைக்கொண்ட மக்களே நமது நாட்டிற்கு அவசியமாகும். அதனால் தான் இந்தப் பல்கலைக்கழகம் நாட்டுக்கு மிகவும் முக்கியமானது.

நமது நாட்டின் பிள்ளைகளுக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்க நீங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு மிகவும் நன்றி.

இப்பல்கலைக்கழகத்துடன் தற்போது கிழக்கு மாகாணத்தில் மூன்று பல்கலைக் கழகங்கள் உள்ளன.

இந்த நிறுவனங்கள் இலாபம் ஈட்டும் நிறுவனங்கள் அல்ல. இந்நிறுவனத்துக்கும் கிடைக்கும் நிதி சேமிக்கப்பட்டு, அந்த நிதி இந்த நிறுவனத்தின் வளர்ச்சிக்கே பயன்படுத்தும் வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளது. நம் நாட்டில் மட்டுமல்ல, உலகில் இலாபம் ஈட்டாத தலைசிறந்த பல்கலைக்கழகங்கள் உள்ளன.

ஹார்வர்ட், ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழகங்களை இலாப நோக்கமற்ற பல்கலைக்கழகங்கள் என்று அழைக்கலாம். கொத்தலாவல பல்கலைக்கழகம், NSBM பசுமைப் பல்கலைக் கழகம், SLIIT நிறுவனம் போன்றவையும் இலாப நோக்கமற்றவை.

சிலர் இவற்றை பட்டங்களை விற்பனை செய்யும் கடைகள் என்று கூறினர். அப்படியானால், கேம்பிரிட்ஜ், ஹார்வர்ட், ஒக்ஸ்போட் பல்கலைகழகங்களும் பட்டங்களை விற்கும் கடைகளா? அந்த மனப்பான்மையால்தான் இந்நாட்டின் அரச பல்கலைக்கழகங்கள் வீழ்ச்சியுற்று வருகின்றன. எனினும், இவற்றை நாம் மேலும் மேம்படுத்த வேண்டும்.

அன்று இருந்தது போன்று இன்று பல்கலைக்கழகங்கள் இல்லை. இன்று பல்கலைக்கழகங்களில் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் குழுக்கள் உள்ளன. அந்தக் குழுக்கள் ஒரு சர்வாதிகாரத்தைப் போல மாணவர்களைக் கையாளுகின்றன. இத்தகைய சூழலில் கற்பிக்கும் விரிவுரையாளர்களைப் பாராட்டுகிறேன்.

பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை பட்டங்களை விற்கும் கடைகள் என்ற கேவலமான பேச்சுக்கு நாம் செவிசாய்க்கக் கூடாது. பிள்ளைகள் சுதந்திரமாக கல்வி கற்கும் வகையில் இந்நாட்டில் உள்ள பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும். நாளை முதல் சமூக வலைதளங்களில் இதனைச் சொல்லி என்னைக் குறை கூறலாம். பல்கலைக்கழகத்தில் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும். பல்கலைக்கழகத்திற்குள் தங்களுக்கு விருப்பமான கற்கையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். நமது பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் சீர்குலையாமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற வேண்டும்.

இப்பல்கலைக்கழகம் அபிவிருத்தியடைந்தால் ஏனைய பல்கலைக்கழக கட்டமைப்புகளும் அபிவிருத்தியடையும் என்று எதிர்பார்க்கின்றேன். மேலும் இது போன்ற பல பல்கலைக்கழகங்கள் இன்னும் உருவாகும் என்று எதிர்பார்க்கின்றேன்.

இந்நாட்டில் உயர்கல்விக்காக விசேட பணியை ஆற்றிய லலித் அத்துலத்முதலி பெயரில் கல்வி நிறுவனம் ஒன்றை ஆரம்பிக்கவும் நாம் எதிர்பார்த்துள்ளோம். தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் உட்பட நான்கு கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

# பாராளுமன்ற குழுத் தலைவரை நியமிக்கும் விடயத்திலும் தமிழ்க்கட்சிகள் இழுபறி நிலை!

**ஜனாதிபதித் தேர்தலுக்கான பரபரப்பில் பிரதான கட்சிகள் மும்முரமாக இருக்கையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் யார் என்ற விடயத்தில் தமிழ்க் கட்சிகள் மத்தியில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளது.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும், அதன் பாராளுமன்றக் குழுவின் தலைவராகவும் இருந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மறைந்ததையடுத்து, பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டது. இந்த வெற்றிடத்துக்கு யாரை நியமிப்பது என்பது தொடர்பில் பேச்சுக்கள் அடிபடத் தொடங்கிய நிலையில், தன்னைக் குறித்த பதவிக்கு நியமிக்குமாறு ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

இது குறித்து தீர்மானம் எடுக்கும் நோக்கில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றக் குழு கூடிய போதும் தீர்மானம் எதுவும் எட்டப்படாமல் குறித்த கூட்டம் முடிவுக்கு வந்துள்ளது.

அன்றையதினம் கூட்டம் ஆரம்பித்தபோது, பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவிக்கு செல்வம் அடைக்கலநாதன் தன்னுடைய பெயரைப் பிரேரித்துள்ளார். “குறித்த பதவியை செல்வம் அடைக்கலநாதன் வகிப்பதில் எந்தவித ஆட்சேபனையும் இல்லை, தலைவர் பதவியை அவர் வகித்தாலும் இதுவரைகாலமும் இரா. சம்பந்தன் சார்பில் செயற்பட்ட எம்.ஏ.சுமந்திரனுடன் இணைந்து இதனை மேற்கொள்வது பொருத்தமாக இருக்கும்” என பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் கூறியுள்ளார்.

அது மாத்திரமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளான ரெலோ மற்றும் புளொட் ஆகிய கட்சிகள் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற கட்சிகளுடன் இணைந்து தனியான கூட்டணியொன்றை அமைத்திருக்கும் நிலையில், அதிலும் அங்கத்துவம் வகித்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியையும் வகிப்பது பற்றி தீர்மானிக்க வேண்டியிருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற ரீதியில் தீர்மானம் எடுப்பதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, எவ்வித தீர்மானமும் எடுக்கப்படாமல் கூட்டம் முடிவடைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் கூட்டணியாகச் செயற்பட்டாலும் இது பதிவுசெய்யப்பட்ட கட்சியாக இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். இரா.சம்பந்தன் இருந்த காலத்தில் இதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், இணக்கப்பாட்டை எட்டுவதில் பங்காளிக் கட்சிகளால் முடிவுக்கு வரமுடியவில்லை.

அது மாத்திரமன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அவ்வப்போது கருத்து முரண்பாடுகள் ஏற்படும்போது, அவற்றைத் தீர்த்து வைத்து கூட்டணியாக செயற்படச் செய்வதற்கு இரா.சம்பந்தனின் வகிபாகம் மிகவும் முக்கியமானதாக இருந்தது.

இந்த நிலையில் சம்பந்தனின் மறைவைத் தொடர்ந்து இந்தப் பணியை சிறப்பாக ஆற்றக் கூடிய ஒருவரே பாராளுமன்றக் குழுத் தலைவர் பதவியை ஏற்க வேண்டும். குறிப்பாக கூட்டமைப்பை ஒற்றுமையாக வைத்திருக்கக் கூடிய நபராக இருப்பதும் முக்கியமானது.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க எதிர்பார்த்திருப்பதாக சிறிதரன் எம்.பி தெரிவித்துள்ளார். தலைவர் தெரிவு உள்ளிட்ட பதவிகளுக்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்புக்கு எதிராக நீதிமன்றம் சென்றுள்ள நிலையில், குறித்த வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்து புதிய தெரிவுகளை மேற்கொள்ளவிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.




## தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் இறுதித் தீர்மானம் என்ன?





**ஜனாதிபதித் தேர்தல் பரபரப்பில் தென்னிலங்கை மூழ்கியிருக்கையில், தமிழர் அரசியல் வேறொரு திசையில் பயணம்! இரா. சம்பந்தனின் அரசியல் பக்குவம் இப்போது புரிகின்றது!**

“வழக்குத் தொடுத்தவர்கள் தமது கட்சியாக இருக்கின்றபோதும், அவ்வாறான நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத அளவுக்கு கட்சியில் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வழக்கைத் தொடுத்தவர்கள் வழக்கை மீளப் பெற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்களின் கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்து வழக்கை முடிவுக்குக் கொண்டுவந்து கட்சியின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த எதிர்பார்த்திருக்கின்றோம். கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் முதல் மத்திய குழுவரையில் உள்ள அனைத்து உறுப்பினர்களினதும் பெயர்கள் காட்சிப்படுத்தப்பட்டு, யாருடையதாவது பெயர் விடுபட்டிருந்தால் அவை அனைத்தையும் இணைத்து அவர்களின் பங்களிப்புடன் ஒவ்வொரு கட்டங்களுக்குமான தெரிவுகள் இடம்பெற வேண்டும்” என சிறிதரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது இவ்விதமிருக்க, ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களில் பெரும்பாலான கட்சிகள் ஈடுபடத் தொடங்கியுள்ள நிலையில், தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் இன்னமும் தமிழ்க் கட்சிகள் மத்தியில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சிவில் சமூக அமைப்புக்களும் ஒரு சில அரசியல் கட்சிகளும் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட வேண்டும் என்பதை ஆதரித்து வருகின்றபோதும், பிரதான தமிழ்க் கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி போன்றவை இது விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டுக்கு இன்னமும் வரவில்லையென்றே தெரிகின்றது.

கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய முன்னணி இந்தக் கோரிக்கையை ஆரம்பத்திலிருந்தே நிராகரித்திருந்த நிலையில், விக்னேஸ்வரன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் போன்றவர்கள் பொதுவேட்பாளர் விடயத்தில் உறுதியாக இருக்கின்றனர். இது பற்றி அரசியல் கட்சிகள் மத்தியில் ஒருமித்த நிலைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் சில முயற்சிகளை எடுத்திருந்தாலும், இன்னமும் இறுதி நிலைப்பாடு எடுக்கப்படவில்லை.

‘நாம் தனித்து நின்று எதையாவது சாதிக்க முடியுமா? என்பது தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரை இங்கு காணப்படும் மற்றுமொரு கேள்வியாகும். அதேநேரம், தென்னிலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய வேட்பாளர் ஒருவர் இனவாதத்தைக் கையில் எடுக்கும் பட்சத்தில், தமிழர்கள் தனியாக நிற்பது அவருக்கு மிக மிகச் சாதகமாக அமைந்துவிடும். இது தென்பகுதி மக்கள் மத்தியில் பாரிய மாற்றத்துக்கு வித்திட்டுவிடலாம்.

இதுபற்றிய கசப்பான அனுபவங்கள் பல கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு தமிழர்களுக்கு ஏற்பட்டதுண்டு என்பதால் இதற்கான சாத்தியத்தை முற்றுமுழுதாக மறுத்துவிட முடியாது.

எனவே, தென்னிலங்கையில் களமிறங்கும் வேட்பாளர்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தரக்கூடிய ஒருவருடன் உறுதியான பேச்சுவார்த்தைகளை நடத்தி அதன் அடிப்படையில் தீர்மானமொன்றுக்கு வரமுடியும். இருந்தாலும், கடந்த காலங்களில் அவ்வாறான இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும் இவை நடைமுறையில் எந்தளவுக்குச் சாத்தியமாகின என்பதும் கேள்விக்குறியே.

எனவே, தமிழ் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை தமிழ் அரசியல் தரப்புக்கள் சரியான வகையில் கையாள்வதே எதிர்காலத்தில் தமிழ் சமூகத்துக்கு நன்மை வகிக்கும் ஒன்றாக அமையும்.

**பி.ஹர்ஷன்...**

# இஸ்ரேலுக்கு ஆயுதங்களும் காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளும் வழங்கும் அமெரிக்கா!

**இரண்டு மாதங்களாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேரழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்களின் ஒரு பகுதியை இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்க அமெரிக்க நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. அந்த ஆயுதங்கள் இவ்வாரம் இஸ்ரேலை சென்றடையலாம் என்று பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரிகள் 'வோல்ட் ஸ்ட்ரீட் ஜேர்னலுக்கு கூறியுள்ளனர்.**



## 500 இறாத்தல் குண்டுகளை இரு மாதகால இடைநிறுத்தத்துக்குப் பின்னர் தற்போது அனுப்ப அனுமதி!

ரபா மீது இராணுவ நடவடிக்கையை முன்னெடுக்கக்கூடாது என அமெரிக்கா வலியுறுத்தி வந்த நிலையில், அதனையும் பொருட்படுத்தாமல் கடந்த மே 6 ஆம் திகதி இஸ்ரேல் நடவடிக்கையை ஆரம்பித்தது. அதனால் இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்க தயார்படுத்தப்பட்டிருந்த 500 இறாத்தல் நிறை கொண்ட 1800 குண்டுகளையும், 2000 இறாத்தல் நிறைகொண்ட 1700 குண்டுகளையும் அனுப்புவதை அமெரிக்கா தடுத்து நிறுத்தியிருந்தது.

அந்தச் சமயத்தில் காஸாவில் இடம்பெயர்ந்த மக்களில் சுமார் 1.4 மில்லியன் பேர் ரபாவில் தங்கியிருந்தனர். ஒரு சிறிய பரப்புக்குள் பெருந்தொகை மக்கள் தங்கியுள்ளதால் அப்பிரதேசத்தின் மீது இக்குண்டுகள் பாவிக்கப்பட்டால் அதிக சேதங்கள், உயிரிப்புக்கள் ஏற்படும் என்ற அச்சத்தின் அடிப்படையில் இக்குண்டுகள் அடங்கிய தொகுதியை இஸ்ரேலுக்கு அனுப்புவதை நிறுத்துவதாக அமெரிக்கா குறிப்பிட்டது.

இதற்கு ஆட்சேபனை தெரிவித்து வந்த இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, கடந்த ஜுன் மாத நடுப்பகுதியில் அமெரிக்க நிர்வாகத்தை வெளிப்படையாகவே விமர்சித்தார். அதனால் அமெரிக்க நிர்வாகத்திற்கும் இஸ்ரேலுக்கும் இடையில் முறுகல் நிலை உருவானது. இம்முறுகலை சீராக்கி மீண்டும் ஆயுதங்களை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் காலண்ட் ஜுன் பிற்பகுதியில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்ரிடன், இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்.

இந்நிலையில் நிறுத்தி வைக்கப்பட்ட 500 இறாத்தல் நிறை கொண்ட குண்டுகளை இப்போதைக்கு இஸ்ரேலுக்கு அனுப்பி வைக்க அமெரிக்க நிர்வாகம் அனுமதி வழங்கியுள்ளதோடு, அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம், காஸா மீது தொடராக யுத்தத்தை முன்னெடுத்துவரும் இஸ்ரேல், கடந்த சில தினங்களாக தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளது. குறிப்பாக கடந்த வியாழக்கிழமை வரையான பத்து நாட்களுக்குள் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள யூ.என்.ஆர்.டப்ளியூ. நிறுவனத்தின் 08 பாடசாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அதனால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டும் மேலும் நூற்றுணக்கானோர் காயமடைந்துமுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ள அந்நிறுவனத்தின் ஆணையாளர் நாயகம் பிலிப்பே லசாரினி, இந்த யுத்தம் ஆரம்பமானது முதல் காஸாவிலுள்ள 70 சதவீதமான எமது பாடசாலைகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்றுள்ளார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள ஐ.நா. நிறுவனங்களின் பாடசாலைகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளமைக்கு ஐக்கிய நாடுகள் சபை அடங்கலாக, சவுதி அரேபியா, அவுஸ்திரேலியா, எகிப்து, ஜோர்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட பல நாடுகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் சி.என்.என். ஊடகவியலாளர் ஒருவர் இத்தாக்குதல்கள் குறித்து பதிவு செய்துள்ள வீடியோ காட்சிகளில் பகுப்பாய்வுகளை மேற்கொண்ட சி.என்.என், அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஜி.பி.யூ39 ஆயுதம் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது. வெடிக்கும் ஆயுதங்கள் தொடர்பான ஆய்வுச் சேவைகளின் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் பற்றிக் சென்பட்டும், அமெரிக்க இராணுவ வெடிகுண்டுகளை அகற்றும் முன்னாள் தொழில்நுட்ப வல்லுநர் ட்ரெவர் பாலும் சி.என்.என். மேற்கொண்ட பகுப்பாய்வை உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த ஜி.பி.யூ39 குண்டு குறித்து வெடிகுண்டுகள் தொடர்பான ஆயுத நிபுணர் கிறிஸ் கோப்ஸ்மித் குறிப்பிடுகையில், 'இது ஒரு உயர் துல்லியமான தாக்குதல் வெடிமருந்து, மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த இலக்குகளைத் தாக்க வடிவமைக்கப்பட்டுள்ளது' என்றுள்ளார்.

'இவ்வாறான வெடிமருந்துகளை பயன்படுத்தும் போது மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் எப்போதும் ஆபத்துகள் ஏற்படும்' என்று பிரித்தானிய இராணுவ பீரங்கி பிரிவு முன்னாள் அதிகாரியான கோப்ஸ்மித் கூறியுள்ளார்.

இஸ்ரேல் பயன்படுத்தும் குண்டுகள் குறித்து வெடிகுண்டுகள் தொடர்பான நிபுணர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ள சூழலில், அமெரிக்கா அனுப்பி வைக்கும் 500 இறாத்தல் நிறை கொண்ட ஒரு குண்டு வெடித்தால் 20 மீற்றர் (65 அடி) சுற்று வட்டத்திலுள்ள அனைத்தையும் அல்லது எவரையும் கடுமையாக பாதிக்கும் அல்லது சேதப்படுத்தும், அழிவுகளையும் ஏற்படுத்தும் என்று பாதுகாப்பு கொள்கை ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வை நடத்தும் பாதுகாப்பு திட்டம் சுட்டிக்காட்டியுள்ளதோடு, தரைமட்டத்தில் இருந்து 1.4 மீற்றர் ஆழம் மற்றும் 4.11 மீற்றர் அகலம் (13.36 அடி) வரையும் பாதிப்புகளை இக்குண்டுகள் ஏற்படுத்தும் என்று கண்ணிவெடி அகற்றலுக்கான ஜெனீவா சர்வதேச நிலையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் 2,000 இறாத்தல் நிறைகொண்ட குண்டு வெடித்தால் 35 மீற்றர் (115 அடி) சுற்றடளவில் உள்ள அனைத்தையும் எவரையும் அது பாதிக்கும் அல்லது சேதப்படுத்தும் என்றும் அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. அத்தோடு இக்குண்டுகள் நேரடியாக நிலத்தில் விழுந்தால் பாரிய கிடங்குகளும் கூட உருவாகும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், காஸா மீதான யுத்தம் ஆரம்பமானது முதல் தொடக்க காலப்பகுதியில் 240 தடவைகள் அமெரிக்காவினால் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் பிற்பட்ட காலப்பகுதியில் அது 120 தடவைகளாகக் குறைவடைந்துள்ளதாகவும் இஸ்ரேலிய ஊடகமொன்று தெரிவித்துள்ளது. இதேநேரம் பெயர் குறிப்பிட விரும்பாத அமெரிக்க அதிகாரியொருவர் றொய்ட்டருக்கு குறிப்பிடுகையில், கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் இவ்வருடம் ஜுன் 28 ஆம் திகதி வரையும் குண்டுவீச்சு விமானங்களுக்கு பயன்படுத்தப்படும் சுமார் 14 ஆயிரம் எம்.கே. 84 குண்டுகள், 227 கிலோ நிறை கொண்ட 6,500 வெடிகுண்டுகள், துல்லியமாகத் தாக்கக்கூடிய 3,000 ஹெல்ஃபயர் ஏவுகணைகள், பதுங்கு குழிகளைத் தாக்கி அழிக்கும் 1000 குண்டுகள், சிறிய அளவிலான 2,600 கலிபர் குண்டுகள் என்பன யுத்த விமானங்கள் மற்றும் பிற ஆயுதங்கள் மூலம் காஸாவில் பயன்படுத்தப்பட்டுள்ளன' என்றுள்ளார்.

சி.என்.என். தரவுகள் படி, யுத்தம் ஆரம்பித்தது முதல் ஜனவரி வரையும் தினமும் சராசரியாக 15 சரக்கு விமானங்களில் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் அமெரிக்காவினால் அனுப்பப்பட்டுள்ளன.

இஸ்ரேலின் ஹாரெட்ஸ் பத்திரிகை நடத்திய ஆய்வில், காஸா யுத்தம் ஆரம்பமான பின்னர் உலகின் பல பாகங்களிலுமுள்ள அமெரிக்க இராணுவ தளங்களில் இருந்து 173 இராணுவ மற்றும் சிவிலியன் சரக்கு விமானங்கள் மூலம் இஸ்ரேலுக்கு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை கொண்டு வரப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. இதன்படி கடந்த வருடம் ஒக்டோபரில் 22 விமானங்கள், நவம்பரில் 47 விமானங்கள், டிசம்பரில் 32 விமானங்கள், இவ்வருடம் ஜனவரியில் 20 விமானங்கள், பெப்ரவரியில் 08 விமானங்கள், மார்ச்சில் 11 விமானங்கள், ஏப்ரலில் 17 விமானங்கள், மே மாதம் 7 விமானங்கள் ஜுனில் 9 விமானங்கள் என்றபடி இஸ்ரேலின் விமானப்படைத் தளங்களில் தரையிறங்கியுள்ளன.

அப்படியிருந்தும் இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் 500 இறாத்தல் நிறை கொண்ட குண்டுகளை அனுப்பி வைக்க அமெரிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களை இஸ்ரேல் பயன்படுத்துவதாக ஹமாஸ் குற்றஞ்சாட்டியுள்ளதோடு, அவற்றினால் தீக்காயங்களும் உடலில் எரிவு அரிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளது. இவ்வாறான ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதை தடுத்து நிறுத்தவும் அப்பாவி மக்களுக்கு எதிரான மனிதாபிமானமற்ற குற்றங்களை கண்டிக்கவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் உலக நாடுகள் முன்வர வேண்டும் என்றும் கோரிக்கையும் விடுத்துள்ளது.

இந்த யுத்தம் காரணமாக காஸாவில் 38ஆயிரத்து 500க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டும் 89 ஆயிரம் பேர் காயமடைந்தும், இஸ்ரேலில் 1139 பேர் கொல்லப்பட்டும் 8730 பேர் காயமடைந்தும் மேற்குக் கரையில் 576பேர் கொல்லப்பட்டும் 5300 பேர் காயமடைந்துமுள்ளனர். இக்கொடூர யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதே அமைதி சமாதானத்தை விரும்பும் அனைத்து தரப்பினரதும் எதிர்பார்ப்பாகவும் வலியுறுத்தலாகவும் உள்ளது.




**தடைசெய்யப்பட்ட ஆயுதப் பாவனையை கட்டுப்படுத்த உலக நாடுகளுக்கு ஹமாஸ் அழைப்பு**



**மர்லின் மரிக்கார்...**

**ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டிய காலம் தொடர்பில் காணப்பட்ட இழுபறி நிலைமை ஓரளவுக்கு முடிவுக்கு வந்து தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்றுள்ளது.**




# ஜனாதிபதித் தேர்தல் தாமதமடையுமென்ற சந்தேகம் நீங்கியது!

## அரசியல் கட்சிகள் உஷார்! தேர்தல் கூட்டணி அமைப்பதில் ஆர்வம்!




ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டியது எப்போது என்பது தொடர்பில் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், 19 ஆவது திருத்தச்சட்டத்தில் காணப்பட்ட தெளிவின்மை காரணமாக உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

பாணந்துறையைச் சேர்ந்த சமிந்திர டி. லெனாவா எனும் வர்த்தகர் ஒருவர் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். அரசியலமைப்பின் 30 (2) ஆவது பிரிவு 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் 3 ஆவது பிரிவின் மூலம் திருத்தப்பட்டதாகக் கருதப்படவில்லையெனக் கூறி முதலாவது வழக்கைத் தாக்கல் செய்திருந்தார். இதனை விசாரித்த உயர் நீதிமன்றம் இந்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

இந்த நிலையில் 19 ஆவது திருத்தச் சட்டம் சர்வஜன வாக்கெடுப்பு உள்ளிட்ட சரியான முறையில் நிறைவேற்றப்படவில்லையென்றும், அதனை நிறைவேற்றும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறும் கூறி அருண லக்சிறி உனவதுன என்ற சட்டத்தரணியொருவர் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

ஆர். எம்.எல். ஏ. ரத்னாயக்க கடந்த சில நாட்களுக்கு முன்னர் நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அரசியலமைப்பின் பிரகாரம் செப்டெம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 ஆம் திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதாவது 63 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் திகதியை தீர்மானிக்கையில் வேட்புமனுதாக்கல் செய்வது முதல் பிர





அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 70 ஆவது பிரிவு திருத்தப்பட்டுள்ளதாகவும், ஒரு வருடத்தின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தை பறிப்பதற்காகவும் எனவும் மனுதாரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த சட்டத்திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்புக்கு அனுப்ப வேண்டும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதால் இதனை உரிய முறையில் நிறைவேற்ற வேண்டும் என அவர் தனது மனுவில் கோரியிருந்தார். இந்த மனு மீண்டும் பரபரப்பான அரசியல் சூழலைத் தூண்டியது.

எனினும், இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய மற்றும் நீதியரசர்களான அர்ஜுன ஒபேசேகர மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் குழு இந்த மனுவில் எந்த அடிப்படையும் இல்லையெனக் கூறி மனுவைத் தள்ளுபடி செய்தது.

அது மாத்திரமன்றி வழக்கிற்கான செலவாக 500,000 ரூபாவை செலுத்துமாறும் மனுதாரருக்கு பணிப்புரை விடுத்திருந்தது. இரண்டு வாரங்களில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதுடன், நிதிமன்ற செயற்பாட்டை கேலிக்குட்படுத்த வேண்டாம் என்ற எச்சரிக்கையும் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

இதனால், ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது நீதிமன்றம் ஊடாகத் தாமதப்படுத்தப்படுமா என்ற சந்தேகம் நீங்கியது. இவ்வாறான பின்னணியில் கடந்த 17ஆம் திகதியுடன் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்றுள்ளது. செப்டெம்பர் 17 ஆம் திகதிக்குப் பின்னர் பொருத்தமான ஒருநாளில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்




சாரங்களை மேற்கொள்வதற்கும் வேட்பாளர்களுக்கு காலஅவகாசம் வழங்க வேண்டும். தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் முன்னாயத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கும் காலஅவகாசம் தேவைப்படுகின்றது. இவை அனைத்தையும் கருத்திற்கொண்டே திகதி தீர்மானிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அடுத்தவாரம் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு மீண்டும் கூறியிருக்கும் நிலையில், அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்து கலந்துரையாடல்களை நடத்தத் தொடங்கியுள்ளன. தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவதற்குச் சென்றதாக அந்தக் கட்சிகள் கூறியிருந்தன.

எனினும், ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி குறித்துக் கலந்துரையாடப்பட்டிருக்கலாம் என அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இந்த நிலையில் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பில் காணப்படும் தெளிவின்மையை நீக்கும் வகையில், 19 ஆவது திருத்தத்தின் ஓரிடத்தில் காணப்படும் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடங்கள் என்ற சொல்லை நீக்கி 5 வருடங்களாக மாற்றுவதற்கான அரசியலமைப்புத் திருத்தமொன்றை ஜனாதிபதி அமைச்சரவையில் முன்வைத்திருந்தார்.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இது தற்பொழுது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவிருப்பதாக அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது. எனினும், ஜனாதிபதித் தேர்தலைப் பிற்போடுவதற்கான ஒரு உத்தியாக இது இருக்கலாம் என எதிர்க்கட்சிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளன.

இந்தப் பின்னணியிலேயே நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ, குறித்த அமைச்சரவைத் தீர்மானம் பற்றிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட வேண்டாம் எனத் தனது அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்வரை குறித்த அரசியலமைப்புத் திருத்தத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டாம் என அமைச்சர் கூறியிருப்பது அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க, ஜனாதிபதித் தேர்தலுக்கான கூட்டணிகளை அமைப்பது மற்றும் பிரசாரக் கூட்டங்களை நடத்துவது என அரசியல் கட்சிகள் பரபரப்படையத் தொடங்கியுள்ளன.

## தேர்தலுக்கான திகதியை அறிவிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம்! செப்டெம்பர் 17 ஆம் திகதிக்குப் பின்னர் பொருத்தமான ஒரு தினத்தில் ஜனாதிபதித் தேர்தல்!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராகக் களமிறங்குவார் என அவர் பிரதிநிதித்துவம் செய்யும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது. ஜனாதிபதிக்கு பொதுஜன பெரமுன உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் ஆதரவு இருப்பதால் அவர் பொதுவேட்பாளராகக் களமிறங்குவார் என்று அக்கட்சி கூறியுள்ளது.

எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவதா அல்லது தமது கட்சியின் சார்பில் தனியொரு வேட்பாளரைக் களமிறக்குவதா என்ற விடயத்தில் பொதுஜன பெரமுனவுக்குள் மாறுபட்ட நிலைப்பாடுகளே காணப்படுவதாகத் தெரிகின்றது. இது விடயத்தில் அக்கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பிளவு ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான பொதுக் கூட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எனப் பலரும் அந்தக் கூட்டங்களில் பங்கெடுத்து வருகின்றனர். இவற்றைப் பார்க்கும்போது அக்கட்சியில் உள்ளவர்கள் தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் இருப்பது தெளிவாகின்றது.

இருந்தபோதும், நாட்டை இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்பதற்கு முன்வந்த, ஓரளவுக்குப் பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாகுவதற்குக் காரணமாகவிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெல்வது உறுதியென்றும், ஏனைய வேட்பாளர்கள் தமக்கு சவால் இல்லையென்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டார தெரிவித்திருந்தார்.

கடந்த தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் பலப்படுத்தும் வகையில் புதிய உறுப்பினர்கள் இணைக்கப்பட்டு வருகின்றனர். கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களுடன் இருந்த முக்கிய அரசியல் புள்ளிகள் இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர். அது மாத்திரமன்றி, தமது கட்சியிலிருந்து விலகிச் சென்று தற்பொழுது ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ள உறுப்பினர்களுக்கும் ஐ.தே.க அழைப்பு விடுத்துள்ளது.

மறுபக்கத்தில், ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பதற்கு டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவினர் முன்வந்துள்ளனர். இவர்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. தேர்தலை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் தமது இருப்புக்களை நோக்காகக் கொண்டு அரசியல் கூட்டணிகள் அமைக்கப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இருந்தபோதும், ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் காணப்படும் கருத்து முரண்பாடுகளும் வலுவடைந்து வருகின்றன. அக்கட்சியின் தவிசாளர் பதவியில் உள்ள பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஏற்கனவே கட்சித் தலைமையுடன் முரண்பட்டுள்ள நிலையில், அவருடைய பதவிக்குப் புதியவர் ஒருவரை நியமிப்பதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம், அக்கட்சியின் மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினரான டொக்டர் ராஜித சேனாரத்னவும் கட்சி தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றார். கடந்த சில நாட்களாக அவர் முன்வைத்துவரும் விமர்சனங்கள் குறிப்பாகத் தன்னை இலக்குவைத்து முன்வைத்துவரும் விமர்சனங்களுக்குப் பதில் வழங்கும் வகையில் கபீர் ஹாசிம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தித் தெளிவுபடுத்தியிருந்தார். இவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது வெளியிலிருந்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் கைகோர்ப்பதற்குச் சிலர் சென்றாலும் கட்சிக்குள்ளே குழப்பம் நிலவுவது தெளிவாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் மற்றுமொரு பிரதான வேட்பாளராக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க காணப்படுகின்றார். அவர்களுடைய கட்சி ஏற்கனவே தேர்தல் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பித்து முன்னெடுத்து வருவதுடன், அவர்களுடன் கூட்டணி அமைப்பதற்கு வெளியிலிருந்து எந்தவொரு கட்சியும் சென்றதாகத் தெரியவில்லை.

அவர்களின் பிரசாரக் கூட்டங்களில் காணப்படும் மக்களின் எண்ணிக்கைக்கும், தேர்தலின் போது அவர்களுக்குக் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கைக்கும் இடையில் பாரிய வித்தியாசம் இருப்பதை கடந்த காலத் தேர்தல்கள் உணர்த்தியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

**ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்முரண்பாடுகள் தீவிரம்; தேசிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைப்பதில் எந்தவொரு கட்சிக்கும் ஆர்வமில்லை!**

---




# மலையக நவீன இலக்கியத்தில் முதற்குரல் எழுப்பிய திருச்செந்தூரன்



1960களில் இலங்கை மலையக மக்களிடையே புதியதொரு மாற்றம் ஏற்பட்டது. 1952இல் நடைமுறைக்கு வந்த குடியுரிமைச் சட்டத்தால் நாடற்றவர்களாக ஆக்கப்பட்ட இவர்கள் தமது உரிமைகள் இந்த நாட்டில் கேள்விக்குறியாகி வருவதை உணர்ந்தனர். 1956இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சிங்களம். மட்டும் மொழிச் சட்டம் மேலும் இவர்களது இருப்பை இருளடையச் செய்வதாக அமைந்தது. அக்காலத்தில் எழுத்தாளர்கள் சிலர் சீற்றத்தோடு தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தினர். இவர்களை ஆத்திரப் பரம்பரையினர் என்று அழைப்பர். இவர்களுள் முதன்மையானவர் திருச்செந்தூரன்.

1959இல் தமிழகச் சஞ்சிகையான 'கல்கி, நடத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'உரிமை எங்கே என்ற சிறுகதை இரண்டாம் பரிசுபெற்றது. இக்கதை, இலங்கையில் பிரஜா உரிமை மறுக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் உரிமை பற்றியது. இலங்கையில் இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் குடியுரிமை மறுக்கப்பட்டு நாடற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை இக்கதை மூலம் தமிழ்கூறு நல்லுலகெங்கும் கொண்டுசெல்ல இலக்கியத்தைப் பயன்படுத்தியவர்; என்ற பெருமையையும் மலையக நவீன இலக்கிய எழுச்சியின் முதல்வர் என்ற தகைமையையும் இவருக்குப் பெற்றுத்தந்தது.

சிறந்த சிறுகதை எழுத்தாளராக மிளிர்ந்த இவர் நடுக்கடலில், என்ன செய்துவிட்டேன், சாமிக்கடன் உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்.

திருச்செந்தூரன் கண்டி மாவட்டத்தில் உள்ள கலகா பகுதியில் மந்திரமலை என்னும் தேயிலைத் தோட்டத்தில் 30.08.1936இல் பிறந்தவர். தனது ஆரம்பக் கல்வியை கலகா பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்.இந்துக்கல்லூரியிலும் உயர்கல்வியை சென்னை கிறிஸ்தவக் கல்லூரியிலும் பெற்றார்.



1959இல் ஹட்டன் புனித பொஸ்கோ கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்த இவர் பின்னர் ஹைலன்ட் கல்லூரியில் முதலில் ஆசிரியராகவும் பின்னர் 0104 71 முதல் 31.03.76வரை அதிபராகவும் கடமையாற்றியவர். அக்கல்லூரிக் கீதத்தை இயற்றியவரும் இவரே. கல்லூரி அதிபராகப் பணியாற்றிக் கொண்டே தனது நண்பர் இ ர . சி வ லி ங் க த் து டன் இணைந்து மலையகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். திருவள்ளுவர் நற்பணிமன்றம், மலைநாட்டு வாலிபர் சங்கம், மலையக இளைஞர் முன்னணி ஆகிய அமைப்புகளை உருவாக்கி இவற்றினூடாக இளைஞர்களை ஒருங்கிணைத்து மலையகத்தில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர்.

மலையகத்தில் பல கற்றறிவாளர்களையும் அரசியல் பிரமுகர்களையும், கலைஞர்களையும், கவிஞர்களையும், எழுத்தாளர்களையும் உருவாக்கிய பெருமை இவருக்குரியது.

நாடகத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த திருச்செந்தூரன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற துறையில் பட்டமேற்படிப்பு டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர். மலையக நாட்டார்கலையான காமன்கூத்தை நவீனமயப்படுத்தி கொழும்பில் மேடையேற்றியவர். தனது மாணவர்கள் பலருக்கு நாடகத் துறையில் பயிற்சி வழங்கியவர். சிலைகள் என்ற நாடகத்தில் நடித்ததோடு தாளலய நாடகங்களையும் நெறிப்படுத்தினார்.

பிற்பட்ட காலத்தில் மாத்தளை பாக்கியா வித்தியாலயத்தில் பணியாற்றும்போது அங்கும் பல கலை இலக்கியவாதிகளை உருவாக்கினார். மாத்தளை கார்த்திகேசு தயாரித்த 'அவள் ஒரு ஜீவநதி' என்ற தமிழ்த் திரைப்படத்தில் பாதிரியார் பாத்திரமேற்று நடித்தார்.

1980களில் தமிழகம் திரும்பிய திருச்செந்தூரன், நீலகிரி மாவட்டத்தில் மலையக மக்கள் மறுவாழ்வுமன்றம் என்ற அமைப்பினூடாகத் தனது நண்பர் இர சிவலிங்கம், மற்றும் அருட்பணி அல்பொன்ஸ் ஆகியோருடன் இணைந்து 1984முதல் பதினாறு வருடங்கள பணியாற்றியபின் 31. 03.2001இல் திருச்சியில் அமரரானார்.

### தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில்

# பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் 11ஆவது புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் 11 ஆவது புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு மககொடை ஐ.எல்.எம் ஸம்ஸுத்தீன் மகா வித்தியாலயத்தில் இன்று 21ஆம் திகதி நடைபெறும்.

பேருவளை பீ.எம் முக்தார்.

பேருவளை அப்ரார் கல்வி நிலையத்தின் 11 ஆவது புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 4 மணிக்கு பேருவளை மககொடை ஐ.எல்.எம் ஸம்ஸுத்தீன் மகாவித்தியாலய மண்டபத்தில் கல்வி நிலைய ஸ்தாபகரும் பாராளுமன்ற உறுப்பினருமான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தலைமையில் நடைபெறும்.









ஓமான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் அஹமட் பின் அலி பின் ஸையித் அல் ரஷாதி பிரதம அதிதியாகவும் பலஸ்தீன நாட்டின் இலங்கைக்கான பதில் தூதுவர் ஹிஷாம் அபூ தாஹா விஷேட அதிதியாகவும் ஸம்ஸம் பவுண்டேசன் பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.எச். முஹம்மத் ஹிஷாம் விஷேட பேச்சாளராகவும் கலந்து முன்னாள் முஸ்லிம் விவாக பதிவாளரும் மேற்படி கல்வி நிலைய தலைவருமான எம்.ஜே.எம். நிசாமின் வழிகாட்டலின் கீழ் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பிரதேச பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், அப்ரார் கல்வி நிலைய உறுப்பினர்கள் என பலரும் நிகழ்வில் கலந்து கொள்வர். சுமார் 50 மாணவர்களுக்கு நிகழ்வில் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. பேருவளையில் மருதானை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கல்வியில் பின்னடைவுக்கான காரணத்தை கண்டறிந்து ஆவன செய்யும் நோக்கத்தில் 2012.05.19 அன்று முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஊரில் கல்வித்துறை, மற்றும் பல்துறை சார்ந்த பிரமுகர்களை ஒன்று திரட்டி முதன் முதலாக பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் பெரிய பள்ளியில் *ABRAAR EDUCATION FOUNDATION* என்னும் பெயரில் ஒரு அமைப்பை உருவாக்கினார்.

இதற்கான நிதியை முதன் முதலில் அன்னாரின் சகோதரி வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

இந்த அமைப்பின் போசகராக இம்தியாஸ் பாக்கிர் மாக்காரும் முதல் தலைவராக ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.டப்லியு.எம் அஜ்வாத்தும்,

பொதுச்செயலாளாராக ஓய்வு பெற்ற அதிபர் மர்ஹூம் ஏ.எச்.எம் முர்சியும் பொருளாளராக மாணிக்க வியாபாரி எம்.எஸ்.எம். உவைஸும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்கள்.

கடந்த பத்து ஆண்டுகள் தலைவர் பதவியை வகித்த ஏ.டப்லியு.எம் அஜ்வாத் வயது முதிர்ச்சி காரணமாகவும் வேறு ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்கும் நோக்குடனும் தலைவர் பதவியை விட்டுக் கொடுத்தார். பின்னர் ஓய்வு பெற்ற முஸ்லிம் விவாகப் பதிவாளர் முஹம்மத் நிஸாம் தலைவராக நியமனம் பெற்றார். செயலாளர் பொருளாளர் பதவிகளில் காலகிரமத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. பொதுச்செயலாளர் பதவியை நீர்ப்பாசன திணைக்கள விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் ஏ.ஜே.எம். ராஜியும். பிரபல வர்த்தகர், எம்.எஸ். எம் இக்பாலும் அலங்கரித்தார்கள்.

பொருளாளர் பதவியை ஓய்வு பெற்ற அதிபர், கணக்கியல் பட்டதாரி எம்.எல்.ஏ அப்துல் அஹ்லா. பொறுப்பேற்று அரிய பங்காற்றினார். பத்தாண்டு இறுதியில் புதிய நிர்வாக சபை தெரிவாகியது. தலைவராக முன்னாள் முஸ்லிம் விவாக பதிவாளர் எம்.ஜே.எம். நிசாமும் பொதுச் செயலாளராக கலாநிதி மௌலவி அஸ்வர் அசாஹிமும் (அல் அஸ்ஹரி) . அவரின் துணை செயலாளராக அதிபர் பீ.எம்.எம்.எம். ஜாபிரும் பொருளாளராக கணக்கியலாளர் ஹலீம் ஏ அஸீஸும் கல்விப் பணிப்பாளராக பட்டதாரி ஆசிரியரும் கட்டடக் கலைஞருமான எம்.எச்.எம் இஹ்ஸானும் பதவியேற்றுள்ளதுடன். அவர்களுக்கு துணையாக ஒரு பலம் வாய்ந்த நிர்வாக சபையும் அமைந்துள்ளது.

இந்த அமைப்பு பிரதேச பாடசாலைகளில் கற்று வறுமை காரணமாக இடை விலகிச் செல்லும் பிள்ளைகளில் திறமைசாலிகளை பாதுகாத்து அவர்கள் தொடர்ந்து கற்று உயர் கல்வி பெற ஊக்குவிக்கும் வகையில் அவர்களை இனம்கண்டு அவர்களுக்கு மாதா மாதம் பணம் சார்ந்த புலமை பரிசில் வழங்கி வருகிறது.

இதுவரை பல நூற்று க்காணக்கான மாணவ மாணவிகள் பலனடைந்து வருகின்றனர். பல மாணவியர் பட்டதாரிகளாக உருவாகி உள்ளதுடன். மேலும் பலர் சர்வ கலாசாலைகளில் கற்கை நெறியை தொடர்கின்றனர். இந்த பிரதேசத்தை சேர்ந்த மாணவ மாணவியர்கள் பல்கலைக்கழக செலவினங்களை ஈடுசெய்துகொள்ள முடியாமல் இருப்பதால் அவ்வாறானவர்களை இனம்கண்டு அவர்களுக்கும் உதவும் கைங்கரியத்தையும் புதிய நிர்வாகம் மேற்கொண்டுள்ளது.

பல மில்லியன் ரூபா செலவில் பாரிய எதிர்காலத்திட்டங்களை அப்ரார் கல்வி நிலையம் வகுத்துள்ளது. இந்த அமைப்பின் ஆரம்பம் முதல் இன்று வரை ஊர் பரோபகாரிகளினதும் தனவந்தர்களினதும் உதவி கொண்டு மிகச்சிறப்பாக தொண்டாற்றுகின்றது.

இந்த திட்டங்களுக்கு தொடர்ந்தும் பரோபகாரிகளினது பங்களிப்பு இன்றியமையாதது.

இது ஒரு அரசியல் மற்றும் இயக்க சார்பற்ற இஸ்லாமிய அமைப்பாகும். ஏழைப் பிள்ளைகளின் கல்வி நலனிலும் பிரதேச முன்னேற்றத்திலும் கரிசனை உள்ள எவரும் இந்த அமைப்பில் இணைந்து தத்தமது பங்களிப்பை வழங்க முன்வரலாம்.









# விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் VTA மூலம் தொழிற்பயிற்சி வாய்ப்புகள்



**இன்று அனைத்து தரங்களில் இருப்பவர்களும் ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முன் குடும்பத்தில் வேலை பார்க்க முடியுமான அனைவரும் பணம் சம்பாதிக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. பணம் ஈட்டுவதற்கு தம்மிடம் உள்ள ஏதேனும் திறமை அல்லது தொழில் அறிவு ஒன்று இருக்க வேண்டும். உயர் கல்வியை பெற்றிருந்தபோதும் தொழிற் கல்வி ஒன்றை பெற்றிருந்தால் அவர்களுக்கு மிக விரைவில் தொழில் ஒன்றை பெறுவதற்கு இயலுமாக உள்ளது. நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட, நம்பிக்கைக்குரிய தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்றினால் தொழிற்பயிற்சி ஒன்றை பெற்றுக்கொள்வது வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமையும். அதன்படி 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட எவருக்கும் இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் தேசிய தொழில் தகைமை சான்றிதழ் ஒன்றை (NVQ) பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக உள்ளது.**

இது தொடர்பில் மிகத் தெளிவான விபரங்களை தெரிந்துகொள்ளும் நோக்கில் நாம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தற்போதைய தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.கே. ராஜபக்ஷவைச் சந்தித்தோம்.

### இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் அடிப்படையான பணிகள் தொடர்பில் கூறுவதென்றால்?

இலங்கையின் பிரதான மற்றும் முதன்மையான தொழிற்பயிற்சி நிறுவனமாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உள்ளது. 1995ஆம் ஆண்டு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை நிறுவப்பட்டது. அப்போது அரசியல் நிர்வாகத்தில் இருந்த தலைவர்கள் தூர நோக்குடன் ஏற்படுத்திய நிறுவனமாக இதனை குறிப்பிடலாம்.

இலங்கை முழுவதும் பரந்திருக்கும் 204 தொழிற்பயிற்சி நிறுவனங்கள் மூலம் நாம் மாணவர்களுக்கு தொழில் பயிற்சியை பெற்றுக்கொடுக்கிறோம். அவைகளில் நாம் NVQ level 3 தொடக்கம் NVQ level 6 வரை மாணவர்களுக்கு தொழில் கல்வியை பெற்றுக்கொடுக்கிறோம். NVQ level 1,2,3,4 வரை சான்றிதழ் தரம், NVQ level 5 டிப்ளோமா தரம், NVQ level 6 உயர் டிப்ளோமா தரம் மற்றும் NVQ level 7 பட்டப்படிப்பு கல்வியை பெற்றுக்கொடுப்பது வரை தொழில் கல்வியை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு முடியுமாகிறது. இங்கு இரத்மலானையில் உள்ள வாழ்க்கைத்தொழில்சார் தொழிநுட்ப பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு முடியும். இந்தக் கற்கைகள் காரணமாக தமது தொழில் தகைமைகளை பெற்று தகைமை கொண்ட தொழில்துறையாளராக தொழில் சந்தையில் அதிக பெறுமதியை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு முடியுமாக இருக்கும்.

நாம் புதிதாக அமைத்த கொரிய டெக் நிறுவனத்தினால் புதிய தொழில்நுட்பத்தைக் கொண்ட கற்கைகள் டிப்ளோமா மற்றும் உயர் டிப்ளோமா NVQ level 5 மற்றும் 6 இனை பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது. இது 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. Robotic & Automations என்ற கற்கை இதுவரை



தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தற்போதைய தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.கே. ராஜபக்ஷ

இலங்கையில் இருக்கவில்லை. அது NVQ level 6 கற்கை ஒன்றாக உள்ளது. இது தவிர Fluid Power Technology கற்கை ஒன்று புதிதாக ஆரம்பிக்கப்பட்டது. அது தவிர 9 டிப்ளோமா கற்கைகள் உள்ளன.

### இந்தக் கற்கைகளுக்கு உள் வாங்கப்படுவது எவ்வாறு?

வருடத்திற்கு இருமுறை மாணவர்கள் சேர்க்கப்படுகின்றபோதும் அது வருடத்திற்கு மூன்று தடவைகள் வரை இடம்பெறுகின்றது. கொவிட் காலத்தில் எமது ஒரு வருட கற்கைகள் நிறைவு செய்யப்படுவது ஏப்ரல் மாதம் வரை நீடிக்கப்பட்டதால் ஜனவரி, ஏப்ரல், ஜூலை ஆகிய மாதங்களில் கற்கைகளுக்காக மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். 18-35 வயதுக்கு இடையிலானவர்கள் இந்தக் கற்கைகளுக்காக விண்ணப்பிக்க முடியும்.

இந்தக் கற்கைகளை, நாடு முழுவதும் அமைந்துள்ள இலங்கை தொழில் பயிற்சி நிறுவனங்களினால் கற்பிக்க முடியும். இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபையின் இணையதளத்திற்கு சென்று இது தொடர்பிலான மேலும் விபரங்களை உங்களால் பெற முடியும். தற்போது ஜூலை மாதத்தின் மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஜூலை மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை இந்த கற்கைகளுக்கு நீங்கள் விண்ணப்பிக்க முடியும். தற்போது இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் தொழிற்பயிற்சி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

நாம் வருடத்திற்கு 40,000 மாணவர்கள் வரை பயிற்சி அளித்து தொழில் சந்தைக்கு அனுப்புகிறோம்.

நாம் மாணவர் ஒருவரை கற்கைகளுக்கு சேர்க்கும்போது அந்த மாணவரிடம் உள்ள விசேட திறமை, திறன் போன்றவற்றை அறிந்து அவருக்கு மிகவும் பொருத்தமான கற்கை தொடர்பில் கருத்து ஒன்றை எமது பயிற்சி திட்ட அதிகாரிகளின் கீழ் பெற்றுக்கொள்ள முடியமாக உள்ளது. தொழில் வாய்ப்புக்கான திறவுகோல் என்று அழைக்கப்படும் உளவியல் சோதனை ஒன்றை செய்வதன் மூலம் இது மேற்கொள்ளப்படுகிறது.

### இந்தக் கற்கைகளை கற்பதன் மூலம் வெளிநாடு செல்வதற்கும் இயலுமா?

ஆம், இந்தக் கற்கைகளை மேற்கொண்ட பலரும் வெளிநாடு செல்லும்போது அது முக்கிய விடயமாக இருக்கும். அது தவிர கொரியாவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு HRD கொரியா உடன் நாம் பயிற்சியை மேற்கொண்டு வருகிறோம். இங்கு பயிற்சிகளை வழங்குவது கொரிய நாட்டு நிபுணர்களாகும். இவ்வாறு பயிற்சி பெறும் மாணவர்கள் கட்டட நிர்மாணம், மின், ஓட்டோ மொபைல், பெயின்டிங் ஆகிய துறைகள் ஊடாக கொரியாவில் வேலை வாய்ப்புக்காக செல்கின்றனர். இவ்வாறு கொரியாவுக்குச் செல்வதற்குத் தேவையான கற்கைகளை காலி நியாகமவில் அமைந்துள்ள தொழில் பயிற்சி நிலையத்தில் கற்க முடியும். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியத்திற்கு தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் எமது நிறுவனத்தினால் வழங்கப்படுகிறது.

தற்போது இஸ்ரேல் தொழில் சந்தைக்கு நிர்மாணத் துறையில் 10,000 தொழிலாளர்கள் கோரப்பட்டுள்ளது. அதற்கு தேவையானவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு முன் பயிற்சிகளை பெற்றுக்கொடுத்து, தகுதியை பூர்த்தி செய்வதற்கு எமது நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதியோர் பராமரிப்பு சேவைக்காக (Caregiver) நாடு முழுவதும் தொழில் பயிற்சி நிலையங்களில் நாம் மிக நவீன உபகரணங்களை கொண்ட நடைமுறை பயிற்சியை பெற்றுக்கொடுக்கிறோம். அதேபோன்று ஜெர்மனியின் GIZ நிறுவனத்துடன் இணைந்து இந்த முதியோர் பராமரிப்புச் சேவைக்காக பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களினால் எமக்கு மிகவும் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள் இந்தக் கற்கைக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கற்கைகளை பூர்த்தி செய்கின்றவர்கள் கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் முதியோர் பராமரிப்பு சேவைகளில் வேலை வாய்ப்புக்காக சென்றிருக்கிறார்கள்.

நாம் தற்போது இரண்டு மூன்று மாதங்களுக்கு முன் Next gen Development என்ற பிரிட்டன் நிறுவனம் ஒன்றுடன் ஐக்கிய இராச்சியத்தில் நிர்மாணப் பணிகளுக்கு தேவையானவர்களை இலங்கையில் பயிற்சி அளித்து அவர்களுக்கு தேவையான விசாவை பெற்றுக்கொடுத்து ஐக்கிய இராச்சியத்திற்கு அனுப்புவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளோம். தற்போது ஐரோப்பிய தொழில் சந்தையில் கட்டட நிர்மாணத் தொழில்துறையில் பயிற்சி பெற்ற தொழிற்துறையாளர்களுக்கு பெரும் கேள்வி உள்ளது. அதற்காக தொழில்துறையாளர்களை வழங்குவதற்கு இந்த நிறுவனம் முன்வந்திருப்பதால் அதிகூடியவில் உள்ள நவீன பயிற்சி நிறுவனம் ஒன்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.



தொழில்முறை சமையல், பேஸ்ட்ரி அன்ட் பேக்கரி கற்கைகளுக்கு அதிக கேள்வி உள்ளது. உள்ளீர்க்க முடியாத எண்ணிக்கையானோர் விண்ணப்பித்திருப்பதால் அவர்களிடம் இது தொடர்பில் கேட்டபோது, வெளிநாடு செல்வதற்கு இந்தக் கற்கைகளை தொடர்வதாகக் குறிப்பிட்டனர். இவ்வாறாக கற்கைகளை கற்கின்ற அதிகமானோர் அதனை பூர்த்தி செய்து அதிக காலம் செல்வதற்கு முன்னரே வெளிநாடு செல்வதை பார்க்க முடிகிறது. தற்போது வெளிநாடு சென்றிருக்கும் பலரும் தொழில் பயிற்சி அதிகாரசபை ஊடாக சென்றிருப்பவர்கள் என்பது எமக்கு பெரு மகிழ்ச்சிக்கு உரிய விடயமாகும். எமது தொழில் பயிற்சி செயற்பாடுகள் மூலம் அரசாங்கத்தின் நோக்கம் மற்றும் ஜனாதிபதி அவர்களின் நோக்கம் நிறைவேறுகிறது.

### உங்களது நிறுவனத்தால் விசேடமான கற்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகிறது. அது பற்றி கூறுவதென்றால்?

ஆம், இலங்கை தொழில் பயிற்சி நிறுவனம் என்பது அரச நிறுவனம் ஒன்றாகும். நாம் இதன்மூலம் மேற்கொள்வது சமூகப் பணி ஒன்றாகும். இதற்காக ஓடிசம், டவுன் சின்ட்ரோம் போன்ற விசேட தேவையுடைய மாணவர்களுக்காக தொழில் பயிற்சி வழங்கும் நிகழ்ச்சி ஒன்றை இந்த ஆண்டில் ஆரம்பித்தோம். இதற்காக எமது நிறுவனத்தில் இருக்கும் ஆலோசகர்கள் வேறாக பயிற்சி அளித்து இந்தப் பிள்ளைகளுடன் பணியாற்றும் திறன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. தற்போது நாராஹேன்பிட்டியவில் இரு கற்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த மாணவர்கள் இன்னும் சில நாட்களில் கற்கையை பூர்த்தி செய்து இங்கிருந்து வெளியேறிச் செல்வதால் அவர்களை தொழற்துறை பயிற்சிக்காக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கிறோம். நாடு முழுவதும் ஏனைய மாவட்டங்களில் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களிலும் கூட இதற்காக பயிற்சி ஆசிரியர்கள் இருப்பதால் இந்தப் பிள்ளைகளுக்கு கற்கைகளை மேற்கொள்வதற்கு வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இதன்போது தனியார் நிறுவனங்கள் இந்த மாணவர்களுக்காக தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு முன்வந்துள்ளன.

செவிப்புலனற்ற பிள்ளைகளுக்கு கிரபிக் டிசைனிங் கற்கை ஒன்றும் உள்ளது. இது சமூக நலன்புரி பணியாக மேற்கொள்ளப்படுகிறது. இதற்குத் தேவையான பொருளாதார மானியம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கடுமையான பொருளாதார நெருக்கடி சூழலிலும் எந்த வொரு குறைபாடும் இன்றி பெற்றுக்கொடுக்க முடிந்திருப்பது பற்றி ஜனாதிபதிக்கு நன்றி கூற வேண்டும்.

சாதாரண கற்கைகள் பாடசாலையில் இருந்து விலகிச் சென்ற மாணவர்களுக்காக இதுவரை இருந்து வந்தபோதும் தற்போது வேலை பார்க்கின்றவர்கள் கூட வெளிநாடு செல்லும் நோக்குடனும் வேறு நொக்கங்களுக்காகவும் இந்தக் கற்கைகளை செய்ய முன்வருகின்றனர். அவர்களுக்காக பகுதி நேர கற்கைகளை நாம் அறிமுகம் செய்திருக்கிறோம். சில அங்கீகரிக்கப்பட்ட துறைகளில் இருக்கின்ற பட்டதாரிகள் கூட தற்போது தொழிற்பயிற்சி கற்கைகளை செய்வதற்கு ஈடுபட்டிருப்பது வெளிநாடு செல்லும் தேவையை பூர்த்தி செய்வதற்காகும்.

முச்சக்கர வண்டி ஓட்டுநர்களுக்கு மேலதிக வருவாயை பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு தொழில் துறைக்கு செல்வதற்கு வாய்ப்பை வழங்குவதற்கு தொழில் பயிற்சி கற்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வீணாகின்ற இளம் தொழில் படையை நாட்டின் முன்னேற்றத்திற்காக ஈடுபடுத்துவது இதன் நோக்கமாகும். இது மிகவும் வெற்றிகரமான பயிற்சி கற்கை ஒன்று என்று குறிப்பிட முடியும்.

எமது தொழில் பயிற்சி அதிகாரசபையின் கீழ் பயிற்சி பெற்ற எந்த ஒரு மாணவரும் ஒருபோதும் வேலை கேட்டு வீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தும் நிலைக்குச் சென்றதில்லை என்பதை இறுதியாகக் கூறிக்கொள்ள வேண்டும். நாம் அவர்களுக்கு தேவையான ஒழுக்கம், பழக்கவழக்கங்களைக் கூட பெற்றுக்கொடுப்பதற்கு செயற்படுவது இதற்குக் காரணமாகும்.

**அயன்தி உடுகம்பொல**



































கல்வி அமைச்சு
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை
VTA
VTA
தொழிற்பயிற்சியின் தேசிய முன்னோடிகள்
2024
இரண்டாம் அரையாண்டிற்கான பயிலுனர் ஆட்சேர்ப்பு
31 ஜூலை
வரை நீடிக்கப்பட்டுள்ளது
பதிவுகளுக்கு – அருகில் உள்ள எமது பயிற்சி நிலையங்களை தொடர்பு கொள்ளவும்
சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட NVQ சான்றிதலுடன் உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
VTA
மட்டுப்படுத்தப்பட்ட ஆசனம்
இன்றே தொடர்பு கொள்ள
011-7277888 / 011-7270270
070 67 67696
VTA
VTV
www.vtasl.gov.lk
cgjp@vtasl.gov.lk
ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය
Vocational Training Authority of Sri Lanka
இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை

# யார் அந்த பொது நம்பிக்கை பொறுப்பாளர்?



பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் 1922ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க பொது நம்பிக்கையாளர் சட்டத்தின் மூலம் உருவான கூட்டிணைந்த நிறுவனமாகும். அந்தச் சட்டத்தின் மூலம், பொது நம்பிக்கையாளர் என்ற பதவி சட்டரீதியான பதவியாகியது. பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் என்பது இந்த நாட்டிலுள்ள முன்னணி சுயாதீன நிறுவனங்களுள் ஒன்றாகும். நாட்டில் எத்தனை அரசு அதிகாரிகள் இருந்தாலும், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் என்பது நாட்டிலுள்ள முதன்மையான இணைக்கப்படாத அதிகாரியாகும். நாம் பதவி நிலையின் பிரகாரம் பார்த்தால், நாட்டின் ஏழாவது குடிமகன் என்பவர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் பதவியை வகிக்கும் அதிகாரியாகும்.

இந்த திணைக்களத்தின் மூலம் ஒருவரது கடைசி உயிலில் வழங்கப்பட்டுள்ள அனைத்துப் பொறுப்புகளும் அந்தந்த உரிமையாளர்களிடம் வழங்கப்படுகின்றது. நாட்டில் அந்தளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமே இந்த பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களமாகும். இந்த நிறுவனம் பொதுவான நம்பிக்கைப் பொறுப்பாளர் நிறுவனமாகச் செயற்பட்டாலும், இந்நிறுவனம் சமூக நலனுக்காக பல்வேறு செயற்பாடுகளையும் மேற்கொண்டு வருகிறது.

கல்வி நலன் உள்ளிட்ட பல்வேறு பொதுநலப் பணிகளுக்காக சிறப்பு அர்ப்பணிப்புடன் செயற்படும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பிரதான பதவிக்காக நியமிக்கப்படுவது ஒரு நீதிபதி அல்லது சட்டத் துறையில் உயர் மட்ட அதிகாரி ஒருவராகும். பல்வேறு வகையிலான உயர் பதவிகள் இருந்தாலும், நாட்டிலேயே இருக்கும் விசேட நபர் பொது நம்பிக்கைப் பொறுப்பாளராகும். நாட்டு மக்கள் அவர் மீது பூரண நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கை எந்தளவுக்கானது என்றால், பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் தொடர்பில் இருக்கும் நம்பிக்கை சமுதாயத்தில் வேறு யார் தொடர்பிலும் இல்லை என்பதாகும். தற்போது, கிஹான் பிலப்பிட்டிய, பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பொது நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயற்பட்டு வருகின்றார்.

நீண்ட காலமாக நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், முறைகேடான வகையில் அனுபவித்துக் கொண்டிருப்பதைக் கட்டுப்படுத்தி பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்குச் சொந்தமான சொத்துக்களை உரியவாறு தனது கட்டுப்பாட்டிற்குள் மாற்றிக் கொண்டு செயற்படுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் நீண்ட காலமாக நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் அனைத்தும் இந்தளவுக்கு வெற்றியடைந்ததற்கு காரணமாக அமைந்திருப்பது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர், பிரதி நம்பிக்கைப் பொறுப்பாளர் மற்றும் அதன் ஏனைய அதிகாரிகள், பணியாளர்கள் அனைவரும் குழுவாகச் செயற்படுவதேயாகும்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கிஹான் பிலப்பிட்டிய

“எமது ஒரே நோக்கமாக அமைந்திருப்பது பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த நோக்கத்தை உரியவாறு முன்னெடுத்துச் செல்வதாகும். அதற்கு முக்கியமான கொள்கைகள் இருக்கின்றன. அந்தக் கொள்கைகளை உரியவாறு நடைமுறைப்படுத்திச் செல்வதே எமது பிரதான நோக்காக அமைந்துள்ளது. நான் இங்கு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் என்ற சுயாதீன பதவியை வகிக்கின்றேன். இந்தப் பதவி உண்மையிலேயே நாட்டிலேயே இருக்கும் சுயாதீனமான மற்றும் இணைக்கப்படாத பதவியாகும். என் மீது மாத்திரமல்ல, முழு திணைக்களத்தின் மீதும் அந்த நம்பிக்கை உள்ளது. இந்தத் திணைக்களத்தை ஒரு குழுவாக முன்னெடுத்துச் செல்வதே எங்கள் குறிக்கோள். பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களம் அமைந்துள்ள கட்டடத்தை வேறு இடத்திற்கு மாற்ற முடியாது. இது டி. பி. ஜயதிலகவுக்குச் சொந்தமான வீடாகும்.

அந்த நோக்கத்திற்காக நீங்கள் இந்த திணைக்களத்தை வழிநடத்தும் முறைகள் உள்ளதா? என நாம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் கேட்டோம்.

“இந்தத் திணைக்களம் இந்தச் செயற்பாடுகளுக்காகத் தனியாக அன்றி ஒரு குழுவாகவே செயற்படுகின்றது.

இதற்காக எம்மோடு பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் பணியாளர்களைப் போன்று மற்றொரு தரப்பும் ஒத்துழைப்புக்களை வழங்குகின்றது. முன்னாள் நீதிபதியான எம். இஸட். எம். அம்ஜாட் எனது சட்ட ஆலோசகராகச் செயற்பட்டு வருகின்றார். மேஜர் மாதவ அபேசுந்தர பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்துடன் சுயாதீனமாகவே இணைந்து கொண்டு பெரும் பணிகளைச் செய்து வருகின்றார்”

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டு மக்களிடையே பரந்த புரிதல் உள்ளதா? என நாம் பொது நம்பிக்கைப் பொறுப்பாளரிடம் வினவினோம்.

“அனைத்து இலங்கையர்களும் பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தையும் அதன் செயற்பாடுகளையும் பொதுவாக ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன். அதனால்தான் அவர்களுக்குரிய பெரும் நிதி மற்றும் பாரம்பரிய மதிப்புள்ள சொத்துக்களை எங்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கின்றார்கள். இந்தத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்ட ஒரு சொத்தை மிகவும் நம்பகமான முறையில் தமது மரணத்தின் பின்னரும் கூட பாதுகாப்பார்கள் என மக்கள் நம்புகிறார்கள். உண்மையில், இதை மிக முக்கியமான விடயமாகக் குறிப்பிடலாம்”

பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் வடக்கு கிழக்கில் உள்ள மக்களுக்கு புரிந்துணர்வு உள்ளதா? என பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் கிஹான் பிலப்பிட்டியவிடம் கேட்டோம். அதற்கு அவர் பின்வரும் பதிலை அளித்தார்.

“நாம் முன்னாள் நீதிபதியான எம். இஸட். எம். அம்ஜாதுடன் வடக்கிற்கு விஜயம் செய்தோம். அதன்போது அங்குள்ள மக்களுடன் நெருங்கிய உறவை ஏற்படுத்திக் கொள்ள எம்மால் முடிந்தது. இப்போது மீண்டும் அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்யுமாறு எங்களுக்கு அழைப்பு வந்துள்ளது. உண்மையில், வடக்கில் உள்ள சாதாரண மக்களுக்கு மாத்திரமல்ல, அரச அதிகாரிகளுக்கும் கூட பொது நம்பிக்கைப் பொறுப்பாளர் திணைக்களத்தின் செயற்பாடுகள் பற்றிய புரிதல் இல்லை. இந்த நிலையை மாற்றியமைக்க முடியும் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது. எங்களிடம் உள்ள சொத்துக்களில் கிடைக்கும் பணத்தை முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் பணத்தை சமூக நலனுக்காக தேவைப்படும் விடயங்களுக்குச் செலவு செய்வதற்கு எமது திணைக்களத்தினால் முடிந்திருக்கின்றது”



உதித குணவர்தன
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

# ஜனாதிபதி ரணிலின் வேலைத்திட்டத்தால் இன்று நாடு நிம்மதி பெருமூச்சு விடுகிறது

**கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வியாளர்கள் முன்னிலையில் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவிப்பு!**



இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிகவும் பயனுள்ள வகையில் இந்நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்துள்ளதாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர், பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உள்ளிட்ட கல்வியியலாளர்கள் முன்னிலையில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இலங்கை மிகவும் நெருக்கடியான பொருளாதார நிலையிலிருந்து வெளிநாட்டுக் கடனை வெற்றிகரமாக மறுசீரமைப்பது வரை வந்துள்ள பயணத்தின் உள்ளடக்கம் மற்றும் தற்போதைய அதன் முன்னேற்றம் தொடர்பில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

“ நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் மக்களுக்கு உண்மைகளை மறைத்து மேற்கொண்ட செயற்பாடுகளால்தான் நாட்டின் பொருளாதாரத்தினால் தாங்கிக் கொள்ள முடியாத வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை, வரவு செலவுத் திட்ட இடைவெளி மற்றும் வெளிநாட்டுச் செலாவணி தொடர்பான நடைமுறைக்கணக்கில் பாரிய பற்றாக்குறை என்பன ஏற்பட்டன. இந்த வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை நிதி மற்றும் கொடுப்பனவுகளின் இருப்பு பற்றாக்குறை; நிதியுதவிக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெருந்தொகைக் கடன்களை பெற்று, அந்தக் கடனைச் செலுத்த முடியாது என உலகிற்கு அறிவித்ததன் மூலம் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சரிசெய்வதற்கு இலங்கை அரசாங்கங்கள் பெரும் முயற்சிகளைச் செய்துள்ளன. கடன் நிலைத்தன்மை இல்லாமல், கடனைத் திருப்பிச் செலுத்தும் அபாயம் இருக்கும்போது, உலகில் நிதி தொடர்பான ஆலோசனையாளர்களான Pitch rating, Moodhi போன்ற நிறுவனங்கள், அந்த நாட்டை சர்வதேச அளவில் தரமிறக்கும். அதாவது தரவரிசையில் பின்னால் தள்ளும். அதன் மூலம் கடனை அடைக்க முடியாத நிலை உருவாகி வருவதால் அந்த நாட்டுடன் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யும் தரப்பினர் கவனமாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிக பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதியான பின்னர் நிதி ஆலோசகர்கள் மற்றும் சர்வதேச ஆலோசகர்கள், இலங்கையின் பிரதான தேசியப் பிரச்சினையானது கடன் நிலைத்தன்மை தொடர்பான பிரச்சினையாக இருப்பதால், அதனைத் தீர்ப்பதற்கு அவர் செயற்பட வேண்டுமென அவருக்கு ஆலோசனை வழங்கியிருந்தனர். கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் ஒரு நாடு இவ்வாறு வீழ்ச்சியடையும் போது அதற்கு இலகுவான தீர்வுகள் இல்லை. எனவே ஜனாதிபதி கோட்டாபய உலகெங்கிலும் வீழ்ந்த நாடுகளை மீட்டெடுப்பதில் அனுபவம், நிபுணத்துவம் மற்றும் விசேட அறிவினைக் கொண்ட சிறப்பு வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரினார். அதனடிப்படையில் இது தொடர்பில் சர்வதேச நிபுணத்துவம் பெற்ற 28 நிறுவனங்கள் முன்வந்தன. அவற்றுள் 20 நிறுவனங்கள் அத்தகைய முன்மொழிவுகளை சமர்ப்பிக்க தகுதி பெற்றன.

அந்த 20 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்திடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு அமைச்சரவையினால் அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டது. சட்டப் பேராசிரியர், அமைச்சரவை அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இக்குழுவின் தலைவராகச் செயற்பட்டார். அவர் தலைமையிலான அமைச்சரவை உபகுழு ஒவ்வொரு நாட்டிலும் உள்ள 20 நிறுவனங்களின் திறமைகள், ஆற்றல்கள், படைப்பாற்றல் மற்றும் அவர்களின் வெற்றிகள் தொடர்பில் புள்ளிகள் வழங்கும் நடைமுறையின் ஊடாக பிரான்சின் லாசார்ட் நிறுவனம் இதற்குத் தகுதியானது என்று அமைச்சரவைக்கு பரிந்துரை செய்தது. அதற்கு அமைச்சரவையின் அனுமதி கோரப்பட்டபோது, அமைச்சரவை அமைச்சர்களாகிய நாங்கள் அதற்கு அனுமதியை வழங்கினோம்.

ஒரு நாடு அதன் சர்வதேச கடன்களை செலுத்தாமல் உலகில் நிலைக்க முடியாது, கடன் வழங்குநர்கள் எமக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வார்கள். தற்போது அமெரிக்காவில் உள்ள ஹமில்டன் நீதிமன்றத்தில் 250 அல்லது 200 மில்லியன் நஷ்டஈடுகோரும் வழக்கொன்று உள்ளது. சர்வதேச நீதிமன்ற சட்ட விவகாரங்கள் தொடர்பில் எமக்கு அனுபவம் இல்லாததால், அதற்காக நாம் பணம் செலுத்தி அமைச்சரவையின் ஒப்புதலுடன் Clifford chance ஐ நியமித்தோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டுக்கு அறிவித்த சந்தர்ப்பத்தில், நான் ஏற்கனவே குறிப்பிட்ட பிரான்சின் Clifford chance மற்றும் பிரான்சின் லசார்ட் தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். அந்த வெளிநாட்டு நிபுணர் அமைப்புக்கள் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக நீண்ட காலமாக இலங்கை அரசாங்கத்தின் சார்பில் கடன் வழங்குபவர்களுடன் கலந்துரையாடல்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை நடத்தின. தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் அவ்வாறு செயற்பட்டாலும் அரசியல் ரீதியாக அதன் நெகிழ்வுத் தன்மையினை அடைந்து கொள்வதற்காக முதலில் கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கை செய்து கொள்ள முடியாமல் போன உண்மையினை இந்த இடத்தில் நான் குறிப்பிட வேண்டும்.

எமது அமைச்சரவையில் இருந்த நாட்டை மிகவும் நேசித்த, எனினும் அந்த நிலைமைகள் தொடர்பில் ஆழமாக ஆராயாத பல அமைச்சரவை அமைச்சர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்கு முழுமையாக எதிர்ப்பு தெரிவித்தது மாத்திரமின்றி, கற்றறிந்த எமது நண்பரான சட்டத்தரணி வாசுதேவ நாணயக்கார போன்ற அமைச்சரவை அமைச்சர்களும் எழுந்து நின்று "சர்வதேச நாணய நிதியத்திடம் சென்றால் நான் ஒரு கணம் கூட இருக்க மாட்டேன்" எனத் தெரிவித்து அவர் அமைச்சரவையில் இருந்து வெளியேறத் தயாரானார். இதனால் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு கடைசி கடனை வழங்குநரான சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்த இணக்கப்பாட்டுக்கு வரமுடியாமல் போனது. கடன் தவணைகளையும் வட்டியையும் செலுத்த முடியாமல் போனது. இலங்கையில் எந்த வங்கியிலும் டொலர் இருக்கவில்லை. வெளிநாட்டுச் செலாவணி 200 மில்லியனாக குறைந்து போயிருந்தது. எரிவாயு கப்பல்கள் திரும்பிச் சென்றது. மின்சாரத்தை உற்பத்தி செய்து கொள்ள முடியாது 12 மணித்தியாலங்கள் மின்வெட்டை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. எரிபொருளுக்கான வரிசைகள் அதிகரித்து அவற்றில் ஏற்பட்ட குழப்பங்களினால் பல மரணங்கள் ஏற்பட்டன. எரிவாயு வரிசைகள் ஏற்பட்டன. முழுமையாக குரோதம் நிறைந்த சமூகமாக மாறி, தீவைப்பு, வன்முறைப் போராட்டங்கள் இடம்பெற்று கடைசியில் பாராளுமன்றத்தையும் எரித்து, தியவன்னாவிலிருந்து அழிவுப் போராட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது.

எவருமே நாட்டைப் பொறுப்பேற்க முன்வராத அந்தச் சந்தர்ப்பத்தில் இந்நாட்டின் பிரதமராக ஏராளமான அனுபவங்களைப் பெற்றிருந்த ரணில் விக்கிரமசிங்க அந்தச் சவாலைப் பொறுப்பேற்று மிகத் துரிதமாகவே சர்வதேச நாணய நிதியத்துடன் 2027ம் ஆண்டு வரையான விரிவாக்கப்பட்ட கடன் ஒப்பந்தத்திற்கு வந்தார். 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தங்களை நாம் மீறியிருப்பதால் இந்த தடவை அது மிகவும் சிரமமாக இருந்தது. அதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் மிகவும் சிரமமான முயற்சியில் ஈடுபட்டார். இதன் விளைவாக, அவர் நிதி அமைச்சராகவும், தேசிய கொள்கை திட்டமிடல் அமைச்சராகவும் பதவி வகிக்கிறார். 2027ஆம் ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவான கடன் உடன்படிக்கையை மேற்கொண்டு, அந்த கடன் ஒப்பந்தத்தின் பிரகாரமே இலங்கை சர்வதேச ரீதியில் செயற்பட ஆரம்பித்தது. அவ்வாறில்லாவிட்டால் இலங்கையில் எந்தவொரு நபருக்கும் கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டாலும், அதற்கு அங்கீகாரமோ அல்லது மதிப்போ கிடைக்காது. அப்போது எரிவாயு, உணவு, மருந்து, இயந்திர உபகரணங்கள் போன்ற எதையும் இறக்குமதி செய்ய முடியாது. நாம் எல்லா வகையிலும் தன்னிறைவு பெற்ற நாடாக இல்லாததால், வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்காக, கண்டிப்பாக உலகில் உள்ள கொடுக்கல் வாங்கல் நடைமுறைகளின் பிரகாரம் கடன் பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும்.

கடன் பத்தரங்கள் தொடர்பில் சர்வதேச நம்பகத்தன்மை இல்லாவிட்டால், அரசியல் ரீதியாக யார் ஜனாதிபதியானாலும் சர்வதேச பரிவர்த்தனைகள் இடம்பெறாது. அந்த பரிவர்த்தனைகளின் சர்வதேச தரத்தின் பிரகாரம், சர்வதேச நாணய நிதியம் பத்திரத்தை ஏற்கவில்லை என்றால், நாட்டை இரண்டு வாரங்களுக்குக் கூட முன்னெடுத்துச் செல்ல முடியாது.

இன்னும் சில மாதங்களில் 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை, வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமே வழங்க முடியும். வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு சமுர்த்தி, அஸ்வெசும நிவாரணத்தை வழங்குவதும், வீதிகள், மின்சாரம் நீர் விநியோகம் போக்குவரத்து போன்ற உட்கட்டமைப்பு வசதிகளில் உடைந்து பழுதடைந்து போயுள்ளவற்றை சரிசெய்ய முடிவதும் வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டால் மாத்திரமேயாகும். சர்வதேச நாணய நிதியத்தின் உதவி இல்லாமல், 2027ம் ஆண்டு வரை எம்மால் வரவு செலவுத் திட்ட ஆவணத்தைத் தயாரிக்க முடியாது. சர்வதேச நாணய நிதியம் எமக்கு 663 மில்லியன் டொலர்களை வழங்கி இந்த வரவு செலவுத் திட்டத்திற்காக உதவியளிக்கின்றது. சில வேளை 2025ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பது புதிய அரசாங்கமாக இருக்கலாம். அதற்கு 700 மில்லியன் டொலர்களை சர்வதேச நாணய நிதியம் வழங்க வேண்டும். 400 மில்லியன் டொலர்கள் உலக வங்கியினால் வழங்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி 300 மில்லியன் டொலர்களை வழங்கும். 3655 மில்லியன் டொலர் கடன் நிவாரணம் கிடைக்கும் என நினைக்கிறேன் என்றார்.



எம். எஸ். முஸப்பிர்

# தேச மங்கையர்க்கரசி இலங்கை வருகை



தமிழ்நாட்டின் முன்னணி இலக்கிய மற்றும் சமய சொற்பொழிவாளரும், சிறந்த முருக பக்தையும், திருமுருக வள்ளல் வாரியார் சுவாமிகளின் மாணவியுமான திருமதி தேச மங்கையர்க்கரசி நேற்று 20.07.2024 கொழும்பு வந்தார். ரவி ஜுவலர்ஸ் அனுசரணை வழங்கும் இவரது ஆன்மீக சொற்பொழிவுகள்இன்றுஞாயிற்றுக்கிழமை (21.07.2024) பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் இடம்பெறும்.

தேச மங்கையர்க்கரசி தேவி சண்முகம் மற்றும் பாக்கியலட்சுமி தம்பதியினருக்கு முதல் குழந்தையாக பிறந்தவர். தேச என்பது அவருடைய தந்தையின் முன் எழுத்துக்கள் தேவி சண்முகம் (தந்தை). இவர் 19ஆம் திகதி மே மாதம் 1984 இல் திரு. தேவி சண்முகம் மற்றும் திருமதி பாக்கிய லட்சுமி அவர்களின் மூத்த புதல்வியாக மதுரையில் பிறந்தார்.

இளம் வயது முதலே திருக்குறள் மீது ஆர்வம் கொண்டு தனது 6வது வயதிலேயே சகல திருக்குறள்களையும் மனப்பாடமாக சொல்லும் ஆற்றல் பெற்றிருந்தார். மதுரையில் வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவு எங்கு நடந்தாலும் அங்கே மங்கையர்கரசியையும் அழைத்துச் சென்றனர்.

இதிகாசங்களான கம்ப இராமாயணம் ,வில்லி பாரதம் மற்றும் கந்த புராண சாரம்சத்தை வாரியாரிடம் இருந்து கற்றுக்கொண்டார். இருவரும் ஒரே மேடையில் ஒரே தலைப்பில் இரு கோணங்களில் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

தனது 13வது வயதில் முதன் முதலில் வெளி நாடு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். தேச மங்கையர்க்கரசி அவர்கள் அமெரிக்கா அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள், இந்தோனேசியா, செசல்சு, குவைத். கனடா, ஓமன், பஹறைன் , இலங்கை , கம்போடியா, நேபாளம் போன்ற நாடுகளில் பயணம் செய்து சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அனைத்து முன்னணி தொலைக்காட்சி சேனல்களிலும் நிகழ்ச்சி செய்து வருகிறார். தனது 38 வயதிற்குள்பல ஆயிரம் மேடைகள் கண்டவர்.

திருவாவடுதுறை ஆதீனம் இவரது தமிழ் மற்றும் சைவப் பணியைப் பாராட்டி 'செந்தமிழ் நாவுக்கரசி' என்கிற பட்டத்தை 2017ஆம் ஆண்டு வழங்கியும் கூனம்பட்டி கல்யான புரி ஆதீனம் இவரது சைவ சமயப் பணியைப் பாராட்டி 'சைவ சமய நெறிச் செஞ்சுடர்' என்ற பட்டத்தை 2017 ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்துள்ளது.

மேலும் திருக்குறள் செல்வி, தெய்வக்குழந்தை, சொல்லரசி, ஞான குழந்தை, இளமுதுஞானவாணி, கலைவாணி, கம்ப்யூட்டர் சிறுமி, பேச்சுக்கரசி, சிந்தனை செல்வி, ஆன்மீக திலகம், ஆன்மீக சொற்பொழிவு பேரரசி,ஆன்மீக இளவரசி, முத்தமிழ் பேரரசி, குருவருட்செல்வி கிருபானந்த வாணி போன்ற பல பட்டங்களை தமிழக மக்கள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

இலங்கையில் சைவ சிரோன் மணி, செசல்சுயில் ஆன்மீக அருட் செல்வி, சுவிட்சர்லாந்தில் சைவத் தமிழ் கலைவாணி, முத்தமிழ் சிவசெல்வி, அருள்மொழி நங்கை, செந்தமிழ் தேன்மொழி நங்கை, நாவுக்கரசி, லண்டனில் திருவருட் கலைச்செல்வி, இறையருட் செல்வி, மலேசியாவில் ஆன்மீக அரசி, குவைத்தில் நற்றமிழ் நாயகி, கனடாவில் வாகீச கலாநிதி ஆகிய பட்டங்கள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

தமிழ் நாட்டின் மிக உயரிய விருதான 'கலைமாமணி' விருதை தமிழ் நாடு அரசு இவருக்கு அளித்து சிறப்பித்துள்ளது. சமய சொற்பொழிவாளர் வரிசையில் மிகவும் குறைந்த வயதில் இந்த விருதினை பெற்றவர் என்ற பெருமை தேச மங்கையர்க்கரசி அவர்களையே சாரும்.ராஜுவ் காந்தி மூப்பனார் நினைவு விருதினை 2011 ஆம் ஆண்டு பெற்றார். தமிழ்நாடு இந்து நிலைய அறநிலையத்துறை உயர் மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாட்டில் உள்ள அறநிலைத்துறை ஆலயங்களில் இயல், இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் பொறுப்பிலும், அறநிலையத்துறை ஆலயங்களிலும், அறநிலையத்துறை கல்லூரிகளிலும் சமய வகுப்புக்கள் ஒருங்கினைக்கும் குழுவிலும், இந்து சமய அறநிலையத்துறை ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிக்கும் குழுவிலும் பணியாற்றி வருகின்றார்.

எச்.எச்.விக்கிரமசிங்க...



# 8000 மைல்களுக்கு அப்பாலிருந்து ஓர் உதவிக்கரம்

## வறியமக்களின் இதய, சிறுநீரக சிகிச்சைக்காக பாட்டுப் பாடி நிதிசேர்க்கும் செந்தில்குமரன்

### 120 பேரின் இதய, சத்திரசிகிச்சைக்காக 75 மில்லியன் ரூபா

**கனடாவில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியும், பரோபகாரிகள், தனவந்தர்களின் அன்பளிப்புக்கள் மற்றும் நன்கொடைகளையும் கொண்டு இலங்கையில் இதய நோய்களுக்கும் சிறுநீரகப் பாதிப்புகளுக்கும் உள்ளாகியுள்ள குறைந்த வருமானம் பெறுவோரையும் தெரிவு செய்து அவர்களது சிகிச்சைகளுக்காகவும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் உதவி, ஒத்துழைப்புக்களை நல்கி வருபவர் தான் யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட செந்தில் குமரன். இவர் அண்மையில் கொழும்புக்கு வருகை தந்திருந்த போது தினகரன் வார மஞ்சரிக்கு அளித்த விஷேட பேட்டி. ...**

**கேள்வி: உங்களை சுருக்கமாக அறிமுகப்படுத்த முடியுமா?**

பதில்: ஆம். எனது பெயர் செந்தில் குமரன். யாழ்ப்பாணத்தை பூர்வீகமாக கொண்ட நான், சிறுவயதிலேயே கனடாவுக்கு புலம்பெயர்ந்து டொரொண்டோவிற்கு அருகிலுள்ள ஒக்வில் நகரத்தில் வாழ்கிறேன். விளம்பர நிறுவனமொன்றில் ஆலோசகராகவும் பங்காளராகவும் இருக்கின்றேன். அதுவே எனது பிரதான தொழில்.

அதேநேரம் 'மின்னல் மியூசிக்' என்ற பெயரில் யூரியூப் செனல் ஒன்றை நடத்திவரும் நான், 'சிங்கர் செந்தில்' என்ற பெயரில் முகநூல் பக்கத்தையும் கொண்டுள்ளேன். எனது வேட்கை பாடுவதாகும்.

2003இல் முதன் முதலாக 'மின்னல்' என்ற பெயரில் இசை நிகழ்ச்சிகளை நடத்தினேன். இவ்வாறான சூழ்நிலையில் 2004 இல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டது. அதனால் இலங்கையின் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி அளிக்கவென நானும் மனைவியும் இணைந்து 'நிவாரணம்' என்ற பெயரில் இசை நிகழச்சிகளை ஆரம்பித்தோம். அதன் ஊடாகக் கிடைக்கப்பெற்ற நிதியுதவிகளைக் கொண்டு ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினோம்.



பின்னர் அதன் தொடர்ச்சியாக நிவாரணம் மற்றும் இசை நிகழ்வுகளின் மூலம் கிடைக்கப்பெறும் நிதியுதவியைக் கொண்டு இலங்கையின் வடக்கு, கிழக்கு உள்ளிட்ட பிரதேசங்களில் வீடமைப்புத் திட்டம், அகதிகளுக்கான உணவு, இதய நோய், சிறுநீரகப் பாதிப்பு போன்ற நாட்பட்ட நோய்களுக்கு உள்ளாகியுள்ள குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு சிகிச்சையளித்தல் என 2005 முதல் 2008 வரை அந்த நிதியைப் பயன்படுத்தினோம்.

ஆனால் யுத்த சூழல் காரணமாக நோயாளர்களை அடையாளம் காண்பதில் தாமதம் ஏற்பட்டதோடு, 2008இல் எமது இப்பணியை இடைநிறுத்தினோம். ஆனால் மக்களின் வேண்டுகோள் மற்றும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளின் அடிப்படையில் 2016 முதல் இப்பணிகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

இதற்காக டொரொண்டோவை மையமாகக் கொண்டு இலாப நோக்கற்ற நிதியமொன்றை அமைத்துள்ளேன். 'செந்தில் குமரன் நிவாரண நிதியம்' என்ற பெயரிலான இந்நிதியத்தின் ஊடாக இலங்கையில் முன்னெடுக்கப்படும் இதய மற்றும் சிறுநீரக பாதிப்பு நோயாளர்களுக்கு உயிர் காக்கும் சத்திரசிகிச்சை, நடமாடும் வைத்திய சேவை (கிளிநொச்சி), நோயாளர்கள் குடும்பங்களுக்கான வாழ்வாதாரங்கள் மற்றும் வைத்தியசாலை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றேன்.

**கேள்வி: உங்களது இசை நிகழ்ச்சிகளின் நோக்கம் குறித்து கூறுங்கள்?**

பதில்: இசையும் நிவாரணமும் எனது இரு கண்கள். நெடுங்காலத்துக்கு முன்னரே கனடா சென்றதால், நானும் எனது துணைவியாரும் நல்ல தொழில்செய்து வசதியோடு வாழ்கிறோம். அதேவேளையில் இறைவன் கொடுத்த பாடல் திறமையினை கொண்டு எம் தாயகத்து மக்களுக்கு, குறிப்பாக நோயாளர்களுக்கு அவர்களது இருதய சத்திர சிகிச்சைக்கான உதவிகளை செய்வதென்று முடிவெடுத்தோம்.

என்னுடைய சிறு வயதில், எனது தாயார் பொருளாதார ரீதியில் கஷ்டப்படும் பிள்ளைகளைக் காணும் போது 'யார் பெற்ற பிள்ளையோ...' எனக் கருணையோடு குறிப்பிடுவார்.

அப் பின்புலத்தில் தான் எமது சொந்த செலவில் இசைநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து நடத்தி, அதன் மூலம் கிடைக்கப்பெறும் நிதியை ஒட்டுமொத்தமாக கணக்குடன் முகநூலில் பொது மக்களின் பார்வைக்கு சமர்ப்பித்து, முழுமையாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையக பிரதேசங்களில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் மருத்துவ செலவுகளுக்காகவும் அவர்களுக்கு சேவை வழங்கும் பிரதேச மட்ட வைத்தியசாலைகளின் மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகவும் செலவிடுகின்றேன். எமது இசை நிகழ்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெறும் நிதியில் ஒரு சதம் கூட எமது நிர்வாக செலவிற்கோ, தாயகத்தில் பணியாற்றும் எங்கள் அமைப்பாளர்களுக்கோ, நாங்கள் இலங்கை வந்து போகும் செலவுகளுக்கோ பயன்படுத்துவதில்லை.

**கேள்வி: நாட்பட்ட நோயாளர்களையும் அவர்களுக்கு சேவை வழங்கும் வைத்தியசாலைகளையும் எந்த அடிப்படையில் தெரிவு செய்து உதவுகிறீர்கள்?**



பதில்: யாழ்ப்பாணம், திருகோணமலை, கிளிநொச்சி, முல்லைதீவு, பதுளை, மட்டக்களப்பு மாவட்டங்களிலுள்ள பிரதான வைத்தியசாலைகளில் பணியாற்றும் இதய சத்திரசிகிச்சை நிபுணர்களான லக்ஷ்மன், குருபரன், அருள்நிதி, ரகுநாதன், அம்பிகா, கார்த்திக், சரித் போன்றோர் அவசரமாக நோயின் தாக்கம் கூடிய நிலையில் உள்ள இதய சத்திர சிகிச்சை செய்ய வேண்டியவர்களின் விபரங்களை எமக்கு அனுப்பி வைப்பார்கள். அதில் அவர்களது பொருளாதார நிலைமை, சிகிச்சையின் அவசரத்தன்மை என்பவற்றைக் அவர்கள் குறிப்பிட்டிருப்பார்கள். அதற்கேற்ப எனது அமைப்பாளர் அவர்களது இல்லத்திற்கு நேரில் சென்று அவர்களது நிதி நிலைமையினை ஆராய்ந்த பின்னர் அவர்களை கொழும்பிலுள்ள முன்னணி தனியார் வைத்தியசாலைக்கு அழைத்துச்



### வைத்தியசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பங்களிப்பு

சென்று அநேகமானோருக்கு சிகிச்சைக்கான அனைத்து செலவுகளையும் நாமே பொறுப்பேற்று இலவசமாக சிகிச்சை அளித்து குணப்படுத்தி அனுப்பி வைக்கின்றோம். இதற்காக தங்கள் நேரத்தினை இலவசமாக தந்துதவும் லங்கா மருத்துவமனையின் இதய சத்திர சிகிச்சை நிபுணர்களான டொக்டர்களான காந்திஜி, லுஷாந்த உள்ளிட்ட மருத்துவ குழுவினருக்கு நாம் நன்றி கூற கடமைப்பட்டுளோம். இத்திட்டத்தின் கீழ் ஒரு இதய சத்திர சிகிச்சைக்காக 0718 இலட்சம் ரூபாய் வரை செலவிடுகின்றோம். அந்த வகையில் இற்றை



வரையும் 120 இதய சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த உயிர் காக்கும் இதய சத்திர சிகிச்சைகளுக்கு மட்டும் இது வரை 75 மில்லியன் (7.5 கோடி) ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இதய சிகிச்சைப் பிரிவின் மருத்துவ உபகரண வசதிகளை மேம்படுத்தவும், சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை அளிக்கும் வசதிகளை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் மாஞ்சோலை, மல்லாவி, சாவகச்சேரி ஆகிய வைத்தியசாலைகளில் இரத்த சுத்திகரிப்பு உபகரண வசதிகளையும் மேம்படுத்தியுள்ளோம்.

**கேள்வி: நீங்கள் இற்றை வரையும் முன்னெடுத்துள்ள வைத்தியசாலை உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடுகள் குறித்து குறிப்பிடுவதாயின்?**

பதில்: 2022 இல் மல்லாவி வைத்தியசாலைக்கு ஒரு கோடியே 28 இலட்சம் ரூபா (48 ஆயிரம் கனேடிய டொலர்கள்) செலவில் சிறுநீரக, இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் 2 யுனிட்டுகளையும், ஆர்.ஓ. இயந்திரம் ஒன்றையும் ஜெர்மனி நாட்டிலிருந்து தருவித்து வழங்கியுள்ளோம். இதனுடாக சிறுநீரக பாதிப்புக்கான இரத்த சுத்திகரிப்பு நிலையமொன்று இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

'சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளான பலர் இரத்த சுத்திகரிப்புக்காக மாதா மாதம் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு உரிய வேளையில் செல்வதில்லை அதற்கு அவர்களது பொருளாதாரம் பெரும் இடைஞ்சலாக விளங்குகிறது. இதன் விளைவாக பலர் உயிரிழந்துமுள்ளனர்' என்று யாழ்ப்பாண வைத்தியசாலையின் சிறுநீரக மருத்துவ நிபுணர்களான பவன்தன் மற்றும் பிரம்மா, ஆகியோர் முறைப்பட்டனர். இதனைக் கருத்தில் கொண்டு தான் இந் நிலையம் மல்லாவியில் அமைக்கப்பட்டது. இதேவேளை முல்லைத்தீவு மாஞ்சோலை மருத்துவமனையின் இரத்த சுத்திகரிப்பு நிலையத்தை 35 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா (14 ஆயிரம் கனேடிய டொலர்கள்) செலவில் புனரமைத்து வழங்கினோம்.

அத்தோடு முல்லைத்தீவு இதய நோயாளர்களின் நலன்கருதி மாஞ்சோலை வைத்தியசாலையில் அவசர இதய சிகிச்சைப் (ஹார்ட் கெயார் நிலையம்) பிரிவொன்றையும் 20 இலட்சம் ரூபா (9 ஆயிரம் கனேடிய டொலர்கள்) செலவில் அமைத்து திறந்து வைத்துள்ளோம். வடபகுதியிலுள்ள மேலும் சில வைத்தியசாலைகளுக்கு சிறுநீரக நோயாளர்களின் நலன்கருதி இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கேள்வி: நீங்கள் முன்னெடுக்கும் திட்டத்தின் கீழ் எத்தகைய வயது மட்டத்தினருக்கு இதய சத்திர சிகிச்சை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கப்படுகிறது?**

பதில்: வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்கள் முதல் வளர்ந்தவர்கள் வரை இதய சத்திர சிகிச்சைகளுக்காக உதவிகளைப் பெறுகின்றனர். இத்திட்டத்தின் கீழ் வளர்ந்தவர்களுக்கு உதவி செய்வதன் நோக்கம் யாதெனில், அந்த வளர்ந்தவர் தாயோ அல்லது தந்தையோ யாராக இருப்பினும் அவர்களுக்கு ஏதாவது

(19ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி கண்டவர்: மர்லின் மரிக்கார் ...

# ஹம்பாந்தோட்டையை சென்றடைந்த சஹ்மி சஹீதின் சாதனைப்பயணம் !





இலங்கையை கரையோரமாக நடைபவனியில் சுற்றிவரும் நோக்குடன் தன் பயணத்தை தொடங்கிய பேருவளையைச் சேர்ந்த சஹ்மி சஹீத் 6ஆவது நாளாக பயணம் செய்து கடந்த வியாழனன்று ஹம்பாந்தோட்டையை சென்றடைந்துள்ளார். பேருவளை, பள்ளி வீதியில் தன் பயணத்தை தொடங்கும் போது, பிரபல தொழிலதிபர் பிக் சிட்டி குழுமத்தின் ஸ்தாபகர் இஜ்லான் யூசுஃப் உட்பட பிரபல வர்த்தகர்கள் ஊர் மக்கள் என அனைவரும் அவரை உற்சாகப்படுத்தி வழியனுப்பி வைத்தனர்.

இவர் நடைபவனியாக செல்லும்போது ஊரெங்கும் மக்கள் சிறந்த முறையில் வரவேற்று உற்சாகப்படுத்தி வருவதோடு கடந்த 16ஆம் திகதி மாத்தறை கிளைபிக் சிட்டி குழும அங்கத்தவர்கள் மலர்க்கொத்து வழங்கி வரவேற்றமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தன் நடைப் பயணத்தை ஆரம்பித்த சஹ்மிக்கு வெலிகம, அம்பலாந்தொட்டை போன்ற பகுதிகளிலும் முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களால் மிகுந்த வரவேற்பு வழங்கப்பட்டது, ஜூலை 18 ஆம் திகதி ஹம்பாதோட்டையை சென்றடைந்தார். ஹம்பாந்தோட்டையைச் சென்றடைந்த அவரை, பேருவளை பியூட்டி ஜெம்ஸ் அதிபதி அஹ்ஸர் ஸவாஹிர் மற்றும் இரத்தினக்கல் வர்த்தகர் சிராஸ் ஹனபி ஆகியோர் தலைமையிலான குழுவொன்று ஹாபர் விலாவில் வரவேற்றது.

பேருவளை சீனன்கோட்டை அல் ஹுமைசரா பாடசாலை அதிபர் எம். சீ. இப்ராஹிம் மற்றும் பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் இதன் போது சமூகமளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இவருக்கு பகல் போசன விருந்துபசாரம் அளிக்கப்பட்டதோடு தங்குமிட வசதியும் வழங்கப்பட்டது.

இவர் அடுத்தகட்டமாக, மட்டக்களப்பு நோக்கி நடைப்பயணம் செய்து, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார்,புத்தளம் ஊடாக நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை எனப் பயணித்து பேருவளையை வந்தடையவுள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத்துறை அம்சங்களை உலகறியச் செய்யும் நோக்குடன், கடினமானதோர் சாதனைப் பயணத்தை மேற்கொள்ளும் ஷஹ்மி ஷஹீத், உங்கள் ஊரை வந்தடையும் போது உங்களது சிறந்த வரவேற்பைப் வழங்கி உற்சாகப்படுத்துங்கள்.

பேருவளை : பீ.எம் முக்தார் ...

## வார இறுதிக் கேள்வி

# பொருட்களின் விலைகள் குறைவதன் பின்னணி என்ன?

இலங்கை மின்சார சபை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் முன்வைத்த யோசனைகளின் பிரகாரம் மின்சார கட்டணத்தை குறைக்க ஆணைக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது. அதன்படி, ஜூலை 16ஆம் திகதி முதல் மின் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. அதேநேரம் குடிநீர் கட்டணத்தை நீர் வழங்கல் சபை விரைவில் குறைக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து, தண்ணீர்க் கட்டணமும் குறைக்கப்பட்டதால் பலர் உற்சாகமடைந்துள்ளனர். ஆனால், அரசுக்கு எதிரான சிலர், குறைந்த கட்டணத்தை செலுத்த நேரிட்டது குறித்து மகிழ்ச்சி அடைந்தாலும், அரசு மீது பல்வேறு அவதூறுகளை கூறி, பல்வேறு பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும் அரசு விலையை குறைக்கும்போது அவர்கள் புகார் கூறுகின்றனர். பின்னர் அது வாக்குகளைப் பெற அரசாங்கம் எடுக்கும் முடிவு என்று அழைக்கின்றனர். அண்மையில் முச்சக்கரவண்டிகளின் கட்டணத்தை குறைப்பதாக முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சங்கம் அறிவித்தது. அடுத்து சிற்றுண்டிச் சாலை உரிமையாளர்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்களும் இத்தகைய விலைக்குறைப்பு அமுல்படுத்தப்படும் என அறிவித்துள்ளனர். முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள், ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக ஒருபோதும் அறிவிக்கவில்லை. அப்படியானால், வாக்கு கேட்பதற்காக தங்கள் பொருட்களின் விலையை குறைத்துள்ளனர் என்று கூற முடியாது.

மின்சார கட்டணங்கள், எரிபொருள் விலைகள் மற்றும் எரிவாயு விலைகள் போன்றவற்றின் குறைப்பு காரணமாக, பல பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்திச் செலவு குறைக்கப்பட்டுள்ளது, எனவே, உற்பத்தியாளர்கள் அவற்றின் விலைகளை குறைக்க முடிந்தது. மேலும் பல உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் எதிர்காலத்தில் அவற்றின் விலையை குறைக்க வாய்ப்புள்ளது. பல பொருட்களின் விலை 20 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர அண்மையில் தெரிவித்திருந்தார். மின்கட்டணம் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளமையினால் நாட்டில் உற்பத்திச் செலவு பெருமளவு குறைந்துள்ளதாகவும், நுகர்வோருக்கு 20 வீதமாவது விலைக் குறைப்பு வழங்கப்பட வேண்டுமெனவும் அமைச்சர் கஞ்சன தெரிவித்துள்ளார்.

பொதுமக்களால் தொடர்ந்து நுகரப்படும் அல்லது பயன்படுத்தும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளை அதிகரிப்பதில் எந்த அரசாங்கமும் மகிழ்ச்சி அடைவதில்லை. குறிப்பாக மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் எம்.பி.க்கள் மற்றும் அவர்களில் அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்கள், தமது அரசியல் வாழ்வில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதால் விலைவாசியை அதிகரிப்பதில் மகிழ்ச்சியடைவதில்லை. இருந்தபோதிலும், கடந்த காலங்களில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்து, நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களின் உற்பத்தி விலைகளை உயர்த்துவது கட்டாயமான சூழ்நிலையாக மாறியிருந்தது. சர்வதேச நாணய நிதியம் இலங்கையுடன் நாட்டிற்கு கடன் வழங்குவதில் செய்து கொண்ட ஒப்பந்தத்தில், அரச உற்பத்தி நிறுவனங்களில் தற்போது நிலவி வரும் நட்டத்தை நிறுத்தி லாபகரமான சூழ்நிலையை உருவாக்க அரசும் இணங்கியுள்ளது.

எமக்கு கடன் வழங்கும் நாடுகள் அதற்கான பணத்தை அந்நாட்டு மக்கள் தமது அரசாங்கங்களுக்கு வரியாக செலுத்தும் நிதியில் இருந்து பெறுகின்றனர். இலங்கை மக்கள் தாம் நுகரும் பொருட்களின் விலைக்கு இணையான விலையை வழங்காவிடின் பற்றாக்குறையை கடன் வழங்கும் நாடுகளே ஈடு செய்ய நேரிடும். இவ்வாறான நிலையில் இலங்கைக்கு கடன் வழங்க எந்த நாடும் தயாராக இல்லை. அதன் காரணமாக சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டியிருந்தது. இவ்வாறு நட்டத்தைச் சந்தித்த நிறுவனங்களில் அரசாங்கத்திற்குச் சொந்தமான இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஆகியவை அடங்கும். IMF ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்னும் பின்னும், இந்த நிறுவனங்கள் வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலையை அரசாங்கம் உயர்த்தியது. இதன் விளைவாக, அவர்களின் செலவுகளை குறைந்தபட்சம் அவர்களின் வருமானத்திற்கு சமமாக கொண்டு வர முடிந்தது. 2022இல், நஷ்டத்தில் இருந்த ஏராளமான அரச. உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்கள் தற்போது லாபம் ஈட்டியுள்ளன.

2022 இல் இலங்கை மின்சார சபையின் நட்டம் 13 பில்லியன் ரூபாவாகும். இருந்தும் 2023ல் 9 பில்லியன் ரூபா இலாபமாக மாறியது. அதேநேரத்தில், பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய கடனையும் சபையால் குறைக்க முடிந்தது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்ததால் மின் உற்பத்தி செலவு குறைந்து, மதிப்பு அதிகரித்தது. இந்த ஆண்டு மின்சார சபையால் இரண்டு முறை மின்சார விலையை குறைக்க முடிந்தது. அது வாக்குகளைப் பெறுவதற்கான முறைசாரா விலைக் குறைப்பு அல்ல என்பது தெளிவாகிறது. மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, தேர்தல் நோக்கத்திற்காக முறைசாரா விதத்தில் விலைகளை குறைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சிறிய அளவில் மீறுவது கடன் திட்டத்தை ரத்து செய்வதற்கான அடிப்படையாக இருக்கலாம். எனவே, வாக்களிப்பதற்காக அரசு உற்பத்தி நிறுவனங்களின் விலையை குறைக்கும் வகையில் செயல்படும் என்பது சாத்தியமில்லை. விலை குறைக்கப்படும்போது தேர்தல் வருவதைப் பற்றி அரசாங்கத்தால் எதுவும் செய்ய முடியாது. எதிர்காலத்தில் பல பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அரசதுறையில் மட்டுமின்றி தனியார் துறையிலும் குறைய வாய்ப்புள்ளது. இதற்குக் காரணம், டொலரின் மதிப்புக் குறைப்பு போன்ற பல காரணிகள் நாட்டின் உற்பத்திச் செலவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நாணய மாற்று வீதம் தொடர்பில், இலங்கை மத்திய வங்கியின் நடவடிக்கையே டொலரின் பெறுமதி வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக பலரும் தெரிவிக்கின்றனர். எவ்வாறாயினும், டொலர் வீழ்ச்சியடைவதைத் தடுக்க இலங்கை மத்திய வங்கி அந்நிய செலாவணி சந்தையில் தலையீடு செய்துள்ளதாக இந்த நாட்களில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன.

நாட்டிற்கு வரும் டொலர்களின் அளவு அதிகரிக்கும்போது, டொலரின் மதிப்பு எதிர்காலத்தில் மேலும் குறையும் என்று எதிர்பார்க்கலாம். அத்தகைய சூழ்நிலையின் விளைவாக பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் மேலும் வீழ்ச்சி ஏற்படலாம். கொவிட் தொற்று நோய்க்குப் பின்னர் கடுமையான பின்னடைவைச் சந்தித்த இலங்கையின் முன்னணி பொருளாதாரத் துறைகளில் கட்டடத் துறையும் ஒன்றாகும். ஆரம்பத்தில், அதற்குக் காரணம், கொவிட் பரவியதால், மேசன்மார்கள் மற்றும் தட்சன்மார்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், பொறியியலாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்கள் உட்பட சம்பந்தப்பட்ட ஊழியர்கள் வீட்டிலேயே இருந்தனர். அதேநேரத்தில், சர்வதேச விநியோக வலையமைப்புகளின் சரிவு காரணமாக, பொருட்களின் இறக்குமதி தொடர்பாக சிக்கல்கள் எழுந்தன. அந்நியச் செலாவணி பற்றாக்குறையுடன், கட்டடப் பொருட்களின் விலையும் அதிகரித்தது. இந்த சூழ்நிலையில், கட்டுமான தொழில் கிட்டத்தட்ட முற்றிலுமாக வீழ்ச்சியடைந்து பலர் வேலை இழந்தனர். ஆனால், அண்மையில் சில மாதங்களாகவே, கட்டுமானப் பொருட்களின் விலை வெகுவாகக் குறையத் தொடங்கியுள்ளதால், கட்டுமானத் துறையில் ஓரளவுக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. ரூபாயின் பெறுமதி உயர்வினால் கட்டடப் பொருட்களின் விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கலாம் அதன் ஊடாக பொருளாதார வளர்ச்சிக்கு அத்துறையின் பங்களிப்பு முன்பைப் போலவே இருக்கும் என எதிர்பார்க்கலாம். தேயிலை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்தப்படும் 5 வகையான உரங்களின் விலைகளை அரசாங்கம் இந்த வாரம் குறைத்துள்ளது. இது ஒரு குறிப்பிடத்தக்க விலைக் குறைப்பு. ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் உலக சந்தையில் உரங்களின் விலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் விலையை குறைக்க முடிந்தது. அதேநேரத்தில், அரசாங்கத்திற்குச் சொந்தமான இரண்டு உர நிறுவனங்களையும் இணைத்து வலுவான உர விநியோகத் துறையை உருவாக்கவும் அரசாங்கம் பாடுபட்டுள்ளது. இதனால், விநியோகத் துறையின் செலவு வெகுவாகக் குறைந்துள்ளது.

எனவே, உரங்கள் மற்றும் இதர விவசாய பொருட்களின் விலை குறையும் என்று எதிர்பார்க்கலாம். இருப்பினும், சிலர் வாக்குகளுக்காக விலை குறைக்கப்படுவதாகக் கருதலாம்.



களனி பல்கலைக்கழக பொருளியல் கற்கைகள் பிரிவின்
முன்னாள் சிரேஷ்ட பேராசிரியர்
சுனந்தா மத்துமபண்டார.
தமிழில் வீ.ஆர்.வயலட்

## முஸ்லிம் சமய கலாசார திணைக்கள ஏற்பாட்டில் நடைபெற்ற முஹர்ரம் விழா

### கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதி







முஸ்லிம் சமய கலாசார திணைக்களம் கிருலப்பன ஜும்ஆ மஸ்ஜிதுடன் இணைந்து ஒழுங்கு செய்த முஹர்ரம் புதுவருட நிகழ்வு 2024 அண்மையில் கொழும்பு 06 இல் அமைந்துள்ள கிருலப்பனை ஜும்ஆ மஸ்ஜிதில் நடைபெற்றது.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ. எம். றிப்லான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வுக்கு வருகை தந்த அமைச்சர் பணிப்பாளரினால் வரவேற்கப்பட்டார். முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி (பா.உ) கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில், திணைக்கள அதிகாரிகள் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இஹ்ஸானியா அரபிக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எப்.எம். பரூக் இஸ்லாமிய புதுவருடம் முஹர்ரம் பற்றி சிறப்பு உரை நிகழ்த்தினார். கொம்பனி வீதி அகதியா மாணவர்களின் கஸீதாவும் இடம்பெற்றன.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்: ட்ரம்பின் வெற்றி சாத்தியப்படுமா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உலகிலேயே வலுவான ஜனநாயக நாடாக கருதப்படும் அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுதற்கான நகர்வுகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் பல அரசியல் கட்சிகள் காணப்பட்டாலும் தேசியளவில் இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களே ஜனாதிபதித் தேர்தலில் அறியப்படுபவர்களாக உள்ளனர். அதனடிப்படையில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான ஜோ பைடனும் குடியரசுக்கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புமே போட்டியாளர்களாக உள்ளனர். இக்கட்டுரையும் இரு போட்டியாளர்களின் தற்போதைய நிலையை தேடுவதுடன் அமெரிக்க ஜனநாயகத்தின் தன்மையைத் தேடுவதாகவும் அமையவுள்ளது.

அமெரிக்க அரசியலமைப்பின் சிறப்புக்கள் பல உண்டு. அதாவது ஜனாதிபதிக்கு ஏதும் நெருக்கடி ஏற்பட்டால் இடைத் தேர்தல், பதில் தேர்தல் எதுவும் கிடையாது. அதற்கான ஏற்பாடாக 14 அமைச்சும் ஜனாதிபதி, பதில் ஜனாதிபதி மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதி மற்றும் சபாநாயகர் என்ற வரிசையைக் கொண்டுள்ளது. இதில் எவருக்கேனும் மரணம் அல்லது படுகொலை நிகழ்ந்தால் மாற்றறையவர் ஜனாதிபதியாகும் நடைமுறையை அரசியலமைப்பாகக் கொண்டுள்ளது. தற்போது திட்டமிட்டு 18 பேரும் படுகொலை செய்யப்பட்டால் அடுத்த ஜனாதிபதி யார் என்ற விவாதத்தை செப்ரெம்பர் தாக்குதலுக்கு பின்னர் அமெரிக்க கொள்கைவகுப்பாளர்களும் புலமைசார் பல்கலைக்கழகழக பேராசிரியர்களும் உரையாடிவருகின்றனர். இவ்வாறு பல விடயங்கள் அமெரிக்க அரசியலமைப்புக்குள் பொதிந்துள்ளது. அவ்வாறே அமெரிக்கா 100க்கும் மேற்பட்ட தேசியங்களைக் கொண்ட ஒரு பல்லினத் தேசிய அரசாகவுள்ளது. அதன் ஜனநாயகம் வெள்ளையினத்திற்கானது. அதாவது வெள்ளையினத்தின் ஜனநாயகமே மேற்குலக ஜனநாயகம் என்பது போலவே அமெரிக்க ஜனநாயகமும். அடிப்படையில் ஜனநாயகப் பண்புகளை அதிகம் கொண்டிருந்தாலும் அதன் முதன்மை வெள்ளையினத்தின் ஆதிக்கமாகவே தெரிகிறது. அதற்குள்ளேயே முன்னாள் ஜனாதிபதி பரக் ஒபாமாவின் ஜனாதிபதித்துவம் அமைந்திருந்தது. ஒபாமா கறுப்பராக இருந்தாலும் அவர் வெள்ளையினத்தின் ஜனநாயகத்திற்கே தலைமைதாங்கியவராகக் காணப்பட்டார்.

குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக டொனால்ட் ட்ரம்ப் அறிவிக்கப்பட்ட பின்னர் பென்சில்வேனியாவில் பட்லர் நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் (14.07.2024) துப்பாக்கிதாரி ஒருவரால் ட்ரம்ப் சுடப்பட்டார். அத்தாக்குதலில் அவரது செவிப்பகுதியில் காயம் ஏற்பட்டது. துப்பாக்கிதாரி அமெரிக்கப் பொலிஸாரின் பதில் தாக்குதலில் சுட்டுக் கொல்லப்பட்டார். அமெரிக்கா மட்டுமல்ல உலகம் முழுவதும் இத்தாக்குதல் அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியதுடன் குடியரசுக்கட்சியினர் தமது வெற்றிவாய்ப்பினை அதிகரிக்க வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திவருகின்றனர். இதனை விரிவாக தேடுவது பொருத்தமானதாக அமையும்.

ஒன்று, இத்தாக்குதல் குடியரசுக் கட்சியின் வேட்பாளர் ட்ரம்பின் வெற்றிவாய்ப்பினை அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது. காரணம் ட்ரம்ப் மீதான குற்றச்சாட்டுகளும் நீதிமன்ற நடவடிக்கைகளும் பாரிய நெருக்கடியை ட்ரம்ப்க்கு ஏற்படுத்திய போது அவரை குடியரசுக் கட்சியினரே எதிர்த்திருந்தனர். குடியரசுக்கட்சி மட்டுமல்ல அமெரிக்க



புலனாய்வுத் துறை மற்றும் இராணுவத்தினர் மத்தியிலும் அதிக குழப்பம் நிலவியது. ட்ரம்ப் அமெரிக்காவின் எதிர்காலத்தை அழிவுப்பாதைக்கு கொண்டு செல்வார் என்ற குற்றச்சாட்டை முன்வைக்கத் தொடங்கினர். ஆனால் ட்ரம்ப் எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாது முகங்கொடுத்ததுடன் எதிர்த்துப் போராடியும் வந்தார். அடிப்படையில் மிக மோசமான மனிதனாக இருந்தாலும் தனது வேட்பாளர் நிலையை தக்கவைக்க அதிக பிரயத்தனங்களை மேற்கொண்டார். அத்தகைய நெருக்கடியை எல்லாம் கடந்து கொண்டு நகர்ந்த ட்ரம்ப் தனது கட்சிக்குள் தன்னை எதிர்த்தவர்களை கையாளும் கலையைக் கற்றதுடன் முன்னர் எதிரியாகச் செயல்பட்ட JD. வன்ஸ்சை பதில் ஜனாதிபதி வேட்பாளராக தேர்ந்தெடுத்தார். அதனை அடுத்து பென்சில்வேனியாவில் நிகழ்ந்த பிரசாரத்தின் போது அவர் மீதான தாக்குதல் குடியரசுக் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்த ஆரம்பித்தது.

இரண்டு, அதற்கமைவாகவே புலனாய்வுத் துறையினரின் நடவடிக்கைகளும் அமைந்துள்ளன. குறிப்பாக ட்ரம்ப் மீதான தாக்குதலை ஈரானுடன் தொடர்புபடுத்துவதில் அமெரிக்க புலனாய்வுத் துறை அதிக கவனம் கொண்டுள்ளது. காரணம் ஜனாதிபதி ட்ரம்ப்ன் ஜனாதிபதி வேட்பாளர் நிலையை தோற்கடிக்க எடுத்த அனைத்து நகர்வுகளையும் ட்ரம்ப் தோற்கடித்த நிலையில் குடியரசுக் கட்சியினருக்கு ஏற்பட்ட அதேநிலை அமெரிக்க புலனாய்வுத் துறையினருக்கும் ஏற்பட்டுள்ளது. அதனால் விரும்பியோ விரும்பாமலோ ட்ரம்ப் ஏற்று செயல்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனால் அவரை அமெரிக்க மேலாதிக்கத்திற்கும் நலனுக்கும் ஏகாதிபத்திய முகத்திற்கும் அமைய உருவாக்குதல் என்பது அவசியமானதாக அமைந்தது. அதற்கான நகர்வையே அமெரிக்க உள்நாட்டு புலனாய்வும் சர்வதேசப் புலனாய்வும் செயல்படுத்தத் தொடங்கியுள்ளது. அதற்கு வலுவான காரணங்களும் உண்டு.

கடந்த காலங்களில் ட்ரம்ப் தான் ஜனாதிபதியாக வந்தால் உக்ரைன் போரை 24 மணித்தியாலத்தில் நிறுத்துவேன் எனக் குறிப்பிட்டு வந்தார். ஆனால் அவர் இஸ்ரேல் ஹமாஸ் போர் பற்றி எதுவும் அவ்வாறு குறிப்பிடவில்லை. ஆனாலும் அவரது போர் பற்றிய எண்ணம் தற்போதைய ஜனாதிபதியைவிட வேறுபட்டதாக உள்ளது. அத்தகைய விடயம் அமெரிக்க ஆட்சியாளர்களுக்கு ஆபத்தானதாக காணப்படுகிறது. அதுவே ட்ரம்ப் மீதான பிரதான குற்றச்சாட்டாகும். அமெரிக்காவை அதன் வடிவத்தை முழுமையாக அழிக்கும் ஜனாதிபதி என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியத்தை உடைத்துவிடுவார் என்ற எண்ணம், அமெரிக்க புலனாய்வு மற்றும் அமெரிக்க கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் காணப்படுகிறது. அதனால் அவரை போர் பற்றிய இருப்பில் அமெரிக்க நலனுக்குட்பட்டவராக மாற்றுவதுடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை பாதுகாக்கும் மற்றும் உலகளாவிய ஏகாதிபத்தியத்திற்கு தலைமைதாங்கு நபராக மாற்றுதல் அவசியமானதாக கருதுகின்றனர். அதனாலேயே ஈரானே ட்ரம்ப் மீதான தாக்குதலுக்கு காரணம் என புலனாய்வுத் துறை உரையாடலை தொடக்கியுள்ளது.

ஈரானின் இராணுவத் தளபதி மற்றும் ஐந்திற்கு மேற்பட்ட அணு விஞ்ஞானிகளை கொலை செய்வதில் அமெரிக்க இஸ்ரேலியக் கூட்டு செயல்பட்டுள்ளது என்பது தெரிந்த விடயம். ஆனால் ட்ரம்ப் கட்டளை பிறப்பித்து ஈரானிய இராணுவத் தளபதி சுலைமானி கொல்லப்பட்டதற்கு ஈரான் ட்ரம்ப் மீதே குற்றச்சாட்டை வைத்துள்ளது. அதனைப் பலப்படுத்தவும் மேற்காசிய போரைத் திட்டமிட்டு நீடிக்கவும் அமெரிக்க உலகளாவிய ஏகாதிபத்தியத்திற்கு தலைமை தாங்கும் உத்தியை ஏற்படுத்தவும் அமெரிக்க புலனாய்வுத்துறை திட்டமிடுவாதகவே தெரிகிறது. இதுவே ஈரானிய துப்பாக்கிதாரி என்ற செய்திக்கு பின்னாலுள்ள அடிப்படையாகவுள்ளது. அவ்வாறே ஈரான் மீளவும் எழுச்சியடைய விடாது தடுப்பதே அமெரிக்கப் புலனாய்வுத்துறையின் பிரதான நோக்கமாகவுள்ளது. எதிர்காலத்திலும் ஈரான் மீதான தாக்குதலையும் முறியடிப்புகளையும் அமெரிக்கா கொண்டிருக்கும் என்பதற்கான நகர்வாகவே தெரிகிறது.

மூன்று, தற்போதைய ஜனாதிபதியின் அணுகுமுறைகளும் ஜனநாயக கட்சியினரின் நகர்வுகளும் ட்ரம்பின் வெற்றியை தெளிவாக்கியுள்ளதாகவே தெரிகிறது. ஜோ பைடன் மீதான அழுத்தங்கள் அவரது பிடிவாதம் என்பன குடியரசுக்கட்சிக்கு வாய்ப்பானதாக மாற்றியுள்ளது. அதனால் ட்ரம்ப்பை அமெரிக்க புலனாய்வத்துறை கையாளவேண்டிய தேவை எழுந்துள்ளது. அவர் முன்னாள் ஜனாதிபதியாகவும் உள்ளமை கவனத்திற்குரியதாகும்.

ஏனவே அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் ட்ரம்ப் பக்கம் திரும்பியுள்ளதாகவே தெரிகிறது. அவரது வெற்றியை அவர் மீதான தாக்குதல் பலப்படுத்தியுள்ளது. அவரது இரண்டாவது ஆட்சிக்காலம் அமெரிக்க நலனுக்குரியதாகவும் மேற்காசியப் போர் வலுவானதாகவும் திட்டமிடப்படுகிறது. இஸ்லாத்திற்கு எதிரான போரே அமெரிக்காவின் எதிர்கால ஏகாதிபத்திய நகர்வாக உள்ளது. அதில் அமெரிக்காவின் மிகப்பிரதான எதிரியாக ஈரானே விளங்கும்.

# இலங்கையின் எரிசக்தி துறையில் அதானியின் புரட்சி

உலகளாவிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தனது இருப்பை தொடர்ச்சியாக வலுப்படுத்திவரும் இந்தியாவின் அதானி நிறுவனம் இலங்கையில் தனது புதிய பயணத்தைத் ஆரம்பித்துள்ளது. 1 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் முதலீடு செய்வதற்கான அர்ப்பணிப்புடன், அதானியின் லட்சிய திட்டங்கள் இலங்கையின் எரிசக்தி துறையில் புரட்சியை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன, இது இலங்கையின் நிலைத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பனவற்றில் ஒரு மைல்கல்லாக அமையவுள்ளது. இலங்கையின் மன்னார் மற்றும் பூநகரியில் இந்த காற்றாலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மொத்தமாக 1.029 பில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன், இந்தத் திட்டங்கள் இலங்கையின் வரலாற்றில் அதிவேகமாக அபிவிருத்தி செய்யப்பட்ட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முயற்சிகளாகத் திகழும், அத்துடன் இது 2025ஆம் ஆண்டு முதல் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முயற்சியானது 2030 ஆம் ஆண்டளவில் 70% புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அடையும் இலங்கையின் இலக்குடன் நெருக்கமாக இணைந்துள்ளது. நாட்டின் சக்திவளத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை என்பவற்று இது கணிசமான பங்களிப்பை வழங்குகிறது.

இலங்கையில் அதானியின் முதலீடுகள் பல்வேறு துறைகளில் கணிசமான கடப்பாடுகளை உள்ளடக்கியது:

**★ காற்றாலை மின் உட்கட்டமைப்பு: 741 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் காற்றாலை மின் நிலையங்களை நிறுவுவதில் கவனம் செலுத்துகிறது, இலங்கையில் ஏராளமாக உள்ள காற்று வளத்தைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்தல். பாரம்பரிய புதைபடிவ எரிபொருளை அடிப்படையாகக் கொண்ட மின் உற்பத்தியை விட கணிசமாக குறைவான கட்டணங்களில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தீர்வுகளை அதானி நிறுவனம் வழங்கவுள்ளது.**

**★ விநியோக உட்கட்டமைப்பு: நாடு முழுவதும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் திறமையான விநியோகத்தை உறுதிசெய்யும் வகையில், வலுவான மின் பரிமாற்ற உள்கட்டமைப்பை மேம்படுத்த 288 மில்லி**



**யன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்யப்படும். தடையற்ற மின் பரிமாற்றத்தை வழங்கும் வகையில் மின் இணைப்பு மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை நிர்மாணிப்பது இதில் அடங்கும்.**

**பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம்**

**இந்த திட்டங்கள் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு கணிசமான நன்மைகளை உறுதியளிக்கின்றன:**

**★ மின்சாரம் வழங்கல் மற்றும் செலவுக் குறைப்பு: அதானி கிரீன் பவரின் திட்டங்கள் ஆண்டுதோறும் சுமார் 1.5 பில்லியன் அலகு சூழலுக்கு தீங்கில்லாத மின்சாரத்தை உற்பத்தி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 590,000 குடும்பங்களின் சக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இந்த நடைமுறையானது அரசாங்கத்தின் மின்சார செலவை வருடத்திற்கு 83 மில்லியன் அமெரிக்க டொலர்களதக குறைக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது நுகர்வோருக்கு குறைந்த மின்சார கட்டணமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது இது மலிவானது மட்டுமல்ல பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க வரமாகவும் அமையும்.**

**★ சுற்றுச்சூழல் நன்மைகள்: ஆண்டுதோறும் சுமார் 1.06 மில்லியன் தொன் கார்பனீரொட்சைட்டு வெளியேற்றத்தைக் குறைக்கும், இது காலநிலை மாற்றத்தைத் தணிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்யும். அதுமாத்திமல்லாமல் மன்னார் மற்றும் பூநகரியில் பறவைகள் குறிப்பாக புலம்பெயர் பறவைகள் அதிகளவில் வருவதால் அதானி நிறுவனம் அமைக்கவுள்ள காற்றாலைகள் அவற்றுக்கு தீங்கிழைக்கும் என்பதாக முன்னதாக சூழலியல் ஆர்வலர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். ஆனால் அதானி நிறுவனம் நிறுவவுள்ள காற்றாலைகள் செயற்கை நுண்ணறிவு மூலம் இயக்கப்படவுள்ளவை அதனால் அவை பறவைகளின் நடமாட்டத்தை அவதானித்தவுடனேயே தாமாகவே செயற்பாட்டை நிறுத்திக் கொள்ளும்**

**★ வேலைவாய்ப்பு மற்றும் உள்ளூர் மேம்பாடு: எரிசக்தி உற்பத்திக்கு அப்பால், உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் அதானி கிரீன் பவர் உறுதிபூண்டுள்ளது.**

**இந்தத் திட்டங்கள் 1,200க்கும் மேற்பட்ட வேலைகளை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன, 95% பணியாளர்களை உள்நாட்டிலேயே உள்ளீர்ப்பதாகவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்த முன்முயற்சி வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது மட்டுமல்லாமல் சமூக ஈடுபாடு மற்றும் சமூகபொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்துகிறது.**

**தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் செயல்பாட்டு சிறப்பு**

**அதானியின் புதுமை மற்றும் செயல்பாட்டுச் சிறப்புக்கான நற்பெயர் அதன் அதிநவீன தொழில்நுட்பங்கள் மற்றும் நிலையான நடைமுறைகளால் அடிக்கோடிட்டுக் காட்டப்படுகிறது:**

**★ மேம்பட்ட புதுப்பிக்கத்தக்க தொழில்நுட்பங்கள்: அதானியின் திட்டங்கள் அதிநவீன காற்றாலை விசையாழி தொழில்நுட்பங்களை உள்ளடக்கி, உகந்த செயல்திறன் மற்றும் அதிகபட்ச சக்தி வெளியீட்டை உறுதி செய்யும். இதில் அதிக திறன் கொண்ட காற்றாலை விசையாழிகள் பல்வேறு சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.**

**★ சுற்றுச்சூழல் நிலைத்தன்மை: ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் இல்லாத மற்றும் பூஜ்ஜிய கழிவுகள் கொண்டதாக சான்றளிக்கப்பட்ட திட்டங்களுடன், சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான அதானியின் உறுதிப்பாட்டை இந்த முயற்சிகள் நிலைநிறுத்துகின்றன.**

அதானி குழுமத்தின் தலைவரான கௌதம் அதானி, நிலையான நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மூலம் உலகளாவிய சக்தி வள செயற்பாட்டில் நேர்மறையான தாக்கத்தை எதிர்பார்க்கிறார். 84 பில்லியன் அமெரிக்க டொலர் நிகர மதிப்பு மற்றும் பசுமை எரிசக்தி முயற்சிகளுக்கான உறுதியான அர்ப்பணிப்புடன், அதானி இந்தியாவையும் அதன் உலகளாவிய செயல்பாடுகளையும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி புரட்சியின் முன்னணியில் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இலங்கையில் அதானி கிரீன் பவரின் மூலோபாய முதலீடுகள் குறிப்பிடத்தக்க பொருளாதார வாய்ப்பை மட்டுமல்ல, பசுமையான, நிலையான ஆற்றல் தீர்வுகளை நோக்கிய ஒரு முன்னுதாரண மாற்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

அதானி நிறுவனம் தனது நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம், இலங்கையின் புதுப்பிக்கத்தக்க சக்தித்துறையில் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்குத் தயாராக உள்ளது, அத்துடன் மலிவு, நம்பகத்தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பொறுப்பு ஆகியவற்றில் புதிய அளவுகோல்களையும் அது வகுத்துள்ளது. டிகார்பனைசேஷன் இன்றியமையாததை உலகம் தழுவிய நிலையில், அதானி பசுமை சக்தி நம்பிக்கை மற்றும் முன்னேற்றத்தின் சான்றாகும்.

சுரேஷ்



## அமான் அஷ்ரஃபின் "ஓட்டமாவடி" :



அமான் அஷ்ரஃப் இயக்கத்தில் வெளியான "ஓட்டமாவடி" திரைப்படம், கடந்த புதன்கிழமை (10) கொழும்பு PVR இல் பிரமாண்டமாக வெளியிடப்பட்டிருந்தது. இதில் இலங்கையின் முதல் பெண்மணி, பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்க மற்றும் அரச பிரதிநிதிகள், இராஜதந்திர உறுப்பினர்கள், பெரும் நிறுவனங்களின் தலைவர்கள், இலங்கை சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள் உள்ளிட்ட முக்கிய அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கொவிட்19 தொற்றுநோயின் போது இலங்கை முஸ்லிம் சமூகம் எதிர்கொண்ட போராட்டத்தின் சொல்லப்படாத ஒரு கடுமையான பயணத்தின் கதையை இந்த ஆவணப்படம் வெளிப்படுத்தியுள்ளதோடு, கொரோனா வைரஸ் காரணமாக இறந்த தங்கள் அன்புக்குரியவர்களின் உடல்களின் கட்டாய தகனங்கள் மூலம் அவர்களுக்கு உண்டான சோதனையை பார்வையாளர்களுக்கு இந்தத் திரைப்படம் எடுத்துக் கூறுகின்றது.

2019 இன் பிற்பகுதியில் ஏற்பட்ட கொவிட்19 பெருந்தொற்று, இலங்கையில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, சுமார் 17,000 உயிர்களை அது காவு கொண்டது. நாடு முழுவதிலும் உள்ள குடும்பங்கள் தங்களது உறவினர்களின் இழப்புக்களுக்காக துக்கம் அனுஷ்டித்துக் கொண்டிருந்த நிலையில், இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் மற்றுமொரு துன்பத்தை எதிர்கொண்டது.

இஸ்லாமிய நம்பிக்கைகள் மற்றும் மரபுகளுக்கு நேரடியாக முரண்பட்ட ஒரு நடைமுறையான,

தங்களது இறந்த உறவினர்களின் உடல்களின் கட்டாய தகனமே அதற்கான காரணமாகும். இந்த தயாரிப்பை உருவாக்குவதற்கான பின்னணிக்கு காரணமான உந்துதலை விளக்கிய இயக்குனர் அமான் அஷ்ரஃப், "இந்த கதை மூலம், எனது மக்களைப் பற்றி என்னால் சொல்ல முடிந்துள்ளது. இது முஸ்லிம்களைப் பற்றிய ஒரு கதை அல்ல, எவ்வித விஞ்ஞானபூர்வ ஆதாரங்களுமின்றி, அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட இலங்கையர்களைப் பற்றிய கதை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். தங்களது அரசியலமைப்பு உரிமைகள் மீறப்பட்டதால் மௌனமாக அவதிப்பட்ட இலங்கை குடிமக்கள் பற்றிய கதையாகும். தமது சக நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட அநீதியை உணர்ந்த, பலதரப்பட்ட இன, மதப் பின்னணிகளில் உள்ள இலங்கையர்கள் ஒன்றிணைந்து உருவாக்கிய ஒரு திரைப்படம் இதுவாகும். இது எதிர்காலத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய ஒரு கதை என அவர்கள் நம்புகின்றனர்.

இதன் மூலம், எந்தவொரு இலங்கையரும் இதுபோன்ற கொடூரமான மற்றும் தாங்க முடியாத வகையில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படக் கூடாது எனும் நிலைப்பாட்டை அவர்கள் உறுதி செய்துள்ளனர்." என்றார்.

Black Coffee Films தயாரிப்பில் வெளியிடப்பட்டுள்ள "ஓட்டமாவடி", சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகள், அரசாங்க பிரதிநிதிகள், மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்டோரின் ஆழமான நேர்காணல்கள் மூலம், குறித்த சர்ச்சைக்குரிய காலகட்டத்தை ஆழமாக ஆராய்ந்துள்ள ஆவணப்படமாகும்.இந்தத் திரைப்படம் ஓட்டமாவடி எனும் தொலைதூர கிராமத்தின் பெயரைக் கொண்டதாக பெயரிடப்பட்டுள்ளது. கட்டாய தகனக் கொள்கை மாற்றப்பட பின்னர் அடக்கம் செய்ய அனுமதிக்கப்பட்ட இடமாக இது விளங்குகின்றது.Black Coffee Productions நிறுவனத்தின் முதலாவது தயாரிப்பான, "ஓட்டமாவடி" திரைப்படம், இலங்கையின் ஆவணப்படத் துறையில் ஒரு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.



வணக்கத்துக்குரிய எல்லே குணவன்ச தேரருடன் நல்லெண்ண சந்திப்பில் தேசிய ஒற்றுமை நல்லிணக்கம், நீதி,சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஒருங்கிணைப்பாளர்களான டாக்டர் சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபுசர்மா, கலாநிதி அல் செய்க் ஹசன் மௌலானா, அருட்தந்தை நிஷான் குரே ஆகியோர் கலந்துரையாடல் மேற்கொண்டிருந்தனர். இக் கலந்துரையாடலின் போது, இந்த நாட்டில் இருக்கும் வளங்களை பிற நாடுகளுக்கு விற்பனை செய்யப்படுவதை தடை செய்ய வேண்டும், வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இலங்கை நாட்டவர்களுக்கு இவ்வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற வகையில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

# நீரிழிவை கட்டுப்படுத்த பங்களிக்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனம் இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் மூலோபாய ஒப்பந்தம்

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் (DASL) மூலோபாய பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளது. அதனூடாக, நாட்டில் தற்போது நிலவும் உயர்ந்த நீரிழிவு நிலையை கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளது. சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் பிரகாரம், தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கை அதிகளவு நீரிழிவு நிலை காணப்படும் இடர்நிலையை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேசிய சுகாதார இடர்நிலையை புரிந்து கொண்டு, நீரிழிவை கட்டுப்படுத்துவது தொடர்பில் நாடு முழுவதிலும் பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தனிநபர் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் அவசியமான சாதனங்கள் மற்றும் கட்டமைப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், சமூக ஈடுபாட்டை கட்டியெழுப்பவும் பங்களிப்பு வழங்க யூனியன் அஷ்யூரன்ஸ் முன்வந்துள்ளது.

இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் யூனியன் அஷ்யூரன்ஸ் கைகோர்த்து, நிலைபேறான தீர்வுகளை எய்தும் வகையில், இலக்கு வைக்கப்பட்ட ஆதார அடிப்படையிலான தவிர்ப்பு மூலோபாயங்களை நடைமுறைப்படுத்தி, நீரிழிவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கையை குறைப்பதிலும், அனைத்து இலங்கையர்களின் நலனை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தும். பிரசல்ஸ் நகரில் அமைந்துள்ள சர்வதேச நீரிழிவு சம்மேளனத்தின் அங்கத்துவம் பெற்ற அமைப்பாக இலங்கை நீரிழிவு சம்மேளனம் திகழ்வதுடன், 1992 ஆம் ஆண்டு பாராளுமன்ற சட்ட இல. 1 இன் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அரச சார்பற்ற நிறுவனமாகவும் திகழ்கின்றது. ராஜகிரிய, தேசிய நீரிழிவு நிலையத்தில் இலங்கை நீரிழிவு சம்மேளனம் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ளது. தனது மேம்படுத்தப்பட்ட ஆய்வு



கூட வசதிகளினூடாக சிகிச்சை சார் மற்றும் தவிர்ப்பு சேவைகளை வழங்குவதுடன், வகை 1 நீரிழிவுடன் வாழும் பொருளாதார ரீதியில் சவால்களை எதிர்நோக்கியுள்ள இளைஞர்களுக்கு ஆதரவையும் வழங்குகின்றது. மேலும், நீரிழிவுக்கு முன்னரான நிலை மற்றும் நீரிழிவு நிலை ஆகியவற்றை தணிப்பதற்கான ஆய்வுகளை முன்னெடுப்பதுடன், பொது மக்கள் மத்தியில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளையும் மேற்கொள்கின்றது.

2021 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டிருந்த STEPS கருத்தாய்வின் பிரகாரம், 18 – 69 வயதுக்குட்பட்ட வயதுவந்தவர்கள் மத்தியில் Impaired Fasting Glycaemia (IGT) சதவீதம் இருபாலாரிடையே 13% ஆக காணப்பட்டதுடன், அதே வயதினர் மத்தியில் Fasting Blood Glucose (FBS) சதவீதம் இருபாலாரிடையே 14.6% ஆக காணப்பட்டது. மேலும், 2015 ஆம் ஆண்டிலும் 2021 ஆம் ஆண்டிலும் முன்னெடுக்கப்பட்ட STEPS கருத்தாய்வுகளின் பெறுபேறுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில், IGT சதவீதம் 3.8% இலிருந்து 13.0% ஆக அதிகரித்திருந்ததுடன், FBS ஐ கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 7.4% இலிருந்து 14.6% ஆக உயர்ந்திருந்தது. அமைதியாக கொல்லும் இந்த கொடிய நிலையிலிருந்து சகல கட்டங்களிலும் பொது மக்களுக்கு வலுவூட்டுவது என்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஓரிடத்தில் அதிக நேரம் இருப்பதுடன், உடற்பயிற்சி இன்மை, அதிக அழுத்தம் போன்ற நவீன வாழ்க்கை முறைகள் உடற்பருமன் அதிகரிப்புக்கும், நீரிழிவுக்கும் காரணமாக அமைந்துள்ளன. இருதய நோய்கள், பார்வை குறைபாடு, சிறுநீரக செயலிழப்பு மற்றும் அங்க உபாதைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய நிலைகளால் பொது உயிரிழப்பு வீதங்களும் அதிகரித்துள்ளன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக இந்தப் பங்காண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "எமது பெறுமதிகளுடன் மிகவும் பொருந்திய அமைப்பான, இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம். இலங்கையர்களின் நலனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த நாம் செயலாற்றுகின்றோம். தனிநபர் நலனை மேம்படுத்துவது தொடர்பில் மேற்கொள்ளும் முன்னேற்பாட்டு செயற்பாடுகளினூடாக, எமது தேசத்தின் திரண்ட முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதை நோக்காகக் கொண்டும், இந்த நிலையினால் எதிர்கொள்ள நேரிடும் பல சவால்களை கவனத்தில் கொண்டும், இலங்கை நீரிழிவு சம்மேளனத்துடன் ஏற்படுத்தியுள்ள கைகோர்ப்பினூடாக, பொது மக்களுக்கு ஆதரவளிக்கும் பரிபூரண தீர்வுகளை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். எமது அர்ப்பணிப்பு என்பது நீண்ட கால அடிப்படையிலானது.

இலங்கை முழுவதிலும் பொது சுகாதார மேம்பாடு மற்றும் நலனை மேம்படுத்தல் போன்றவற்றில் நீடித்து நிலைத்திருக்கும் பங்களிப்பை வழங்குவதை அடிப்படையாக கொண்டுள்ளது." என்றார்.

இலங்கை நீரிழிவு சம்மேளனத்தின் கௌரவ பணிப்பாளரும் செயலாளருமான வைத்தியர். மஹேன் விஜேசூரிய கருத்துத் தெரிவிக்கையில், "நீரிழிவை தவிர்த்தல் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் இணைந்து செயலாற்ற முடிந்துள்ளதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம்.

ஒவ்வொரு குடிமகனின் நலனை மேம்படுத்துவதிலும் அவர்களின் பங்களிப்பில் நாமும் இணைந்துள்ளோம். நீரிழிவு நிலையை குணமாக்க முடியாது. இலங்கை நீரிழிவு சம்மேளனம் மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் ஆகியன இணைந்து தமது வளங்களைப் பயன்படுத்தி, பொது மக்கள் மத்தியில் மேம்படுத்திய அறிவூட்டல், விழிப்பூட்டல் மற்றும் இனங்காணல் செயற்பாடுகளை வினைத்திறனான முறையிலும் நிலைபேறான முறையிலும் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன், நீரிழிவுக்கு முன்னரான நிலையை ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளினூடாக மாத்திரமே மாற்றிக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்." என்றார்.

7 துறைகளில் 70க்கும் அதிகமான நிறுவனங்களைக் கொண்டு, கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது.

துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன், 2023 டிசம்பர் மாத இறுதியில் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 23.7 பில்லியனையும், ஆயுள் நிதியமாக ரூ. 64.1 பில்லியனையும் கொண்டிருந்தது.

இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது.

நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3,800 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.





# படித்ததும் பகர்வதும் 200

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்



## நல்லதை சொல்கிறோம்

### நல்ல எண்ணங்களே நல்ல வாழ்வு தரும்!



ஒருவன் நல்லவனாக ஆவதற்கும், ஒரு குடும்பம் நல்லதாக அமைவதற்கும், ஒரு சமூகம் சீர்பெறுவதற்கும், மக்கள் வாழும் சூழல் வளமானதாக அமைவதற்கும் மக்களின் எண்ணங்கள் நல்லவையாக அமைவது அவசியம். மனிதர்களின் எண்ணங்கள் சீராகும் போதுதான் உலகில் எல்லாமே சீராகின்றன

இவ்வையகத்திலுள்ள எல்லா சமயங்களும், எல்லாவிதமான கொள்கைகளும் நல்லனவற்றையே மானுடருக்கு போதிக்கின்றன என்பதோடு எல்லோரதும் 'எண்ணங்கள் நல்லவையாக அமைய வேண்டும்' என வலியுறுத்துகின்றன. ஒரு தனி மனிதனை எடுத்து நோக்கினால் அவன் நல்லவனாக ஆவதற்கும், அவனது நடவடிக்கைகள் செயற்பாடுகள் நல்லவையாக அமைவதற்கும் அவனது எண்ணங்கள் நல்லவையாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகும்.

நல்ல எண்ணங்களை பல மாடிகளைக் கொண்ட வீடொன்றின் அதியுயர் மேல் மாடியில் இருக்கும் நீர் தொட்டியில் உள்ள தண்ணீருக்கு ஒப்பிடப்பட முடியும். அந்த நீர்த் தொட்டியிலுள்ள தண்ணீர்தான் குழாய்கள் வழியாக அக்கட்டடத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும், வீடுகளிலுள்ள குளியலறைகளுக்கும், சமையலறைகளுக்கும், மற்றும் பொது இடங்களுக்கும் தண்ணீரை வழங்குகின்றன. தொட்டியிலிருக்கும் தண்ணீர் சுத்தமானதாக இருக்கும் போதுதான் அக்கட்டிடத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் வழங்கப்படுகின்ற தண்ணீரும் சுத்தமாக இருக்கும். அதன் மூலம் அதனை பாவிப்போரும் பயனடைய முடியும்.

இவ்வாறுதான் ஒருவரது எண்ணங்கள் சீரானவையாகஇருக்கும் போது மட்டுமே அவரது செயல்கள் அனைத்தும் நல்லவையாகி, அவருக்கும் அவரை சுற்றம் சூழ இருக்கும் அனைவருக்கும் நன்மையளிப்பனவாக அமையும். மாறாக அந்நீர் தாங்கியில் இருக்கும் தண்ணீரில் ஏதேனும் நச்சுப் பொருளோ, அசுத்தமோ கலந்து விட்டால் கெட்ட தண்ணீரே அனைவருக்கும் கிடைக்கும். அத்துடன் அனைவரையுமே அது பாதிப்புக்குள்ளாக்கும் என்பது வெள்ளிடைமலை.

இத்தகைய யதார்த்த நிலைமைகளை சரியாக புரிந்துகொண்ட ஒவ்வொருவரும் தமது எண்ணங்களை நல்லவையாக ஆக்கிக் கொள்ள முன்வர வேண்டும். எண்ணங்கள் சீரானால் எல்லாமே சீராகும். எங்கும் மகிழ்வும், குதூகலமும் நிறைந்தோடும் என்பதை புரிந்து, தெரிந்து, உணர்ந்து நடந்து கொள்வது ஒவ்வொருவர் மீதுமுள்ள தார்மீகக் கடமையாகும்.

நல்ல எண்ணங்களே என்றும் எல்லோருக்கும் நல்வாழ்வு தரும்!

## நெஞ்சோடு நெஞ்சம் 1

### 'படித்ததும் பகர்வதும்' 200

'படித்ததும் பகர்வதும்' 200ஆவது பத்தியில் உங்களை சந்திக்க வாய்ப்பளித்த எல்லாம் வல்ல இறைவனுக்கே எல்லாப் புகழும்.

'சட்டமும் நாமும்', 'நீதியின் நிழலில்', சிந்தனைக்கு ஒரு சம்பவம்' என பல தலைப்புகளிலான பத்திகள் மூலம் முன்னர் வாசகர்களோடு தொடர்பு கொண்டிருந்த எனது தற்போதைய தொடர்பாடலே "படித்ததும் பகர்வதும்".

எனது அன்பு நண்பர் செந்தில் வேலவர், ஒரு சிறிய இடைவேளைக்கு பின்னர் தினகரன் நாளிதழ், தினகரன் வார மஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக மீண்டும் பதவியேற்ற பின் அன்போடு எனக்கு விடுத்த வேண்டுகோளை ஏற்று 2020ஆம் ஆண்டு முதல் இப்பணியை ஆரம்பித்தேன். வாசகர்களின் அமோக வரவேற்பு தொடர்ந்து நான் எழுதுவதற்கு தூண்டுகோலாக இருந்ததுடன், அதிக உற்சாகத்தையும் தந்தது.

கடுமையான வேலைப்பழுவிற்கு மத்தியில், கால, நேரத்தை ஒதுக்குவதற்கு சிரமமாக இருப்பதனால் இதனை 'நிறுத்தி விட வேண்டும்' என்று இடையிடையே முயன்ற போதிலும் "வேண்டாம்! வேண்டாம்!! தொடருங்கள்.." என்று அன்போடு வலியுறுத்திய பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர், மற்றும் 'படித்ததும் பகர்வதும்' வாசகர்களான பல பேராசிரியர்கள், முனைவர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், அன்பர்கள், நண்பர்கள் என அனைத்து தரப்பினரதும் வேண்டுகோள்களுக்கு மதிப்பளித்து தொடர்ந்ததன் விளைவே இந்த 200வது அடைவு என்றால் மிகையல்ல.

"நாம் எழுதும் எழுத்துக்களினால் வாசிக்கும் அனைவரும் ஏதாவது ஒரு வகையில் நன்மையடைய வேண்டும்" என்பதே ஆரம்பம் முதல் இன்று வரை எனது எழுத்தின் நோக்கமாக இருக்கின்றது. 'படித்ததும் பகர்வதும்' நிச்சயம் இந்த எனது நோக்கத்தினை நிறைவு செய்தே வந்திருக்கும் என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

தொடர்ந்து 'படித்ததும் பகர்வதும்' வாசித்து, நேரிலும் தொலைபேசி, வட்ஸ்அப் (Whatsapp), முகநூல் (Facebook), டுவிட்டர் (Twitter), மின்னஞ்சல் (Email) உட்பட ஏனைய ஊடகங்கள் மூலமாகவும் அவ்வப்போது கருத்துக்கள் பரிமாறி இப் பகுதியை தொடர்வதற்கு ஊக்குவிப்பாக திகழ்ந்த வாசகர்கள் ஏராளம். சாதாரண பாமரர்கள் முதல் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், முனைவர்கள், பேராசிரியர்களை மற்றும் எழுத்தாளர்கள், அறிவிப்பாளர்கள், கலைஞர்கள், மார்க்க அறிஞர்கள் உட்பட பல்துறை சார்ந்தோர் அவ்வப்போது, ஆர்வத்தோடு 'படித்ததும் பகர்வதும்' பற்றி என்னோடு கருத்துகள் பரிமாறியமை இப்பணியை, அல்லது இத்தகைய பணிகளைத் தொடர உற்சாகமளிப்பவையாக உள்ளன.

ஒன்று முதல் 200 வரையான 'படித்ததும் பகர்வதும்' பகுதியை மகிழ்வோடு ஏற்றுக் கொண்டு, அதன் வளர்ச்சிக்கு, அது இடைவிடாது தொடர உற்சாகமளித்த அன்பு வாசகர்கள் அனைவருக்கும் என் நெஞ்சத்தின் ஆழத்தில் இருந்து எழுகின்ற நேசம் நிறை நன்றிகள் ஆயிரம் ஆயிரமாய் உரித்தாகட்டும்!

## நெஞ்சோடு நெஞ்சம் 2

**இந்தியா, தமிழ் நாடு, சென்னையில் இயங்கும் இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் பேராசிரியர், முனைவர் மு.இ. அகமது மரைக்காயர் அன்புடன் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தி.**



உலகப் புகழ் பெற்ற சமத்துவப் பொருளதார மேதை கார்ல் மார்க்ஸ் மறைந்தவுடன், அந்தச் செய்தியை அறிவித்த அவரது நண்பர் ஏங்கல்ஸ், கார்ல் மார்க்ஸ் மரணித்து விட்டார் என்றோ, இறந்து விட்டார் என்றோ அறிவிக்கவில்லை. மாறாக "கார்ல் மார்க்ஸ் சிந்திப்பதை நிறுத்திக் கொண்டார்!' என்றுதான் அறிவித்தார்.

ஒரு மனிதன் உயிரோடு இருக்கிறான் என்பதற்கு அத்தாட்சி, அவன் சிந்திக்கக் கூடியவனாக இருக்கிறான் என்பதுதான். அந்த சித்தனையைத் தூண்டுவதில் பெரும்பங்கு எழுத்துக்கு உண்டு. அந்த எழுத்தை வெற்றிக்கரமாக கையாளும் வித்தகர் கலாபூஷணம் ரஷீத் எம். இம்தியாஸ், தினகரன் வாரமஞ்சரியில் தன் கைவண்ணத்தில் பக்கம் விரிக்கும் 'படித்ததும் பகர்வதும்' அதற்கு அத்தாட்சி.

200ஆவது தொடர் என்பதே, வெகுஜன சஞ்சிகையில் பொது வாசகத் தளத்தில் இவரது பகிர்வுகள் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளன என்பதற்கான அங்கீகாரம். வரலாறு, பண்பாடு, வாழ்வியல் என பன்முகத்தன்மை இவரது பக்கத்தில் விரிகிறது. தனது வாசிப்பில் உள்வாங்கிக் கொண்ட அரிய நூல்களின் அறிமுகம், கருத்துச் செறிவு மிக்க வாழ்வியல் சிந்தனைகள், சகாப்பதமாக வாழ்ந்து மறைந்த ஆளுமைகள் குறித்த ஈரப் பதிவுகள், சமகால உலக நடப்புகள், சுவையான நிகழ்வுகள், இலக்கியப் பரிமாற்றங்கள் என பல்வேறு பரிமாணங்களில் இம்தியாஸின் பக்கம் வாரந்தோறும் நம் வாசிப்புக்கு வரும் பல்சுவை விருந்து!

'புலனம்' வழியாக என் வாசிப்புக்கு வரும் 'படித்ததும் பகர்வதும்' பக்கம், நம் தொப்புள் கொடி உறவான இலங்கை சொந்தங்களோடு உரையாடி, உறவாடும் மன நிறைவையும் தருகிறது.

"சில நாள் நூல் பழக்கம் உள்ளவர்களும் புரியும்படி எழுது" என்ற மகாகவி பாரதியின் வேண்டுகோள், இம்தியாஸுக்கு கைகூடி வந்துள்ளது. 'படித்ததும் பகர்வதும்' பத்தியை எல்லோரும் வாசிக்கலாம்; எண்ணங்களை செழுமை படுத்தலாம். தொடரட்டும் அன்பர் ரஷீத் எம். இம்தியாஸின் படித்ததைப் பகரும் பணி.

**பேராசிரியர் மு. அப்துல் சமது, தமிழ்நாடு, இந்தியா**

## நெஞ்சோடு நெஞ்சம் 3

'படித்ததும் பகர்வதும்' 200ஆவது பத்திக்கு பிரபல கவிஞர் 'சந்தக்கவி' கிண்ணியா அமீர் அலியின் வாழ்த்துக் கவிதை.

**அக வாழ்த் தளித்தேன் அலி**



ஆம்! ரஷீத் எம். இம்தி யாஸ்"சேர்!
நும் பக்கத்தை
யாம் ரசித் தோமெம் மகமகிழ.!
நாம் நிசத்தில்
இப் பக்கத் தீவிர வாசகரே! ஆக்க
மெலாஞ்
செப்புங் கருத்துக்கள் தேன்!

"சிவநா யகம் சேர்"தம் 'சிந்தா மணி'யால்
எவரு மெழுத்தி லிமயம்! அவர்தம்
தடத்தில் பதித்தீர் தகைசார் தொகுப்பு! எவ்
விடத்து முமக்கே விருது!

பல்சுவை யம்சங்கள்; பக்கமிது தித்திப்பே!
நல் விதமாய்த் தேர்ந்தாய்ந் தளித்தீரிங் கெல்லோரும்
ஆர்வமாய் வாசித்தே ஆவண மாய்ச் சேர்க்குந்
தேர்வதிக மிக்க திது!

இருநூறை யெட்டிற்றா? என்னகத்தா னந்தம்
தரும் வெண்பாப் பாவாழ்த் துவந்து பெருமிதமே!
சீர் மிகுநம் பத்திரிகை "தி.வா.ம." பொக்கிஷமாய்
சேர்தரும் பக்கஞ் சிறப்பு!

தரணிபுகழ் சான்றோருள் சேர் ஆம்; நம் சட்டத்
தரணி புகழ் வாழ்க! தரமாய் வரணுமிது
நூலாய்..! அகவாழ்த் தளித்தேன் அலி..! நும்
மேலாம் பணிதொடர்க நீடு!

**'சந்தக்கவி' கிண்ணியா அமீர் அலி**

## நொறுக்குத் தீனி

### இது இந்தக் காலம்!!!!



ஒரு பொண்ணும் ஒரு பையனும் காதலிக்கிறார்கள். அவர்கள் காதல் பெண் வீட்டுக்கு தெரிந்ததும், பெண்ணுக்கு வேறு திருமணம் செய்ய ஏற்பாடு நடக்கிறது. இதை அறிந்த பெண் யாருக்கும் தெரியாமல் 'இனி உங்கள் முகத்தில் முழிக்க மாட்டேன்' என கடிதம் எழுதி வைத்து விட்டு பையனோடு ஊரை விட்டு ஓடி விடுகிறாள்.

மறுநாள் பெண் வீட்டாரும் பெண்ணை எங்கெங்கோ தேடி அலுத்துப்போய், இனி அவள் வந்தாலும் ஏற்பதில்லை என முடிவு செய்தனர்.

மூன்று நாள் கழித்து, பையன் இல்லாமல் அந்த பெண் மட்டும் தனியாக வந்து நின்றாள். பெற்றோரும் உறவினர்களும் அவளை வாசலில் நிறுத்தி ஏடாகூடமாகத் திட்டினார்கள்.

"இப்ப எதுக்கு இங்க வந்த? உனக்கு என்ன வேணும்?" என்றார் அப்பா.

"ஊரார் முன்னாடி எங்களை கொன்னுட்டே! இப்ப எங்கடி வந்த?" என்றாள் அம்மா.

"ஏன் மறுபடியும் வந்து தொல்லை பண்றே? நீ செத்துபோய் மூணு நாளாச்சு. போய்த் தொலை?" ஏசினான் அண்ணன்.

பின் எல்லோரும் அவள் என்ன சொல்ல போகிறாள் என்று அங்கே பரபரப்பாக காத்திருக்கின்றனர். எல்லோருக்குமாக அவள் சொன்ன பதிலை கேட்டு அனைவருமே வாயடைத்து நின்றார்கள். அவள் அப்படி என்ன சொன்னாள்?

"அவர் வாங்கி தந்த நோக்கியா போன்ட சின்ன பின் சார்ஜரை மறந்து வைச்சிட்டு போயிட்டேன். அதை மட்டும் எடுத்துட்டு போயிடுறேன்மா."

எவ்வளவு உசத்தியான போன் வாங்கினாலும் மூன்று நாளுக்கு மேல் சார்ஜ் நிற்காதல்லவா?

இது இந்தக் காலம்!!!!

## கொஞ்சம் சிரிங்க!

### சும்மா கிடந்த சங்கு!



ஒரு ஊரில் கண்ணுசாமி என்பவன் இருந்தான். அவன் பல வீடுகளில் பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தி வந்தான். அவனிடம் சங்கு ஒன்று இருந்தது. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அதை ஊதிக் கொண்டிருந்தான். அந்த ஊரை அடுத்து இருந்த மடத்தில் இரவு நேரத்தில் அவன் தூங்குவான்.

நள்ளிரவில் திருடர்கள் சிலர் அந்த மடத்திற்கு வருவது வழக்கம். அவர்களுக்கும், அவனுக்கும் பழக்கம் ஏற்பட்டது. 'இவர்கள் ஒருநாள் திருடுகிறார்கள். பல நாள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நானோ நாள்தோறும் பிச்சை எடுத்து அலைகிறேன். மீந்து போன பழைய உணவே கிடைக்கிறது. உப்புச் சப்பில்லாத அதைச் சாப்பிட்டு சாப்பிட்டுச் சலித்து விட்டது. இவர்களுடன் சேர்ந்து திருட வேண்டும். வளமாக வாழ வேண்டும்' என்று நினைத்தான்.

அவன் தன் எண்ணத்தை அவர்களிடம் சொன்னான். அதற்குத் திருடர் தலைவன், "திருடுவது இலேசு அல்ல. அதற்குத் திறமை வேண்டும். நீ எங்களுடன் சேர்ந்து திருட வேண்டாம். உனக்கு என்ன வேண்டும் கேள். நாங்கள் தருகிறோம்," என்றான்.

"எதுவும் எனக்கு இனாமாக வேண்டாம். நீங்கள் திருடச் செல்லும் போது என்னையும் கூட்டிச் செல்லுங்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதை மட்டுமே செய்கிறேன். நானாக எதையும் செய்ய மாட்டேன்," என்றான் அவன்.

"இன்றிரவு பண்ணையார் மந்தையில் ஆடுகளைத் திருடப் போகிறோம். நீயும் வா," என்றான் திருடர் தலைவன். இரவு நேரம், திருடுவதற்கு அவர்கள் புறப்பட்டனர். இடுப்பில் சங்கை கட்டிக் கொண்டு அவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். எங்கும் இருட்டாக இருந்தது. அவர்கள் அனைவரும் பண்ணையாரின் ஆட்டு மந்தைக்குள் நுழைந்தனர்.

திருடர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆட்டின் கழுத்தைப் பிடித்து தூக்கினர்.

அப்படித் தூக்கினால் ஆடு கத்தாது. திருடிப் பழக்கம் இல்லாத அவன் ஆட்டின் காலைப் பிடித்துத் தூக்கினான். அதனால் அந்த ஆடு கத்தியது. ஆட்டின் கத்தலைக் கேட்ட திருடர் தலைவன் அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கு. அது கத்தாது என்று சொல்ல நினைத்தான்.

கழுத்தை "சங்கு' என்று சொல்வது வழக்கம். அதனால், "சங்கைப் பிடி! சங்கைப் பிடி," என்று மெல்லியதாக குரல் கொடுத்தான்.

இதைக் கேட்ட பிச்சைக்காரன், 'சங்கை ஊதும்படித்தான் சொல்கிறான் திருடர் தலைவன். சங்கு ஊதும் திறமையை அவனுக்குக் காட்ட வேண்டும்.' என்று நினைத்தான். ஆட்டைக் கீழே விட்டு விட்டு இடுப்பில் இருந்த சங்கை எடுத்தான். வலிமையாக சங்கை ஊதினான். சங்கோசை எங்கும் கேட்டது. அங்கே காவல் இருந்தவர்கள் விழித்து கொண்டனர். பிறகு என்ன? பிச்சைக்காரனை கூட்டுச் சேர்த்த அந்தத் திருடர்கள் அனைவரும் சிறைக்குச் சென்றனர்.

"சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்ற பழமொழி இதிலிருந்து வந்ததுதானோ?

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**

---




ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# துர்கா சிக்கிக் கொண்டதோ மர்ம மாளிகை இதை நினைத்தால் வருமோ அவளுக்கு புன்னகை

பதற்றத்துடன்,
மீண்டும் எழுந்து அமர்ந்து கொண்டாள் துர்கா.
டக்... டக்... டக்...!
மீண்டும் கதவில் விழுந்தது தட்டு
இதற்கு மேலும் அமைதியாக இருந்தால்,
எல்லாமே கெட்டுவிடும் என்பதைப் புரிந்து கொண்ட துர்கா,
தூங்கி எழுந்தவளைப் போல் பாவனை செய்து கொண்டு,
மெல்ல நடந்து வந்து,
கதவைத் திறந்து விட்டாள்.
வாசலில்,
பேபி நோனா!
'உனக்கு அந்த சத்தம் கேட்டதா மகளே?' அவளைக் கூர்ந்து பார்த்தபடியே கேட்டாள் பேபி நோனா.
அடுத்து,
தூக்கு விளக்கொன்றையும் ஏந்தியபடியே,
அறைக்குள் நுழைந்தாள் பேபி நோனா.
தூங்கி எழுந்தவளைப் போல்,
கொட்டாவி விட்டபடியே,
'இல்லையே... எனக்கு எந்த சத்தமும் கேட்கவில்லை!' என்றாள்
ஐயத்துடன் அவளைப் பார்த்துவிட்டு,
அறையில் இருந்த வெளியே வந்த பேபி நோனா,
சமையல் அறைப் பக்கம் போகாமல் மற்றப் பக்கமாக சென்று ஆராய்ந்து பார்த்துவிட்டு,
மீண்டும் தனது அறைக்குள் சென்று,
கதவைச் சாத்திக் கொண்டாள்.
அமைதியாகவே அறைக்குள் அமர்ந்திருந்தாள் துர்கா.
ஓடி மறைந்தது ஒரு மணித்தியாலம்
இப்போது,
பூனையைப் போல் மெல்ல வெளியே வந்தாள் துர்கா.
அப்போது,
பேபி நோனா விடும் குறட்டைச் சத்தம்,
அவள் காதுக்குள் ரீங்காரமிட்டது.
கை விளக்குடன்,
முன்பு சென்ற அறைக்குள் நுழைந்தாள்.
உடைந்து விழுந்த சுவற்றுக்கு அப்பால்,
மதில் சுவர் தெரியும் என்றுதான் அவள் நினைத்திருந்தாள்!
ஆனால்
அங்கேயும் அவளுக்கு அதிர்ஷ்டம் இல்லை!
சுற்றிலும் கல்லினால் கட்டப்பட்டிருந்த ஓர் அறைதான் அங்கும் இருந்தது.
அதேநேரம்,
அந்த அறைக்குள்ளும் ஒரு சிறிய படிக்கட்டிருந்தது!
அதில் இறங்கி நடந்தாள்,
அங்கே,
பெரிய ஓட்டை ஒன்றிருந்தது!
அந்த ஓட்டைக்குள் தலையை விட்டுப் பார்த்தாள்!
உள்ளே,
இருட்டு இடம்பிடித்திருந்தது!
தலையை வெளியே எடுத்தக் கொண்டு,
மீண்டும் போட்டுப் பார்த்தாள்.
இமைகளை மூடி மூடித் திறந்தாள்.
இப்போது,
விழிகள் இருட்டுக்கு பழக்கப்பட்டுவிட்டன.
ஒரு மூலையில் வெள்ளையாக ஏதோ இருப்பது தெரிந்தது,
தூக்கி விளக்கின் ஒளியைக் கொஞ்சம் கூட்டி,
அந்தப் பக்கம் பார்த்தாள்,
ஆ!
அவளுக்கு அலற வேண்டும் போல் இருந்தது!
மனித மண்டை ஓடொன்று!
அந்த மண்டை ஓடு!
அடுத்து,
படாரென்று அவள் பின்னால் பாய்ந்தாள்
அச்ச மிகுதியால்
அவள் மேனி ஆடிப்போனது!
ஐஸ்கட்டியொன்று,
இரத்த நாளங்களுக்குள் ஓடுவதைப் போன்ற ஓர் உணர்வு ஏற்பட்டு,
வாய் விட்டுக் கத்த வேண்டும் போல் தோன்றியது!
ஆனாலும்,
மிகவும் சிரமப்பட்டு,
தனது வாயைப் பொத்திக் கொண்டாள்.
இப்போது,
அவளுக்கு மயக்கம் வருவதைப் போலிருந்தது!
அதற்குள் அறைக்குள் சென்றுவிட வேண்டுமென்று முடிவு செய்த அவள்,
அங்கிருந்து ஓடினாள்!
அதேநேரம்,
அவளை யாரோ பின் தொடர்ந்து வருவதைப் போன்ற ஓர் உணர்வு அவளுக்கு ஏற்பட்டது!
ஓடியபடியே,
பின்னால் திரும்பிப் பார்த்தாள்.
அப்போது,
ஏதோ ஓர் உருவம் இருட்டுக்குள் மறைவதைப் போல் தோன்றியது!
அதைப் பார்த்ததும்,
இதுவரையில்,
அவளுக்குள் இருந்த தைரியம்,
காற்றில் கலந்து விட்டது!
இதனால்,
அச்சம் என்ற பூதம்,
அவளை ஆட்டிப் படைத்தது!
அடுத்து,
விரைந்து ஓடிவந்த அவள்
அறைவாசலிலேயே மயங்கி விழுந்து விட்டாள்!
மறுநாள் அவள் கண் விழித்தபோது,
தனது அறையின் கட்டிலில் இருந்தாள்.
அவள் சுற்றும் முற்றும் பார்த்தபோது,
கையில் ஒரு வெள்ளைப் புடவையுடன்,
அறைக்குள் நுழைந்தாள் பேபிநோனா!
வந்தவள்,
பட்டாசைக் கொளுத்திப் போட்டதைப் போல்,
படபடவென வெடிக்க ஆரம்பித்தாள்!
'உங்களுடைய பைத்தியக்காரத்தனமான காதல் விளையாட்டுக்கு எனது உடைகளை பலி கொடுக்க வேண்டும். எனது இந்த புதிய சேலையை நேற்று நீ கிழித்துப் போட்டாய் அல்லவா? நேற்று இரவுதான் அதைக் கழுவி நடு ஹாலில் காயப் போட்டேன். அதை ஏன் நீ கிழித்துப் போட்டாய்? இங்கே பார் இந்த சேலையின் முந்தானை எப்படி கிழிந்து போயிருக்கிறதென்று... இதெல்லாம் இடி விழுகின்ற அநியாயமல்லவா? அதுவுமில்லாமல் தூங்கிய பிறகு நீ ஏன் கீழே இறங்கி வந்தாய்? இரவு முழுவதும் சுற்றித் திரிந்து விட்டு இப்போது ஒன்றும் தெரியாதவளைப் போல் தூங்கிக் கொண்டிருக்கிறாய்? இதற்கெல்லாமாக சேர்த்து உனக்கு எப்படி பாடம் கற்பிக்கிறேன் என்று பார்! உன்னைப் போன்ற பைத்தியங்களை எப்படி அடக்குவது என்பது எனக்குத் தெரியும். ஏற்கனவே நான் அடக்கியும் இருக்கிறேன்! ம்... வரட்டும் உன் புருஷன்!'
அவள் சொன்னவற்றையெல்லாம் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த துர்கா.
'ஐயையோ... நான் அந்த சாரியைக் கிழிக்கவே இல்லை...
அதை நான் நிச்சயமாகவே சொல்வேன்!' என்று படபடப்புடன் சொன்னாள்!
உண்மையில் என்ன நடந்திருக்கிறது என்பதை அவளாலும் புரிந்து கொள்ள முடியவில்லை!
சாரி எப்படி கிழிந்தது
இதில் இன்னுமொரு விஷயம் என்னவென்றால்,
அந்த சேலையில் இருந்து கிழிக்கப்பட்ட ஒரு துண்டு,
அவள் தலையணையின் மீதும் இருந்தது!
அதையும் அப்போதுதான் அவள் கவனித்தாள்!
'ஏய் இதோபார்... இந்த சாரியை நீ கிழிக்கவில்லையென்று சொல்லுகிறாய்... அப்போ இது என்ன... இது இன்னும் ஈரமாகவே இருக்கிறது!' என்று சொல்லியபடியே,
அந்த சாரித்துண்டை எடுத்து,
அவள் முகத்தில் வீசி எறிந்தாள்!
'உனக்கு பைத்தியமில்லையென்று நீ சொல்லுகிறாய்... ஆனால் மோசமான பைத்தியமொன்று உனக்கிருக்கிறது!' என்று சொல்லியபடியே அறையை விட்டு வெளியே சென்றாள்.
அவள் சொன்னதை எல்லாம் கேட்டு அச்சமிகுதியினால் ஆடிப் போயிருந்த துர்கா,
எதையுமே நம்பமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்,
நேற்றிரவு நடந்த சம்பவங்களினால்,
தான் மயங்கி விழுந்ததும்,
விழுந்த இடமும்,
அவளுக்கு நன்றாகவே நினைவிருந்தது!
ஆனால், அங்கிருந்து மீண்டும் இந்த அறைக்குள் தன்னைக் கொண்டுவந்து போட்டது யார்?
போபி நோனாவின் பேச்சில் இருந்து அவள் அதைச் செய்யவில்லை என்பது புரிகிறது.
அதேநேரம்,
சேலை கிழிக்கப்பட்டதும்,



அது கிழிக்கப்பட்டிருந்த விதமும் உண்மைதான்!
ஆனால்,
தான் அதை செய்யவில்லை என்பதும் அவளுக்கு நன்றாகவே தெரியும்!
அப்படியானால்,
அந்த சேலையைக் கிழித்தது யார்?
அதன் ஒரு துண்டைக் கொண்டு வந்து எனது தலையணையின் மீது வைத்தது யார்?
இதற்கான பதில்களை அவளால் கண்டு பிடிக்க முடியாமல் போனதால்,
பனி பெய்யும் அந்த காலை வேளையிலும்,
அவள் மேனி வியர்த்துக் கொட்டியது,
இந்த வீட்டுக்குள் ஆவிகளின் நடமாட்டம் இருக்கிறதா?அந்த வீட்டில் இருப்பதற்கே அவருக்கு இப்போது அச்சமாக இருந்தது!
மர்மம் நிறைந்த மாளிகையாகவே அது இப்போது அவளுக்குத் தோன்றியது!
இதுதான் இப்படியென்றால்,
அவளுடைய அச்சத்தையும்
பேபிநோனாவின் ஆத்திரத்தையும் அதிகமாக்கும் மற்றுமொரு சம்பவம் அன்று பகல் நடந்தது!
(தொடரும்...)

# தொழிலாளர்களின் போராட்டத்தின் வெற்றியே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பலம் !

## 86ஆவது ஆண்டில் பாதம் பதித்து வீறுநடை

200 வருட கால வரலாற்றை கொண்ட இந்திய வம்சாவளி தமிழர்கள் தனியொரு தேசிய இனமாக உள்வாங்கப்படக்கூடிய சகல தகுதிகளையும் பெற்றுள்ளனர். 85 வருடங்களாக இ.தொ.கா சமூகத்திற்காக அர்ப்பணித்து செயற்பட்டு வந்துள்ளது. மலையக சமூகம் அனுபவிக்கும் சகல உரிமைகளும், சலுகைகளும் இ.தொ.காவின் சாணக்கியத்தால் பெறப்பட்டவையாகும்.

இத்தருணத்தில் இந்த வரலாற்றுப் பதிவில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் 85 ஆண்டுகளை நிறைவு செய்து எதிர்வரும் ஜுலை 25ஆம் திகதியன்று 86ஆவது அகவையில் அடியெடுத்து வைப்பதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

அதிகார பலத்தாலும், பண வலிமையினாலும் ஒரு தலைவனாக உருவாவதைவிட சமுதாய மக்களின் இதய உணர்வுகளை இனங்கண்டு அவற்றின் தேவைகளை நிறைவேற்றி சமுதாய நெஞ்சங்களை கொள்ளை கொள்வதன் மூலம் ஒரு தலைவனாக திகழ்வதே சிறப்புடையதாகும்.

இந்த வகையில் இலங்கை இந்திய காங்கிரஸ் பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸ்தாபனங்களின் தன்னிகரில்லாத தலைவர் என்ற முறையில் தலைவர் தொண்டமான் தலைமை தாங்கி நடத்திய தொழிலாளர் போராட்டங்கள் மிகப்பல. வெற்றியீட்டிய போராட்டங்களும் மிகப்பலவாகும். ஒரு சிலவற்றில் வெற்றிகாண முடியாவிட்டாலும், தொழிற்சங்க வரலாற்றில் கொள்கை ரீதியான சாதனைகளுக்கு அத்தகைய போராட்டங்கள் மூலம் வழிவகுத்திருக்கிறார்.

85 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு தொழிற்சங்கத்தை ஸ்தாபித்துக் கட்டி எழுப்புவது என்றால் இலகுவான காரியமல்ல. இந்த நாட்டை ஆண்ட வெள்ளைக்காரர்களின் இனபந்துக்களாக ஆங்கிலேயர்களே தோட்டங்களின் சொந்தக்காரர்களாக இருந்தார்கள். அவர்கள் தங்கள் தோட்டங்களில் தொழிற்சங்கம் முளைப்பதை விரும்பவில்லை. முளையிலேயே நசுக்கிவிட முனைந்தார்கள். தொழிற்சங்கங்களை பாதுகாக்க சட்டங்கள் இருக்கவில்லை.

சங்கங்களின் வளர்ச்சியை தடுப்பதற்கு சங்க அங்கத்தவர்களை பழிவாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொழிற்சங்கங்களை அழிப்பதற்கு பணமும், அதிகாரமும், வெறித்தனமும், கட்டுமீறி பயன்படுத்தப்பட்ட காலமே அது. தோட்டத்தொழிலாளர், தொழிற்சங்கம் என்றால் இழிவாக நினைத்த காலமும் அது.

ஒரு தொழிற்சங்கம் சற்று தலை தூக்கினால் அதை உடைத்து சீர்குலைத்து விட மாற்றுத்தொழிற்சங்கங்கள் போட்டியுடன் செயல்பட்டன. முதலாளிகளுக்கு துணைபோகும் சங்கங்களுக்கும், தொழிலாளியை காட்டிக் கொடுக்கும் நயவஞ்சகர்களுக்கும் குறைவிருக்கவில்லை. இப்படியான பின்னணியில்தான் தலைவர் தொண்டமான் இலங்கை இந்திய காங்கிரஸின் தலைமையை ஏற்று இந்த நாட்டில் தோட்டத்தொழிலாளரை ஒரு மாபெரும் சக்தியாகத் திரட்டி இலங்கை தொழிலாளர் காங்கிரஸை உருவாக்கினார், வளர்த்தெடுத்தார், வெற்றியும் கண்டார்.

தோட்ட முதலாளிகளின் இப்படியான செயல்களை எதிர்த்து நிறுத்துவதற்கு தொழிற்சங்கங்களுக்கு இருந்த ஒரே சக்தி போராட்டம்தான். போராட்டம் என்றால் அப்போது அது வேலைநிறுத்தப் போராட்டமாகவே இருந்தது.

**தொழிற்சங்க போராட்டங்கள் மூன்று வகைப்பட்டன.**

**தொழிலாளர்களின் தொழில் உரிமைகளைப் பெறுவதற்கு நடைபெறும் போராட்டம்.**

**தொழிற்சங்க தத்துவத்தின்படி ஒரு கொள்கை நிலைநாட்டுவதற்காக நடைபெறும் போராட்டம்.**

**உரிமையையும், கொள்கையையும், ஏக காலத்தில் பெறுவதற்காகவும், நிலைநாட்டுவதற்காகவும் நடைபெறும் போராட்டம்.**

இதன் அடிப்படையில் இன்று உயர்ந்து நிற்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை பின்னோக்கிப் பார்த்தால் பல்வேறு சம்பவங்களையும் நினைவு கூரலாம்.

1946ஆம் ஆண்டு நடைபெற்ற உருளவள்ளி தோட்ட போராட்டத்துடன்தான் தலைவர் தொண்டமானின் போராட்ட வரலாறு ஆரம்பித்தது. அவற்றுள் முல்லோயா, கந்தஹேன, ஹைபோரஸ்ட், வனராஜா, கலேபொக்க, சென்ஜேம்ஸ், மொன்றிகிறிஸ்டோ, கடியன்லேன, சென். கிளேயர்ஸ் போன்ற போராட்டங்களை குறிப்பிடலாம்.




இவ்வாறான போராட்டங்களின் நிமித்தம் ஆண், பெண் இருபாலாருக்கும் 1984ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் சமசம்பளம் பெறக்கூடியதாக இருந்தமை ஒரு வரலாற்று சாதனையாகும்.

இதனையும் தாண்டி 1985ஆம் ஆண்டு மாபெரும் பிரார்த்தனை இயக்கத்தை ஆரம்பித்து நாடற்றவர்கள் என்று கருதப்பட்ட இலங்கைவாழ் இந்தியர்கள் அனைவருக்கும் குடியுரிமை பெற்றுக் கொடுத்ததையும் நினைவூட்டுகின்றோம்.

**இ.தொ.கா வின் பலத்திற்கான காரணம்**

இ.தொ.காவின் அங்கத்தவர்களில் பெரும்பான்மையானோர் தோட்டத் தொழிலாளர்களாக இருந்த போதிலும், பல ஆயிரக்கணக்கான வர்த்தகத்துறை ஊழியர்கள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி மத்திய ஆட்சி தொழிலாளர்களும் அங்கம் வகிக்கிறார்கள். இலங்கை தொழிலாளர்களின் பலம் அதன் அங்கத்தவர்கள் தொகை, அவர்கள் தோட்டத்துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மை, நிர்வாக அமைப்பு, கட்டுப்பாடு ஆகிய காரணிகளில் தங்கியுள்ளது. எட்டு தசாப்தங்களாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இலங்கையில் மட்டுமல்ல தென் ஆசியாவிலேயே மிகப் பெரிய தொழிற்சங்கமாக விளங்கி வருகின்றது. அதன் உறுப்பினர் தொகை காலத்துக்கு காலம் வேறுபடுகின்ற போதிலும் என்றுமே பல லட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. இதில் ஆயிரக்கணக்கான சிங்களத் தொழிலாளர்களும்; அடங்குவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் உறுப்பினர்கள் தோட்டத்துறையின் எல்லாப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கின்றனர். அத்துடன் வாலிப, மாதர் பகுதிகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றன. கல்வி, தொழிற்பயிற்சி கலை, கலாசாரம், இலக்கியம், விளையாட்டுத்துறை, சமூக சீர்திருத்தம் ஆகிய தொழிலாளரின் வாழ்க்கையில் எல்லா அம்சங்களையும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நடவடிக்கைகளும், செயற்பாடுகளும் பிணைந்து நிற்கின்றன.

சமீபகாலமாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிங்கள தோட்டத் தொழிலாளர்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதோடு தோட்டத்துறை சாராத தொழிலாளர்களையும் அரவணைத்துள்ளது. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் அமைப்பு மிகவும் இறுக்கமானது. தோட்ட மாவட்ட, மாநில, தேசிய மட்டங்களாக வகுக்கப்பட்டு இறுக்கமாக நிர்வாக, நிதி விடயங்களில் பிணைக்கப்பட்டுள்ளன.

மலையக அரசியலின் இன்றைய மலர்வு இ.தொ.கா பாசறை தந்திருக்கும் பயிற்சியின் புலர்வு. மலையக அரசியல் கட்சிகளின் பின்புலம் எல்லாமே இ.தொ.கா. சமூகத்திற்கு வழங்கிய கொடைகள்.

அமரர் தொண்டமான் 1977ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தை நன்கு பயன்படுத்தி அமைச்சரவையில் ஓர் அமைச்சராகவும் விளங்கினார். தமது மக்களின் ஒற்றுமையை பயன்படுத்தி அதையே எதிரியை மடக்கும் ஆயுதமாகவும் பயன்படுத்தி, ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தை மூலம் அஹிம்சை வழியில் பல்வேறு போராட்டங்களுடன் பிரார்த்தனை இயக்கத்தினூடாக 1985ஆம் ஆண்டு பிரஜாவுரிமைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இதைத் தொடர்ந்து வாக்குரிமையும், தேசிய அந்தஸ்தும் கிடைத்தன. இது அமரர் தொண்டமான் ஆற்றிய சேவைகளில் மிக உச்சமானது எனலாம்.

இது இ.தொ.காவின் 86ஆவது அகவை. நாட்டிற்கு தந்திருக்கும் நல்ல செய்தி இலட்சிய பயணம் இனிதாக தொடர நாமும் வாழ்த்துகின்றோம், பிரார்த்திக்கின்றோம்.

**தேவதாஸ் சவரிமுத்து**
**இ.தொ.க ஊடக பிரசார செயலாளர்**

# மலையகம்: இங்கிருந்து எங்கே? சில குறிப்புகள்




கலை ஒளி முத்தையா பிள்ளை அறக்கட்டளை வெளியீடாக மலர்ந்திருக்கும் பீ.மரியதாஸின் 'மலையகம்: இங்கிருந்து எங்கே?' என்ற நூல் மலையகத் தமிழரின் சமகால வாழ்வியலை வரலாற்றுப் பின்புலத்தில் நிறுத்தி அலசும் ஆவணமாகச் சிறப்புப் பெறுகிறது. தேயிலையை வளர்த்துத் தேசத்தை உயர்த்தியோர், தங்களின் 200 ஆண்டு கால வரலாற்றில் ஒதுக்கப்பட்டோராக நடத்தப்பட்ட அவலத்தை, வேதனைதரும் வேதன முறையை, சுதந்திர இலங்கையில் மலையகத் தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, குந்துவதற்குக் கையகலக் காணி இல்லாத கொடுமையை இந்த நூலில் பீ.மரியதாஸ் நுணுக்கமாகப் பேசுகிறார். இடதுசாரி இயக்கமும் மலையகமும், மலையகத் தேசியம் பற்றிய அவரின் கட்டுரைகள் அவரது அனுபவப் பின்னணியிலிருந்தும் மார்க்சிய அணுகுமுறையிலிருந்தும் எழுந்தவையாகும். இந்த நூலின் கட்டுரைகள் அனைத்திலும் அவரது பரந்த வாசிப்பும், நுணுகிய பார்வையும், சமகால அநுபவத்துடனான கிரகிப்பும் துலாம்பரமாகத் தெரிகிறது. வரலாற்று ஆவணங்கள், ஆராய்ச்சி நூல்கள், களஆய்வு முடிவுகள், அரசாங்க அறிக்கைகள், அனைத்துலக நாடுகளின், அமைப்புகளின் ஆய்வறிக்கைகள் என்று தேடி வாசித்து, சான்றுகளின் துணையுடன் கட்டுரைகளை வரையும் பாங்கு பாராட்டிற்குரியது.

மலையக சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் மரியதாஸின் பார்வை குவிந்திருக்கிறது. ஒன்றோடு ஒன்றை இணைத்தும் பிரித்தும் தொகுத்தும் அசலான எழுத்தை அவர் தந்திருக்கிறார். அனைத்தையும் வரலாற்றுப் பின்புலத்தில் அணுகும் அவரின் ஆய்வு நோக்கு அவரது கட்டுரைகளுக்கு ஆழத்தைச் சேர்க்கிறது.

இருநூற்றாண்டுகால மலையக மக்களின் வாழ்வு அவரது சிந்தனைத் தளத்தில் எதிரொலித்திருக்கிறது. தனது சரித்திரகதியின் இடத்தை மரியதாஸ் உணர்கிறார். நடைமுறை அரசியலையும் மலையகத்தின் புதிய அரசியல் தேவைகளையும் எழுச்சிகளையும் தனது மார்க்ஸிய தரிசனத்தில் பரிசீலித்து மரியதாஸ் தந்திருக்கும் இந்த நூல், நமக்குக் கிடைத்திருக்கும் சிறந்த அரசியல், சமூகக் கையேடு.

பல்கலைக்கழகக் காலத்திலேயே அவர் எழுத ஆரம்பித்து விட்டாரெனினும், ஆசிரியப்பணி அவரது நேரத்தை விழுங்கிய நிலையில், அவரின் எழுத்துப்பணி தொடரவில்லை. ஆயினும், அண்மைக்காலத்தில் அவரது எழுத்தாக்கம் மிகுந்த உற்சாகத்துடன் தொடர்வது மகிழ்ச்சி தருகிறது. மலையக இலக்கியத்திற்கு அவரது மீள்வரவு புத்துணர்ச்சி தருவது. செழுமையான மார்க்சிய ஞானம் கொண்ட மரியதாஸின் எழுத்துகள் மலையக எழுத்தில் தனிமுத்திரை பதிப்பவை. தன்னை முன்னிலைப்படுத்தாத மாண்பு அவருடையது. தொடர்ந்த, அயராத, ஆழ்ந்த அவரது வாசிப்பு அவரின் எழுத்திற்குக் கனதி சேர்க்கிறது.

மலையகம் அவரது சுவாசம். அந்த மக்களின் வாழ்வும் வளமும் அவரது ரத்த நாளத்தோடு உறைந்தது. அந்த மண்ணின் சோக ராகத்தை அவர் நெஞ்சில் சுமந்து திரிபவர். மலைமுகடுகளில் நம்மவர் படும் அவலம் அவர் நெஞ்சக்கணப்பறையில் என்றும் கனன்று கொண்டிருப்பது. முதலாளித்துவம் எங்கள் ஈரலைப் பிடுங்கி வைத்தாலும் திருப்தி கொள்வதில்லை என்பதை அவர் கண்கூடாகக் கண்டவர். முதலாளித்துவ சுரண்டலும் இனவன்முறையும் நம் சமூகத்தைச் சூறையாடிவருவதை உணர்பவர். இந்த அநியாயத்தை எதிர்க்கும் சின்ன முனகலையும் அவரால் கேட்க முடிகிறது. அற்பஜீவிகளின் சந்தை இரைச்சலிலிருந்து வெகுதொலைவில் நிற்பவர். மரியதாஸ் வாசிப்பில் மட்டுமே கருத்தூன்றி நின்ற காலத்தில், 'நீங்கள் எழுதவேண்டும்' என்று அவருக்கு உற்சாகம் ஊட்டி, இக்கட்டுரைகளைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து, அவற்றைத் தொகுத்து நூலாக்கும் பணியில் முழுமூச்சுடன் உழைத்த எச்.எச்.விக்ரமசிங்கவிற்கு நன்றி கூறவேண்டும். 'இங்கிருந்து எங்கே?' என்று மரியதாஸ் எழுப்பும் கேள்வி நம் சமூகத்தின் கூட்டுக்குரல். நிகழ்கால அவலத்திலிருந்து நம் சமூகம் எழுந்து நிமிர்ந்து, ஒளியை நோக்கி நகரும் எழுச்சியின் எக்காளம் அது.

**மு.நித்தியானந்தன்**

**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**

**கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிகள் 2023/2024**

செயற்பாட்டு தேர்வு பரீட்சை (PRACTICAL APTITUDE TEST)

**கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம்.**
**கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல்**

**மொழிமூலம் : ஆங்கிலம்**

மேலே குறிப்பிடப்பட்ட பட்டப்படிப்பை கற்க விரும்பும் மாணவர்களை தெரிவு செய்வதற்கான தகுதிகாண் பரீட்சை விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

உள்நுழைவு தேவைப்பாடுகள், விண்ணப்ப செயற்பாடுகள், தேவைப்படும் ஆவணங்கள், செயன்முறைப் பரீட்சை மற்றும் ஏனைய விபரங்களுக்காக கீழ்க்காணும் இணையதளத்தை தயவு செய்து பார்வையிடுங்கள் (www.sab.ac.lk)

உடற் கல்வியியல் கௌரவ பட்டம் (B.Sc. Honours) அல்லது விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவ கௌரவ (B.Sc. Honours) பட்டத்திற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் தகுதிகாண் பரீட்சைக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

இரண்டு பட்டப்படிப்புகளுக்கும் ஒரு விண்ணப்பதாரி விண்ணப்பிக்க முடியும். இவ் வகை விண்ணப்பதாரிகள் ஒரு நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பத்தை மாத்திரம் பூர்த்தி செய்து சம்பந்தப்பட்ட ஆவணங்களின் வருடல்பிரதிகளுடன் (Scan copies) அனுப்புதல் வேண்டும்.

தரப்பட்டுள்ள link மூலம் நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பத்தை விண்ணப்பதாரி சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் உண்மை வருடல்பிரதிகளான (original scanned copies) உயர்தர கல்விச் சான்றிதழ்கள், மருத்துவ சான்றிதழ், வங்கி செலுத்தல் உறுதிச் சீட்டு (Paying voucher) மற்றும் வங்கி செலுத்தல் பற்றுச்சீட்டுகளை (paying slip, பச்சை நிற பற்றுச் சீட்டு) இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி செலுத்தப்பட வேண்டிய பரீட்சைக் கட்டணம் பின்வருமாறு

| பாடநெறி | பணம் |
|---|---|
| கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம். | ரூ.1650.00 |
| கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல் | |
| இரண்டிற்கும் : கௌரவப் பட்டம் (B.Sc. Honours) விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம், மற்றும் கௌரவப் பட்டம் (B.Sc. Honours) உடற் கல்வியியல் | |

நிகழ்நிலை (ஒன்லைன்) விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2024 ஆடி 26 ஆகும்.

தகுதிகாண் பரீட்சைக்கான நேர அட்டவணை பின்வருமாறு

விண்ணப்பதாரர் இம்முறை எழுத்துப் பரீட்சை எழுதத் தேவையில்லை

| செயன்முறைப் பரீட்சை (இரண்டு பாடநெறிக்கும்) | |
|---|---|
| திகதி | நேரம் |
| 08.10.2024 | மு.ப. 7.00 - பி.ப. 6.00 |

விண்ணப்பதாரர் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை செயற்பாட்டு தேர்வு பரீட்சைக்கு தோற்றும் போது கொண்டு வருதல் வேண்டும். (உயர்தர கல்விச் சான்றிதழ்கள், தேசிய அடயாள அட்டை, மருத்துவ சான்றிதழ், வங்கி செலுத்தல் உறுதிச் சீட்டு (Paying voucher) மற்றும் வங்கி செலுத்தல் பற்றுச்சீட்டுகளை (paying slip, பச்சை நிற பற்றுச் சீட்டு) மற்றும் கடந்த ஐந்து வருடத்திற்குள் காணப்படும் (2019-2024) அதிக பட்ச விளையாட்டு சாதனைச் சான்றிதழ்கள்)

**குறிப்பு:** 2024 ஆடி 15ம் திகதி முதல் இங்கே குறிப்பிட்டுள்ள இணையதள முகவரியில் விண்ணப்பங்கள் கிடைக்கும். (www.sab.ac.lk)

**பதிவாளர்,**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிஹுல்ஓய.**
**Email : aptsspe@appse.sab.ac.lk**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**சிசுசெரிய மாணவர் பேருந்து சேவைக்கான கோரல்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கு பாதுகாப்பாக பாடசாலைக்கு சென்று வருவதற்கான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட பேருந்து கட்டணத்தில் பாதியை மட்டும் செலுத்தி பயணிக்கக்கூடிய வசதியினை வழங்கக்கூடிய பேருந்து சேவையாக "சிசுசெரிய பேருந்து சேவை" தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழங்கப்படும்.

- இந்த "சிசுசெரிய" மாணவர் பேருந்துச் சேவையானது உங்களுக்கோ அல்லது உங்கள் பாடசாலைக்கோ தேவைப்பட்டால், அந்தச் சேவையை ஆரம்பிக்கும் இடம் மற்றும் பயணிக்கும் பாதையில் அமைந்துள்ள பாடசாலையின் அதிபரின் பரிந்துரையுடன் பின்வரும் முகவரியில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்து இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள்
உதவி பணிப்பாளர் (திட்டமிடல்) : 0112-553145
சிசு செரிய பிரிவின் தலைவர் - 0112-589344

தலைவர்
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு,
இல-241, பார்க் வீதி, கொழும்பு 05.
பெக்ஸ் : 0112-503725
மின்னஞ்சல் : chairman@ntc.gov.lk

## வேதாந்தி சிறுகதைகள்

# உள்மனத் தேடலாக அமைந்த படைப்புகள்

**"வேதாந்தி சிறுகதைகள்" என்ற நூல் 07 சிறுகதைகளோடும் 02 சிறுகதைகள் தொடர்பான கட்டுரைகளோடும் 62 பக்கங்களில், தடித்த முகப்பட்டையோடு அண்மையில் (ஜூன் 2024) வெளியிடப்பட்டிருக்கின்றது.**



ஈழத்து நவீன இலக்கியப்பரப்பில் அறுபதுகளில் எழுதத் தொடங்கிக் கோலோச்சிய படைப்பாளர்களில் மிக முக்கியமானவராகப் பார்க்கப்படுபவர் எம்.எச்.சேகு இஸ்ஸத்தீன். "வேதாந்தி" என்ற புனைபெயரில் அவர் எழுதிய படைப்புக்கள் காத்திரமான இலக்கிய வாசகர்களால் உன்னிப்பாகப் பார்க்கப்பட்டன.

அவரின் மொழிநடை, சொல்லும் பாங்கு, சொற்கள் என்பன அவரை ஏனைய எழுத்தாளர்களில் இருந்து வேறுபடுத்துவனவாக அமைந்தன. தனித்துவமான படைப்பாளியாக அவர் பார்க்கப்பட்டார்.

இலக்கிய உலகில் கவிஞராக, கதைஞராக, திறனாய்வாளராக, இலக்கியச் சுவை ததும்பும் பேச்சாளராக மதிப்புப் பெற்றிருக்கும் வேதாந்தியின் கவிதை நூல்கள் 'இருளின் நிழலில்', 'வேதாந்தி கவிதைகள்' என்ற பெயர்களில் ஏற்கனவே வெளிவந்து ஆய்வாளர்களின் பெரும்மதிப்பைப் பெற்றிருக்கின்றன.

"ஞாலமொரு நாடகமோ; நானும தில் பாத்திரமோ;
நல்லடியான் ஆடிவிடக் கூத்தா மனக்
கோலமுடல் கோலமெனக் கோலமிலா ஞானிகளின்
கோலமருள் ஞானரதக் கூத்தா."

என்றெல்லாம் கவிதை எழுதித் தீர்த்தவர் வேதாந்தி. ஆயினும், 20க்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதிய அவரின், "ஒரு சிறுகதைத் தொகுதியாவது வரவில்லையே" என்றிருந்த நீண்ட காலக் குறைபாட்டைத் தீர்த்து வைக்கும் வகையில் இச்சிறுகதை நூல் வெளி வந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

நூலில், சொப்பன வாழ்வில் மகிழ்ந்து, புள்ளி, இன்னும் மனிதனாய் இருப்பதனால், கோலங்களுக்குள்ளே, நிழலைப்பகைத்து, நேசக் கயிறு, நயீமாக்களின் பெருமூச்சுக்கள் தமிழீழத்தைச் சுட்டெரிக்கும் என்ற தலைப்புகளில் 07 கதைகள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொன்றாக வாசிக்கும் போது, சிறுகதை பற்றிய முன்கற்பிதங்களை மீறுவனவாக, மரபு சார்ந்த வரையறைகளில் இருந்து விலகுவனவாக அக்கதைகள் அமைந்து வந்திருப்பதை வாசகர்கள் உணர்வர். கதையின் தொடக்கப் பகுதியை வாசித்துவிட்டு இப்படித்தான் கதை அமையும் என்று இறுதிப்பகுதியில் தேடுபவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சும். உளவியல் தன்மை கொண்டவையாக தத்துவ விசாரணைக்கு உட்பட்டனவாக அவரின் கதைகள் அமைகின்றன.

"சிறுகதையின் தோற்றம், வளர்ச்சி, முதிர்ச்சி ஆகியனவற்றின் நிர்வாண இதிகாசங்களைக் கணிப்பிட்டு அட்டவனையில் ஆதார மூலத்துடன் பரிசீலிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால், அதனைத் தாண்டிய ஓர் உள்நிலைக்கு ஏறி பிரச்சினைக்குரிய மனித மன ரசங்களை அண்டி, அங்கும் வெளியும் நிகழும் அந்தரங்கச் சிக்கு முடிச்சுகளை முடிந்த மட்டில் தொய்வித்து அவிழ்ப்பது என்ற சங்கற்பத்துடன் வரையப்பட்ட ஒரு படிப்பு வியாசம் இது எனக் கொள்ளல் சிலாக்கியமானது.

அனுபவங்கள் நுணுக்கமாய் உணர்வுகளை மீட்டிவிட,அவை மனத்தை விட்டுப் பீரிட்டுக் கிளம்புகையில் ஏற்படும் நெரிசலின் வழிச்சல்தான் 'கலை' எனவும், உணர்வு ரூபமான கலையின் சடப் பிரசன்னம் தான் 'சிருஷ்டிப்பு ' எனவும் கொள்வது ஒரு நிறைந்த சமாதானமே.

உள்மனத்தின் சூலத்தில் சேமிக்கப்பட்டவையாய் உறங்கும், உறுத்தும் உணர்வுகள் மேல்மனத் தூடாய் கருநிலைத் திரிந்து ஊடகத்துக்கு மேற்கொள்ளும் வழிப் பிரயாணத்தில் பெறும் எலும்பும் சதையும் சிறுகதையின் ஸ்திர மேம்பாட்டையும் விகிதாசார அழகையும் கற்பித்துவிடுகின்றன" என்று, எது சிறுகதை? என்ற கட்டுரையில் அவர் ஆங்காங்கே தருகின்ற கருத்துக்களோடு உடன்பட்டவையாக அவரின் சிறுகதைகள் அமைந்து வந்திருப்பதை வாசகர்கள் அவதானிக்கலாம்.

'புள்ளி' என்ற அவரின் ஒரு சிறுகதை. ஜீவமரணப் போராட்டத்தில் விழுந்து கிடக்கும் ஒருவரை விபரிக்கிறது. "காலத்தின் பிடி அன்று முற்றாய்த் தளர்ந்து விட்டிருந்தது. அவன், வீட்டில் சாய்ந்த வாழை போல தொண்டைக்குக் கீழ் உணர்வற்று மரத்துவிட, அதற்கு மேலாய்த் திணறிக் கொண்டிருந்தான்" என்று கதை தொடங்கும்.

"தன்நினைவுடன் ஐக்கியமாகிக் கலந்துவிட்ட நிழ்ச்சிகளை ஒரேயொருமுறை கடைசியாக எண்ணிப்பார்க்க வக்கில்லாமல், அந்த எண்ணமே வராமல், தனக்கென்று இந்த உலகிலுள்ள ஐசுவரியங்கள், பாசப் பிணைப்புகளை நினைக்கக் கொடுத்து வைக்காமல், எல்லோருக்கும் பொதுவான, நிச்சயமான, தவிர்க்க முடியாத,

அவஸ்தையின் உச்சத்தைத்தான் தானும் அனுபவிக்கிறோம் என்ற அளவில் ஒரு போலித் திருப்தியில் சமாதானிக்கவும் யோசனையில்லாமல், வாழ்வில் ஒரேயொரு முறை தன் அறிவையும், உணர்வுகளையும் ஒருமிக்க வைத்து, தன்னை ஆசுவாசிக்கத் தன்மூச்சைத் தன்னை விட்டும் போகவைக்காமல், போன மூச்சைத் திரும்பத் திரும்பத் தொடர வைக்கும் வழிக்கு அவன் முழுமனதாய் முயன்று கொண்டிருந்தான்." என்று கதை நகரும்.

"உளைச்சல் மிகுந்த யுத்தத்தில் காலத்தின் அரக்கத் தன்மைக்கு ஈடு கொடுக்க முடியாமல் ஒவ்வொன்றாய்க் கடைசி வரையும் போராடி அழிந்ததும், அவனது இயக்கம் மூச்சின் பரிபாஷையையும், நயனத்தின் அபிநயத்தையும் நிறுத்தி நின்றது. அந்தக் கூட்டங்களில் அதிகம் அவனிடம் கடைசியாக எதிர்பார்த்ததை அவன் ஏமாற்றவில்லை. இனி, சில கணங்கட்கு அவன் உடம்பில் சூடு இருக்கும். அவ்வளவுதான்." என்று கதையை முடிவுக்கு கொண்டு வருவார் வேதாந்தி. அவருடைய கதையின் மொழிநடை, கதைப்போக்கு என்பவற்றை அறிய இவ்வெடுத்துக் காட்டல்கள் ஓரளவு துணை புரியக் கூடும்.

நூலுக்கு அணிந்துரை தந்திருக்கின்ற பேராசிரியர் சி. மௌனகுரு இக்கதை பற்றிக் குறிப்பிடுகையில், "இந்தக் கதை ஒன்பது வசனங்களில் அமைந்துள்ளது. ஒவ்வொரு வசனமும் மிக நீண்ட வசனங்கள். இதில் மூன்றாவது வசனம்148 சொற்களைக் கொண்டுள்ளது.

இத்தகைய வசன அமைப்பு அதனை எழுதுவோரின் தமிழ்ப் பாண்டித்தியத்தைக் காட்டும் தகைமையது. தமிழில் இத்தகைய வசன நடைக்கு முன்னோடி ஆறுமுக நாவலர். அதனால் "வசன நடை கை வந்த வல்லாளர்" என அவர் அழைக்கப்பட்டார். தனக்கும் இது வரும் எனக்காட்டியவர் எஸ். பொ.

அந்த மரபில் நாம் இஸ்ஸதீனைக் காண்கிறோம். இவ்வகையில் இஸ்ஸதீனும் ஒரு வசனநடை கை வந்த வல்லாளரே." என்று விபரிக்கின்றார்.

"இன்னும் மனிதனாய் இருப்பதனால்" தத்துவ விசாரணைகளை உள்ளடக்கிய அவரின் இன்னுமொரு கதை. காகத்திற்கு ரொட்டி போடுகிறார் கதாசிரியர். வலிமை குறைந்த காகமொன்று ஏனைய காகங்களோடு போட்டியிட்டு ரொட்டித் துண்டைப் பெற்றுக் கொள்வதில் தோற்றுப்போகிறது.

வலிமை குறைந்த காகம் இவருக்குப் பிடித்துப் போகிறது. எப்படியாவது அக்காகம் ரொட்டித் துண்டைப் பெற்றுவிட வேண்டுமென்ற விருப்பத்தில் காகக் கூட்டத்தை விலக்கி, பிடித்துப் போன அந்தக் காகத்திற்கு பக்கத்தில் ரொட்டியை வீசுகிறார். ஆனால், கூட்டத்தில் இருந்து இன்னொரு காகம் ரொட்டித் துண்டைப் பெற்றுக் கொள்ள ரொட்டித்துண்டுக்குப் பக்கத்தில் வருகிறது. அதனை விரட்டிவிட கம்பெடுத்து வீசுகிறார். கம்பு அவருக்குப் பிடித்தமான காகத்தில் பட்டு அந்தக் காகம் இறந்து விடுகிறது.

இப்பொழுது, கதாசிரியர், 'நான் வாழ்வதை கணிதச் சமன்பாடு என்று நினைக்கவில்லை. நான் காகத்தைக் கொலை செய்தது சரியா? கொலை செய்வது சரியா? ஐந்தும், ஐந்தும் பத்து என்பது போல சரியா? அல்லது ஒன்பது என்பது பிழை என்று சொல்வதைப் போலுள்ள சரியா? நாம் நம்மை அறியாது நம்முள் ஏற்பட்டிருக்கும் சில வகையான ரசனைகளைக் கொண்டிருக்கும் மட்டும், மன விகாரங்களைக் கொண்டிருக்கு மட்டும், காரணமற்று எழும்பும் உணர்வுகளின் பக்கம் சாய்ந்து கொண்டிருப்பது இன்னமும் இவற்றிற்குச் சமனான பலவீனங்களை அடியோடு சொல்லி அகற்ற மட்டும் வாழ்வது கடைசி மட்டும் ஒரு கணிதச் சமன்பாட்டைப் போன்றதல்ல எனவே, சரியென்றும், பிழையென்றும் ஒன்றுமே கிடையாது' என்றெல்லாம் பேசிச் செல்வார்.

வேதாந்தியின் சிறுகதைகளை முழுமையாக வாசித்தாலன்றி அவற்றின் சுவையை, இன்பத் திளைப்பைப் பெறமுடியாது போய் விடும்.

இக்கருத்தை ஒட்டியதாகவே, நூலின் தொகுப்பாளர் சர்ஜுன் ஜமால்தீனின் குறிப்புகளும் உள்ளன.

" இக்கதைகளில் ஆரம்பம், நடுப்பகுதி, முடிவு போன்ற அம்சங்கள் எதுவும் கிடையாது. மரபார்ந்த சிறுகதைகளில் வருவது போன்று கதைப் படிம வகைமைகளும் இல்லை. இது கதைப்பிரதியை அதன் ஒருமையிலிருந்து விடுவித்து அதன் வரையறை எல்லைகளில் இருந்து வெளியேற்றி (Beyond the limit) அலைந்து திரிய சுதந்திரம் அளிக்கிறது.

வேதாந்தியின் சிறுகதைகள் எழுத்தின் பல்வேறு சாத்தியங்களை விரித்துப் போடுகின்றது" என்று அவர் குறிப்பிடுகின்றார்.

"என் சிறு கதைகளும் கால வெள்ளத்தில் காணாமல் போகாமல் அவை இலக்கிய ஜீவகீதமாக ஒலிக்க வேண்டும் என்றே என்பிரியத்திற்குரிய நேசர்களால் வெளியிடப்பட்டுள்ளது. நான் வாழும் பொழுதே எனது இக் கனவை பலிக்கச் செய்தமை என் பெறுபேறேயாகும்" என்று குறிப்பிடுகின்றார். நூலாசிரியர் வேதாந்தி.

நூலாசிரியர், முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர், மாகாண எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர் என்றெல்லாம் அரசியலில் செயற்பட்டவர். அவ்வாறில்லாமல், இலக்கியச் செயற்பாட்டாளனாகவே அவர் தொடர்ந்து ஈடுபட்டிருந்தால், ஈழத்துச் சிறுகதை உலகுக்கு இன்னும் காத்திரமான முன்னுதாரணமாகக் காட்டக் கூடிய கதைகளை அவர் வழங்கியிருக்க கூடும் என்ற எண்ணத்தை இக்கதைகள் நமக்கு வழங்கிவிடுவதை சிறுகதை வாசிப்பில் பரிச்சயமுடையவர்கள் ஏற்பர்.இக் கதைகளைச் சுவடிக்கூடம் வரைச் சென்று தேடியெடுத்துத் தொகுத்த உயர் வழக்காடு மன்ற சட்டத்தரணி சர்ஜுன் ஜமால்தீன், உதவிய அக்கரையூர் சித்தீக் மேலும் நூலை வெளியிட உதவிய குழுவினர் அனைவருக்கும் நமது பாராட்டுக்கள்.

நூல்: **வேதாந்தி சிறுகதைகள்**
தொகுப்பாசிரியர் : **சர்ஜுன் ஜமால்தீன்,**
பதிப்பகம்: **மக்கள் பதிப்பகம்,**
**'வெல்கம் பிளேஸ்'**
**385, சின்ன மௌலானா வீதி**
**அக்கரைப்பற்று–01**

**பாவேந்தல் பாலமுனை பாறூக்...**

16 ஆம் பக்க தொடர்...

இயங்காத தலைமையின் கீழ் அர்ப்பணிப்பும் ஆர்வமும் உள்ளவர்கள் வேலை செய்வது மிகவும் மன உளைச்சலானது என்பதை சுப்பிரமணியம் வாத்தியார் நன்கு அனுபவித்தவர். அர்ப்பணிப்பு இல்லாத தலைமை ஒரு நிறுவனத்தை குட்டிச்சுவர் ஆக்கிவிடும் என்பதற்கு உலகில் எத்தனை உதாரணங்கள். "வாருங்கள்" என்று புன்முறுவலுடன் வரவேற்றார் அதிபர். அது சற்று வழமைக்கு மாறாக இருந்தது. அவருடன் அடிக்கடி சுப்பிரமணியம் வாத்தியார் பாடசாலை விடயங்களில் முரண்பட்டுக் கொள்வதுண்டு.

அவரிக்கு சுப்பிரமணியம் வாத்தியாரின் ஓய்வு உள்ளூர மகிழ்ச்சியை கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவர் மிகவும் அமைதியாக அதிபர் முன் அமர்ந்தார். "இன்று கடைசி பாடம் உங்களுக்கு ஒரு பிரியாவிடை நிகழ்வு ஒன்றை மாணவர்களுடன் சேர்ந்து ஒழுங்குபடுத்தியுள்ளோம்" என்று கதையை தொடங்கினார்.

"நல்லது" என்றார் பதிலுக்கு சுப்பிரமணியம் வாத்தியார். அத்துடன் "உங்களுக்கு ஒரு மணிவிழா எடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் நிதி சேகரிக்க உள்ளோம்" என்றார் தொடர்ந்து. அவர் சிரித்தபடி "பாடசாலையில் எத்தனையோ விடயங்கள் செய்ய வேண்டி உள்ளது. அந்த பணத்தை பாவித்து அவைகளை சரிசெய்யுங்கள். எனக்கு இந்த சிறிய பிரியாவிடை போதும்" என்றார். அதிபரின் முகம் மாறிவிட்டது. "அப்படியில்லை. கல்விப்பணிப்பாளர் கமலா அவர்களும் உங்களது பிரியாவிடைக்கு இன்று வருகின்றார். நாங்கள் இதை வடிவாக செய்யவேண்டும்" என்றார். "நான் வகுப்பிற்கு போகின்றேன்" என்று சொல்லிவிட்டு வகுப்பறை நோக்கி நடந்தார் சுப்பிரமணியம் வாத்தியார்.

இப்போதெல்லாம் ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு மணி விழா எடுப்பது ஒரு வழமையாகி விட்டது. அதற்கு பெருமளவிலான நிதியை செலவு செய்கிறார்கள். அதை ஓய்வு பெறுபவர்கள் பெருமையுடன் ஏற்றுக்கொள்வது மிகவும் கவலையான விடயம்.

அவரின் இதயம் அன்று சற்று வேகமாக வேலை செய்து கொண்டிருந்தது. அதற்கு ஈடுகொடுக்க கடிகாரமும் அன்று வழமையிலும் பார்க்க வேகமாக ஓடுவது போல் ஒரு உணர்வு அவருக்கு. இரத்த அழுத்தம் கூடுவதை அவரால் உணர முடிந்தது. பிரியாவிடை பேச்சில் என்ன சொல்வது என மனதுக்குள் ஒத்திகை பார்த்தார். பேசும் போது ஒருத்தரையும் குறை கூறக்கூடாது. சிரித்த முகத்துடன் இருக்க வேண்டும் என தனக்கு தானே அடிக்கடி நினைவு படுத்திக்கொண்டார். கல்விப்பணிப்பாளரும் திணைக்களக உறுப்பினர்களும் வருகை தந்திருந்தனர். பாடசாலை பிரதான மண்டபத்தில் பிரியாவிடை விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நிகழ்வில் பலர் பலவிதமாக உரையாற்றிக்கொண்டிருந்தனர். சுப்பிரமணியம் வாத்தியார் இல்லாமல் இனி எப்படி பாடசாலையை நடத்துவது? என அதிபர் முதலைக்கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார். ஆனால் அவரது மனம் இனி தன்னை கேள்வி கேட்க ஆளில்லை எனும் உள் உவகையில் இருப்பதை சுப்பிரமணியம் வாத்தியார் நன்கு அறிவார்.

ஆசிரியராக கடமை ஏற்றுக்கொண்ட முதல் நாள் அவரது கண்முன் வந்து போனது. அவரது மனதிலும் கல்வி கற்பித்தல் முறையிலும் ஏற்பட்ட மாற்றங்கள் அவருக்கே வியப்பை தந்தது. மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் பாடசாலையில் கற்கின்றனர் எனும் உண்மையை எண்ணி தனக்குள் சிரித்து கொண்டார்.

ஒரு மாணவி அவருக்காக ஒரு கவிதையை எழுதி வாசித்தாள். "காலம் காலமாக ஓடும் கடிகாரமே! குறளோடு சேர்ந்த அதிகாரமே! நற் செய்தி வழங்கும் நாளிதளே!" எனத் தொடங்கும் அக்கவிதை அவரது மனதை மிகவும் தொட்டிருந்தது. முடிவில் அவளது கண்கள் கலங்கின. அவளது பெற்றோர்கள் பிரிந்து வாழ்கின்றனர். அது அவளை மிகவும் பாதித்து இருந்தது. பல இக்கட்டான சூழல்களில் அவளுக்கு மனவுறுதியை அவர் கொடுத்திருந்தார். சுப்பிரமணியம் வாத்தியாரை ஒரு சிற்றுரை ஆற்றும் படி அழைத்தனர். அவரால் நினைத்தது போல் உரையாற்ற முடியவில்லை. "ஆசிரியர்கள் மாணவர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும். ஆசிரியம் ஒரு தொழில் இல்லை. அது ஒரு சேவை" எனத்தொடங்கி அதிபரின் கடமைகள், ஆசிரியரின் கடமைகள் என தொடர்ந்து கூறிக்கொண்டிருந்தார். அவரது உரை பல ஆசிரியர்களை கோபப்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. "கெட்டிக்கார பிள்ளைகளுக்கும், பணக்காறர்களின் பிள்ளைகளுக்கும் கற்பிப்பது மட்டும் ஆசிரியர்களின் கடமையல்ல. பிள்ளைகளின் திறமைகளை கண்டு பிடித்து அவர்களுக்கு பகுத்தறிவையும் தன்னம்பிக்கையையும் ஊட்ட வேண்டும். பரீட்சையில் தோற்றவர்கள் எல்லோரும் வாழ்க்கையில் தோற்றவர்கள் அல்ல. முயற்சியை கைவிடாதீர்கள். செய்து முடியும் வரை முயற்சியுங்கள். தடைக்கற்களை படிக்கல்லாக்கி வாழ்க்கையில் உயர ஏறுங்கள். ஒழுக்கத்தை வளர்த்து கொள்ளுங்கள்." என மாணவர்களுக்கு அவர் அடிக்கடி கூறும் சில அறிவுரைகளை அப்போதும் கூறினார். "மாற்றங்கள் முதலில் தலைமை அலுவலகத்தில் இருந்து தொடங்க வேண்டும். சமூகத்தில் உள்ள பெரியவர்கள் ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும். பாடசாலை அனுமதித்தால் மீண்டும் வந்து கற்பிக்க ஆயத்தமாக உள்ளேன்" என்றவாறு நாற்காலியில் அமர்ந்தார். மாணவர்கள் அந்த கவிதையை அவருக்கு கையளித்தனர்.

அவரது வாழ்வில் கிடைத்த பெரும் பொக்கிசமாக அது அவருக்கு தோன்றியது. ஒருவாறு விடை பெற்றுக் கொண்டு துவிச்சக்கர வண்டியில் மாணவர்களின் கவிதையை வாய்க்குள் முணுமுணுத்தபடி வீடு நோக்கி பயணித்தார்.

மாணவர்களாவது அவரை புரிந்து கொண்டார்கள் எனும் மகிழ்ச்சியும், அவர்களை பிரிகிறேன் எனும் கவலையும் ஒன்று சேர்ந்து அவரது கண்ணை மறைத்து விட்டது போலும். அப்போது அவருக்கு முன்னாள் வந்த ஒரு பேருந்து ஒன்று அவர் மீது மோதியது. கண்விழித்து பார்க்கும் போது மருத்துவ மனையில் படுத்திருந்தார். அவரது கண்கள் மாணவர்கள் தந்த கவிதையை தேடியது. அதை படித்துக்கொண்டிருந்த, அவருக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் "வாத்தியார், நானும் உங்கடை மாணவன் தான்" என்றார் சிரித்தபடி. "ஒன்றுக்கும் பயப்படாதையுங்கோ. கொஞ்ச நாளையிலை எல்லாம் சுகமாகிவிடும்.

மருந்துகளை கவனமாக எடுங்கோ. இது நான் உங்களுக்கு தாற பரிசு" என ஒரு கைத்தடியை அவரிடம் நீட்டினார். அதை வாங்கும் போது "உடம்பை கவனமாக பாருங்கோ வாத்தியார். நான் உங்களை வீட்டை வந்து பார்க்கிறன்" என்றவாறு தனது அறையை நோக்கி நடந்தார் மருத்துவர். அருகில் நின்ற தாதியிடம் "உங்கடை டாக்குத்தர் வேலைக்கு நேரத்திற்கு வாறாரோ? முந்தி பள்ளிக்கூடத்திற்கு பிந்தித் தான் வாறவர்" என்றார் மெதுவாக. "இன்னும் திருந்தவில்லை. இப்பவும் அப்படித்தான். படிப்பித்த வாத்திமார் சரியில்லை" என்றாள் சிரித்தபடி. வாத்தியாரின் முகத்தில் அசடு வழிந்தது. இதை அருகில் நின்று கேட்ட பாக்கியம் "இனி உந்த வாத்தியார் கதையை விடுங்கோ" என்றவாறு கைத்தடியை எடுத்து அவரிடம் நீட்டினாள். மனைவியின் கைத்தாங்கலுடன் கைத்தடியை ஊன்றியபடி வீடு நோக்கி பயணித்தார் வாத்தியார்.

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி

இல: 130



திரு/திருமதி.செல்வி ..............................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................................
..............................................
..............................................
திகதி .................. கையொப்பம் ..................

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 130
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 130

இடமிருந்து வலம்

1. ஜோடனை
7. நீர் சார்ந்த பகுதிகளில் இது காணப்படும்
8. கவர்ச்சி அல்லது தன்வசப்படுத்தும் தன்மை
10. 1969ஆம் ஆண்டு வெளிவந்த ஒரு தமிழ்த் திரைப்படம் (குழம்பியுள்ளது)
11. குளிர்காலத்தில் இதுவும் தேவை (குழம்பியுள்ளது)
14. மகிழ்ச்சி ( திரும்பியுள்ளது)
15. அரைப்ப ங்கு
18. பிரச்சினையிலிருந்து தீர்வுபெற்ற பின்னான மனநிலை (குழம்பியுள்ளது)
20. இறந்தவரை புதைத்த இடத்தில் அமைக்கப்படும் நினைவுச் சின்னம்.
21. திருமணமாகாத பெண் திரும்பிவிட்டாள்
22. கடல்வாழ் உயிரினம் (திரும்பியுள்ளது)
23. இதுவும் கடலிலிருந்து பெறப்படுகின்றது. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. பாராட்டத்தக்க முறையில் சிறப்பாக இருப்பது
2. எண்ணிக்கையில் குறைவு (தலைகீழ்)
3. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருப்பவர்.
4. பற்றுச்சீட்டு
5. தரத்தால் பிரிக்கப்படுவது அல்லது வகை (தலைகீழ்)
6. ஒரு விஷ ஜந்து (தலைகீழ்)
9. உறைப்புத் தன்மை (குழம்பியுள்ளது)
12. ஆண் யானை
13. சூரியனின் ஆதிக்கமுள்ள நேரம்
16. ஒரு செயல் அல்லது நிகழ்ச்சி பற்றிய செய்தி (குழம்பியுள்ளது)
17. தொடக்கம்
18. கற்பித்த ஆசிரியர்
19. துணையற்ற நிலை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 129

### விடைகள்

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 1. புதல்வன் | 14. கரும்பு |
| 5. காது | 16. மந்தை |
| 7. துவி | 17. வருடம் |
| 8. சமாதானம் | 19. தந்திரம் |
| 10. மைல் | 21. மதி |
| 11. கம்பு | 22. ஆல் |
| 12. வதனம் | 23. தலைமை |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. புதுமை | 12. வருமதி |
| 2. தவில் | 13. புவனம் |
| 3. வசந்தம் | 14. கந்தல் |
| 4. மான் | 15. தம்பதி |
| 5. கானம் | 16. ஆந்தை |
| 6. தும்பு | 18. மடமை |
| 9. தாகம் | 20. ரதி |

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 129

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **ஏ.சீ. ஸ்ரீதரன்,** 24 5/3 மாதங்காவத்தை ஒழுங்கை, | **எம்.எஸ். அமீர்,** 32/8, சுதர்ம மாவத்தை, கவ்டான, தெஹிவளை | **எம். கேதீஸ்பரன்,** எகலியாகொட தோட்டம், எகலியாகொட |

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.எம்.எம். நிஸாம்** காலி
2. **எம். தனுஷி** காரைதீவு
3. **எஸ். தமிழ்மலர்** கல்முனை,
4. **கே.ஈ. மில்ஹானி** ஏறாவூர்
5. **எஸ். சஞ்சனா ,** வந்தாறுமூலை
6. **எம்.பி.அகிலன்** திருகோணமலை
7. **ஹிமா மர்யம் முஜாஹித்** ரம்புக்கனை
8. **எம்.யூ.ஏ. வாரிஸ்,** வெலிகம
9, **எம்.எம். மாஹி,** துல்ஹிரிய
10. **ரஜினி புண்ணியமூர்த்தி,** மட்டக்களப்பு

# 8000 மைல்களுக்கு அப்பாலிருந்து ஓர் உதவிக்கரம்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேர்ந்துவிட்டால் அதனால் அவர்களது பிள்ளைகள் அநாதைகளாகிவிடக் கூடாது என்பதுதான்.

**கேள்வி: நீங்கள் இம்முறை இலங்கைக்கு வருகை தந்ததன் நோக்கம்?**

பதில்: தற்போது இலங்கையில் இதயம் தொடர்பிலான சிகிச்சைகளில், குறிப்பாக பதினெட்டு வயதிலிருந்து ஐம்பது வரையிலான இதய நோயாளிகளுக்கு வால்வு மாற்று சிகிச்சைகளே அதிகளவில் இடம்பெறுகின்றன.

கடந்த ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் இதய சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் சிவசங்கர், இதய நோய் நிபுணர்களான லக்ஷ்மன் மற்றும் குருபரன் ஆகியோர் எம்மிடம் கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார்கள். *Philips* நிறுவனத்தின் *Echo Machine with TOE Probes* என்ற இயந்திரத்தை அமெரிக்காவில் இருந்து தருவித்து தந்தால் வளர்ந்தவர்களுக்கான இதய சத்திர சிகிச்சைகளை யாழ்ப்பாண வைத்தியசாலையிலேயே மேற்கொள்ளலாம் என்பதே அக்கோரிக்கையாகும்.

அதற்கேற்ப இக்கோரிக்கையை கனடா பொது மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் பொன்மனசெம்மல் எம்.ஜி.ஆரின் பாடல்கள் நிறைந்த எம்.ஜி.ஆர் 107 என்ற மாபெரும் இசைநிகழ்வினை நடத்தினேன். அதன் ஊடாகவும், நன்கொடைகள் மூலமும் 212,000 கனேடிய டொலர்களை திரட்டினேன்.

அதன் பின் 4 கோடி ரூபாவுக்கும் மேல் பெறுமதியான இந்த இயந்திரத்தை சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் கலந்துரையாடி இரண்டே கால் கோடி ரூபா செலவில் தருவித்து மக்களின் உயிர் காக்கும் சிகிச்சைகளுக்காக வழங்கியுள்ளோம். கனேடிய டொலரில் இது 95 ஆயிரம் டொலர்கள் (ரூபாய் 21,688,956) பெறுமதியானதாகும். இந்த இயந்திரத்தைக் கையளிக்கவே இம்முறை இங்கு வருகை தந்தேன். இக்கையளிப்பு வைபவத்தில் கனடாவின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகரான எரிக் வால்ஷ் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

அதே தினம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் சிறுநீரகப் பிரிவிற்கு 30 ஆயிரம் கனேடிய டொலர் (ரூ. 6,613,900) பெறுமதியான இரண்டு இரத்த சுத்திகரிப்பு இயந்திரங்களை கையளித்தோம். அத்தோடு 15 ஆயிரம் கனேடிய டொலர் (ரூ. 3,306,950) பெறுமதியான மேலுமொரு இரத்த சுத்திகரிப்பு இயந்திரத்தையும் மல்லாவி வைத்தியசாலைக்கு வழங்கியுள்ளோம். இம்முறை விஜயத்தின் போது மொத்தமாக 140 ஆயிரம் கனேடிய டொலர்கள் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வடக்கிலுள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இவை பல உயிர்களை காப்பாற்ற உதவப் போகின்றது.

**கேள்வி: நாட்பட்ட சிறுநீரக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளவர்களுக்கும் வேறு பல நோய்களுக்கு ஆளான சிறு பிள்ளைகள் உள்ள குடும்பங்களுக்கும் நீங்கள் வாழ்வாதார உதவியும் அளிப்பதாகக் கூறப்படுகிறதே?**

பதில்: ஆம். கடந்த கால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் பொது மக்களுக்கு தொடக்கத்தில் உதவிகளை வழங்கினோம். அதேநேரம் சிறுநீரகப் பாதிப்புக்கு உள்ளானவர்கள் இரத்த சுத்திகரிப்பு டயலிஸிஸ் சிகிச்சை பெறுவது அவசியம். ஆனால் இப்பாதிப்புக்கு உள்ளானவர்கள் பொருளாதார ரீதியில் கடும் சிரமங்களுக்கு முகம் கொடுப்பர். தீர்க்க முடியாத நோய்களுக்கு ஆளான சிறு பிள்ளைகள் உள்ள குடும்பங்களும் பெரும் நிதி நெருக்கடிகளை எதிர் நோக்குகின்றன. அதனால் அவர்களது குடும்ப, பொருளாதார சிரமங்களைக் குறைக்கவும் அவர்களது நலன்களைக் கருத்தில் கொண்டும், இருநூற்றுக்கும் மேற்பட்டோருக்கு வாழ்வாதார உதவிகளை செய்து கொடுத்துள்ளோம். குறிப்பாக அவர்களுக்கு தெரிந்த சுயதொழில்களில் ஈடுபட உதவியளித்துள்ளோம். இதன்படி தையல் இயந்திரம், கால்நடை வளர்ப்புக்கென ஆடு, மாடு போன்றவற்றைப் பெற்றுக் கொடுத்து அவர்கள் சொந்த காலில் நிற்க உதவியுள்ளோம்.

மேலும் பொருளாதார சிரமங்களுக்கு முகம் கொடுத்திருப்பவர்களுக்கு பணமாக உதவி வழங்கினால் அவர்கள் தொடர்ந்தும் பண உதவியை எதிர்பார்த்தவர்களாக இருப்பார்கள். ஏனையவர்களிடமும் கையேந்தும் நிலைக்கு அவர்கள் உள்ளாவார்கள். அதனைத் தவிர்க்கவே இவ்வாறான வாழ்வாதார உதவிகளை வழங்கி ஊக்குவிக்கின்றோம்.

**கேள்வி: கிளிநொச்சி மாவட்டம் முழுவதும் இயங்கும் உங்கள் நடமாடும் சேவை குறித்து கூற முடியுமா?**

பதில்: நிச்சயமாக. கடந்த ஏழரை வருடங்களாக கிளிநொச்சியில் நடமாடும் மருத்துவ சேவையை முன்னெடுத்து வருகின்றோம். குறிப்பாக முள்ளந்தண்டு பாதிக்கப்பட்டவர்களுக்காக, அவர்களது வீடுகளுக்குச் சென்று முதுகுப் புண்ணுக்கு சிகிச்சை அளிக்கவென இச்சேவை முன்னெடுக்கப்படுகிறது. இதற்கென ஒரு முச்சக்கர வண்டியை வாங்கிக் கொடுத்து சாரதியையும் நிமித்து ஒரு தகுதியான தாதியையும் நியமித்துள்ளோம். இச்சேவையை வட மாகாண சுகாதார அமைச்சுடன் இணைந்தே முன்னெடுக்கின்றேன்

**கேள்வி: கனடாவிலுள்ள தமிழர்களின் ஆதரவு உங்களுக்கு எந்தளவில் உள்ளது?**

பதில்: பல நடமாடும் மனித கடவுள்களை நேரில் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவன் நான். இவ்வளவு உயிர்களை காப்பதற்கும், பல மருத்துவ திட்டங்களுக்கும், வாழ்வாதார உதவிகளுக்கும் காரணமானவர்கள் அவர்களே. தானம் வழங்குபவர்களுக்கும், பெறுபவர்களுக்கு நான் ஒரு பாலமாக இருந்து செயல்படுகின்றேன். குறிப்பாக டொரோண்டோவிலுள்ள கனடா கந்தசாமி ஆலயத்தில் எங்களை நிதி சேகரிக்க சிறப்பு அனுமதி வழங்கி ஊக்கப்படுத்துவார்கள். இங்கு நின்று முக்கிய பண்டிகை தினங்களில் பொது மக்களிடம் நிதி திரட்டி இதுவரை 7 இதய நோயாளிகளின் உயிர் காக்கும் சிகிச்சைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளோம். கணக்குகளை காட்டி வெளிப்படையாக செய்யும் நிறுவனங்களுக்கு இங்கு நல்ல ஆதரவு மக்களிடையே உள்ளது.

**கேள்வி: உங்களது எதிர்காலத் திட்டங்கள் அடங்கலாக நீங்கள் நிறைவாகக் கூற விரும்புவதென்ன?**

பதில்: இலங்கையில் இதய நோய்களுக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களுக்கு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை அளிப்பதற்கு சிறுவர் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இல்லாதுள்ளனர்.

அதனால் அவ்வாறானவர்களுக்கு கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் தான் தற்போது சத்திரசிகிச்சை பெற்றுக்கொடுக்கப்படுகிறது. எங்களுக்கு அந்த தனியார் மருத்துவமனை விஷேட கட்டணம் வழங்கினாலும் எண்ணற்ற உயிர்களை காக்க வேண்டுமென்பதனால் பல கோடிகள் தேவைப்படுகிறது.

அதனால் முதற்கட்டமாக இதய நோய்க்கு உள்ளாகியுள்ள சுமார் 20 பிள்ளைகளை இந்தியாவுக்கு அழைத்து சென்று சத்திரசிகிச்சை செய்வதற்கான திட்டத்தை வகுத்திருக்கின்றேன். இது தொடர்பில் இந்தியாவிலுள்ள ஒரு பெரும் நன்கொடை நிறுவனத்துடன் பேச்சுவார்த்தையும் நடத்தியுள்ளேன். அவர்கள் இச்சிகிச்சையை இலவசமாக மேற்கொள்வதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்கள். அதனால் இவர்களுக்கு கடவுச்சீட்டு, விமான டிக்கட் என்பவற்றை எடுத்து அழைத்து சென்றால் இச்சிகிச்சையை இலவசமாகப் பெற்றுக்கொடுக்க முடியும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளேன்.

அதேநேரம் மக்கள் மத்தியில் மனிதத்தை கட்டியெழுப்ப வேண்டும். கருணையை மேம்படுத்த வேண்டும். அதன் ஊடாக மனிதாபிமானமும் கருணையும் மேலோங்கும். அதுவே இன்றைய தேவையும் ஆகும். அந்த அடிப்படையில் மனிதாபிமானத்தையும் கருணையையும் மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களை நான் முன்னெடுத்துள்ளேன்.

குறிப்பாக எங்களது திருமண மற்றும் குடும்பத்தாரின் பிறந்த நாட்களில் எங்கள் செலவில் தெரு நாய்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை மேற்கொள்கிறேன். நாயும் கடவுளின் படைப்பே. அந்தப் படைப்புக்கும் நாம் கருணை காட்ட வேண்டும். உயிரினங்கள் மீது கருணை காட்டும் பண்பு வளரும் போது மனிதர்கள் மீது கருணை காட்டக்கூடிய மனப்பான்மையும் ஏற்படும். ஒருவர் கஷ்டத்தில் இருக்கும் போது உதவக்கூடிய பண்பும் உருவாகும்.

# பொது மக்களுக்கு வழங்கும் ஏராளமான நிவாரணங்கள்!

(04ஆம் பக்கத் தொடர்)

க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு உயர் தரத்தில் கற்பதற்காக புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. இந்த வேலைத்திட்டம் கல்வி அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகின்றது. இதற்கான மாணவர்களைத் தெரிவு செய்வதில் ஜனாதிபதி நிதியம் எந்த வகையிலும் தலையிடுவதில்லை. கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கு அமைவாக அதிபர்கள் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு வலய கல்விப் பணிமனைகளினால் புலமைப்பரிசில் வழங்க வேண்டிய மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். இதில் சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றின் பிரகாரம் உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களிடையே ஒரு கல்வி வலயத்திலிருந்து 60 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு அந்தப் பெயர்ப் பட்டியல் கல்வி பணிமனையினால் கல்வித் திணைக்கள பரிந்துரையுடன் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும். பின்னர் கல்வி அமைச்சின் செயலாளரது பரிந்துரையுடன் அந்தப் பட்டியல் ஜனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்படும்.

அவ்வாறு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு கல்விக்கான செலவினை மேற்கொள்வதற்காக ஒரு மாணவருக்கு மாதம் 6000 ரூபாய் வீதம் 24 மாதங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் மாணவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாகவே வைப்பிடப்படுகின்றது. இவ்வாண்டில் முதலாம் வகுப்பிலிருந்து சாதாரண தரம் வரையான குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்விப் புலமைப் பிரிசில்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் கீழ் மாதம் ஒரு இலட்சம் ரூபாவிற்கு குறைந்த வருமானத்தைக் கொண்ட குடும்பங்களின் பிள்ளைகளுக்காக மாதாந்தம் 3000 ரூபாய் வீதம் 12 மாதங்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும். இதில் 10,126 பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு இலட்சம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்படுவதோடு, ஒரு பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அப்பாடசாலையின் மொத்த மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். 50 மாணவர்களிலும் குறைவான மாணவர் எண்ணிக் கை கொண்ட பாடசாலைகளிலிருந்து 4 மாணவர்களும், 3000 மாணவர்களுக்கு அதிகம் கொண்ட பாடசாலைகளிலிருந்து 22 மாணவர்களும் தெரிவு செய்யப்படுவார்கள். உயர்தரம் மற்றும் முதலாம் வகுப்பிலிருந்து 11<ஆம் வகுப்பு வரையில் கல்வி கற்கும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் மாவட்ட மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ஜனாதிபதி புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின் கீழ் 116,000 புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.


இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம் (SLIDA)
பொது நிருவாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## பதவி வெற்றிடம்

**சிரேஷ்ட ஆலோசகர், ஆலோசகர், உதவி ஆலோசகர் (நிரந்தர மற்றும் இரண்டாம் நிலை அடிப்படையில் ஆட்சேர்ப்பு)**

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகமானது (SLIDA) கற்றல் மற்றும் அபிவிருத்தி, முகாமைத்துவ ஆலோசனை சேவைகள் மற்றும் ஆராய்ச்சி மூலம் இலங்கை பொதுச் சேவையின் திறன் மேம்பாட்டிற்குப் பொறுப்பான முதன்மையான அரச நிறுவனமாகும்.

நிறுவனத்தில் வெற்றிடமாக காணப்படும் சிரேஷ்ட ஆலோசகர், ஆலோசகர், உதவி ஆலோசகர் பணியிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் 2024.07.31 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

இது தொடர்பான மேலதிக தகவல்களை **www.slida.lk / www.pubad.gov.lk** எனும் இணையத்தளங்களைப் பார்வையிடுவதன் மூலமாக பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்,
28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
தொலைபேசி இல : 011-5980200 தொலைநகல் : 011-2584406
மின்னஞ்சல் : mail@slida.gov.lk



## துறைமுகங்கள், கப்பற்சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை (இதுஅ) (SLPA)**

**விலைக்கோரல்களுக்கான அழைத்தல்**

## கொழும்பு துறைமுகத்தின் செயற்பாடுகளுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபைக்காக இரு துறைமுக இழுவைகளை நேரத்திற்கு ஏற்ப குத்தகைக்கு எடுத்தல்

**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**

**CES/FP/06/PT/6608 (HM)**

1. இலங்கை சனநாயக சோசலிச குடியரசில் உள்ள அனைத்து வர்த்தகக் கடல் துறைமுகங்களிலும் கப்பல்களை துறைசேர்த்தல் மற்றும் கட்டிவைத்தல் ஆகியன இலங்கை துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் இலங்கை துறைமுக அதிகாரசபையின் (SLPA) நோக்கெல்லைக்கு உட்பட்டுள்ளது. இந்த நோக்கத்திற்காக துறைமுக இழுவைகள் தொகுதி ஒன்றை இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவி உள்ளதோடு அந்தத் தொகுதியை வலுப்படுத்தும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட காலத்திற்கு மேலும் இரு 80 தொன் பொல்லார்ட் இழுப்பு துறைமுக இழுவைகளை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. கப்பல்களை நிறுத்துமிடத்தில் நிறுத்துதல் அல்லது நிறுத்தாதிருத்தல் ஆகியவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாது இந்த துறைமுக இழுவைகளை பெற்று நிறுவப்படவுள்ளது. எனினும் கொழும்பு துறைமுகத்தில் தீயணைப்பு மிதவை, எண்ணெய் கசிவு அகற்றும் தெளித்தல் கப்பல், கப்பல்களின் நிறுத்தம் மற்றும் வெளியேற்ற செயற்பாடுகளுக்கான கப்பல்கள் முதலியவை போன்ற தயார் நிலைக்கு கப்பல்களை அழைத்துச் செல்வதற்கும் பயன்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக ஐந்து ஆண்டு காலத்திற்கு 80 தொன் பொல்லார்ட் இழுப்பு துறைமுக இழுவைகள் இரண்டின் சேவையை வாடகை அடிப்படையில் பெறுவதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபை உத்தேசித்துள்ளது.
2. இதற்காக பெறப்படும் சேவைகளுக்கான பணக்கொடுப்பனவுகளை இதுஅ அதனது சொந்த நிதிகளிலிருந்து செலவு செய்யும்.
3. ஆகக்கூடியது இரு இழுவைகளின் சேவைகளை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இதுஅ இற்காகவும் அதன் சார்பாகவும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். விலைமனுக்கள் தனியொரு இழுவைக்கான அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும். விலைமனுக்கோரல் ஆவணத்தில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
4. மேற்குறிப்பிட்டுள்ள விலைமனுக்கோரலை பெறுவதற்காக, விலைமனுதாரர் இயைபுள்ள துறையில் முன்னைய அனுபவத்தையுடையவராகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணங்களில் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை கடற்பரப்பில் வணிகம் செய்வதற்காக 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வணிக கப்பற் சேவைகள் மற்றும் திருத்தங்களின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென்பதை ஆர்வமுள்ள சாரார் கவனத்திற் கொள்ளவும். இழுவை/இழுவைகளை ஐந்து (05) வருட காலப்பகுதிக்கு வழங்கல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
5. விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் ஏற்பாடுகளுக்கும் அதன் பின்னர் வெளியிடப்படும் நியதிகளுக்கும் அமைந்தொழுகல் வேண்டும். இந்த சட்டத்தின் கீழ், முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக விலைமனுதாரருக்கு அல்லது அவர் சார்பாக செயற்படுவாராயின் அவர்கள் பங்கெடுப்பதற்கு ஆர்வமுள்ள எந்தவொரு கேள்வியின் பெறுமதியானது இலங்கை பணத்தில் ஐந்து மில்லியனுக்கு மேற்படின் இயைபுள்ள உரியமுறையில் பூர்த்தி செய்யப்பட்ட பிசிஏ பதிவு செய்தல் சான்றிதழை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
6. இந்த விலைமனுக்கோரலுக்கான அட்டவணையானது கீழே காட்டப்பட்டுள்ளவாறு திட்டமிடப்பட்டுள்ளது.

| நிகழ்வு | திகதி |
|---|---|
| அ. விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கல் | 2024 ஜூலை 22 ஆம் திகதியன்று |
| ஆ. விலைமனு முன்னோடிக்கூட்டம் | 2024 ஓகஸ்ட் 06 ஆம் திகதியன்று |
| இ. விலைமனுக்கோரல் ஆவணங்களின் தெளிவுறுத்தல்களுக்காக விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி | 2024 ஓகஸ்ட் 22 ஆம் திகதியன்று |
| ஈ. விலைமனுக்கோரல்களுக்கான தெளிவுறுத்தல்கள் மற்றும்/ அல்லது பிற்சேர்க்கையை வழங்குவதற்கான இதுஅ இற்கான இறுதி திகதி | 2024 ஓகஸ்ட் 29 ஆம் திகதியன்று |
| உ. விலைமனுக்களின் சமர்ப்பித்தலுக்கான மூடும் திகதி மற்றும் நேரம். | 2024 செப்டம்பர் 3ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு |
| ஊ. விலைமனுக்களை திறத்தல் | 2024 செப்டம்பர் 3ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே நடைபெறும். |

7. இந்த விலைமனுக்கோரல் தொடர்பான மேலதிக தகவலை ஆர்வமுள்ள சாரார் இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை, கடற்பயண வழிப் பிரிவு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் மே/பா, துறைமுக தலைவரிடமிருந்து (Harbour Master) பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 0094112385401 அல்லது மின்னஞ்சல்: nirmalsilva@slpa.lk. ஆர்வமுள்ள சாரார் விலைமனுக்கோரல் ஆவணங்களின் உருமாதிரி பிரதியொன்றை இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.
8. மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரம் அஐ டொலர்களை (USD 1,000.00) செலுத்திய பின்னர், இலங்கை, கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை வழங்கல் மற்றும் பொருட்கள் முகாமைத்துவ பிரதான முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள சாரார்களினால் கொள்முதல் செய்யப்படலாம்.

   விலைமனுக்கோரல் ஆவணத்தின் வழங்கலானது அலுவலக நேரங்களில் 2024 ஜூலை 22 ஆம் திகதியன்று மதியம் 12 மணியிலிருந்து 2024 செப்டம்பர் 3 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையுமாகும்.
9. இந்த விலைமனுக்கோரல் தொடர்பாக ஏற்படும் எந்தவொரு சிக்கல்களுக்கான தெளிவுறுத்தல் மற்றும் விடை ஆகியவற்றை தெளிவுபடுத்துவதற்கான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று 2024 ஓகஸ்ட் 6 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு இலங்கை, கொழும்பு - 1, சைத்திய வீதி, 19ஆம் இலக்கத்திலுள்ள துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, முதலாம் மாடி, மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஆர்வமுள்ள சாரார் மற்றும்/ அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அழைக்கப்படுகின்றனர்.
10. ஒவ்வொரு இழுவைக்கும் 50,000 அ.ஐ. டொலர் (50,000 அஐடொ) கேள்விப் பிணையாக இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன் 2024 செப்டம்பர் 3 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் விலைமனுதாரர்களுக்கான அறிவுரைகளுக்கு அமைவாக தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு, துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமானசேவைகள் அமைச்சு, இல. 19 சைத்திய வீதி, கொழும்பு-1, இலங்கை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலமாக சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு விலைமனுவும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாமல் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அதன் பின்னர் உடனடியாகவே பகிரங்கமாக அதே நாளில் விலைமனுதாரர் மற்றும்/அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. விலைமனுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆகியன தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவுகள் அல்லது செலவினங்களுக்கு அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு அல்லது இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது எவ்வித பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

**தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக் குழு,
துறைமுகங்கள், கப்பற் சேவைகள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு,
இல.: 19, சைத்திய வீதி,
கொழும்பு-01,
இலங்கை.**



## அறிவித்தல்

## அழகியற்கலைப் பல்கலைக்கழகம்

**தகைமைப் பரீசீலனைக்காக விண்ணப்பங்களைக் கோரல்**

**பல்கலைக்கழக அனுமதி – 2023/2024 கல்வியாண்டு
கற்புல செவிப்புல கலைஞர்/ காட்சிக் கலைஞர் (சங்கீதம்/நடனம்/ நாடகம் மற்றும் மேடைக் கலை) கௌரவ பட்டதாரி பாடநெறி
(2023 க.பொ.த உ.தர பெறுபேறின் அடிப்படையில்)**

2023ம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அழகியற்கலை பல்கலைக்கழகத்தின் 2023/2024" கல்வியாண்டிற்காக கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பல்கலைக்கழக அனுமதிக்காக தகைமை பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள அபேட்சகர்களிடமிருந்து, தகைமை பரிசீலனைக்காக 2024 ஜூலை 22 முதல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. அனுமதிக்குத் தேவையான குறைந்தபட்ச தகைமைகள்.**

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்பட்டுள்ள "இலங்கைப் பல்கலைக்கழகம், ஆரம்ப பட்டப் பாடநெறிக்காக அனுமதி, கல்வியாண்டு 2023/2024

(க.பொ.த உயர் தரப் பரீட்சை 2023) மாணவர் கைநூலின் பிரகாரம் பல்கலைக்கழக பிரவேசத்திற்கு பூர்த்தி செய்ய வேண்டிய குறைந்தபட்ச தகைமைகளை பூர்த்தி செய்துள்ள

மற்றும்

சித்திரம் மற்றும் ஓவியக் கலை/சங்கீதம்/நடனம்/நாடகம் மற்றும் மேடைக் கலை போன்ற பாடங்களை பயில்வதற்கு எதிர்பார்க்கின்ற கல்விப் பாடநெறியுடன் சம்பந்தப்பட்ட பாடத்திற்கு 2023 க.பொ.த(உயர் தரம்) பரீட்சையில் குறைந்தபட்சம் திறமை (C) சித்தியுடன் தோற்றியுள்ள பாடங்கள் மூன்றிலும் சித்தியடைந்திருத்தல்.

க.பொ.த. உ.த 2023 பரீட்சைப் பெறுபேறுகளை மீள் பரிசீலனைக்காக அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளும் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(ii) பல்கலைக்கழக பிரவேசத்திற்கு தேவையான மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள மாணவர்கள் அதற்கு மேலதிகமாக அழகியற்கலை பல்கலைக்கழக அனுமதியைப் பெறுவதற்காக பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் தகைமைப் பரீட்சையிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**02. விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக உத்தியோகபூர்வ இணையதளமான www.vpa.ac.lk இற்கு பிரவேசித்து "Aptitude Test - 2023/2024" ஊடாக பல்கலைக்கழக கல்வி முகாமைத்துவ அமைப்பு (EMS)இல் பிரசுரிக்கப்பட்டுள்ள விண்ணப்பத்தை ஒன்லைன் முறையில் (Online) பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கக் கூடிய இறுதித் திகதி 2024 ஓகஸ்ட் 05 ஆகும்.

**03. கொடுப்பனவுகள் செலுத்த வேண்டிய முறை**

தகைமைப் பரீட்சைக்கு தோற்றுகின்ற விண்ணப்பதாரிகளில் ஒரு பாடநெறிக்காக ரூ.2000.00 கட்டணம் அறவிடப்படும். அக் கொடுப்பனவுகள் அழகியற்கலை பல்கலைக்கழகத்தின் பெயரில் இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்கக் கிளையில் உள்ள இலக்கம் 84072227 என்ற கணக்கிற்கு இலங்கை வங்கியின் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் மேற்கொள்ளலாம். வங்கிக் கிளைக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது, விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு கிடைக்கும் அனுமதி இலக்கம் (Admission Number) மற்றும் உங்களது தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிடுதல் கட்டாயமாகும். காசு வைப்பு இயந்திரம் (CDM) மூலம் மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் செல்லுபடியாகாது.

க.பொ.த (உ.தரம்) அழகியற்கலை பாடங்கள் இரண்டிற்காக தோற்றி அப்பாடங்கள் இரண்டிலும் தகைமைப் பரிசீலனைக்காக தோற்றுவதற்கு எதிர்பார்க்கின்ற அபேட்சகர்கள் அவ் இரு பாடங்களையும் குறிப்பிட்டு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். இரு பாடங்களுக்கும் இரு கொடுப்பனவுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் அங்கு ஒவ்வொரு பாடத்திற்கும் கிடைக்கும் அனுமதி இலக்கங்கள் (Admission Numbers) இரண்டையும் குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

தகைமைப் பரீட்சைக்காக அனுமதிப் பத்திரங்கள் க.பொ.த (உ.த) பெறுபேறு மற்றும் கொடுப்பனவுகளை உறுதி செய்த பின்னர் விநியோகிக்கப்படும்.

விண்ணப்பதாரிகள் இங்கு குறிப்பிடும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை பல்கலைக்கழகத்தினால் ஏதேனும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கும் போது அறிவித்தால் சமர்ப்பிப்பதற்கு பாதுகாப்பாக தம்மிடம் வைத்திருத்தல் வேண்டும்.

(i) கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்ட குறித்த பற்றுச்சீட்டு
(ii) தேசிய அடையாள அட்டை
(iii) 06 மாதத்திற்குள் இளம் நீலநிற பின்னணியில் பெற்றுக் கொண்ட தெளிவான நேரான பாஸ்போர்ட் அளவான புகைப்படம்
(iv) 2023 க.பொ.த உயர் தர பெறுபேற்று அட்டவணை.

04. பூர்த்தியற்ற அல்லது பிழையான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான வேளையில் விண்ணப்பதாரிகளால் செலுத்தப்பட்டுள்ள கட்டணங்கள் மீளளிக்கப்பட மாட்டாது. குறித்த அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்காது சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமான பொறுப்பு பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட மாட்டாது.

05. அழகியற்கலை பல்கலைக்கழக பிரவேசத்திற்கு தகைமைப் பரீட்சைக்கு தோற்றுகின்ற சகல மாணவர்களும் பல்கலைக்கழக பிரவேசத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

06. இந்த தகைமைப் பரீட்சைக்கான பரீட்சை அனுமதிப் பத்திரத்தை, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் மின்னஞ்சல் இற்கு மாத்திரம் அறிவிக்கப்படுவதுடன் தபால் மூலம் அறிவிக்கப்படமாட்டாது. இத் தகைமைப் பரீட்சை சிங்கள மொழியில் மாத்திரம் நடத்தப்படும்.

07. மேலதிக விபரங்களுக்கு பல்கலைக்கழக இணையதளம் (www.vpa.ac.lk) இல் உள்ள "Aptitude Test 2023/2024" இற்கு பிரவேசியுங்கள்.

**பதிவாளர் (பதில்)
அழகியற்கலை பல்கலைக்கழகம்,
தொ.பே.இல.: 0112033710/ 0112026784 - EX - 1005
2024.07.17**

SPMC

# வெற்றிடங்கள்

## அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

## சுகாதார அமைச்சு

**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்திலுள்ள பின்வரும் வெற்றிடங்களுக்காக தேவைப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

1. சட்ட அலுவலர் (எம்எம் 1-1)
2. நிருவாக அலுவலர் (ஜேஎம் 1-1)
3. சந்தைப்படுத்தல் அலுவலர் (ஜேஎம் 1-1)
4. மருந்தாக்க தொழில்நுட்பவியலாளர் - உற்பத்தி செய்தல் (எம்ஏ 2-1)
5. திட்டமிடல் மற்றும் கொள்முதல் உதவியாளர் (எம்ஏ 2-1)
6. தகவல் தொழில்நுட்பவியலாளர் (பல்லூடகம்) (எம்ஏ 2-1)
7. கொதிகலன் இயக்குநர் மற்றும் பயன்பாடு தொழில்நுட்பவியலாளர் (எம்ஏ 2-1)
8. தாதி (எம்ஏ 2-1)
9. மருந்தாக்க முழுமையாக்கல் பணி உதவியாளர் (Complete Aide) (பிஎல்-2)
10. பணி உதவியாளர் (பிஎல்-1)

**விண்ணப்பிக்கும் நடைமுறை:**

இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுள் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை வந்தடையும் தன்மையில் பதிவுத் தபால் மூலமாக இணையதளத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டிகளுக்கமைவாக விண்ணப்பங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும். அரசாங்க திணைக்களம் மற்றும் நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அவர்களின் நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தெரிவு செய்யப்படின் விண்ணப்பதாரியானவர் பணியை பாரம் எடுப்பதற்காக விடுவிக்கப்படுவாரா என்பதையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள தேவைப்படுத்தல்களுக்கு இசைவில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை,**
**கந்தவள பெருந்தோட்டம் - இரத்மலான.**
**21.07.2024.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை

01. தோராயமாக 16 மில்லியன் ரூபா (வெட் இன்றி) செலவு கொண்டதாக மதிப்பிடப்பட்ட கீழ் விபரிக்கப்பட்டவாறு, வெளிப்புற அரங்கில் எல்லை வேலி நிர்மாணத்தின் எஞ்சிய வேலைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை சார்பில், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

    தற்போதுள்ள சுவரை தகர்த்தல், அகழ்வு, கொங்கிறீட் வேலைகள், எழுமாற்று உடை கல் கட்டு வேலைகள், உருக்கு வேலைகள் மற்றும் அது சார்ந்த வேலைகளை இந்தப் பணி கொண்டிருக்கும். திட்டத்தின் காலம் 90 நாட்கள்.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்தப் பெறுகையின் மதிப்பிடப்படும் மொத்த செலவு 50 மில். ரூபாவாக இருக்கும் வரை, 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு, பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

03. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் C-5 மற்றும் C-6 பிரிவின் கீழ் கட்டிட வேலைகளுக்காக பிரதான ஒப்பந்ததாரராக ICTAD பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்குத் தேவையான தகைமையில் பின்வருவன உள்ளடங்கும்.

    (i) கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட நிர்மாண பணியின் சராசரி ஆண்டு பெறுமதியின் குறைந்தபட்சத் தேவை குறைந்தது 25 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

    (ii) மற்ற ஒப்பந்தக் கடப்பாடுகளின் நிகர திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 8 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும் என்பதோடு அது இந்தத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக கிடைக்கப்பெறுதல் வேண்டும்.

05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, கொள்முதல் அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பெறுகைப் பிரிவில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

06. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, கணக்காளருக்கு 3,500.00 ரூபா (வெட் உட்பட) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.07.22 ஆம் திகதி தொடக்கம் 2024.08.09 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் மாத்திரம் இருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்களை 2024.08.12 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கணக்கு பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் 160,000.00 ரூபா விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் (செல்லுபடிக் காலம் 2024.08.12 ஆம் திகதி தொடக்கம் 2024.11.25 ஆம் திகதி வரை 105 நாட்கள்)

09. விலைமனு செல்லுபடிக் காலம் 77 நாட்கள் (2024.08.12 - 2024.10.28)

    விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கொழும்பு-13, ஆர்தர் டி சில்வா மாவத்தை, சுகததாச உள்ளக அரங்கு, நிர்வாகக் கட்டிடத்தில் 2024.08.05 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை**
**ஆர்தர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 13.**

**தொலைபேசி: 0112445677/ 0706130199**
**தொலைநகல் இலக்கம்: 0112445675**
**மின்னஞ்சல் - psnsca@yahoo.com**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## போகம்பர அரங்கில் தற்போதுள்ள கட்டிடங்களின் புனரமைப்பு

01. தோராயமாக 20 மில்லியன் ரூபா (வெட் இன்றி) செலவு கொண்டதாக மதிப்பிடப்பட்ட கீழ் விபரிக்கப்பட்டவாறு, போகம்பர அரங்கில் தற்போதுள்ள கட்டிடங்களின் புனரமைப்புக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை சார்பில், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

    அகழ்வு, கொங்கிறீட் வேலைகள், கட்டிடம் மற்றும் கூரை சீரமைப்பு, உருக்கு வேலைகள், வர்ணம் பூசுதல், குழாய் பொருத்தல் வேலைகள், தீ அணைக்கும் கருவியின் நிறுவல் மற்றும் அது சார்ந்த வேலைகளை இந்தப் பணி கொண்டிருக்கும். திட்டத்தின் காலம் 90 நாட்களாகும்.

02. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்தப் பெறுகையின் மதிப்பிடப்படும் மொத்த செலவு 50 மில். ரூபாவாக இருக்கும் வரை, 04/2016(ii) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு, பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.

03. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் C-5 மற்றும் C-6 பிரிவின் கீழ் கட்டிட வேலைகளுக்காக பிரதான ஒப்பந்ததாரராக ICTAD பதிவை பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

04. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்குத் தேவையான தகைமையில் பின்வருவன உள்ளடங்கும்.

    (i) கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட நிர்மாண பணியின் சராசரி ஆண்டு பெறுமதியின் குறைந்தபட்சத் தேவை குறைந்தது 80 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

    (ii) மற்ற ஒப்பந்தக் கடப்பாடுகளின் நிகர திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்ச தொகை 10 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும் என்பதோடு அது இந்தத் திட்டத்திற்காக பிரத்தியேகமாக கிடைக்கப்பெறுதல் வேண்டும்.

05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, கொள்முதல் அலுவலகத்தில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 3.00 வரை பெறுகைப் பிரிவில் விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.

06. சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, கணக்காளருக்கு 3,500.00 ரூபா (வெட் உட்பட) மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2024.07.23 ஆம் திகதி தொடக்கம் 2024.08.12 ஆம் திகதி வரை மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை தலைவருக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் மாத்திரம் இருத்தல் வேண்டும்.

07. விலைமனுக்களை 2024.08.13 ஆம் திகதி மு.ப. 11.00 அல்லது அதற்கு முன்னர் சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை, தலைவருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் கணக்கு பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.

08. விலைமனுக்கள் 200,000.00 ரூபா விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் (செல்லுபடிக் காலம் 2024.08.13 ஆம் திகதி தொடக்கம் 2024.11.11 ஆம் திகதி வரை 90 நாட்கள்)

09. விலைமனு செல்லுபடிக் காலம் 77 நாட்கள் (2024.08.13 - 2024.10.28)

    விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு கண்டி, எஹலபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர அரங்கு, நிர்வாகக் கட்டிடத்தில் 2024.08.02 ஆம் திகதி மு.ப. 10.30க்கு இடம்பெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத்தொகுதி அதிகாரசபை**
**ஆர்தர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 13.**
**தொலைபேசி: 0112445677/ 0706130199**
**தொலைநகல் இலக்கம்: 0112445675**
**மின்னஞ்சல் - psnsca@yahoo.com**

# பல்கலைக்கழக நுழைவு
# 2023/2024 கல்வி ஆண்டு

## விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் (விசேட) விஞ்ஞானமாணிப் பட்டப் பாடநெறி

### மொழி மூலம் - ஆங்கிலம்

மேற்படி பாடநெறியின் பொருட்டு தகைமையுடைய விண்ணப்பதாரர்களிடமிருந்து நுண்ணறிவு பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி நுண்ணறிவு பரீட்சை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், மற்றும் களனி பல்கலைக்கழகம் ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களும் இணைந்து நடாத்தும் பரீட்சையாகும். விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவப் பாடநெறிக்கு மட்டும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், நுண்ணறிவுப் பரீட்சைக்காக மேற்படி விண்ணப்பங்களை அனுப்பி வைத்து தங்களின் விருப்பப்படி ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம், மற்றும் களனி பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் மூன்றில் ஒரு பல்கலைக்கழகத்திற்கு நுண்ணறிவுப் பரீட்சைக்காக தோற்ற வேண்டும்.

மேற்படி பாடநெறி தொடர்பான மேலதிக விடயங்கள் விண்ணப்பிக்கும் முறை தகைமைகள் விண்ணப்பப் படிவம் மற்றும் தேவையான ஏனைய ஆவணங்கள் என்பவற்றை பின்வரும் இணையதள முகவரியினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**www.sjp.ac.lk (ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)**

**விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் வழங்கப்பட்ட இணைப்பின் மூலம் நிகழ்நிலை (Online) முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.** அத்துடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் பொழுது கங்கொடவில மக்கள் வங்கி கிளை 097-1-001-7-001-4075 என்ற **மக்கள் வங்கியின் கணக்கிலக்கத்திற்கு 1650/= ரூபாவை** வைப்புச் செய்து, அப்பற்றுச்சீட்டை ஸ்கேன் முறையில் பிரதியெடுத்து (Scan Copy) அதனை விண்ணப்பத்துடன் சேர்த்து நிகழ்நிலை (Online) முறையில் பதிவிறக்கம் (Upload) செய்ய வேண்டும்.

விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித்திகதி - **ஜூலை 30, 2024.**

நுண்ணறிவு பரீட்சை **2024 ஆகஸ்ட் 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் நடைபெறும்.**

நுண்ணறிவு பரீட்சை பின்வரும் இரண்டு பாகங்களாக பிரித்து முறையே மதிப்பிடப்படும்,

| தேர்வு பாகங்கள் | தேர்வுச் செயன்முறை | மதிப்பெண்கள் ஒதுக்கீடு |
|---|---|---|
| உடல் தகுதி சோதனை | விண்ணப்பதாரர்களின் உடல் தகுதி ஆறு சோதனைகள் மூலம் மதிப்பீடு செய்யப்படும். | 60% |
| விளையாட்டு சாதனைகள் | விண்ணப்பதாரர்களின் அண்மைய ஆண்டுகளில் (2018 - 2024) சர்வதேச, தேசிய, மாகாண, மாவட்ட மற்றும் மண்டல மட்டங்களில் கிடைத்த விளையாட்டு சாதனைகள், சான்றிதழ்கள் மூலம் மதிப்பீடு செய்யப்படும். | 40% |

**பதிவாளர்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொடை.**
**15/07/2024**

# அநுரவுக்கு மஹிந்த விடுத்த அழைப்பு

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

“எப்படி இருக்கிறீர்கள் அனுரா, நான் அறைக்குப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என மஹிந்த ராஜபக்ஷ கேட்ட போது, அதற்குப் பதிலளித்த அநுர, "ஹா சேர், போகலாம்” என்று கூறிவிட்டு மஹிந்தவுடன் லிஃப்டில் ஏறினார்.

“சேரை குருநாகலில் போட்டியிடுமாறு கேட்டது நான்தான்” என அநுர யாப்பா கூறினார்.

“அதனால்தானே நான் குருநாகலில் போட்டியிட்டு ஜெயித்தேன்” என பதிலளித்த மஹிந்த, “இனி நீங்களும் எமது பக்கத்திற்கு வாருங்கள்” என அநுரவிற்கு விடுத்த அழைப்புக்கு அநுர சிரித்தார்.

### பொன்சேகாவின் இடம் இம்தியாசுக்கு

ஐக்கிய மக்கள் சக்தியின் புதிய தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நியமிக்கப்படவுள்ளதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான மூத்த அரசியல்வாதியாக இனங்காணப்பட்டுள்ள இம்தியாஸ் பக்கீர் மாக்கார் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் பிரதிநிதியாக வருவார் என அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

### அனுரவுக்கு வஜிரவிடமிருந்து பதில்

அண்மையில் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் என்னைச் சுட்டிக்காட்டி, ரணில் விக்கிரமசிங்கவை 10 வருடங்களுக்கு இந்த நாட்டை ஆட்சி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று நீங்கள் கூறியுள்ளீர்கள்தானே? எனக் கேட்டார். நான் எழுந்து நின்று, இந்த நாட்டை அவருக்கு 10 வருடங்களுக்கு அல்ல, 12 வருடங்கள் கொடுக்க வேண்டும் எனக் கூறினேன். ஏனெனில் அது நடந்தால்தான் இந்த நாட்டை ஆசியாவிலும் உலகிலும் சக்தி வாய்ந்த நாடாக மாற்ற முடியும். நான் அதை நகைச்சுவைக்காகச் சொல்லவில்லை.

இந்த நாட்டை ஆட்சி செய்வதற்குப் பொருத்தமான வேறு ஒருவர் இருக்கிறாரா என இந்நாட்டு மக்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஜனாதிபதி வேட்பாளர்கள் ஏராளமானோர் இருக்கின்றார்கள். எனினும் அவர்களால் இந்நாட்டை ஆள முடியுமா? போட்டியிடுபவர்கள் வெட்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கூறினார்.

### நாமல், ஷாருக்கான் , சல்மான்கான் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு

உலகளவில் பேசப்பட்ட அம்பானி குடும்ப திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்கான அழைப்பிதழ்கள் இலங்கையில் நாமல், லிமினி, மஹேல ஜயவர்தன ஆகியோருக்கு மாத்திரமே கிடைத்திருந்தன. இதன் போது ஷாருக் கான், சல்மான் கான் மற்றும் ரித்தீஷ் தேஷ்முக் ஆகியோர் நாமலுடன் திருமண விழாவில் சந்தித்துத்துக் கொண்டதோடு அவர்களிடையே உரையாடலும் இடம்பெற்றது. அம்பானி குடும்பத்துக்கு சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சல்மான் கானே நாமலை அறிமுகப்படுத்தி வைத்திருந்தார். அத்துடன் ஷாருக்கானும் நாமலின் நீண்டகால நண்பராவார். இவர்கள் அங்கு வைத்து பல விடயங்கள் தொடர்பில் உரையாடலில் ஈடுபட்டதோடு, திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட அம்பானியின் மகனுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு நாமல் நாடு திரும்பினார்.

### மின், நீர் கட்டணங்களைக் குறைத்த விதம்

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான சட்டங்களைப் பாராளுமன்றம் நிறைவேற்றியதன் காரணமாகவே அரசாங்கத்தினால் நீர் மற்றும் மின்சார கட்டணங்களைக் குறைக்க முடிந்ததாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

தெபரவெவ, திஸ்ஸமஹாராம, ஜனாதிபதி கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற "நடமாடும் சேவை" நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதோடு, சட்டமூலம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் போது அதற்கு ஆதரவளிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில தரப்பினர் அச்சுறுத்தல் விடுப்பதாகவும் கூறினார்.

தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## WATTALA

Commercial residential 96 perches. 5000 sq.ft. house 4000 sq.ft. stores shop 3 phase electricity, facing main road, 12 ft high parapet wall, security fence around the property, 40 ft Container access close to kiribathgoda kelaniya. No Brokers 3.5 Mil P/P Negotiable

0777 841 976, 0777 586 588

## WANTED

LANDS, HOUSES ON RENT AND HOUSES FOR SALE

in Nawala, Nugegoda, Battramulla, Boralesgamuwa, Piliyandala, Maharagama mount Lavinia areas

Contact - 0112 816 316

## House for Sale AT NAWALA ROAD

Two independent units with separate electricity and water, 10.3 Perches
Upper Floor – 1800 sq.ft.
Ground Floor – 1866 sq.ft.
Total 6 Bedrooms with attached Bathroom & Two additional maid's bathroom.
Two vehicle parking slots and a storeroom.

Contact -0773 323 123

## Bare Land in Delgawatte

Salamulla, Kolonnawa

12.5P, Ideal for a housing unit. Flood free area. Close proximity to Super market, school and 2 minutes walking distance to bus stand.

Contact -0773 323 123

## IN MOUNT LAVINIA

5th Floor Apartment for Sale

2 Bed, 2 Bath, 960 Sq. Ft., fully furnished apartment with Gym and Sea view.
Close to Arpico - Dehiwala.

077 30 20 204 / 077 3 960 733

## Sun Lanka SANY



Brand New
stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

## Looking For a Reliable Company to RENT YOUR CAR ?



MALEESHA AUTO RENTALS
Best Rates/Trustworthy
20+ Years in service

MAKE MONEY RENTING YOUR CAR
- Upfront Payments
- Renting for reputed companies Only
- Long Term Rentals
- GPS Mapping

CALL US NOW
0713624663
0767480936

## COMMERCIAL BUILDING FOR LONG TERM

RENT OR LEASE
IN THE HEART OF
NAWALA JUNCTION

7500 SQ.FT., 4 STOREY FULLY AIR CONDITIONED BUILDING WITH BASEMENT PARKING FOR 5 VEHICLES, AN ELEVATOR, 10KV GENERATOR AND A HOUSE WITH 2 BEDROOMS ON THE 4TH FLOOR WITH ACCESS TO ROOF TOP FOR RENT

0722 125 594

## BARE LAND PLOTS FOR SALE SEEDUWA

05 plots of 15-18 perch each available in a residential area
Rs. 1 - 1.2 mn per perch or entire block of 126.8 perch at Rs.850,000.- per perch
Walking distance to the Main Road, Town
Close to the Airport, Highway, Free Trade Zone
Minutes away from the Colombo- Chilaw main road

Please Contact: 077 547 0868

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com

## குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு

நாவல - கொழும்பு-05 எல்லையில் ஆடம்பர 2 மாடி வீடு - 22 பேர்ச்சுக்களில். கொழும்பகே மாவத்தையிலுள்ள முதன்மையான அமைவிடம். 4 படுக்கையறைகள், அவற்றுள் 2 இணைக்கப்பட்ட குளியலறைகள், 6-8 வரையிலான வாகன தரிப்பிடம். இரு வீதி முலை புளொக். கார்கில்ஸ், லங்கா வைத்தியசாலை ஆகிவற்றிற்கு அருகாமையில்.
**வெளிநாட்டவர்களுக்கு பொருந்தும், குடிமனை அல்லது வர்த்தக நோக்கங்களுக்கானது.**

தொடர்பெண் – 077 7 311 866
hotproperty.lanka@gmail.com

## SUPREME MED (PVT) LTD KOTTAWA

සෞඛ්‍යානුකූලව නිෂ්පාදනය කරන

1. Hair Cap / Doctor Cap
2. Apron (Polythene)
3. Shoe Cover
4. Polythene Glove 5. Scrub kit

ආරෝග්‍යශාලා, **Hotel** කර්මාන්තයට, **Garment** සඳහා අපගේ උසස් තත්ත්වයේ නිෂ්පාදන සඳහා, තොග ගැණුම්කරුවන්ට අවශ්‍ය නිෂ්පාදන සඳහා විමසන්න.

EXPORT ORDERS ARE ALSO UNDERTAKEN




0777 893 646 / 0112 899 411

## VisaWise Expert



MAKE YOUR DREAM COME TRUE

GET UK VISA

Work Visa | Student Visa
Tourist Visa | Carer Visa

visawise.expert@gmail.com
https://www.facebook.com/VisaWiseExpert
+44 7523303022 / +44 7861377348/ +94 777266667

BASED IN UK,
MANAGE BY HIGH PROFESSIONALS

## OFFICE SPACE FOR LEASE

SINO LANKA TOWER

No. 1090, Sri Jayawardenapura Mawatha, Rajagiriya
**(Facing to Main Road)**

FLOORS ARE AVAILABLE FOR RENT AS FOLLOWS,
6000 sq.ft. x 6 Floors. 2000 sq.ft. x 4 Floors.

Common Dining area with Pantry. 55 Car parking slots including visitors parking. Stand by Generator and 3 Elevators Available

ISO 41000 (Expecting from 1st August 2024 onwards)

CONTACT
Sampath 0779 615 226, Vasanth 0777 925 215

## 8 ACRES OF COCONUT LAND & PRIVATE FARM HOUSE FOR SALE

CONTAINING A COCONUT LAND & PRIVATE FARM HOUSE WITH COOPS, VEGETABLE, FRUITS, COCONUTS, FOR SALE

Turmeric, Ginger, Cabbage, Beet, Chillie, Brinjals, Carrot, Banana, Pineapple, Durian, Rambutan, Mangoes, Jak, Cashew, Olives, Teak, Mahogany



BANK APPROVED LOAN FACILITIES
CLEAR DEED, SURROUNDED BY ROADS
15 MINUTES FROM KATUNAYAKE

Contact : 0775 448 482

## Gihan's Beach Resort

*We are open From 11.00 a.m. to 11.00 p.m.*

Beach View Restaurant
(Thai / Chinese / Indian / Sri Lankan Food)
VVIP Wedding / Function Hall
Beach Parties
Private A/C Party Halls
Rooftop Garden
Outdoor Catering
VVIP Beach Front Rooms




*Please call us or WhatsApp us to get the best rates:*

0718 712795, 0774 745333, 0112 729967, 0112 729971

*Web Site - www.gihansbeach.com | facebook - Gihan's Beach Resort*

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 210 வியாபார ஸ்தலம் தேவை

பொரளை - ராஜகிரிய பிரதேசத்திற்குள் 2000 சதுர அடி 20 அடி கொள்கலன் பிரவேசிக்கக் கூடிய களஞ்சியம் வாடகை அடிப்படையில் தேவை. தொலைபேசி - 070 4323558. 049152

### 237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதி நவீன சுவீஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக்கூடிய காதுகேள் கருவிகளை விக்ரமாராச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகேள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ.55, 000 முதல் எம்மிடம் காதுகேள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம், மேலதிக தகவல்களுக்கு : 0112201700 049054



## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

சுத்திகரிப்பு ஆண்/ பெண் ஊழியர் வெற்றி டங்கள். 20 வ யதிற்கும் 45 வய திற்கும் இடைப்பட்ட ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதிகள் மற்றும் உணவு பானங்கள் இலவசம். சீருடை இலவசம். கவர்ச்சியான சம்பளத்துடன் மேலதிக நேர கொடுப்பனவுகள். சுத்திகரிப்பு மற்றும் பராமரித்தல் வேலைகள் பற்றிய அனுபவம் மற்றும் கடும் நம்பிக்கை, ஆர்வம் உள்ள உங்க ளுக்கு கல்வித் தகைமைகள் முக்கியமில்லை. அழையுங்கள் தொ.பே. இலக்கம் - 0766845349. (நாட்டின் எப்பாகத்தில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம்.) 046172

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பிலுள்ள வீடொன்றிற்கு பணிப்பெண் தேவை. சுத்தம் செய்தல் வேண்டும். கீழேயுள்ள இலக்கத்திற்கு கதைக்கவும். வசதிகளுடனான தனி அறையுடன் மாதச் சம்பளம் 40, 000/=. 0773925898. 047928

கொழும்பு தலவ த்துகொட வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு பெண் தேவை. சம்பளம் 40, 000 - 45, 000 அனுபவத்தின் பிரகாரம் - வயது 55 இற்கு குறைந்தவர்கள். 0777 584961, 0777 456579. 049064

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

கோழிப் பண்ணைக்கு தொழிலாளர்கள் தேவை. அடையாள அட்டை, கிராம அதிகா ரி சான்றிதழ் தேவை. உணவு, தங்குமிட வசதி கள் உண்டு.078 - 5354270 049012

### 325 தொழில்துறை பொது

தங்கியிருக்கக்கூடிய தாதி/ தகைமையுள்ள கண்காணிப்பாளர் (பெண்)/ வீட்டுப் பணிப்பெண் கொழும்பு 08 இற்குள் தேவை. வயது 45 இற்கு கீழ். அழையுங்கள் 071-7969373. 049146

பா ணந்துறையிலுள்ள பைசிக்கள் தொழிற்சாலைக்கு உதவி களஞ்சிய பொறுப்பாளர் ஒருவர் தேவை. இப்பிரதேசத்திலுள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆங்கிலம் பேசுவதற்கும், எழுதுவதற்கும் தெரிந்திருத்தல் வேண்டும். கொழும்பு-12, டாம் வீதி, 74ஆம் இல க்கத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு வரவும். 047953

கொள்ளுப்பிட்டி, பி ளாவுஸில் உத வியாளர்கள், சுத்திகரி ப்பாளர்கள், தே நீர் ஊற்றுபவ ர்/ பீங்கான் கழுவுபவர்கள், பான்ரி சுத்தம் செய்வோர் மற்றும் வெயிட்டர்கள் தேவை. தயவு செய்து 0742434127, 0770745379 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 048462

## காணி/தோட்டம்

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா நகர மத்தியில் 25.5 பேர்ச் உடன் 2 500 சதுர அடி புதிய வீடு விற்பனைக்கு, கம்பஹா - கொழும்பு பாதையிலிருந்து திரும்பிச் செல்லும் சியனே வீதி/ கஜபா வீதி/ பள்ளி வீதி போன்ற மூ ன்று பாதைகளும் இணையும் லக்ஷ்மி வீதியில் 100M தூரத்தில் அமைந்துள்ளது. இரண்டு வாகனங்கள் மாறக்கூடிய பிரவேச வீதி, எல்காடோ ரோலர் கேட் மற்றும் சிறிய கேட்டுடன் சுற்றிவர மதில் 05 வாகனங்கள் மட்டில் நிறுத்தக் கூடிய இடவசதி (பெறுமதி 65 மில்லியன்)சரத்பத்ம குமார - 071 - 4171512, 077 - 7481483 049013

கல்எலிய வெல்லவில-முல்ல முஸ்லிம் கிராமத்திற்கு அருகில் 60 பேர்ச் காணி மற்றும் 10 பேர்ச் உடன் 2 வீடுகள். தம்வில்லாவைக்கு செல்லும் பாதைக்கு முகப்பாக உள்ளது. கிணற்று நீர், மின்சாரம், விளைச்சல் உள்ள காணியாகும்,071 - 2852563 048619

நீர்கொழும்பு வீதிக்கு ஒரு கி லோமீற்றருக்கும் குறைவான வெலிச ர இறைச்சிக்கடை சந்தி பியூகி பிளாஸா ஹோட்டலுக்கு அருகில் கன்டைனர் யார்ட் வீதி 54/37 நுககஹவத்த, 20 பேர்ச் வீடு வி ற்பனை க்கு . 0714820450, 0716799666 048814

வத்தளை, கொழும்பு - 07 பேர்ச் காணியில் அமைந்துள்ள 3 படுக்கையறைகள், மரத்தளபாடங்களுடனான புதிய மேல்மாடி வீடு வி ற்பனைக்கு, வத்தளை சந்திக்கு ஒரு நிமிட தூரம். 55.6 மி ல்லி யன். 0776434870 048614

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

12 பேர்ச் வர்த்தக காணி குத்தகைக்கு - கொழும்பு 13. மாதாந்த வாடகை 350, 000/ - (மாதாந்தம்) (பேசித்தீர்க்கலாம்) பிரதா ன வீதிக்கு 200 மீ - புதிய நீர்கொழும்பு வீதிக்கு 800 மீ டி சேரம் கேட்டிற்கு - இலங்கை சுங்கம்தொடர்பிற்கு - 0772006799/ 0769006799 049041

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

# இந்திய – இலங்கை பௌதீக இணைப்பு; பாத்ஃபைண்டர் அறிக்கை முன்னாள் அவுஸ்திரேலிய பிரதமருக்கு

மிலிந்த மொரகொட முன்னாள் அவுஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மொரிசனிடம் பாத்ஃபைண்டர் அறக்கட்டளையின் இந்தியா இலங்கை பௌதீக தொடர்பு பற்றிய ஆய்வுக் குழு அறிக்கையின் பிரதியை கொழும்பில் வழங்கினார்.

பதவியில் இருந்த காலத்தில், பிரதமர் ஸ்காட் மொரிசன் பொதுவாக இந்தோ பசிபிக் பிராந்தியத்துடனும், குறிப்பாக இந்தியாவுடனும் அவுஸ்திரேலியாவின் உறவை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.

ஆய்வுக் குழுவுக்கு நெடுஞ்சாலைகள் மற்றும் போக்குவரத்து அமைச்சின் முன்னாள் செயலாளர். எந்திரி ஆர். டபிள்யூ. ஆர். பேமசிறி தலைமை தாங்கினார். புதுடில்லியில் உள்ள பாத்ஃபைண்டர் அறக்கட்டளை மற்றும் அனந்தா ஆஸ்பென் மையம் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் இந்த அறிக்கை முறைப்படி வழங்கப்பட்டது.





குருபூர்ணிமா தினம் கொழும்பு, புதுச்செட்டித் தெரு சாயி மத்திய நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என். உதயநாயகன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சிறப்பு அதிதியாக சமூக சேவையாளர் பிரபா மாணிக்கவாசகர் கலந்து கொண்டார். இதன்போது எடுக்கப்பட்ட படங்களை காணலாம்.





தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz போட்டோ குறும் விளம்பரம்



Toyota Landcruiser V8 Petrol 2009/2013 WP CAB fully loaded Petrol, 4500cc V8, Sunroof, Hight control, Dual A/C, 360 cam, Rs. 55 million 0725 758 266 kus-1



Toyota Vitz 2017/2018 Edition 2 wp CBC full option, automatic transmission, push start Rs 8,475,000 0777 840 141 kus-2



Nissan Xtrail 2015 hybrid petrol, fully loaded, 4wd, first owner, sunroof, power boot etc Rs. 11,700,000/- 0777 840 141 kus-3

DON'T TXT & DRIVE



Daihatsu Rocky wp FZ ex embassy vehicle, 1994 registered, 2800cc intercooler turbo diesel, manual, 4wd, full option, Android multi media,new tyres, mint condition 0777 840 141 kus-4



Mitsubishi Montero V6 2004 brand new imported, 3000cc V6 Petrol, beige interior with 7 seater, sunroof, line AC, Tiptronic transmission, 4wd, alloy wheels, 6 airbags, Android multi media player etc, immaculate condition, home used 07778 40 141 kus-5



Nissan X trail 2015 brand new imported. 2nd owner 4wd vehicle is in immaculate condition. Can be seen at colombo 5 0775448482 kuk-2



Sangyoung Rexton 2014 imported & maintained through Micro Cars, fully loaded version, black leather interior with electric memory seats, Tiptronic transmission, 4wd, Dual AC, 18" alloy wheels, new tires, Lenovo android multi media player with R cam, multi function steering, cruise control, Sunroof, first owner immaculate condition Rs. 11,800,000/-. 32A Mirihana Road Nugegoda. 0779 232 207, 0779 232 207 kus-6



Toyota Hilux 2011 HL2 brand new imported, 2500cc intercooler Turbo diesel, Manual transmission, 4wd, Rs 10,800,000/- first owner, 0777 840 141 kus-7



Kia Sportage 2013 Brand new imported.2000cc Diesel automatic. 2nd owner.96,000km genuine mileage with company maintained records. 04 Brand new tyres. Multifunctional steering. Black leather electric seats. Android setup.Accident free. Absolute beauty. 0775448482. kuk-1

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

# சிறுவர் உலகம்

சுகந்தி



**புகழ்: நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது**

***தெளிவுரை :***

*புகழுடம்பு மேம்படுதலாகும் வாழ்வில் கேடும், புகழ் நிலை நிற்பதாகும் சாவும் அறிவில் சிறந்தவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு இல்லை.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 123

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | | 13 |
| | 14 | | 15 | | 16 |
| 17 | 18 | 19 | | 20 | 21 |
| 22 | 23 | | 24 | 25 | |

பெயர் ..........................................

வகுப்பு ..........................................

தொலைபேசி இல ..........................................

பாடசாலை பெயர் ..........................................

வதிவிட முகவரி ..........................................

..........................................

.............................. ..........................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

**(1) அச்சு ஊடகம் இது. செய்திகள், கட்டுரைகள், விளம்பரங்கள் போன்ற பல்வேறு அம்சங்களைத் தாங்கியபடி உங்கள் கரங்களில் தவழ்வது. வாசிப்பின் பயன்களை அள்ளித் தருகின்ற ஊடகம்.**

**(8) சந்திரனுக்கு பல பெயர்கள் உள்ளன. நிலா, நிலவு, அம்புலி, திங்கள் போன்று இதுவும் ஒரு பெயர். (தலைகீழான சொல்)**

**(10) எம்மைச் சூழ உருவாகின்ற பல்வேறு ஒலிகளை உணர்ந்து கொள்வதற்கு உதவுகின்ற புலனங்கம். (தலைகீழான சொல்)**

**(17) ஆற்றுக்குக் குறுக்காக நிர்மாணிக்கப்படுவது இது. ஆற்றை பாதுகாப்பாகக் கடக்க வேண்டுமானால் இதனூடாகச் செல்லலாம். (தலைகீழான சொல்)**

**(20) உழவர்களின் விவசாய உபகரணம். நிலத்தைப் பண்படுத்துவதற்குப் பயன்படுகின்றது. கலப்பை என்றும் கூறலாம்.**

**(22) தன்மை, ஒருமை பெயர்சொல்.**

**(24) நீர்ப்போக்குவரத்துச் சாதனம். ஆறு, குளம் போன்ற சிறிய நீர்நிலைகளில் பயணம் செய்யப் பயன்படுகின்றது.**

**மேலிருந்து கீழ்**

**(1) மைதான விளையாட்டுகள் பலவற்றில் பயன்படுத்தப்படுகின்ற உபகரணம்.**

**(3) விளக்கு எரிவதற்கு எண்ணெய் மாத்திரமன்றி, இதுவும் தேவை.**

**(5) கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பவரை இவ்வாறு குறிப்பிடலாம்.**

**(9) இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் இதுவும் ஒன்று.**

**(11) மக்களைக் காவல் காப்பவன் என்பதால் மன்னனுக்கு இப்பெயரும் வழங்கப்படுகின்றது.**

**(12) தென்னை, பனை, ஈச்சை, கமுகு போன்ற தாவரங்களின் இலையை இவ்வாறுதான் குறிப்பிடுவதுண்டு.**

**(17) தன்மை, பன்மை பெயர்ச்சொல். (தலைகீழான சொல்)**

**(20) உயரத்தில் ஏறிக் கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம்.**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 122

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தீக்கோழி 08. தோடு 11. வான் 13. வில்
15. குரு 18. சாக்கடை 22. குளவி

**மேலிருந்து கீழ்**

01. தீமை 03. கோன் 05. தோகை 08. கருவாடு
10. பாவி 13. குயில் 16. குடை 18. சாவி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 121

### பாராட்டு பெறுவோர்

**1. ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 08E, தாருல் உலூம் மு.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

**2. எம்.எம். ஆஹில்**
தரம் 01A, ஒக்ஸ்போர்ட் கல்லூரி,
இல. 366, நாங்கல்ல, துல்ஹிரிய.

**3. டி. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
இல. 100, உடையார் வீதி, காரைதீவு 02.

**4. கு. துவாரகன்**
தரம் 07C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநிலாவணை - 01.

**5. எம்.ஆர். சுமையா ஸெய்னப்**
தரம் 05, தங்காளை மு.வித்தியாலயம்,
இல. 21, முஸ்லிம் வீதி, தங்காளை.

**6. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**7. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 5B, கைரியா மு.ம. கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் வீதி, மருதானை,
கொழும்பு 10.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 123
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



# பூமியின் பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கிய நிகழ்வு

பூமியில் சுமார் 6.5 கோடி ஆண்டுகளுக்கு முன்பு, நடந்த ஒரு மிகப்பெரிய நிகழ்வு பல உயிரினங்களுக்கு அழிவை ஏற்படுத்தியது. அதில் முக்கியமானதாக டைனோசர்கள் உட்பட பல உயிரினங்கள் அழிவுற்றன. இந்த நிகழ்வுக்குக் காரணமானது பூமியில் விழுந்த மிகப்பெரிய விண்கல்லாகும். இது "கிரீட்டேசியஸ்பேலியோஜீன் (KPg) அசைகம்" என அழைக்கப்படுகிறது.

இந்த விண்கல் சுமார் 10-15 கிலோமீற்றர் விட்டத்தில் இருந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். விண்கல் விழும் போது ஏற்பட்ட சுனாமி, நிலநடுக்கம் மற்றும் தீக்காற்று போன்ற நிகழ்வுகள் மாபெரும் அழிவுகளை ஏற்படுத்தின.

இதனால் பல உயிரினங்கள் அழிந்தன. மேலும், விண்கல் விழுதலால் ஏற்பட்ட தூசி, சாம்பல் போன்றவை அண்டத்தை நிரப்பியது. சூரிய ஒளி பூமிக்கு வர முடியாமல் போனது. அதன் விளைவாக, வானிலை மிகவும் குளிர்ச்சி அடைந்தது. சூரிய ஒளி இல்லாததால் தாவரங்கள் வளர முடியாமல் போனது. இதனால் ஆழமான கடல் நிலைகளும் பாதிக்கப்பட்டது. உணவுப் பற்றாக்குறை காரணமாக, டைனோசர்கள் உள்ளிட்ட பல உயிரினங்கள் அழிந்தன.

இந்த விண்கல் விழும் நிகழ்வு மற்றும் அதன் பின்விளைவுகள் திடீரென நடந்ததால், டைனோசர்கள் விரைவில் அழிந்துவிட்டன. அவற்றின் அழிவு, பூமியில் புதிய வகை உயிரினங்கள் உருவாகவும், பரிமாற்றம் பெறவும் வழி செய்தது.

இந்த விண்கல் விழுதலால், டைனோசர்கள் உட்பட மாபெரும் உயிரினங்கள் அழிந்தாலும் இந் நிகழ்வு, பூமியின் பரிணாம வளர்ச்சியில் ஒரு முக்கிய கட்டமாகும்.



# இவ்வார மழலை




மிஷாத் - மும்தாஜ்

## சிறுவர் சித்திரங்கள்



**வி. ரிதுஷினி**
தரம் 07B, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்



**வி. ஹர்லினி**
தரம் 04A, கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலயம்

# ஆயிரம் ஜன்னல் மாளிகை

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் அமைந்துள்ளது ஹவா மஹால். இது ஆயிரம் ஜன்னல் மாளிகை என்றும் "காற்றின் அரண்மனை" என்றும் அழைக்கப்படுகிறது.

இது ஜெய்ப்பூரின் மிகவும் பிரபலமான அடையாளங்களில் ஒன்றாகும்.

1799ஆம் ஆண்டு மகாராஜா சவாய் பிரதாப் சிங் என்பவரால் கட்டப்பட்ட ஹவா மஹால் ராஜபுத்திர கட்டடக்கலைக்கு ஒரு மிகச் சிறந்த எடுத்துகாட்டாகும். லால் சந்த் உஸ்தாத் வடிவமைத்த, இம் மாளிகையில் தேன்கூடு போன்ற ஐந்து அடுக்கு முகப்பில் 953 சிறிய ஜன்னல்கள் உள்ளன. இந்த வடிவமைப்பு அரச குடும்பப் பெண்கள் திருவிழாக்களைக் காண பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டது.

ஹவா மஹாலின் தனித்துவமான வடிவமைப்பு அதன் ஏராளமான ஜன்னல்கள் மற்றும் விராந்தைகள் சிறந்த காற்றோட்டத்தை அனுமதிக்கிறது. இந்த கட்டடக்கலை அம்சம் பாரம்பரிய ராஜஸ்தானி கட்டடக்கலையின் புத்தி கூர்மைக்கு சான்றாகும்.

ஜந்தர் மந்தர், சிட்டிட் பேலஸ் மற்றும் பரபரப்பான ஜொஹாரி பஜார் போன்றவற்றின் அற்புதமான காட்சிகளை ஹவா மஹாலின் மேல் தளங்களில் இருந்து கண்டு இரசிக்கலாம்.

பார்வையாளர்கள் அரண்மனைக்குள் இருக்கும் பல்வேறு இடங்களிலிருந்து பிங்க் சிட்டியின் காட்சிகளை அனுபவிக்க முடியும். ஹவா மஹாலில் ஒரு சிறிய அருங்காட்சியகம் உள்ளது. இதில் அரச காலத்தின் கலைப் பொருட்கள், சின்ன ஓவியங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள், ராஜஸ்தானின் வரலாறு, பாரம்பரிய ராஜஸ்தானி கவசம், ஆயுதங்கள் மற்றும் அரச குடும்பத்தார் பயன்படுத்திய அலங்கார பொருட்கள் போன்றவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இவை பார்வையாளர்களுக்கு கலாசாரம் மற்றும் கலை பற்றிய நுண்ணறிவுகளை வழங்குகிறது. ஹவா மஹால் ஜெய்ப்பூரில் கட்டாயம் பார்க்க வேண்டிய இடமாக அமைகிறது.



**டாக்டர் உ.வே. சாமிநாதையர்**
**(1855 -1942)**

**டாக்டர் உ.வே. சாமிநாதையர் பல ஏட்டுப் பிரதிகளை அச்சு வடிவில் தந்த பெருமைக்குரியவர்.**

**இவர் கும்பகோணம் கலாசாலையிலும் சென்னை அரசாங்கக் கல்லூரியிலும் தலைமைத் தமிழாசிரியராக இருந்தார். பல நூல்களை ஏட்டுப் பிரதியிலிருந்து அச்சேற்றியவர்.**

**பத்துப்பாட்டு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, பரிபாடல், ஐங்குறுநூறு, பெருங்கதை, வேம்பத்தூர், திருவிளையாடல், நன்னூல், மயிலை நாதருரை, தணிகைப் புராணம், முதலியனவும் இவர் பதிப்பித்தவை.**

**இவர் இயற்றிய வசன நூல்கள்: புத்தர் சரித்திரம், உதயணன் கதை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றின் சுருக்கம், சங்ககாலத்தமிழும் பிற்காலத் தமிழும், மீனாட்சி சுந்தரம்பிள்ளை சரித்திரம், மத்தியார்ச்சுன மான்மியம், என் வாழ்க்கை வரலாறு, கண்டதும் கேட்டதும், புதியனவும் பழையனவும் என்பன. டாக்டர் உ.வே.சாவின் என் சரித்திரம் இலக்கிய நயமுடைய ஓர் இதிகாசமாகும்.**

# வட்டக் கிணறுகளின் ரகசியம்



கிணறு என்பது மழைநீரை சேகரிப்பதற்கும், நிலத்தடி நீரை நாம் எடுத்து பயன்படுத்துவதற்கும் வசதியாக நிலத்தில் தோண்டப்படும் ஒருவகை குழி ஆகும்.

கிணறுகள் எங்கு இருந்தாலும் அதிகபட்சமாக வட்ட வடிவிலேயே அமைக்கப்பட்டிருக்கும், அதற்கு காரணங்கள் இருக்கின்றன.

வட்டமாக கிணறு அமைப்பதற்கான காரணம், வட்டம் என்பது இரண்டு அரை வட்ட ஆர்ச்சுக்கள் ஒன்று சேர்வதால் உருவாகின்றது.

பொதுவாக ஆர்ச் வடிவ வளைவுக்கு அதிகளவில் எடை தாங்கும் திறன் உண்டு.

அதனால் தான் அந்த காலத்தில் கட்டடங்கள், மண்டபங்கள், பாலங்கள் போன்றவைகள் அனைத்து இடங்களிலும் ஆர்ச் வடிவ வளைவுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும்.

கிணறுகள் தோண்டியவுடன், அவற்றின் நான்கு பக்கத்திலும் கிணற்றின் வடிவம் கலையாமல் இருக்க செய்வது கிணற்றை சுற்றிலும் வட்டவடிவில் உள்ள மண் மற்றும் கல்லின் எடைகள்.

சாரணாகையும்...

## நிலங்களில் வாழும் விலங்குகளும் பறவைகளும்

| நிலம் | விலங்கு | பறவை |
|---|---|---|
| குறிஞ்சி | புலி, கரடி, சீயம், யானை | கிளி, மயில் |
| பாலை | செந்நாய் | புறா, பருந்து, கழுகு, எருவை |
| முல்லை | மான், முயல் | காட்டுக் கோழி, |
| மருதம் | எருமை, நீர்நாய் | வண்டானம், மகன்றில், நாரை, தாரா |
| நெய்தல் | சுறாமீன் | கடற்காகம் |

# 'ப்ளூடூத்'

வரலாற்றில், 'ப்ளூடூத்' என்ற பெயரில் ஒரு மன்னர் இருந்தார். அவர், ஐரோப்பாவில் ஸ்கன்டிநேவிய நாடுகளை ஒருங்கிணைத்தவர்.

அதுபோல இன்று, தொடர்பு கருவிகளை இணைப்பதற்கு பயன்படும் தொழில்நுட்பத்தை, 'ப்ளூடூத்' என, அந்த மன்னன் பெயரிலேயே அழைக்கின்றனர்.

அமெரிக்கா, முதன் முதலில் கண்டுபிடித்தது, 'மொபைல் அனலாக்' முறை. இதை தொழில்நுட்ப வகையில், '1ஜி' என்கின்றனர். இதில், 'ஜி' என்றால், 'ஜெனரேஷன்' என்ற ஆங்கில சொல்லின் முதல் எழுத்து. அதாவது, அலைபேசி தொழில்நுட்பத்தில் முதல் தலைமுறை எனப்படுகிறது; இன்று, '5ஜி' வரை வந்துள்ளது.

அலைபேசி, இணையம், ஆடியோ, வீடியோ, மல்டிமீடியா என, எல்லாவற்றிலும் ஒரே மாதிரி செய்தி பரிமாற்றம் செய்யலாம். இதில், 'ப்ளூடூத்' என்பது ரேடியோ அலைகளை பயன்படுத்தும் தொழில்நுட்பம். இணையம் வழியாக, கீ போர்ட், பிரின்டர், வொஷிங் மெஷின் மற்றும் வீட்டு உபயோக சாதனங்களை, ரிமோட் வழியாக, உலகின் எந்த மூலையில் இருந்தும் கட்டுப்படுத்தலாம்.

இதை பயன்ப டுத்த ஒவ்வொரு பொருளுக்கும், ஒரு டெக்னிக்கல் முகவரி தரப்படும். அதை இயக்க ரகசியமும், பாதுகாப்பும் கடைபிடிக்கப்படுகிறது. இந்த தொழில்நுட்பத்தை உலகில் முதன் முதலில் பயன்படுத்தியது எரிக்சன் என்ற ஐரோப்பிய நிறுவனம். பின், ஐ.பி.எம்., இன்டெல் மற்றும் கிழக்காசிய நாடான ஜப்பான் தொழில்நுட்ப கருவி உற்பத்தி நிறுவனங்களும் சேர்ந்தன.

எதிர்காலத்தில் கேபிள் இன்றி, எல்லாம் காற்றில் இயங்கும் நிலை ஏற்படும். அது தான், ப்ளூடூத் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி என கூறப்படுகிறது.

# அறிந்து கொள்வோம்

- ★ அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை.
- ★ அத்தி, பலா மரங்கள் பூப்பதில்லை.
- ★ அரேபியாவில் ஆறுகள் இல்லை.
- ★ அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை.
- ★ உத்திரப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை.
- ★ யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை.
- ★ ஜோர்தான் நதியில் மீன்கள் இல்லை.
- ★ கங்காருகளுக்கு சாகும்வரை வளர்ச்சித் தடை இல்லை.
- ★ ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை.
- ★ பூட்டானில் திரை அரங்குகள் இல்லை.
- ★ இஸ்ரேலில் கரடிகளை கடற்கரைக்கு கொண்டுவர அனுமதி இல்லை.
- ★ காந்தியடிகள் விமானத்தில் பயணம் செய்ததில்லை.
- ★ பறவைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை.
- ★ மலை பாம்புகளுக்கு விஷம் இல்லை.
- ★ கிவி பறவைகளுக்கு இறக்கை இல்லை.

## மஞ்சரி விளையாட்டு





# பாரிஸ் ஒலிம்பிக் - ஒரே பார்வை




சரியாக 1924 ஆம் ஆண்டு ஜூலை 27 ஆம் திகதி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் 8ஆவது ஒலிம்பிக் போட்டி நிறைவடைந்து வருடங்களின் பின் எதிர்வரும் ஜூலை 26 ஆம் திகதி 33 ஆவது ஒலிம்பிக் போட்டி அதே பாரிஸ் நகரில் ஆரம்பமாகிறது.

அதாவது ஒலிம்பிக் போட்டியை மூன்று தடவைகள் நடத்திய நகரங்களில் லண்டலுடன் பாரிஸும் முதலிடத்தை பெறுகிறது. பாரிஸில் 1900 ஆம் ஆண்டும் ஒலிம்பிக் போட்டி நடந்தது. ஆனால் நூற்றாண்டுக்கு முன்னர் நடந்த ஒலிம்பிக்கை இப்போது ஒப்பிட முடியாது. போட்டி அம்சங்கள், தொழில்நுட்பம், வீரர்களின் திறன் எல்லாமே மாறிவிட்டது.

206 நாடுகளைச் சேர்ந்த 10,714 வீர, வீராங்கனைகள் 32 போட்டி நிகழ்ச்சிகளில் 329 தங்கப் பதக்கங்களுக்காக போட்டியிடுகின்றனர். இதில் அதிகபட்சமாக அமெரிக்காவில் இருந்து 592 வீர, வீராங்கனைகள் பங்கேற்பதோடு போட்டியை நடத்தும் பிரான்ஸ் 573 பேரை அனுப்புகிறது.

எனினும் பதக்கங்களை அள்ளக்கூடிய ரஷ்யாவுடன் பெலராஸ் நட்டுக்கு ஒலிம்பிக்கில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டுள்ளது. உக்ரைன் போர் அதற்குக் காரணம். அந்த நாடுகளின் போட்டியாளர்கள் தனிப்பட்ட நடுநிலை விளையாட்டு வீரர்களாக பங்கேற்பதோடு தனியே அகதிகள் ஒலிம்பிக் அணி ஒன்றும் இம்முறை பங்கேற்கவுள்ளது.



### ஆரம்பமும் முடிவும்



ஜூலை 26 ஆம் திகதி ஆரம்பமாகும் பாரிஸ் ஒலிம்பிக் போட்டி ஓகஸ்ட் 11 ஆம் திகதி வரை இடம்பெறும். என்றாலும் ஆரம்ப நிகழ்வுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அதாவது ஜூலை 24 ஆம் திகதி ஒலிம்பிக் கால்பந்து மற்றும் ரக்பி ஆரம்ப சுற்றுப் போட்டிகள் தொடங்கிவிடும்.

கோடைகால ஒலிம்பிக் வரலாற்றில் முதல் முறையாக ஆரம்ப நிகழ்வு மைதானத்திற்கு வெளியில் நடத்தப்படுகிறது. பாரிஸின் மத்தியில் உள்ள சீன் நதியிலேயே ஆரம்ப நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

ஆரம்ப நிகழ்வுக்கு அடுத்த நாள் ஜூலை 27 ஆம் திகதியே ஒலிம்பிக்கின் முதல் பதக்கம் வழங்கப்படவுள்ளது. அதனை துப்பாக்கிச் சுடுதல் கலப்பு அணி வெல்லும். பாரிஸ் ஒலிம்பிக்கின் கடைசி பதக்கம் ஓகஸ்ட் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெண்களுக்கான கூடைப்பந்து போட்டியில் வழங்கப்படவுள்ளது.

அதிக பதக்கங்களைக் கொண்ட போட்டி நிகழ்ச்சியாக நீச்சல் போட்டிகள் அமையும் அதில் மொத்தம் 49 பதக்கங்களை வெல்ல முடியும். அதற்கு அடுத்து தடகளப் போட்டிகளில் மொத்தமாக 48 தங்கப் பதக்கங்கள் உள்ளன.

முக்கிய விளையாட்டு நிகழ்ச்சியான தடகளப் போட்டிகள் ஓகஸ்ட் 1 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதி வரை நடைபெறும். இதன் உச்ச கட்டப் போட்டியான 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பெண்களுக்கான இறுதிப் போட்டி ஓகஸ்ட் 3 ஆம் திகதியும் ஆண்களுக்கான போட்டி 24 மணி நேரத்தின் பின்னர் ஓகஸ்ட் 4 ஆம் திகதியும் நடைபெறும்.

### புதிய விளையாட்டு

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் ஒரே ஒரு புதிய விளையாட்டு இடம்பெற்றிருக்கிறது. அது பிரேகிங் என்ற விளையாட்டாகும். இதனை பிரேக்டான்சிங் என்றும் அழைப்பார்கள். இது ஒருவகை நடனப் போட்டியாகும். 1970களில் நியூயோர்க்கின் ப்ரோன்ஸ் பகுதியே இதன் பூர்வீகமாக இருக்கும் நிலையில் ஒரு விளையாட்டு போட்டியாக பிந்தைய காலத்தில் வளர்ச்சி பெற்றது.

ஒலிம்பிக் போட்டியின் பிற்பகுதியில் இந்த பிரேகிங் போட்டியை பார்க்கலாம். இதன் பெண்கள் பிரிவு போட்டி ஓகஸ்ட் 9 ஆம் திகதி நடைபெறவிருப்பதோடு ஆண்களுக்கான போட்டி ஓகஸ்ட் 10 ஆம் திகதி இடம்பெறும். 16 ஆண்கள் மற்றும் 16 பெண்கள் என மொத்த 32 பேர் பதக்கங்களுக்கு போட்டியிடவுள்ளனர்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் இடம்பெற்ற பேஸ்போல் அல்லது சொப்ட்போல் மற்றும் கராட்டே போட்டிகள் இம்முறை கைவிடப்பட்டன.

அதேபோன்று இம்முறை ஒலிம்பிக்கில் கிளைம்பிங் போட்டியின் வடிவத்தில் மாற்றம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. கடந்த டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆடவர் மற்றும் மகளிர் இரு பாலாருக்கும் சேர்த்து ஒரு பதக்கமே வழங்கப்பட்ட நிலையில் இம்முறை இரு பாலாருக்கும் வெவ்வேறு பதக்க நிகழ்ச்சிகளாக நடத்தப்படுகிறது.

என்றாலும் ஒலிம்பிக்கில் கடந்த காலங்களில் எத்தனையோ சுவாரஸ்யமாக விளையாட்டுகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நின்ற இடத்தில் இருந்து உயரம் பாய்வது, நீருக்கடியால் நீந்துவது போன்ற போட்டிகளும் இருந்தன.

### முதல் முறை பணப் பரிசு

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வழங்குதற்கு அப்பால் பணப் பரிசு வழங்கும் சம்பிரதாக இல்லை. அதுவும் 1896 ஆம் ஆண்டு முதலாவது நவீன ஒலிம்பிக் போட்டி நடைபெற்றபோது அதில் முதல் பதக்கத்தை வென்ற அமெரிக்காவின் முப்பாய்ச்சல் வீரர் ஜேம்ஸ் பி. கொனலியிற்கு ஒலிவ் கிளையும் வெள்ளிப் பதக்கம் ஒன்றுமே வழங்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் வெற்றி பெறும் வீரர்களுக்கு இராணுவ வீரர்கள் போன்று பதக்கம் நெஞ்சில் குத்தப்பட்டு வந்தது. 1960இல் தான் கழுத்தில் மாட்டும் மரபு ஆரம்பிக்கப்பட்டது.

இம்முறை ஒலிம்பிக்கில் வழங்கப்படும் பதக்கத்தில் பாரிஸ் நகரின் அடையாளங்களில் ஒன்றான ஈபில் கோபுரத்தின் உலோகப் பாகம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது பாரிஸ் ஒலிம்பிக் பதக்கத்தின் மையப்பகுதியில் ஈபிள் கோபுரத்தின் உலோகம் ஹெக்சகன் வடிவில் இடம் பெற்றுள்ளது.

இது கடந்த காலங்களில் ஈபிள் கோபுரத்தை புதுப்பிக்கும் பணி மேற்கொண்ட போது எடுத்த உலோகம் என்றும். அது சேமிப்பு கிடங்கில் பத்திரமாக வைக்கப்பட்டு இருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் பதக்கத்தை வெல்வதென்பதே பெரும் பரிசாக இருக்கும் நிலையில் சர்வதேச ஒலிம்பிக் குழு வெற்றியாளர்களுக்கு பணப் பரிசு வழங்குவதில்லை. ஆனால் இம்முறை தடகள போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களுக்கு பணப்பரிசு வழங்கப்போவதாக உலக தடகள சம்மேளனம் அறிவித்துள்ளது.

அதன்படி 2.4 மில்லியன் டொலர் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதோடு 48 தடகள போட்டி நிகழ்ச்சிகளிலும் தங்கப் பதக்கம் வெல்லும் வீர, வீராங்கனைகளுக்கு தலா 50,000 டொலர் பரிசு வழங்கப்படவுள்ளது. ஆனால் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கு மாத்திரமே இந்தப் பரிசு வழங்கப்படவுள்ளது.

### நடப்புச் சம்பியன்கள்

இம்முறை ஒலிம்பிக் தடகள போட்டிகளில் கடந்த முறை டோக்கியோ ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற 36 பேர் தமது நடப்பு ஒலிம்பிக் சம்பியன் பட்டத்தை வெல்ல களமிறங்குகிறார். இதில் ஆடவர் தனிநபர் பிரிவில் ஒருவரும் மகளிர் தனி நபர் பிரிவில் 15 பேரும் இடம் பெற்றிருக்கிறார்கள்.

இவர்களில் பெயித் கிப்பியன் கோன் (1500 மீ.), சிட்னி மக்லோக்லின் லவ்ரோன் (400 மீ. தடை தாண்டி), மொன்டோ டுப்லாண்டிஸ் (கோலுன்றிப் பாய்தல்), ரியான் க்ரூசர் (குண்டெறிதல்) மற்றும் அனிடா வ்லோடர்சிக் (சம்மட்டி எறிதல்) ஆகியோர் உலக சாதனைக்கு சொந்தக்காரர்கள் என்பதோடு அடுத்தடுத்து தங்கம் வெல்லும் எதிர்பார்ப்புடன் வருகிறார்கள்.

நெதர்லாந்தின் சிபான் ஹசன் நான்கு போட்டி நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார். இதில் 5000 மீ. மற்றும் 10,000 மீ. ஒட்டப்போட்டிகளில் நடப்புச் சம்பியன் பட்டத்தை தக்க வைக்க திட்டமிடும் அவர் 1500 மீ. மற்றும் மரதன் போட்டிகளிலும் பங்கேற்கிறார்.

இம்முறை ஒலிம்பிக் தடகள போட்டியில் களமிறங்கும் வயது குறைந்தவராக கிரிபாட்டியைச் சேர்ந்த கெனாஸ் கெனிவேட் இடம்பெற்றிருக்கிறார். அவர் ஆண்களுக்கான 100 மீ. ஓட்டப்போட்டியின் முதல் சுற்றில் ஓடும் தினத்தில் அவரது வயது 16 வருடம், 4 மாதம் மற்றும் 6 நாட்கள்.

அவுஸ்திரேலியாவின் சினீத் டைவர் பாரிஸ் ஒலிம்பிக்கில் மிக வயதான தடகள வீரராவார். பெண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டில் அவர் பங்கேற்கும் தினத்தில் அவரது வயது 47 வருடம், 4 மாதம் மற்றும் 24 நாட்கள்.

### போட்டிகள் எங்கே?

பாரிஸ் ஒலிம்பிக் போட்டிகள் மொத்தமாக 35 இடங்களில் நடைபெறுகின்றன. இதில் ஒலிம்பிக் கிராமத்தில் 10 கிலோமீற்றர் பகுதிக்குள் 24 ஒலிம்பிக் விளையாட்டுகள் நடைபெறும் இடங்கள் அமைந்திருக்கும்.

சில போட்டிகள் பாரிஸின் பிரபலமான இடங்களில் இடம்பெறுகின்றன. கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டி ஈபில் கோபுரத்திற்கு கீழ் சாம்ப் டி மார்ஸில் இடம்பெறுகிறது. மரதன் போட்டி பாரிஸில் 500 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான ஹொடேல் டி வில்லே கட்டடத்திற்கு முன்னால் ஆரம்பமாகும்.

என்றாலும் அனைத்துப் போட்டிகளும் பிரான்ஸ் தலைநகரில் மாத்திரம் இடம்பெறாது. பிரான்ஸின் பிரபல விளையாட்டான கால்பந்து போட்டிகள் நாடெங்கும் உள்ள கால்பந்து மைதானங்களில் நடத்தப்படவுள்ளன. படகோட்டப் போட்டிகள் மத்தியதரைக் கடலிலும் கூடைப்பந்து மற்றும் கைப்பந்து போன்ற குழு விளையாட்டுகள் நாட்டின் வடக்கில் லில்லி நகரிலும் இடம்பெறும்.

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் அறிமுகமான நீர் சறுக்கல் போட்டி 2024 பாரிஸ் ஒலிம்பிக்கிலும் இடம்பெற்றிருக்கிறது. இந்தப் போட்டி உண்மையிலேயே பிரான்ஸுக்கு வெளியில் 12 நேர வலயங்களுக்கு அப்பால் பிரான்ஸ் ஆட்புல பகுதியான டஹிட்டி தீவின் டீஹுப்போ கடற்கரையில் நடைபெறப்போகிறது. பாரிஸில் இருந்து 15000 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இது உலகில் கடல் அலைகளுக்கு பிரபலமான இடங்களில் ஒன்றாகும்.



### இலங்கையில் அறுவர்

இம்முறை ஒலிம்பிக் போட்டியில் இலங்கையில் இருந்து ஆறு வீர, வீராங்கனைகள் பங்கேற்கின்றனர். இது கடந்த முறை மற்றும் அதற்கு முந்திய முறை பங்கேற்ற எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் குறைவு. ஆனால் முந்தைய முறைகளை விடவும் அதிகமாக ஆறு பேரில் நால்வர் தகுதியை அடிப்படையில் நேரடி தகுதி பெற்றிருக்கிறார்கள்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு பூப்பந்துப் போட்டியில் விரான் நெத்தசிங்கவும், ஆண்களுக்கான 400 மீ. ஓட்டப்போட்டியில் அருண தர்ஷனவும், பெண்களுக்கான 800 மீ. ஓட்டப்போட்டியில் தருஷி கருணாரத்னவும், பெண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் டில்ஹாரி லேகம்கேவும் சர்வதேச தரநிலை அடிப்படையில் நேரடித் தகுதி பெற்று ஒலிம்பிக் செல்கிறார்கள்.

தவிர, ஆண்களுக்கான 100 மீ. பிரீஸ்டைல் நீச்சல் போட்டியில் கைல் அபேசிங்க மற்றும் பெண்களுக்கான 100 மீ. பாக்ஸ்ட்ரோக் நீச்சல் போட்டியில் கங்கா செனவிரத்ன ஆகியோர் ஒலிம்பிக்கில் பங்கேற்கின்றனர்.

ஒலிம்பிக் வரலாற்றில் இலங்கை இரண்டு பதக்கங்களையே இதுவரை வென்றிருக்கிறது. அதுவும் கடைசியாக சுசந்திக்கா ஜயசிங்க 2000 ஆம் ஆண்டு பெண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்று இற்றைக்கு 24 ஆண்டுகள் ஆகிவிட்டது.

இம்முறை ஒலிம்பிக் செல்பவர்களை பார்க்கும்போது தருஷி கருணாரத்ன மீது அதிக எதிர்பார்ப்பு இருக்கிறது.

19 வயதே ஆன தருஷி இந்த வயதுக்குள் எட்டிய சாதனைகள் இலங்கை மட்டத்தில் பிரமிக்கும் வகையில் இருக்கிறது. கடந்த ஆண்டு பாங்கொக்கில் நடந்த ஆசிய தடகள சம்பியன்சிப் போட்டியின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற அவர் கடந்த ஆண்டு செப்டெம்பரில் சீனாவின் ஹான்சுவில் நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியிலும் தங்கம் வென்றார். எனவே எந்த மட்டத்திலும் சாதிக்கும் திறன் அவரிடம் அதிகமாகவே இருக்கிறது.



எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# வாத்தியார்



மாசி மாத பின் பனி, அதிகாலை. குளிர் சாதனப்பெட்டிக்குள் இருப்பது போல் இருந்தது. வீட்டிற்குள் குளிர் தாங்கமுடியவில்லை. ஒட்டை ஏதாவது இருக்கின்றதா எனும் சந்தேகத்தில் கூரையை உற்றுப்பார்த்தபடி மல்லாக்காக படுத்திருந்தார் சுப்பிரமணியம் வாத்தியார். "தையும் மாசியும் வையகத்து உறங்கு" என கொன்றை வேந்தனில் கூறிய ஔவையை மனதுக்குள் அவரால் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

சிறுவனாக இருந்த போது பனை ஓலையால் வேய்ந்து அதன் மேல் வைக்கோல் பரப்பப்பட்ட கூரையின் கீழ், சறத்தால் இழுத்து போர்த்தியபடி ஓலைப்பாயில் உறங்கியதும், அம்மா தனது பழைய நூல் சேலையால் காலையில் குளிர் கூடும் போது அவரை போர்த்தி விடுவதும் அவருக்கு ஞாபகத்துக்குவர அருகில் படுத்திருந்த மனைவியைப் பார்த்தார். அவள் குழந்தை போல் உறங்கி கொண்டிருந்தாள்.

வேலை கிடைத்த உடனேயே பெற்றோர்கள் அவரது குறிப்பை தூசு தட்டி பெண் பார்க்கும் படலத்தை ஆரம்பித்துவிட்டனர். கல்யாணம் செய்து வைத்து மகிழ்வதிலும்பார்க்க அவருக்கு ஒரு கால்க்கட்டு போட்டு பொது வாழ்க்கையில் இருந்து அவரை ஒதுங்க வைக்க வேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். அதில் வெற்றியும் கண்டனர் என்றுதான் கூற வேண்டும்

வரப்போகும் மனைவி குறித்து அவருக்கு அப்போது பெரிய எதிர்பார்ப்பு ஒன்றும் இருக்கவில்லை. அவரது தாயார் அவருக்காக பார்த்த முதல் பெண்ணை அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. பணக்கார வீட்டு பெண். அழகியும் கூட. ஆனால் அவளுக்கு அவரை பிடிக்கவில்லை.

இரண்டாவதாக பார்த்த பெண்ணின் பெயர் கமலம். அவள் ஒரு ஆசிரியை. இருவரும் நன்றாக ஒருவரை ஒருவர் அறிந்திருந்தனர். கமலத்தின் மேல் சுப்பிரமணியம் வாத்தியாருக்கு ஒரு ஊமைக்காதல் இருந்தது. ஏன் இப்போதும் அவரது அடிமனதின் ஒரு மூலையில் அது உள்ளது. "மூல நட்சத்திரமாம். பெண் மூலம் நிர்மூலம். அதோடை சாதகத்திலை தோசமும் இருக்காம். சாத்திரியார் சொன்னவர்" என்று கூறி அவரது தாயார் அந்த கல்யாணத்திற்கு மறுத்து விட்டார். அந்த சாத்திரியை இப்ப பார்த்தாலும் அவருக்கு கோபம் பொங்கி வரும். "எனது வாழ்க்கையை கெடுத்தவன்" என்று கூறி அந்த சாத்திரிக்கு எதிராக ஒரு வழக்கு போட அவருக்கு ஆசை.

"எங்களை தவிர வேறு ஒரு இனத்தவரோ, மதத்தவரோ சாதகம் பார்ப்பதில்லை. அவர்களுக்கு தோசம், குற்றம் ஒன்றும் இல்லை. ஏன் என்றால் அவர்களுக்கு சாதகமே இல்லை" என வெளிநாட்டில் இருந்து வந்த நண்பன் ஒருவன் கூறியதை நினைத்து அவரது மனம் குமுறியது.

கமலம் இன்றுவரை திருமணம் செய்யவில்லை. மூல நட்சத்திரமும், சாதகத்தில் இருக்கும் தோசமும் ஊர் சாத்திர விஞ்ஞானிகளும் தான் அதற்கு காரணம். அவளைப்போல் படித்த வடிவான ஒருத்தியை திருமணம் முடிக்க ஒருத்தருக்கும் குடுத்து வைக்கவில்லை என நினைக்கும் போது அவரது இயலாமை பெருமூச்சாக உருமாறியது. கமலம் இப்போது கல்விப் பணிப்பாளராக பதவி வகிக்கின்றாள். "திருமணம் செய்திருந்தால் பெரிய பதவிக்கு உயர்ந்திருப்பாளோ? என்பது கேள்விக்குறிதான். எப்படியும் ஒரு அம்மா ஆகியிருப்பாள்" என தனக்குள் வந்த சிரிப்பை அடக்கி கொண்டு தனது மனதுக்கு கடிவாளம் இட்டார்.

அவருக்கு மூன்றாவதாக பார்த்த பெண் தான் அவரது மனைவி பாக்கியம். பெரிதாக படிக்கா விட்டாலும் அவரது வாழ்வில் பாக்கியத்தால் பிரச்சினை என்று குறிப்பாக கூறும்படி எதுவும் இல்லை. நான்கு பிள்ளைகளின் தாயாக வாழ்கையை முனைப்புடன்வழி நடத்துபவள். நல்ல குடும்பப் பெண். தனது வேலை பழுவினாலும், ஆணாதிக்க சிந்தனையாலும் அவளிடம் அதிக உரிமை எடுத்துக்கொண்டு அவளது தேவைகளை சரியாக கவனிக்கவில்லை எனும் கவலையும் குற்ற உணர்ச்சியும் இப்போது அவரது மனதுக்குள் அடிக்கடி தோன்றி மறைகின்றது. நாளையில் இருந்து அவளுக்கும் ஓய்வு கொடுக்கவேண்டும். எனது வேலைகளை நானே செய்யவேண்டும். வீட்டு வேலைகளை அவளுடன் பகிரவேண்டும் என நினைத்தவாறு கடிகாரத்தை பார்த்தார்.

அலாரம் அடிக்க பதினைந்து நிமிடங்கள் இருந்தது. குளிர் அவருடன் ஒட்டியபடி பாக்கியத்தை உறங்க வைத்துக்கொண்டிருந்தது. தன் மேல் இருந்த அவளின் கையை எடுத்து விட்டபின் அவளது போர்வையை சரிசெய்தார். கால் ஓசை படாமல் மெதுவாக நடந்து குளியல் அறைக்குள் சென்று அங்கிருந்த கண்ணாடி முன்னால் நிற்கும் போது தலையில் உள்ள நரை மயிர்களின் எண்ணிக்கை நேற்றையைவிட இன்று அதிகமாக உள்ளது போல் அவருக்கு ஒரு பிரமை. "என்ன பைத்திய காரத்தனம்" என தனக்குள் சிரித்தபடி முகத்தில் தெரிந்த நரை மயிர்களை மழிக்கத்தொடங்கினார். தனது இளமைக்காலத்து அடர்ந்த கரும் தாடி அவருக்கு கண் முன்னே வந்து போனது.

தாடி வைத்திருப்பவர்களும், கடும் நிற மேலாடை அணிபவர்களும் இடதுசாரி தீவிரவாத போக்குள்ளவர்கள் என்பது அவரது தந்தையின் நம்பிக்கை. அது ஓரளவுக்கு உண்மையும் கூட. அதனால் அவரது தந்தை தாடியை மழி என்பதும், கடும் நிற மேலாடை அணியும் போது, அதை மாற்று என நச்சரிப்பதும், அவர் மறுப்பதும் அதனால் வீட்டில் ஏற்படும் சண்டைகளும்! அவரால் இப்போதும் மறக்க முடியாதவை.

"பெற்றோருக்கு நான் நல்ல மகனாக இருந்தேனா?" என தன்னைத் தானே அடிக்கடி கேட்கும் கேள்வி அவர் மனதில் அப்போதும் எழுந்தது. "அவர்கள் உயிருடன் இருக்கும் போது எழாத கேள்வி இப்போது ஏன் அடிக்கடி எழுகின்றது" என தன்னை தானே கடிந்து கொண்டார். "பிள்ளைகளை வளர்க்கும் போது தான் எல்லோருக்கும் தங்களது பெற்றோர்களின் மேல் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கின்றது" எனக்கூறுவது எவ்வளவு உண்மை. ஆனால் அப்போது பெற்றோர் உயிருடன் இருப்பதில்லை.

"அப்பா இப்பவும் பள்ளிக்கூடம் போகின்றார்" என அவரது பிள்ளைகளின் கிண்டலுக்கு இன்று முற்றுப் புள்ளி வைக்கப்படுகின்றது. ஐந்து வயதில் தொடங்கிய பாடசாலை நோக்கிய பயணம், இன்று முடிவடைகின்றது. அது அவருக்கு மகிழ்ச்சியையும் துக்கத்தையும் மாறி மாறி கொடுக்கின்றது. "அறுபது வயதில் கட்டாய ஓய்வு பெற வேண்டும் எனும் சட்டம் மிகவும் பிழையானது. இச்சட்டத்தால் பல அனுபவசாலிகளின் சேவையை நாடு இழந்து நிற்கிறது" என வெளிநாட்டில் இருக்கும் அவரது பல்கலைக்கழக நண்பன் தொலைபேசி உரையாடலின் போது கூறியது இன்று சரியென அவருக்கு தோன்றியது. வளர்ந்த நாடுகளில் பலர் அறுபதுகளில்தான் திருமணம் செய்து வாழ்க்கையை தொடங்குகிறார்கள். இங்கு ஐம்பது என்றவுடனேயே "பழசு, தாத்தா, கிழடு" என கூப்பிட தொடங்கி விடுகிறார்கள். அது அவர்களை மனதளவில் வயதானவர்கள் ஆக்கி விடுவது மட்டுமல்லாமல் முதுமைத் தோற்றத்தையும் பரிசாக கொடுத்து விடுகின்றது.

குளியலறைத்தொட்டியில் உள்ள நீர் கடும் குளிராக இருந்ததனால் கிணற்றடி நோக்கி நடந்தார். கிணற்று நீர் எப்போதும் சூடாக இருக்கும். முதல் வாளி உடம்பில் ஊற்றும் போது அவரது உடல் சிலிர்த்தது. பின்பு படிப் படியாக ஏற்றுக்கொண்டது.

வாழ்க்கையும் அது தானே. "முதலில் அப்படித்தான் இருக்கும். பிறகு பழக பழக எல்லாம் சரியாகி விடும்" என அம்மா அவருக்கு திருமணம் நடந்த புதிதில் கூறிய அறிவுரையை குளிக்கும் போது மீண்டும் உறுதி செய்து கொண்டார்.

அவரது நண்பர்களில் பலர் சேவையில் இருந்தும், சிலர் இவ் வுலக வாழ்க்கையிலிருந்தும் ஓய்வடைந்து விட்டனர். இவை அனைத்தும் அவரது மனதை சற்று தளர்த்தி இருந்தன. தானும் இன்றுடன் ஓய்வு பெற்றவர்களின் பட்டியலில் இடம் பெறப்போகின்றேன் என நினைக்கும் போது அவரது மனம் சற்று தயங்கியது.

ஓய்வடைந்த பின் என்ன செய்வது? என யோசித்தவரின் தலை சுற்றுவது போல் இருந்தது. குளிப்பதை நிறுத்தி விட்டு உடுப்பை மாற்றினார். தனது குளித்த ஈர உடுப்பை வழமையாக கிணற்றடியில் மனைவியை துவைப்பதற்கு விடுபவர் இன்று துவைத்து கொடியில் உலர விட்டார். மனைவியின் சில ஈர உடுப்புக்களும் கிணற்றடியில் துவைப்பதற்காக காத்திருந்தன. அவற்றை துவைத்து காயப்போட அவரது மனம் விரும்பியபோதும் அவரது மூளை ஏற்றுக்கொள்ளவில்லை. "நாளையில் இருந்து செய்யலாம்" என தன்னை தானே தடுத்தபடி கிணற்றடியை விட்டு நகர்ந்தார்.

மனைவியின் வழமையான காலைச் சாப்பாடும் தேநீரும் மேசையின் மேல் அன்று இல்லை. என்னவாக இருக்குமென அறையை எட்டிப்பார்த்தார். ஆழ்ந்த நித்திரையில் அவள் இருந்தாள். "ஒரு வேளை இன்றிலிருந்து எனக்கு ஓய்வு என தவறாக புரிந்து விட்டாளோ? அல்லது உடம்புக்கு ஏதாவது " என அவர் மனம் பலவிதமாக யோசிக்க துவங்கியது. அறியாத ஒரு பயம் அவரது மனதில் தோன்றியது. அப்படி ஒன்றும் இருக்காது என சுதாகரித்தவாறு தேநீர் வைத்து குடிக்கலாம் என்று அடுக்களை நோக்கி நடந்தார். அடுக்களைக்குள் எங்கு என்ன இருக்கின்றது என்று தேடிக்கண்டு பிடிப்பதற்குள் அவருக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. அவர் போட்ட சத்தத்தில் நித்திரையால் விழித்து ஓடிவந்தாள் பாக்கியம். "என்னை எழுப்பி இருக்கலாமே? ஒரு தேநீர் கூட போடத்தெரியாது" என்ற தனது வழமையான "உங்களுக்கு ஒன்றும் தெரியாது" எனும் பல்லவியுடன் தேநீரை தயார் செய்தாள். தனது கணவனுக்கு ஒன்றும் தெரியாது என்று கூறுவதில் பாக்கியம் அடையும் மகிழ்ச்சி அளப்பரியது. இலவசமாக அவள் அடையும் மகிழ்ச்சியை அவர் ஒருநாளும் தடுத்ததில்லை. காலைக்கு ளிருக்கு சூடான தேநீர் இதமாக இருந்தது. சாப்பாட்டை தயாரிக்க தொடங்கியவளிடம் "நேரம் போகுது" என்றபடி தனது துவிச்சக்கரவண்டியை நோக்கி நடந்தார். அவளது பார்வையில் சற்று கோபம் தெரிந்தது. "நீங்கள் இல்லா விட்டாலும் பள்ளிக்கூடம் நடக்கும். இன்றையோடை என்ன பள்ளிக்கூடத்தை பூட்டப்போறாங்களா?" என்றபடி "மதிய சாப்பாட்டிற்கு என்ன செய்யப்போகிறீர்கள்" என்றாள் சற்று கவலையுடன். "நான் இன்றைக்கு விரதம் இருப்பம் என்று யோசிக்கிறன். விரதம் இருப்பதும், நோன்பு இருப்பதும் உடம்புக்கு நல்லது என்கிறார்கள்" என்று சிரித்தபடி தனது பாதணிகளை அணிந்து கொண்டு துவிச்சக்கர வண்டியை நோக்கி நடந்தார். துவிச்சக்கர வண்டியின் சக்கரங்களும் பாத அணிகளும் அவரைப்போல் தேய்ந்திருந்தன. அவரைப்பார்த்து "நாளையில் இருந்து எங்களுக்கும் ஓய்வா?" என அவை கேட்பது போல் அவருக்கு ஓர் உள்ளுணர்வு.

வீட்டை விட்டு வெளியேறும் போது பக்கத்து வீட்டுக்கார பொடியன் "வணக்கம் வாத்தியார். ஏன் மோட்டார் சயிக்கிள் ஒன்றை வேண்டி ஓடுறது. வயதான காலத்திலை. உந்த பெட்டையள் எல்லாம் ஓடுறாளவை" என்று சிரித்தபடி தனது மோட்டார் சைக்கிளை துடைத்துக் கொண்டிருந்தான். "இவன் எனக்கு வயது போட்டுது என்கிறானா? அல்லது என்னால் மோட்டார் சயிக்கில் ஓட முடியாது என்கிறானா?" என மனதுக்குள் நினைத்தபடி "அப்பா எங்கையடா தம்பி" என்றார் சுப்பிரமணியம் வாத்தியார். "தோட்டதுக்கு போட்டார்" என்றான் தலையை குனிந்தபடி. "வேலை வெட்டி ஒன்றும் செய்யாமல் உதை துடைக்கிறதிலும் பார்க்க தோட்டத்திலை போய் அப்பாவுக்கு ஏதாவது செய்து குடு" என்று சற்று கோபமாக கூறியபடி துவிச்சக்கர வண்டியை உறுட்டினார்.

"இன்றைக்குதான் கடைசி நாள்" என்றபடி பவளம் இடையில் புகுந்தாள். "இன்றைக்கு வேலையிலை தான் கடைசிநாள். வாழ்க்கையில் இல்லை" என்றவாறு துவிச்சக்கர வண்டியில் தெத்தி ஏறினார்.

"அவருக்கு இன்றுடன் ஓய்வு. அது தான் அவர் ஆட்களிலை கொதித்து விழுகிறார். நீ யோசிக்காமல் துடை தம்பி" என்ற படி வீடு நோக்கி நடந்தாள் பவளம்.

போகும் பாதையில் இன்றைக்கு பாடசாலையில் என்னென்ன வேலைகள் செய்ய வேண்டுமென சுப்பிரமணியம் வாத்தியாரின் மனம் வழமை போல பட்டியல் இட்டுக் கொண்டிருந்தது. ஆசிரியர்கள் பிள்ளைகளை தண்டிக்க முடியாது எனும் சட்டம் வந்த பின்பு ஆசிரியத்தொழில் மிகவும் கடினமாகிவிட்டது. பிள்ளைகள் சொல்லுக்கேட்குதுகள் இல்லை. வகுப்புகளை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகி விட்டது. ஒரு சில குழப்படிகார பிள்ளைகளுடன் வாத்திமார்களின் நேரம் வகுப்பறைகளில் விரயமாகிறது. படிக்க ஆசைப் படுகின்ற பிள்ளைகளுடன் நேரம் செலவிட முடியாது உள்ளது என பல வாத்திமார்கள் புலம்புகின்றனர். சிலர் தாமாகவே முன்வந்து ஓய்வு பெறுகின்றனர். புதிதாக ஆசிரியர் தொழிலுக்கு தகுதியானவர்கள் வருவதும் குறைந்துவிட்டது. அப்படி வருகின்றவர்களும் தங்களது வீட்டிற்கு அருகாமையில் உள்ள பாடசாலைகளில் வேலை தேடுகின்றனர். அதிபர் பரீட்சைக்கும், நிர்வாக பரீட்சைக்கும் தங்களை தயார் படுத்துவதில் உள்ள ஆர்வத்தை பல ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிப்பதில் காட்டுவதில்லை.

வழமையாக வாங்கும் புதினப் பத்திரிகைக்காக அவரது துவிச்சக்கர வண்டி சந்திக்கடையில் நின்றது. "வணக்கம் வாத்தியார். இன்றையோடு ஓய்வாம். நாளையில் இருந்து பத்திரிகையை வீட்டிற்கு அனுப்பிவிடட்டா?" என்ற படி கடைக்காரர் பத்திரிகையை எடுத்து நீட்டினார். "என்னடாப்பா, வேலையிலை இருந்து இளைபாறினால் வீட்டுக்குள்ள தான் இருக்கவேணும் போல" என்றபடி பத்திரிகையுடன் அவரது பயணம் பாடசாலை நோக்கி நகர்ந்தது. "கடைக்காரனிடம் தேவையில்லாமல் கோபித்துவிட்டேனோ?" எனும் குற்ற உணர்வு சற்று அவர் மனதில் தோன்றியது.

வீதிக்கரையில் உள்ள பிள்ளையார் கோயிலில் உண்டியல் குலுக்கி வீதியால் போறவர்களிடம் கட்டடத்திற்கு நிதி சேகரித்து கொண்டிருந்தனர். அதைப்பார்த்த வாத்தியாரின் மனதில் "பிச்சை எடுத்தாவது ஏழைப் பிள்ளைகளை படிப்பிப்பேன்" என காமராசர் கூறியது நினைவுக்கு வர, அவரது துவிச்சக்கர வண்டி நிற்காமல் வேகமாக கோயிலை கடந்தது.

கோயிலைக் கடந்தவுடன் வரும் பாலத்தடியில் காற்று பலமாக அடித்து கொண்டிருந்தது. நீர்க்கரையில் உள்ள நாணல் புற்கள் காற்றடிக்கும் பக்கம் தலை சாய்த்து எப்படி உலகில் வாழ வேண்டு'ம் என பாடம் எடுத்து கொண்டிருந்தன. சுப்பிரமணியம் வாத்தியாரின் பார்வை காற்றை எதிர்த்து நிற்கும் பனைகள் மேல் தாவியது. காற்று அவரது துவிச்சக்கர வண்டியை மெதுவாக நகர்த்தியது. பல வருடங்களுக்கு முன்பு இருக்கையை விட்டு எழுந்து நின்று துவிச்சக்கர வண்டியை மிதித்து காற்றை கிழித்துக்கொண்டு போவது ஞாபகம் வர "அதெல்லாம் இப்ப வேண்டாம்" என தன்னைத் தானே கட்டுப்படுத்தி கொண்டார். பாலத்தை அதி கூடிய வேகத்தில் கடந்து கொண்டிருந்த பார ஊர்தியால் உண்டான விசையுடன் கூடிய காற்று அவரை பாலத்திற்குள் தள்ள, அதற்கு சரணடைந்து துவிச்சக்கர வண்டியில் இருந்து இறங்கி சிறிது நேரம் உருட்டியபடி நடந்தார். "எத்தனை சண்டைகள்? எத்தனை சமாதானங்கள்? எத்தனை சரணடைவுகள்? எல்லாம் கடந்த எனக்கு இப்போது இந்த பாலத்தை கடப்பது ஒரு விடயமாக உள்ளதா?" என்பதை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

"உன்னால் முடியும்" எனும் தாரக மந்திரத்தை மீண்டும் மீண்டும் தனக்குள் கூறியபடி தனது மனதை உற்சாக படுத்திக்கொண்டார். "இது சக்தி வாய்ந்த பிள்ளையார். உண்டியலில் காசு போடாட்டி விபத்து உண்டாகுமாம்" என ஊருக்குள் கதைப்பது ஞாபகத்துக்கு வர அவருக்கு சிரிப்பு உண்டானது. "காசு கொடுக்காவிடில் விபத்து உண்டாக்கிறவர் எப்படி கடவுள் ஆகமுடியும்? வெருட்டி சனத் திட்டை பணம் பறிக்க உருவாக்கிய ஒரு புரளிக்கதை.

இதை கப்பம் வேண்டுவது என்று கூறுவது தான் சரி" என்பது அவரின் நம்பிக்கை. "நம்பிக்கைதான் கடவுள் என்கிறார்கள். அப்படியானால் மூட நம்பிக்கையை எதிர்ப்பது தான் எனது நம்பிக்கை. அது தான் எனது கடவுள்" என நினைத்து தன்னைத்தானே தேற்றிக்கொண்டார். கடவுள் மீது அவருக்கு இருந்த நம்பிக்கை, வயதுடன் குறைந்து கொண்டே செல்கின்றது.

பாலத்தின் கீழாக பாயும் நீர் சற்று வற்றி இருந்தது. அவரது தலைக்கு மேலால் இரட்டைவால் குருவிகள் கீச் சிட்டபடி பறந்தன. அவை தங்களுக்கு தாங்களே காலை வணக்கம் தெரிவித்துக்கொண்டன போலும். அவை அண்ணார்ந்து பார்த்து புன்னகைத்த போது வானம் கறுத்துகொண்டு வருவது தெரிந்தது. அது மழைக்கான அறிகுறி. இன்று வகுப்புகளை ஒழுங்காக நடத்த முடியாது எனும் கவலை அவரது மனதில் குடிகொண்டது. மழை பெய்யும் போது பாடசாலை ஒழுகுவதும் அதை யாரையாவது பிடித்து எப்படியும் திருத்த வேண்டும் எனும் கனவு பலிக்காமல் போகின்றது என நினைக்கும் போது அவர் மேலேயே அவருக்கு வெறுப்பு உண்டாகியது.

கல்வித் திணைக்களத்திற்கு பல கடிதங்கள் எழுதியிருந்தார். ஊரில் உள்ள பணக்காரர்களை கெஞ்சி பார்த்தும் ஒன்றும் நடக்கவில்லை. கோயில்களுக்கு இரட்டைக்கோபுரம் கட்டுவதற்கும் யானைகள் கொண்டுவந்து திருவிழா நடத்துவதற்கும் செலவிடும் பணத்தில் ஒரு சிறுபகுதி அதற்கு போதுமானது. அவரது நண்பன் ஒருவன் "கடவுள் உன்னிடம் வந்து ஒரு வரம் கேள் என்றால் என்ன கேட்பாய்?" என கேட்க, அவர் "கடவுளே! உனது அடியார்களுக்கும் அடிவருடிகளுக்கும் அடியாட்களுக்கும் கொஞ்சம் பகுத்தறிவை கொடு. அவங்களின்ரை அட்டகாசம் தாங்க முடியவில்லை" என்பேன் எனக்கூறியது சரிதான் என மனதுக்குள் சிரித்தார்.

தூரத்து உறவுக்காரர் அவருக்கு சற்று முன்னால் இரண்டு வாழைக்குலைகளை துவிச்சக்கர வண்டியில் கட்டியபடி சந்தைநோக்கி பயணித்து கொண்டிருந்தார். அவரிலும் பார்க்க பல வயது கூடியவர். ஆனாலும் அவருக்கு ஒருவரும் ஓய்வு கொடுத்ததாக தெரியவில்லை. அவர் எப்போது ஓய்வு எடுப்பார் என அவருக்கே தெரியாது. நாளை முதல் சுப்பிரமணியம் வாத்தியாருக்கு ஓய்வூதியம் வரப்போகின்றது. இவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியம் இல்லை என நினைக்கும் போது அவருக்கு குற்ற உணர்வாக இருந்தது.

அரச ஊழியர்களிலும் பார்க்க மீனவனும் விவசாயியும் கூலிக்காரனும் கடுமையாக உழைக்கின்றனர். அவர்களது உழைப்பை எல்லோரும் உண்ணுகின்றனர்.

ஆனால் அவர்களுக்கு ஓய்வும் இல்லை, ஓய்வூதிய திட்டமும் இல்லை என்பது மிகவும் மனவேதனைக்குரியது. அவர்களிலும் பார்க்க அரச ஊழியர்கள் அப்படி என்ன பெரிசாக சாதிக்கின்றனர்? என நினைத்தபடி வாழைக்குலைகளுடன் மெதுவாக நகரும் துவிச்சக்கர வண்டியை நெருங்கினார் சுப்பிரமணியம் வாத்தியார். "வணக்கம் வாத்தியார் தம்பி" என்றவர் "என்ரை பேரப்பொடியன் உங்களிட்டை தான் படிக்கிறான்.

ஒருமாதிரி உருப்படியாக்கி போடுங்கோ. என்ரை பொடியனும் பெரிசாக படிக்கவில்லை. பேரப் பிள்ளை என்றாலும் படிக்கட்டும்" என்றவாறு அவருடன் சமாந்தரமாக துவிச்சக்கர வண்டியில் பயணித்தார். அவரது பேரன் அதிகூடிய கவனிப்பு இருக்கும் போது ஓரளவு படிப்பான். கல்வியின் பெறுமதியை அந்த சிறுவனால் உணர முடியவில்லை. அதை எப்படி அவரிடம் கூறுவது எனத்தெரியாமல் "ஓம் ஓம்" என்று தலையாட்டியபடி தனது கைக்கடிகாரத்தை பார்த்தார்.

"உங்களுக்கு நேரம் போகுது போல. நீங்கள் கெதியா போங்கோ" என்று கூறி அவருக்கு விடை கொடுத்தார் அந்த முதியவர். அவரது எதிர்பார்ப்பை பேரன் திருப்தி செய்வானா? என்பது சந்தேகம் தான்.

பாடசாலையை அடையும் போது, வாசலில் நின்ற அலுவலக பணியாளர் "வாங்கோ வாத்தியார்" என வரவேற்றார். அவர் "இன்று உங்களின் கடைசி நாள்" என்று கூறவில்லை எனும் மன நிம்மதியில் வணக்கம் கூறிவிட்டு உள்ளே சென்றார் சுப்பிரமணியம் வாத்தியார். ★★★★★

"எந்தவித வித்தியாசமும் இல்லாமல் தனது அன்றாடக் கடமையில் ஈடுபட வேண்டும்" எனும் இறுமாப்புடன் கடமைகளை தொடங்கினார். பிள்ளைகளுக்கு நாளைக்கு நான் பாடசாலைக்கு வரமாட்டேன் என்பது தெரியும் போல் அவருக்கு தோன்றியது. சில பிள்ளைகளின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவம் ஆடியது. சில பிள்ளைகள் கவலையுடன் காணப்பட்டனர்.

பாடசாலை ஒவ்வொரு நாளும் மத வழிபாட்டுடன் தொடங்கும். பிள்ளைகள் மதரீதியாக பிரிந்து நின்று, தங்கள் மதம் சார்ந்த வழிபாட்டில் ஈடுபடுவார்கள். காலையிலேயே மாணவர்கள் மதரீதியாக பிரிந்து நிற்பது மிகவும் தவறான செயல் என அவருக்கு எப்போதும் தோன்றும். பாடசாலையில் மாணவர்கள் மதரீதியாக பிரிந்து நிற்பதுதான் சமூகம் தொடர்ந்தும் மதரீதியாக பிரிந்து நிற்பதற்கு காரணமாக இருக்குமோ? எனும் எண்ணம் அவரது மனதில் ஆழ வேரூன்றி இருந்தது. "கடவுள் ஒன்றுதான்" என்று கூறுபவர்களின் மீது அவருக்கு கடும் கோபம் வந்தது. அப்படியென்றால் இந்த பிஞ்சு உள்ளங்களை காலையில் ஏன் பிரிக்கின்றனர்?

ஓரளவு வசதிபடைத்த மாணவர்கள் இப்போது கிராம பாடசாலைகளுக்கு போவதில்லை. அவர்கள் நகர்ப்புற பாடசாலைகளுக்கு போகிறார்கள். கிராம பாடசாலைகளில் ஏதோ ஒரு வகையில் பின்தங்கிய குடும்பங்களின் பிள்ளைகள் தான் படிக்கின்றனர். இவர்களில் பலர் காலைச்சாப்பாடு இல்லாமல் பாடசாலைக்கு வருபவர்கள். கோயிலில் கொடுக்கின்ற பிரசாதத்தை பள்ளிக்கூடத்தில் இந்த பிள்ளைகளுக்கு காலையில் குடுங்கோ என்று கோவில்காரர்களிடம் சுப்பிரமணியம் வாத்தியார் கேட்ட போது, அவர்கள் அவருக்கு அடிக்காதது ஒன்றுதான் குறை. மாணவர்களின் தேவைகளை அறிந்து அவர்களை நல் வழிப்படுத்துவது அனைவரினதும் கடமை என பலர் உணர்வதில்லை.

ஆசிரியர்கள் பலர் பாடசாலை தொடங்கிய பின் ஒன்றன் பின் ஒன்றாக பாடசாலைக்கு வருவது வழமை. ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்கள் மோட்டார் சயிக்கில்களில் வருபவர்கள். பாடசாலை தொடங்க ஒரு மணித்தியாலத்திற்கு முன்பாக ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலையில் நிற்கவேண்டும் எனும் சட்டம் கொண்டுவரவேண்டும் என அரசியல்வாதிகளிடமும் தொழிற்சங்கங்களிடமும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கூறி அவர்களைத்து விட்டார். அதனால் பிந்தி வரும் ஆசிரியர்கள் அவரை தவிர்க்க மறுபக்கம் பார்த்தபடி செல்வது வழமை.

மாணவர்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர். அவரால் வழமை போல் அன்று பாடத்தை நடத்த முடியவில்லை. அவரது மனம் மிகவும் வேதனை அடைந்திருந்தது. முப்பத்து ஐந்து வருடமாக செய்த வேலை. எத்தனை ஆயிரம் மாணவர்கள். இன்றுடன் அவர் ஓய்வு பெறுகின்றார் என்பதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

அவர் தொடர்ந்து கற்பிக்கவே விரும்பினார்.

ஆனால் நாட்டின் சட்டத்தில் அதற்கு இடம் இல்லை. "எழுந்து நடக்க முடியாதவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் கட்சித் தலைவர்களாகவும் இருக்கும் போது நான் ஏன் ஆசிரியராக கடமையாற்ற முடியாது?" என்று நினைத்தபடி பாடத்தை தொடங்கினார். வகுப்பறை நோக்கி வந்த அலுவலக பணியாளர் "உங்களை அதிபர் சந்திக்க விரும்புகிறார்" என்றார். மாணவர்களுக்கு சில வேலையை கொடுத்து விட்டு அவரை பின்தொடர்ந்தார். வழமை போல் அதிபர் தனது அலுவலகத்தில் இருந்து எதிர்வரும் கல்வி நிர்வாக சேவை பரீட்சைக்கு தன்னை தயார் படுத்திக் கொண்டிருந்தார்.

சுப்பிரமணியம் வாத்தியாரை கண்டதும் மேசையில் இருந்த கல்வி நிர்வாக சேவை பயிற்சி புத்தகங்களை எடுத்து தனக்கு பின்னால் இருந்த மேசையில் வைத்தார்.

18ஆம் பக்கம் பார்க்க..

கந்தை நாகேந்திரம்




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**
நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகள் சாதகமாக நடந்து முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். இராசிநாதன் செவ்வாய் தொழிலில் ஏற்றம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் அகலும். தடைப்பட்ட பண உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இருந்த மறைமுக எதிர்ப்புகள் நீங்கி செயல்களில் வேகம் காண்பிப்பீர்கள். குடும்பாதிபதி சுக்கிரனின் சஞ்சாரத்தால் குடும்பத்தில் இருந்த வீண் பிரச்சினைகள் நீங்கி அமைதி ஏற்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனக் கசப்பு மாறும். சுப காரியங்கள் நடக்கும். பெண்களுக்கு புத்திசாதூரியம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்குர் நிதானமாக இருப்பது நல்லது. அரசியல்துறையினருக்கு நட்பு கிடைக்கும். மாணவர்களுக்கு இருந்த தடைகள் நீங்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**
செயல்திறமை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்வது பற்றிய ஆலோசனையில் ஈடுபடுவீர்கள். தேவையான நிதியுதவி கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. உத்தியோகத்தில் இருப்பவர்களின் பணிச்சுமை குறைந்து காணப்படும். நிலுவையில் இருந்த பணம் கிடைக்கும். குடும்பத்தில் இருப்பவர்களுக்கு தேவையானவற்றை செய்து கொடுத்து அவர்களது நன்மதிப்பை பெறுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக முடியும். கலைத்துறையினருக்கு என்றோ செய்த ஒரு வேலைக்கு இப்போது பாராட்டு கிடைக்கலாம். அரசியல்துறையினருக்கு காரியங்களில் இருந்த தடைகள் நீங்கும். மாணவர்களுக்கு மனதை ஒருமுகப்படுத்தி பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும் எதிலும் சாதகமான நிலை காணப்படும்.

## மிதுனம்

**மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**
அரசு மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். வெளியூர் பயணம், அதன் மூலம் அலைச்சல் உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் அலைச்சலுக்கு பின் நடந்து முடியும். தொழில் தொடர்பாக எதிர்பார்க்கும் உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். கணவன், மனைவி அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனம் தொடர்பான செலவுகள் ஏற்படலாம். பெண்கள் கவனத்துடன் செயல்படுவது நல்லது. தேவையில்லாத விஷயங்களில் தலையிடாமல் இருப்பது அவசியம். கலைத்துறையினருக்கு போட்டிகள் நீங்கும். அரசியல் துறையினருக்கு வாழ்க்கை தரம் உயரும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் கவனம் தேவை. எதையும் எதிர்கொள்ளும் துணிச்சல் ஏற்படும்.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**
முன்னேற்றம் காணப்படும். விருப்பத்திற்கு மாறாக காரியங்கள் நடந்தாலும் முடிவு சாதகமாக இருக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்களில் திடீர் தடை ஏற்படலாம். திட்டமிட்டு செய்வதன் மூலம் சாதகமான பலன் கிடைக்கும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களை அனுசரித்து செல்வது நல்லது. மனதில் பக்தி உண்டாகும். சகோதரர்கள் மற்றும் உறவினர்களிடம் பேசும்போதும் கவனம் தேவை. எந்த ஒரு காரியத்தையும் பெண்கள் யோசித்து செய்வது நல்லது. பொழுது போக்கில் நாட்டம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு மனத்துணிவு அதிகரிக்கும். அரசியலில் இருப்பவர்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற திட்டமிட்டு பாடங்களை படிப்பது நல்லது. மனோதிடம் உண்டாகும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**
எல்லாக் காரியங்களிலும் சாதகமான பலன்கள் கிடைக்கும். எதிலும் லாபம் கிடைக்கும். கடன்கள், நோய்கள் தீரும். திருமணம் தொடர்பான காரியங்கள் நல்லபடியாக நடந்து முடியும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பார்கள். தொழில், வியாபாரம் தொடர்பான விஷயங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.குடும்பத்தில் நிம்மதி காணப்படும். உத்தியோகத்தர்கள் மிகவும் கவனத்துடன் செயல்படுவது நல்லது. மேலிடத்துடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் மறையும். பெண்கள் நட்பு வட்டத்தில் நிதானமாக பழகுவது நல்லது. கலைகளில் ஆர்வம் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். அரசியலில் உள்ளவர்கள் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு பாடங்களில் இருந்த சந்தேகம் நீங்கும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)**
புத்திசாதூரியமும் அறிவுத் திறனும் அதிகரிக்கும். எதைச் செய்வது எதை விடுவது என்ற மன தடுமாற்றம் ஏற்பட்டு நீங்கும். எதிர்பார்த்த பணவரவு தாமதப்படும். திடீர் சோர்வு உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் அவசரமான முடிவுகள் எடுப்பதை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகள் கூறுவதை கேட்டு தடுமாற்றம் அடையலாம். நிதானமாக யோசித்து செய்வது நல்லது. நீண்ட நாட்களாக இருந்து வந்த சுணக்க நிலை அடியோடு மாறும். பெண்களுக்கு மனத் தடுமாற்றம் நீங்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.எதிர்ப்புகள் அகலும் கலைத்துறையினருக்கு முயற்சிகள் சாதகமான பலன் தரும். அரசியலில் உள்ளவர்களுக்கு வாக்குவாதங்கள் ஏற்படலாம். மாணவர்களுக்கு எதிர்கால கல்வி பற்றி முக்கிய முடிவுகளை எடுக்க நினைப்பீர்கள்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**
எதிலும் வெற்றி காண்பீர்கள். தெளிவான மனநிலை இருக்கும். இக்கட்டான சூழ்நிலையில் சாமர்த்தியமாக செயற்பட்டு சாதகமான பலன் பெறுவீர்கள். செயல்திறன் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பாக வீண் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையுடன் செயற்பட்டு நிர்வாகத்தினரால் பாராட்டு கிடைக்க பெறுவார்கள். கணவன், மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்க மனம் விட்டுபேசுவது நன்மை தரும். குடும்பத்துடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு சென்று வருவீர்கள். பெண்கள் எதிலும் சாமர்த்தியமாக செயற்பட்டு காரிய வெற்றி பெறுவீர்கள். கலைத்துறையினர் வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும். அரசியலில் உள்ளவர்களுக்கு முயற்சிகள் பலிதமாகும். மாணவர்களுக்கு செயல்திறமை அதிகரிக்கும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**
வாக்குவன்மையால் ஆதாயம் உண்டாகும். தைரியம் அதிகரிக்கும். எல்லா விதத்திலும் நன்மை தரும். சகோதரர்களால் நன்மை உண்டாகும். காரிய வெற்றி ஏற்படும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதையும் செய்து முடிப்பதில் துணிச்சல் உண்டாகும். ஷேர்மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கணவன், மனைவிக்கிடையே திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். சுற்றுலா சென்று வருவீர்கள். பெண்கள் எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவார்கள். கலைத்துறையினருக்கு எதிர்ப்புகள் குறையும். அரசியல்துறையினருக்கு பணவரத்து கூடும். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் ஆர்வம் உண்டாகும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**
காரியங்களில் இருந்த இழுபறிகள் அனைத்தும் அகலும். மற்றவர்களுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். முன்கோபம் குறையும். பேச்சினால் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் நீங்கி பிரிந்தவர்கள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். பணவரத்து அதிகரிக்கும். பொருளாதார நிலைகள் மேம்படும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். தொழில் வியாபாரம் தொடர்பாக இழுபறியாக இருந்த சில பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். பணவரத்து திருப்தியாக இருக்கும். புதிய பொறுப்புகள் ஏற்படலாம். பெண்களுக்கு மனதில் புது தெம்பும் உற்சாகமும் அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு சுபச்செலவுகள் உண்டாகும். அரசியலில் உள்ளவர்களுக்கு மனக் கஷ்டம் ஏற்படும். மாணவர்களுக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**
மனதில் இருக்கும் பிரச்சினைகள் நீங்கும். சொத்து சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்து வந்த இழுபறி நீங்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடுகள் ஏற்பட்டு பின்னர் விலகும். வியாபாரம் தொடர்பான பிரச்சினைகளை கையாளும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மிகவும் கவனமாக தங்களது வேலைகளை செய்வது நல்லது. பெண்களுக்கு எந்தவொரு விஷயத்திலும் முடிவு எடுப்பதில் தாமதம் உண்டாகும். தடைப்பட்ட திருமண முயற்சிகளில் சாதகமான பலன்கள் ஏற்படும். கலைத்துறையினருக்கு நெருக்கடிகளை சந்திக்க வேண்டி வரும். அரசியல்துறையினர் வாக்குவாதத்தை தவிர்ப்பது நன்மை தரும். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துவது வெற்றிக்கு உதவும்.

## கும்பம்

**(அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**
எதிர்பார்த்த இடமாற்றம் உண்டாகும். காரியங்கள் முடிவதில் தாமதபோக்கு காணப்படும். தேவையற்ற மனச் சஞ்சலம் உண்டாகலாம். யாரையும் நேருக்கு நேர் எதிர்க்காமல் அனுசரித்துச் செல்வது நன்மைதரும். தொழில் வியாபாரம் மெத்தனமாக காணப்பட்டாலும் பணவரவு இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், டென்ஷனும் ஏற்பட்டு நீங்கும். கணவன், மனைவிக்கிடையே தேவையில்லாத விஷயத்தால் கருத்து வேற்றுமை உண்டாகலாம். பெண்கள் யாரையும் எதிர்க்காமல் அனுசரித்து செல்வது நன்மை தரும். கலைத்துறையினர் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். அரசியல்துறையினருக்கு மேலிடத்துடன் கருத்து வேற்றுமை உண்டாகலாம். மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் கவனமாக இருப்பது நல்லது.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**
எதிலும் சாதகமான நிலை காணப்படும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றி உண்டாகும். பணவரத்து அதிகரிக்கும். வாக்கு வன்மை ஏற்படும். உங்கள் பேச்சுக்கு மற்றவர்கள் செவிசாய்ப்பார்கள். புதிய நண்பர்கள் கிடைப்பார்கள். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் திறமையாக எதையும் செய்து முடித்து பாராட்டு பெறுவார்கள். குடும்பத்தினரை அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பெண்களின் வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். செல்வ சேர்க்கை உண்டாகும். கலைத்துறையினருக்கு உடல் ஆரோக்கியம் பெறும். அரசியல்துறையினருக்கு காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். மாணவர்களுக்கு கல்வியில் திறமை அதிகரிக்கும்.

---

## 11 ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 44

# அரங்கை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த சரஸ்வதி கந்தசாமி



மலேசியாவில் இந்திய வம்சாவளி தமிழர்களினுடைய வரலாறு, இருப்பு, முன்னேற்றம், பங்களிப்பு போன்றவையெல்லாம் தனித்துவமானவை. சுதந்திர மலேசியாவில் இந்திய வம்சாவளி தமிழர்களின் தொழிற்சங்க அரசியல் நடைமுறைகள் தொடர்பான கவனம் உலகளவில் அவதானத்திற்குரியது. மலேசிய நாட்டில் பல இந்திய வம்சாவளி தமிழர்கள் தங்களுடைய ஆளுமையை நிலைநிறுத்தி வருகிறார்கள். அவர்களுள் குறிப்பிடத்தக்க பெண் ஆளுமையான சரஸ்வதி கந்தசாமி முக்கியத்துவத்திற்குரியவராக விளங்குகிறார். 24 செப்டெம்பர் 1968இல் பிறந்த அம்மையார் இலண்டன் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறையில் பட்டம் பெற்ற சட்டத்தரணியாக விளங்குகிறார். மலேசிய மேலவை உறுப்பினராக பதவி வகிக்கும் அம்மையார் 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு ஒருங்கிணைப்புக் குழுவின் முக்கிய உறுப்பினராக தொழிற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மலேசிய தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சின் துணை அமைச்சராக பதவியில் இருந்தார். பிரதமர் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான பாக்காத்தான் அரப்பான் கூட்டணியில் அங்கமான மலேசிய மக்கள் நீதிக்கட்சியின் துணைத்தலைவர் பொறுப்பிலும் உள்ளார். இக் கட்சியின் துணைத்தலைவர், இணை அமைச்சர் என்ற பொறுப்புகளில் இருந்து முதலாவதாக இப் பதவிகளை அலங்கரிக்கும் முதல் இந்தியப் பெண்மணியாகிறார். இக் கூட்டணி இருபத்தேழு இணை அமைச்சர்களை கொண்டமைந்துள்ளது.

மலேசியாவின் கடந்த பொதுத் தேர்தலில் தாப்பா பாராளுமன்ற தேர்தல் தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் மு.சரவணனை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்நிலையில் மலேசிய நாட்டின் மன்னர் அப்துல்லாவால் மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். பிரதமர் அன்வர் இப்ராஹிம் தலைமையில் இணை அமைச்சராகவும் பதவியில் அமர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ் மலர் நாளிதழின் சட்ட ஆலோசகர், டாக்டர் அம்பேத்கார் நல வாரியத்தின் பொதுச்செயலாளர் ஆகிய பதவி நிலைகளில் இவரது சமூக பங்களிப்பு குறித்த அவதானம் முக்கியத்துவம் பெறுகிறது. அவ்வாறே மலேசிய மனிதவள அமைச்சின் திறன் மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும் கடந்த காலங்களில் பதவி வகித்துள்ளார். கடந்த மார்கழி மாதத்தில் துணையமைச்சு மாற்றத்தின் போது தேசிய ஒருமைப்பாட்டு துணையமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. தற்போது மலேசியாவின் ஆட்சி அதிகாரத்திலுள்ள பாக்காத்தான் ஹரப்பான் கூட்டணி 2015ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டதாகும். இக் கூட்டணியில் பிரதமர் அன்வர் இப்ராஹிம் தலைமையிலான மக்கள் நீதிக் கட்சி, ஜனநாயக செயல் கட்சி, தேசிய நம்பிக்கை கட்சி, (அமாணா) ஆகியன அங்கம் வகிக்கின்றன.

நிகழ்வின் ஏற்பாட்டில் சரஸ்வதி கந்தசாமியின் முக்கிய பங்கேற்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உணரப்படுகிறது. ஆழ்ந்த ஈடுபாட்டுடன் நிகழ்விற்கு வருகை தந்த சகலரையும் வரவேற்று பழகிய விதம் அனைவராலும் மதிக்கத்தக்கதாக அமைந்தது. ஏற்பாடுகளின் நிலைமைகளை அவ்வப்போது அவ்வவ் இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு வழிப்படுத்திய முன்மாதிரியான நிலையை பலரும் வியந்தார்கள். பெண்களால் மங்கள விளக்கேற்றி தொடங்கப்பட்ட இவ் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் முதலாவது சுடரை அம்மையாரே ஏற்றி வைத்தமையும் குறிப்பிடத்தக்கது. சிறந்த ஆற்றலுடைய பெண் ஆளுமையாக இவரை அடையாளம் காணலாம். நிகழ்வில் அம்மையாரின் உரை அனைவரின் கவனத்தைப் பெற்றதாகவே அமைந்திருந்தது. அவ்வாறே ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதும் மிகத் தெளிவாகவும் நிதானமாகவும் கருத்துக்கள் கூறியதையும் அவதானிக்க முடிந்தது.

அவரின் உரையானது பின்வரும் சாராம்சத்தை கொண்டதாக அமைந்திருந்தது. "தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" என்ற பாரதியின் கூற்றின்படி இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் தங்களின் ஆற்றல்களால் உலகெங்கும் போற்றும் நல் வாழ்வு வாழ்கிறார்கள். அதன் வழியில் இங்கு மலேசியாவில்; புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் கோலோச்சி பார் போற்றும் நிலையினை பெற்றுள்ளார்கள். உலகெங்கும் படர்ந்த நம் தமிழ் உறவுகள் மலேசியாவில் சந்தித்து இன்புறும் இத் தறுவாயில் உவகை அடைகிறேன். மலேசியத் தமிழராய் பெருமிதம் கொள்கிறேன். அதற்கான களத்தை உருவாக்கிய பதினோராம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு நிகழ்வை மனதார போற்றுகிறேன். தவத்திரு. தனிநாயகம் அடிகளின் தலைமையில் 1966ஆம் ஆண்டு மலேசியாவில் தொடங்கி அதன் வழியில் நான்காவது முறையாக மீண்டும் இம் மண்ணில் இடம்பெறுகிறது. பதினோராவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை மலேசியாவில் நடத்துவதற்கு முன்வந்த உலகத்; தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மனதார நன்றியைப் பகிர்கிறேன்.

அவ்வாறே நிகழ்வின் தொடக்கத்தில் சர்ச்சையாக அமைந்த தொல். திருமாவளவனின் உரை குறித்த கவனம் குறிப்பிடத்தக்கது. தமிழ் தேசியம் தொடர்பில் ஒரு மதத்தை தொடர்ச்சியாக சாடுகின்ற போக்கு அவரின் உரையில் அமைந்திருந்தது. அவ் உரையைத் தொடர்ந்து சபையிலும் சலசலப்பு ஏற்பட்டமை கவனிக்கத்தக்கது. தொல் திருமாவளவனின் நீண்ட உரையை குறுக்கிட்டு அவரின் கருத்துக்கு சபையில் இருந்த மலேசிய இஸ்லாமியர் எதிர்ப்பை வெளியிட்டார். உடனே தொல் திருமாவளவனின் உதவியாளர் அவர் உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே எதிர்ப்பை வெளியிட்ட நபரை நோக்கிச் சென்று எச்சரித்தார். இந் நிலைமையினை பார்வையிட்டுக் கொண்டிருந்த சபையோர் பலத்த கண்டனத்தை கூக்குரலிட்டு வெளிப்படுத்தினார்கள். கலவரமான சூழ்நிலையிலான சபையை அவதானித்த நிலையிலும் தனது கருத்தினை பதிவதில் மிகுந்த நிதானப் போக்கை தொல் திருமாவளவன் கடைப்பிடித்தார். திருமாவளவன் மீதும் அவருடைய கருத்து மீதும் சபையின் ஆதங்கம் உச்சமடைந்த நிலைமையில் வழமையைப் போன்றே தன்னுடைய உரையை நிறைவு செய்தார். அவரது உரையோடு தொடர்ந்த சலசலப்பு அவரது உரையின் பின்னர் சபையில் அதிகரித்தது.

இந் நிலையில் மாநாட்டு தொடரில் அடுத்து நடக்க போவது எதுவாக இருக்கும்? என்ற மனநிலை எல்லோர் மனதிலும் ஏற்பட்டது. நிகழ்ச்சி தொகுப்பாளர்களும் ஒரு கணம் ஸ்தம்பித்த நிலையில் சபை குறிப்பறிந்த துணை அமைச்சர் சரஸ்வதி கந்தசாமி மேடைக்கு விரைகிறார். ஒலிவாங்கிக்கு அருகில் சென்று உரையாற்ற தொடங்கினார். அவரது கணீரென்ற குரல், சபையை அமைதிப்படுத்தியது. சபையை ஆசுவாசியப்படுத்திய நிலையில் தொல் திருமாளவனின் கருத்து தொடர்பில் கண்டனத்தை பதியத் தொடங்கினார். தமிழ் தேசியம் தொடர்பில் கருத்தை முன் வைத்த திருமா மதங்களுக்கிடையிலான பிரிவினைவாதம் தமிழ் தேசியத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது என்று கூறிய கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் குறித்தவொரு மதம் சார்ந்து அவரால் வைக்கப்பட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது. மதத்தை எதிர்ப்பதை நோக்காகக் கொண்டது அவரது அரசியல் சித்தாந்தமாக இருக்கலாம். அது அவருடைய கோட்பாடு சார்ந்த பிரச்சினை. ஆனால் இந்த நாட்டிலுள்ள நிலைமையை கருதாது அவருடைய கருத்து முன்வைப்பை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இக் கருத்துக்கள் மலேசிய நாட்டின் ஒற்றுமைக்கு சவாலான நிலையை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

சனாதனம் என்பது தொடர்பில் திருமாவளவன் என்ன புரிதலை கொண்டிருக்கிறார் என்பது புரியவில்லை. சாதி என்பது இந்திய சமூகத்தின் சாபக்கேடு. அதற்கு எதிரான செயற்பாடுகளை நாமும் மேற்கொள்கிறோம். அம்பேத்காரின் வழியில் அவரது கருத்தியலுக்கு முக்கியத்துவம் வழங்கும் செயற்பாடுகள் இங்கும் முன்னெடுக்கப்படுகின்றன. அது சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை களைந்து ஒற்றுமைத் தன்மையை ஏற்படுத்துவதாக அமைதல் வேண்டும். மாறாக மத தனித்துவத்தை சீர்குலைக்கும் கருத்து நிலைகளை தவிர்ப்பதே பொருத்தமானதாகும். இன, மத உணர்வுகளில் துவேசத்தை கிளப்புவதாக அவரின் உரை குறித்த கண்டனத்தை பதிவு செய்தார். இவ்வாறான கருத்துக்களை அவரது அரசியல் சித்தாந்தங்களுக்கு ஏற்ப இந்தியாவில் அவருடைய அரசியலை வைத்துக்கொள்ளலாம். மலேசியாவில் பல்லின சமூகமும் புரிதலுடன் வாழ்கின்ற போது அதற்கு பங்கம் விளைவிப்பது பொருத்தமற்ற செயல் என்பதை உறுதியாக கூறினார். மலேசியாவில் மலாயர்கள் இஸ்லாமை பின்பற்றுவதைப் போல பாலித் தீவுகளில் வாழும் மலாயர்கள் இந்து மதத்தை பின்பற்றுகிறார்கள். அங்கு சாதிய பாகுபாடுகள் இல்லை. அப்பொழுது எப்படி கூற முடியும் இந்து மதம் சாதியத்தை வளர்க்கிறது என்பதை. இப் பிரசாரம் அவருடைய அரசியல் சித்தாந்தம் சார்ந்ததாக அமைந்திருக்கிறது, என தன்னுடைய கண்டன கருத்துக்கள் ஊடாக அரங்கை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

சரஸ்வதி கந்தசாமியின் சமயோசித நடவடிக்கையானது பலரின் பாராட்டுக்கும் உரித்தானது. ஓர் அமைச்சர் என்ற கர்வம் இல்லாமல் ஆர்ப்பாட்டம் இல்லாமல் அவர் நிகழ்வு தொடர்பாக அக்கறையோடு செயற்பட்ட விதம் என்னை வியப்பில் ஆழ்த்தியது. பல ஊடகங்கள் அவ்வப்போது நேர்காணலை மேற்கொண்ட போது அவற்றுக்கும் செவிமடுத்தது மட்டுமல்லாமல் நிகழ்வில் கலந்து கொண்டவர்களுடனும் மிகவும் இயல்பாக பேசி மகிழ்ந்தார். அவரை பார்த்து மிகவும் ஆச்சரியப்பட்டேன். இருநூறு வருட காலத்திற்கு முன்னர் மலேசியாவிற்கு இந்திய வம்சாவளி மக்கள் புலம்பெயர்ந்ததைப் போலவே எமது மூதாதையர்களும் இலங்கைக்கு புலம்பெயர்ந்தார்கள். ஆசியாவின் பெரிய தொழிற்சங்கம் நமது சமூகத்தையே அடையாளப்படுத்தியது. அத் தொழிற்சங்கங்கள் பெரும்பான்மையாக பெண்களையே உறுப்பினர்களாக கொண்டமைந்திருந்தது. எமது சமூகத்தில் இருந்து பெண் ஆளுமைகள் உருவாக வில்லையே என்ற ஆதங்கம் ஏற்பட்டது. அவ்வாறு உருவானவர்களும் கைபொம்மைகளாகவே தொழிற்பட்டு இன்று அடையாளம் தெரியாதவர்களாக உள்ளார்கள். மலேசியாவின் தேசியக் கட்சியொன்றில் நமது பூர்வீகத்தை சேர்ந்த பெண்மணி ஒருவர் கட்சியின் உயர் பீடத்தில் உபதலைவராக பதவி ஏற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ் ஆளுமை அங்கம் வகிக்கும் மலேசிய மக்கள் நீதி கட்சியும் ஓர் பெண் ஆளுமையினாலேயே உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சரஸ்வதி அம்மையாருடன் உரையாடும் வாய்ப்பு கிட்டியது. உங்களைப் போன்று அடிப்படையில் நானும் இந்திய வம்சாவளி தமிழர் என்று அறிமுகப்படுத்திக் கொண்டேன். இருநூறு வருடத்துக்கு முன்னரான மலையக சமூகத்தின் புலம்பெயர்வு தொடர்பில் தெளிவுறுத்தினேன். மிக ஆர்வமாக செவிமடுத்தார்.

நமது மலையக மக்கள் தொடர்பில் மிக ஆவலோடு விசாரித்தார். இந்திய வம்சாவளி மக்களுக்கு இரு நாடுகளிலும் காணப்படும் அரசியல் உரிமைகள் தொடர்பில் ஒப்பிட்டு உரையாடினோம். தமிழை நேசிக்கும் மலேசியர்கள் தமிழ் மொழி கற்பதில் நிலவும் பலவீனங்கள் தொடர்பில் ஆதங்கத்துடன் கருத்துக் கூறினார். தமது கட்சியும் இணைந்த கூட்டணி அரசாங்கத்தில் பிரதமர் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மொழி கல்விக்கும் வழங்கும் முக்கியத்துவம் குறித்து திருப்தியோடு எடுத்துரைத்தார்.

பயணம் தொடரும்

# 2024 ஆம் ஆண்டு இண்டெக்ஸ் கண்காட்சி : ஆகஸ்ட் 7 முதல் 9 வரை BMICH இல்



தெற்காசியாவிலுள்ள முன்னணி சர்வதேச ஆடை விநியோக வர்த்தகம் 10 தடவையாகவும் கொழும்பை வந்தடையவிருக்கிறது. தவறாது கலந்துகொள்ளப்பட வேண்டிய இந்த விநியோக மற்றும் வர்த்தகக் கண்காட்சியானது, 15க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து 200க்கும் மேற்பட்ட வழங்குநர்களை ஒன்றிணைப்பதனூடாகப் பரந்த அளவிலான இயற்கை மற்றும் செயற்கை ஆடைகள், அலங்காரத் துணிகள், துணைப்பொருட்கள், சாய வகைகள், இரசாயன வகைகள் மற்றும் மென்பொருள் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையிலுள்ள RMG தொழிற்துறைக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுக்கிறது.

'8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான ஆடை ஏற்றுமதி' என்னும் அவர்களுடைய இலக்கை அடைவதற்குக் குறித்த தொழிற்துறைக்கு ஆதரவளிக்கும் முகமாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் 4 வரவேற்பறைகளில் 2024ஆம் ஆண்டுக்கான இண்டெக்ஸ் சவுத் ஏசியா கண்காட்சியானது ஆகஸ்ட் மாதம் 7,8,9 ஆம் திகதிகளில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அர்ப்பணிப்புடன் நடைபெற ஏற்பாடாகியுள்ள இவ்வர்த்தகக் கண்காட்சியானது, இலங்கையிலுள்ள வர்த்தகங்களின் உற்பத்தி மட்டத்தை விரிவுபடுத்துவதையும், சர்வதேச வழங்குநர்களுடைய வலைப்பின்னல் ஊடாக ஏற்றுமதியை வலுவூட்டுவதையும், கூட்டிணைவினூடாக உற்பத்தியை சாத்தியப்படுத்துவதற்காக உட்பிராந்தியக் கூட்டாண்மைகளை உறுதிப்படுத்துவதையும் ஊக்குவிக்கிறது.

இந்தியா, தாய்லாந்து, தாய்வான், பாகிஸ்தான் ஆகிய நாடுகளினது கலாசாரம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றை இலங்கையிலுள்ள இண்டெக்ஸ் சவுத் ஏசியா காட்சிப்படுத்தும் என்பதுடன், ஜப்பான் மற்றும் கொரியா போன்ற நாடுகளினது ஆடைக் கலாசாரங்களையும் காட்சிப்படுத்தும்.

# HNB Finance இன் நிதி கல்வியறிவு பட்டறையின் இரண்டாம் கட்டம் குருநாகல், கேகாலையில்



இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான HNB Finance PLC, இந்த வருடத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது பயிற்சிப் பட்டறை நிகழ்ச்சித் திட்டங்களை குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களை மையமாகக் கொண்டு அண்மையில் நடத்தியது. இதனூடாக நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில்முனைவோருக்கு நிதியறிவை மேம்படுத்துவதே பிரதான நோக்கமாகும். HNB Finance இன் நிறுவன சமூகப் பொறுப்புணர்வு அணுகுமுறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனத்தால், கடந்த சில வருடங்களாக நாட்டின் பல்வேறு மாகாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில்முயற்சியாளர்களின் நிதி அறிவை மேம்படுத்த முடிந்துள்ளது.

HNB Financeஇன் திறன் அபிவிருத்தித் துறைத் தலைவர் அனுர உடவத்த, இந்தத் தொடர் நிதியறிவு நிகழ்ச்சிகளை நடத்தினார், இதில் நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில்முனைவோர் வணிகக் கணக்கு பராமரிப்பு, கடன் நிர்வகிப்பு, இலாபத்தின் ஒரு பகுதியை மீள் முதலீடு செய்தல், வணிக செலவு நிர்வகிப்பு மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் பற்றி அறிந்து கொண்டனர். சமீபத்தில் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளில் 300க்கும் மேற்பட்ட தொழில் முனைவோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தொழில்முனைவோர்களில் மிகவும் ஆக்கப்பூர்வமான யோசனைகளை முன்வைத்த தொழில்முனைவோருக்கு பரிசுகளை வழங்கவும் HNB Finance நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

# பங்குகள் ஒருமுகப்படுத்தலுக்காக பங்குதாரர்களின் அனுமதியைப் பெற்றுள்ள அமானா வங்கி



அமானா வங்கியின் ஏற்கனவே காணப்படும் ஒவ்வொரு 10 சாதாரண வாக்குரிமை பங்குகளும், தலா 1 சாதாரண வாக்குரிமை பங்காக ஒருங்கிணைப்பதற்கு பங்குதாரர்களின் அனுமதி கிடைத்துள்ளதாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கு அமானா வங்கி அறிவித்துள்ளது. அண்மையில் முன்னெடுக்கப்பட்ட அதிவிசேட பொது ஒன்றுகூடலின் போது இதற்கான விசேட தீர்மானம் ஏகமனதாக எய்தப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்பின் காரணமாக, அமானா வங்கி சாதாரண வாக்குரிமை பங்குகளில், ஏற்கனவே காணப்பட்ட 5,511,257,461 பங்குகளுடன் ஒப்பிடுகையில், 551,125,746 பங்குகள் காணப்படும். ஒருங்கிணைக்கும் செயன்முறை மற்றும் CDS பதிவுகளை மெருகேற்றும் செயற்பாடுகளுக்காக அமானா வங்கியின் பங்குகளின் பரிவர்த்தனை ஜூலை 8 ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை இடைநிறுத்தப்பட்டிருந்தது. என்பதுடன், ஜூலை 15ஆம் திகதி முதல் மீள ஆரம்பமாகியது.

ஒருங்கிணைப்புக்கான அனுமதி தொடர்பில் அமானா வங்கியின் தவிசாளர் அஸ்கி அக்பரலி கருத்துத் தெரிவிக்கையில், "இந்த ஒருங்கிணைப்புக்கான அனுமதியை வழங்கியமைக்காக எமது பங்குதாரர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கின்றோம். இந்த நகர்வினூடாக பங்கு விலை தளம்பல்களை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், இதர வங்கிகளுடன் ஒப்பீட்டை மேம்படுத்துவதாக அமைந்திருக்கும். மேலும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டாளர் விகிதங்களை காண்பிப்பதுடன், சந்தையில் அமானா வங்கியின் பங்குகளை மிகவும் கவர்ச்சிகரமானதாக அமைந்திருக்கச் செய்யும்." என்றார்.

# தொழில்முனைவோரைப் பலப்படுத்தும் இலங்கை வங்கி





இலங்கை வங்கியானது நாடு முழுவதுமுள்ள சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறை சார்ந்த ஏற்றுமதியாளர்களைப் பலப்படுத்தும் முகமாக எதிர்காலத்தில் ஏற்றுமதித்துறையில் சிறந்து விளங்கக் கூடிய மற்றும் ஏற்கனவே இத்துறையில் ஈடுபட்டுவரும் இளம் தொழில் முனைவோர் தமது தொழிற்தேர்ச்சிகளை வளர்த்துக் கொள்ளும் பொருட்டு இலங்கை வணிகக் கழகத்துடன் (Ceylon Chamber of Commerce) இணைந்து மாகாண ரீதி யான நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுக்கின்றது.

பொருளாதார நெருக்கடிமிக்க காலங்களில் ஏற்றுமதிசார் தொழிற்துறையினருக்கு கரங்கொடுக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட இலங்கை வங்கியின் "ஏற்றுமதி வட்டம்" என்ற பிரிவின்கீழ் இம் முன்னெடுப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. தேசத்தின் வங்கியாளர் என்ற வகையில் இலங்கை வங்கி சிறியளவிலான ஏற்றுமதியாளர்களையும் வளர்ந்துவரும் ஏற்றுமதியாளர்களையும் ஏற்றுமதித்துறை ஜாம்பவான்களாக மாற்றும் பொருட்டு இந்நிகழ்ச்சித்திட்டத்தைக் கையிலெடுத்துள்ளது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் முடிவில், சிறிய மற்றும் நடுத்தர வியாபாரத்துறைசார் தொழில் முயற்சியாளர்கள் தமது பலவீனங்களை அடையாளங் கண்டு பலங்களைக் கட்டியெழுப்பி அதன் மூலம் ஏற்றுமதித் துறைப் பயணத்தை ஆரம்பித்து சர்வதேச சந்தைக்குள் காலடி எடுத்து வைக்கும் வகையில் பரந்தகன்ற ஏற்றுமதி உத்திகளை வகுத்துக்கொள்ளக்கூடியவர்களாக மாறுவர்.

நாடுமுழுவதும் பரவலாக நடாத்தப்படும் இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஏற்கனவே மத்திய மாகாணத்தின் கண்டி, தென்மாகாணத்தின் மாத்தறை, சப்ரகமுவ மாகாணத்தின் குருவிட்ட, ஊவா மாகாணத்தின் பதுளை முதலான இடங்களில் நான்கு ஏற்றுமதி மாநாடுகளை 2024.07.06 ஆம் திகதி நடாத்தியுள்ளது.

# ஜனாதிபதி சூழல் விருதுகள் 2024



2024 இல் Lumalaவுக்கு கௌரவம்

பரந்த சர்வதேச நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலுக்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பை கௌரவிக்கும் வகையில், இலங்கையர் மத்தியில் செயற்திறனான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் வகையில், Lumala என அறியப்படும் City Cycle Industries Manufacturing பிரைவட் லிமிடெட், முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு ஜனாதிபதி சூழல் விருதுகள் 2024 இல் சூழல் பிரிவில் சிறந்த தனியார் நிறுவனத்துக்கான வெண்கல விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு, வருடத்தில் பெருமளவு எதிர்பார்ப்புகளைக் கொண்ட நிகழ்வாக அமைந்திருப்பதுடன், நாட்டின் சிறந்த நிலைபேறாண்மை சம்பியன்களை கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது. சுற்றாடல் அமைச்சு மற்றும் மத்திய சூழல் அதிகார சபையினால் (CEA) ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு ஜூன் 28ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்கேற்புடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கும்புர, வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி மற்றும் இராஜதந்திர சமூகத்தின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# Macktiles –Buddhi Batiks தரைஓடுகளின் கண்காட்சி





தேசத்தின் பிரபல டைல்ஸ் உற்பத்தி நிறுவனமான Macktiles Lanka நிறுவனத்தின் Macktiles Buddhi Batiks ஆடம்பர தரைஓடுகளின் கண்காட்சி கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலின் விழா மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதில் தேசத்தின் செழுமையான பாரம்பரியம் வெளிக்காட்டப்பட்டதுடன் வண்ணமயமான ஆடம்பர ஒடுகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்க, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், மலேசிய உயர் ஸ்தானிகர், பட்லி ஹிஷாம் அடம், இந்தோனேசிய தூதுவர் டெவி குஸ்டினா, மெக்ஸன்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவன தலைவர் மிள்பர் மக்கீன், முகாமைத்துவ பணிப்பாளர் மிஸ்வர் மக்கீன் உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்

இந்த நிகழ்வில் மெக்டைல்ஸ் உற்பத்தி மற்றும் சேவைகளை சிறப்பித்துக்காட்டும் குழு நிலை விவாதமொன்றும் இடம்பெற்றது. மெக்ஸன்ஸ் ஹோல்டிங்ஸ் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சிமர் மில்பர், பணிப்பாளர்களான மிசா மிஸ்வர் இஸ்மாயில், அக்லா சஜ்ஜாத், சாரா மிஸ்வர், புத்தி பத்திக் பிரதம நிறைவேற்று அதிகாரியும் புத்தாக்க பணிப்பாளருமான தர்ஷி கீர்த்திசேன, பினான்ஸ் மெக்டைல்ஸ் லங்காவின் தலைவரான ஆகில் பர்ஹாஸ் ஆகியோர் விவாத நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மிஸ்வர் மக்கீன் வரவேற்புரை நிகழ்த்தினார். அமானி மிஸ்வர் நன்றியுரை வழங்கினார்.

# புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவுடன் பங்குதாரராகும் NDB வங்கி



தேசிய அபிவிருத்தி வங்கி [NDB] அதன் நிலைப்பேண்தகு முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புத்தாக்குநர்களுக்கான தேசிய போட்டியான சஹசக் நிமாவும் செயற்திட்டத்திற்காக, இலங்கை புத்தாக்குநர்கள் ஆணைக்குழுவுடன் (SLIC) அண்மையில் பங்குதாரராக இணைந்துள்ளது.

இது எதிர்கால கண்டுபிடிப்பாளர்களுக்கு ஆதரவளிப்பதற்கும், அதன் மூலம் தேசத்தின் எதிர்காலத்தை மேம்படுத்துவதற்கும் NDB இன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாகவுள்ளது.

சஹசக் நிமவும் என்பது நாடளாவிய ரீதியில் சிறியோர் மற்றும் பெரியோர்களை தங்களது புத்தாக்க திறன்களை வெளிப்படுத்த அழைக்கும் ஒரு பெருமைமிகு மேடையாகும். ஜூலை 2024 இல் ஆரம்பிக்கப்பட்ட மாகாண மட்டத்திலான தெரிவுகள் ஆகஸ்ட் 2024 வரை தொடரவுள்ள அதேவேளை, இது வளர்ந்து வரும் கண்டுபிடிப்பாளர்களின் அற்புதமான யோசனைகளுக்கு அங்கீகாரத்தையும் ஆதரவினையும் பெற ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

ஒரு மூலோபாய பங்காளியாக, மாகாண நிகழ்ச்சிகளின் போது, NDB ஒவ்வொரு நிகழ்விலும் அமர்வுகளை நடத்துவதுடன் இது பங்கேற்பாளர்களுக்கு அவர்களின் எதிர்கால முயற்சிக்கு ஆதரவாக அவர்களின் நிதியை எவ்வாறு திறம்பட நிர்வகிப்பது என்பது குறித்து கற்பிப்பதன் மூலம் சிறந்த நிதி நிர்வாகத்திற்கான அறிவினை அவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலதிகமாக இளைஞர்களை மேம்படுத்துவதற்கான வங்கியின் அர்ப்பணிப்புடன், NDB இன் இளைஞர்களை மையமாகக் கொண்ட ZEE கணக்கிற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

இது இளைஞர்களிடையே நிதியியல் கல்வியறிவு மற்றும் சேமிப்பு பழக்கத்தை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் இது அடுத்த தலைமுறை தலைவர்கள் மற்றும் புத்தாக்குநர்களை வளர்ப்பதில் வங்கியின் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகிறது.

# விளையாட்டுத் திறமையின் தசாப்தத்தை கொண்டாடும் APIIT இன் Extravaganza 2024



ஆசிய பசிபிக் தகவல் தொழில்நுட்ப நிறுவனம் (APIIT) இலங்கையின் மாணவர் செயல் குழு Extravaganzaவின் 10ஆவது ஆண்டு விழாவை கொண்டாடுகிறது, மாணவர்களின் விளையாட்டு திறனை வளர்த்து, நெருக்கத்தை ஊக்குவிக்கும் பாரம்பரியத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இந்த நிகழ்ச்சி, நாட்டின் 50 க்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களின் பங்கேற்பாளர்களுக்கிடையே விளையாட்டு உணர்வை ஊக்குவிக்கும் நோக்குடன் நடத்தப்படுகிறது. இளம் விளையாட்டு வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக் கொள்வதற்கும், நீண்டநாள் தொடர்புகளை உருவாக்குவதற்கும் ஒரு மேடையாக Extravaganza விளையாட்டை தாண்டி அதன் தாக்கத்தை விரிவாக்குகிறது.

Extravaganza 2024 போட்டிகள் ஜூலை 27 முதல் செப்டம்பர் 8 வரை நடத்தப்படவுள்ளது, அதில் ஏழு வாரங்களின் தீவிர போட்டிகள் மற்றும் த்ரில்லர் ஆட்டங்கள் இடம்பெற உள்ளன. இந்த வருடம், போட்டி வரிசையில் Netball புதிதாக இணைக்கப்பட்டுள்ளது. Netball இன் சேர்க்கை நமது விளையாட்டு திறமைகள் மற்றும் விருப்பங்களை விரிவாக்கும் பொறுப்பை பிரதிபலிக்கிறது, பங்கேற்பாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் புதிதாக மற்றும் சுவாரஸ்யமாக ஒன்றை எதிர்பார்க்கவைக்கும்.

# ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதை வென்ற மடபாத்த DPMC வேர்செஷாப்



ஜனாதிபதி சுற்றுச்சூழல் விருதுகளில் வாகன சேவை நிலையங்கள் பிரிவில் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிறைவட்) லிமிடட் நிறுவனத்தின் மடபாத்த DPMC வேர்க்ஷொப் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. சுற்றாடல் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பண்டாராயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

மடபாத்த DPMC வேர்க்ஷொப் சுற்றுச் சூழலின் நிலைபேறு தன்மை மற்றும் சுற்றுச் சூழலைப் பேணிப் பாதுகாப்பதில் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புக்கான அங்கீகாரமாக இந்த விருது அமைந்துள்ளது.

DPMC வேர்க்ஷொப் வலையமைப்பானது, நாடு முழுவதிலும் பரந்து காணப்படுவதுடன், வாகன சேவை, பழுதுபார்த்தல், வாகனப் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. நவீன தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களைப் பயன்படுத்தி உற்பத்தியாளர்களின் தேவைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஒழுகும் வகையில் தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளை இந்த வலையமைப்பு வழங்கி வருகின்றது.

கீழ்வரும் திட்டங்கள் உள்ளடங்கலான பல்வேறு தனித்துவமான சுற்றுச்சூழல் முயற்சிகள் மூலம் மடபாத்த DPMC வேர்க்ஷொப் சூழலுக்கு நட்பான நடைமுறைகளை முன்னெடுப்பதில் முன்னணியாளராகத் திகழ்கின்றது, மழைநீர் சேகரிப்பு : நிலைபேறான நீர்ப்பயன்பாட்டை உறுதிசெய்யும் நோக்கிலும், வெளிமூலங்களிலிருந்து கிடைக்கும் நீரில் தங்கியிருக்கும் தன்மையைக் குறைக்கும் நோக்கிலும் வளாகத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ளது.




# இப்போது எனது முறை

நான் அதிகாரத்தின் பீடத்தில்
ஆட்சி புரியும் போதே
இன்னுமொரு சிங்கத்தை வலிந்து
வனத்தினுள் அழைத்து
வந்தார்கள்

ஓநாயும் நரிகளும் ஊளையிட
மானை அறுத்துப் பலியிட்டு
மயில் கூட்டங்கள் அகவ
மரியாதை வழங்கினார்கள்

பின்னர் என் குகைக்குள்
அத்து மீறி நுழைந்தார்கள்

நான் அணிந்திருந்த
மகுடத்தை பறித்து
அதன் தலையில் சூடினார்கள்

என்னை
தரதரவென இழுத்து வந்து
ஒரு குப்பைக் கூடைபோல்
வனத்திற்கு
வெளியில் வீசினார்கள்

எனது சிம்மாசனத்தில்
சிறு உறுத்தலுமற்று
ஒரு தலையாட்டி பொம்மைபோல்
அமர்ந்து கொண்டது சிங்கம்

இத்தனையும் உறங்கச் செல்லும்
கடைசி நிமிடம்வரை
என்னுடன் மாமிசம்
சாப்பிட்டவர்களே
இந்தச் சதியை
செய்தார்கள்

நாளை இதே போன்று
இதனையும் காலம்
தூக்கி வீசும்

சிலவேளை என்னை எறிந்த
கைனஸ்களைக் கொண்டே
மிகக் கேவலமாக
எறிய வைக்கும்

வால் பிடித்து முதுகு சொறிந்து
காலை கழுகிக் குடித்து
பின் கதவால்
வருபவர்களை
ஒரு போதும்
காலம் விட்டு
வைப்பதில்லை

ஜமீல்

# அனுமானம் !

இதற்கு மொழியில்லை !
இது பேசுவது குறைவு !
அனுமானம் பேசவிளைந்தால்,
அது குறைஞானமாகவும்
இருக்கலாம் !
ஆதலால்,
" பெரும்பாலான அனுமானங்கள்
மொழியற்றவை " எனக்
கொள்ளப்படுகின்றன !

காவியக் கவியரசு
எம்.எம்.அப்துல் ஹை

# இளைப்பாறும் இதயங்கள்..!

விழியோரம் பூத்தே
களிகொள்ளும் நேசம் !
புன்னகையில் மலர்ந்தே
பரப்பிடும் வாசம் "
இணைந்திட்ட இதயங்கள்
இன்பத்தில் பேசும் !
இரவின் கனவுகள்
தென்றலாய் வீசும் !

தடைகளைத் தாண்டியே
காதலும் வாழ்ந்திடும் !
மௌனமே வார்த்தைகளாய்
புன்னகையே உதிர்ந்திடும் !
ஈருடல் ஒருயிராய்
பயணங்களும் தொடர்ந்திடும்!
வாழ்வினிலே வசந்தமும்
வாழ்த்ததில் இணைந்திடும்!

சாதி,மத சண்டைகள்
சலனத்தைத் தந்திடும் !
காதலும் வாழவே
கண்ணீர் சிந்திடும் !
சொர்க்கத்தில் திருமணமும்
நடக்குமென்ற
எண்ணங்களால்..,
கல்லறையில் உறங்கியே
இளைப்பாறும் இதயங்கள்..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்



# துரத்தும் வாழ்க்கை

கோடியில் ஒருவனாய் பிறந்து
தேடித் தேடியே உடலும் தேய்ந்து
ஓடி ஓடியே உள்ளமும்
களைத்தல் தான்
வரமெனப் பெற்ற வாழ்வா...?

நாளைக்காகவே அனைத்துமென்று
இன்றைய நாளை முழுதாய் மென்று
தொட்டது பாதி தொடாதது மீதியெனத்
துரத்தல் தான் கனாக் காணும் வாழ்வா...?

தானுயர்ந்து சிகரம் தொட்டிடவென்று
சக மனிதன் முதுகை மிதித்து நின்று
யாவரும் சமமேயென குரலோங்குதல்
தான் நெறி கொண்ட வாழ்வா...?

உடலும் உள்ளமும் உல்லாசமாகிடவென்று
தகாத பழக்கங்களை வழக்கமாய் கொண்டு
திக்கறியாது நிர்க்கதியாதல் தான்
திசை பிசகாத வாழ்வா...?

பார்போற்றும் பரிணாமம் பற்றிடவென்று
சமயங்கூறும் விதிகளைக் கொன்று
தமக்கேற்றாற்போல் மாற்றிக் கோர்த்தல்
தான் மார்க்கம் போதிக்கும் வாழ்வா...?

ஆன்மிகமே நிரந்தரமென அறிந்தும் நன்று
நிலையிலா உலக மோகமதில் வீழ்ந்து
வழி தொலைந்து மரித்தல் தான்
இறைவன் வலியுறுத்தும் வாழ்வா...?

பாத்திமா சில்மியா
மாவனல்லை



# துயரம் கழுவும் நிலவு

மௌனத்தின் விலா
என்புகளைப் போர்த்திக்
கொண்டு இதயமாகிறது
இந்த நிலவு...

ஒளிக்கிரணங்களைப் பீச்சிப்
பாய்ச்சுகிறது உடலெங்கும்
பரந்து ஓடுகிறது கதகதப்பு...

வெள்ளொளியில் மனம்
இளைப்பாற ஆன்மப்பாறையில்
சிறு இளக்கம்...

மெலிதான காற்று
மேனி தழுவ
மனதின் கனம் குறைந்து
மெதுவாக மேலெழுகிறேன்...

உப்பிய உடலம் உனக்குள்
போதை பரவ உள்ளொளியில்
துயரம் கழுவப்படும்
அப்பொழுது தூய்மையின்
சுவாசம் தளர்வாயதனை
ஆட்கொள்ளும்...

வெறுமையின் பொழுது
பொறுமையின் விழுது
பற்றி புலம்பெயர்வாய்
பால்வெளிக்கு
ஆழ்துளைத் தனிமையில்
தயவுசெய்யும் நிலவு
நிர்மலமாய் சிரிக்கிறது...

கனிவான உஷ்ணத்தில்
சுருண்டு படுத்துக் கொள்ளும்
பூனையாகிறாய்...

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர், கிழக்கிலங்கை

# முதுமை

கறுத்துச் சுருண்ட
என் முடிகளுக்கு
வெள்ளைச் சாயமிட்டது
என் முதுமை!

ஓர் அம்பு வில்லாகிப்போகும்
புதுமை என் முதுமை!

தசாப்தங்கள் ஏழையும் தாண்டி
தளராமல் ஓடுது
என் வாழ்க்கை வண்டி!

நான் வீழ்ந்துவிடாதிருக்க
விழுதுகளாய்த் தாங்கும்
என் பிள்ளைகள்
ஒரு பாக்கியமே!

ரசிக்கப்படாத இன்னுமொரு
குழந்தைப் பருவமே
இந்த முதுமை!

மறுமை அறுவடைக்காக
இறைவன் அளித்த
மாபெரும் அருட்கொடை
இந்த முதுமை!

முற்றப் புள்ளிக்காக
காத்திருக்கும்
தொடர்கதை நான்!
காத்திருக்கிறேன்
அவன் அழைப்புக்காக

தகவல் கிடைத்தால்
பிரார்த்தியுங்கள் எனக்காக!

கலாபூஷணம்
எம்.ஜே.எம்.தாஜுதீன



# மாய வலைகள்...!

உலகத்தில்
பல வகையான
மாய வலைகள்
மது வலை
மாது வலை
பண வலை
இவையெல்லாம்
வரலாறு..!
கற்றுத்தந்த பாடம்
இம் மாய
வலைகளிலிருந்து..
மனித இனம்
விடு பட
வேண்டுமாயின்
அன்பு...
கருணை....
இரக்கம்....
என்னும்
தார்மீகம்
தழைத்தோங்க
வேண்டும்
இத் தரணியிலே.

சி.மௌநேஷ்
மட்டக்களப்பு



# தந்தை

தந்தையின் உள்ளக்
கருவறையில்
இரு தசாப்தம்
என்னை மகனாய்
கருத்தரித்து
பல்கலைக்கழக
இலக்கை அடைய
பிரசவித்த ஒப்பற்ற
ஜீவன் என்தாய்

நாள் ஒன்றில்
நாளில் மூன்றை
உழைப்பதற்கு
ஒதுக்கி
உழைப்பில்
எறும்பை மிஞ்சிய
நிகரில்லா ஜீவன்
என் தந்தை

தன்னாசைகளை
எனக்காகவே
மனப்புதை குழியில்
புதைத்து
என்னாசைகளை
தன்னாசையாய்
நிறைவேற்றிய
ஒப்பில்லா ஜீவன்
என் தந்தை

எண்ணூறு கோடியில்
எதிர்பார்ப்பே இல்லா
மா மனிதர்
பாமரர் என்றாலும்
மா மேதையாய்
என் உள்ளத்தில்
முதல் மனிதனாய்
வாழும்
என் தந்தை

முகம்மது முகைதீன்

# எதிர் நீச்சல் தோல்வி

என்னிடம் தோற்று போய் கிடக்கிறது
துரத்தி துரத்தி விரட்டியதும்
என்னோடு ஓடமுடியமால்
அலுத்துபோய் விட்டது
தோல்வி என்னை கூறுபோட்ட

வாழ்க்கைக்கும் தோல்விக்கும்
போட்டி நீயா நானா என்று
பெற்ற கடன் அடைக்கவில்லை
வளர்த்த கடன் முடியவில்லை

பாதியிலே பட்டகடன் மீதியிலே
நிற்கிறது பற்றி எரியும் பாசம்
அழவைத்து பார்க்கும்
அன்பு நாயாய் மதிக்கும்

ஏ . யெல் . ஜபீர்



# முஹர்ரம் புத்தாண்டும் கர்பலாத் தியாகமும்

முஹர்ரம் புத்தாண்டும்
கர்பலாத் தியாகமும்
காஸா யுத்தமும்
காணாத அழிவும்
கல் நெஞ்சைக் கூட
கசக்கி விடும். நேரம்

கர்பலா யுத்தத்தில்
கழன்றது ஓர் தலைதான்
காஸா யுத்தத்தில்
கணக்கின்றி செல்வதுமேன்

பதரில் வென்றோம்
மலக்குகளின் உதவியுடன்
பொறுத்திருந்து பார்ப்போம்
பொறுமையோடு
இருப்போம்

வயிற்றில் கல்லைக் கட்டி
பசி வலி தாங்க.முடியாமல்
அகழியிலே நடந்த கதை
அனைவருக்கும்
தெரியுந்தானே

காஸாக் கதைகளிலும்
கண்ணால் பார்த்து விடடோம்
கதை கதையாய் எழுதி நிதம்
காற்றலையில்
கதை சொல்வோம்

இரக்கமற்ற இங்கிதர் கதை
இனியும் தான். தொடருமா
இல்லை இறைவா
உன் உதவியும்
எம்மை நாடி. வருமா

கையேந்தி கேட்கிறோம்
கண்ணே. றஹ்மானே
கலங்கி நிற்கும்.
காஸாவை
துலங்கி நிற்க வழி செய்வாய்

தோப்பூர்.எஸ்.சிராஜுதீன்
நற்பிட்டிமுனை

# இதயத்தில் ஓரிடம்

ஊசலாடிக் கொண்டிருக்கும்
துளி உயிருடன்
துடிக்கும் வலியுடன்
துண்டான இதயத்துடன்
ஊமையாய் உனை வந்தடையும்
சில உறவுகள்

உண்மையில் உனக்கென்ன வேண்டுமென
முகத்தில் அறைந்தாற் போல்
நெத்தியில் அடித்தாற் போல்
மனதை நொறுக்கினாற் போல்
ஒரு போதும் வினவிடாதே

ஏதேனும் துளி ஆறுதலை
அவர்களில் சிறு மாறுதலை
மரித்துப் போன மன தைரியத்தை
எரிந்து சாம்பலாகிப் போன இன்பங்களை
உன்னிடம் மீட்டலாமென
அவர்கள் நினைத்திருக்கக் கூடும்

என்னிடம் எதுவுமில்லையெனும்
கைவிரிப்பு வேண்டாம்

இப்போது தான் நினைவு வந்ததா எனும்
கோபக் கனல் வேண்டாம்
தொலைந்து போ எனும்
ரணப்படுத்தல் வேண்டாம்
சொல்லித் தொலை எனும்
அலட்சியம் வேண்டாம்

முடிந்தால் தோள் பற்றி
மெல்லக் கரம் பற்றி
இதமாய் கண்ணீர் துடைத்து
இதயத்தோடு அணைத்திட முயன்றிடு

யாருமின்றி அவர்கள்
உன்னிடம் வரவில்லை
யாவரை விடவும்
நீதான் வேண்டுமென
நினைக்கிறார்கள் அவ்வளவே!

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# Senthooram
# செந்தூரம்

2024 ஜூலை 21 ஞாயிற்றுக்கிழமை



**பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளராக திகழும் கவிஞர் இக்பால் அலி**



**தமிழறிஞர் த. துரைசிங்கத்தை நினைவுகூர்ந்து நூல் வெளியீடு**

பக்கம் : 04



**ஹாஷிம் உமர் பௌண்டேசனால் மடிக் கணினி அன்பளிப்பு**

பக்கம் : 05



**கீர்த்தி ஷெட்டியின் கிளாமர் போட்டோஸ்**

பக்கம் : 08-09



**தமிழ் சினிமாவின் குறுந்திரைப்பட இளம் இயக்குனர் நளீர்**

பக்கம் : 07








**டுபாய் அந்தரா நடனக் கல்லூரியின் ஆசான் விம்மி ஈஸ்வரின் நடன நிகழ்வு**

பக்கம் : 03

# 'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி'

'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி' என்ற தொலைக்காட்சி கேள்வி பதில் நிகழ்ச்சி ஒரு தசாப்தத்திற்கு முன்னர் சக்கைப் போடு போட்டது. ஓர் இருக்கையில் அமர்ந்து பத்து, பதினைந்து கேள்விகளுக்கு பதில் சொல்லி ஒரே இரவில் கோடிஸ்வரர் ஆவது தான் நிகழ்ச்சியின் சாரம். உலகெங்கும் பிரபலமான இந்த நிகழ்ச்சியை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட 'ஸ்லம் டோக் மில்லியனெயார்' படத்துக்கு இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் ஒஸ்கார் விருதைக் கூட தட்டிச் சென்றார்.




பிரிட்டனின் ஐ.டீ.வி. தொலைக்காட்சியில் 1998 செப்டெம்பர் 4 ஆம் திகதி முதல் முறை ஒளிபரப்பப்பட்டது தான் இந்த நிகழ்ச்சியின் பூர்வீகம். அதனைப் பார்த்து உலகெங்கும் காப்பி அடித்தார்கள்.

ஆனால், இந்த நிகழ்ச்சியால் எல்லோரையும் விட பிரபலம் பெற்றவர் பிரிட்டனின் சார்ல்ஸ் இன்க்ரம். 2001 செப்டெம்பர் 9 ஆம் திகதி ஐ.டீ.வி. நிகழ்ச்சியில் பங்கேற்றார். ஏற்கனவே இந்த போட்டி நிகழ்ச்சியில் மனைவி டயானா மற்றும் சகோதரர் அட்ரியான் பொல்லக் இருவரும் தலா 32,000 பௌண்ட்களை வென்றிருந்தார்கள்.



எனவே, இன்க்ரமுக்கு இந்த நிகழ்ச்சி பரீட்சயமானது. ஆனால் நிகழ்ச்சியின் ஆரம்பத்திலேயே பதில் அளிப்பதற்கு உதவும் 'லைஃப் லைன்' வாய்ப்புகளை எடுத்துக் கொண்டார். ஐம்பதுக்கு ஐம்பது லைப்லைன் மாத்திரமே எஞ்சி இருந்தது. இவர் அதிக நேரம் தாக்குப் பிடிக்கமாட்டார் என்று நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் நம்பினார்கள்.

ஆனால் யாரும் எதிர்பார்க்காத வகையில் அனைத்துக் கேள்விகளுக்கும் சரியாக பதில் கொடுத்து 1 மில்லியன்ம் பௌண்டகளை வென்றார். உலகமே அவரைப் பற்றித் தான் பேசியது. ஏனென்றால் இந்தப் பரிசுத் தொகைய்யை வெல்லும் மூன்றாவது போட்டியாளராகவே அவர் இருந்தார்.

ஆனால் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் அதிர்ச்சியில் மிதந்தார்கள். இது எப்படி சாத்தியம் என்று தலையை பீய்த்துக் கொண்டார்கள். சந்தேகமும் வலுத்தது.

போட்டி முடிந்த கையோடு இன்க்ரமின் தலைமுதல் பாதம் வரை சோதித்தார்கள், ஒன்றும் கிடைக்கவில்லை. இன்க்ரமின் கேள்விகளுக்கு வழங்கிய பதில்களில் ஓர் ஒழுங்கற்ற நிலை இருந்தது. எதற்கும் அவர் உறுதியாக பதில் அளிக்கவில்லை.

தனது கடைசி ஐம்பதுக்கு ஐம்பது வாய்ப்பை பெற்று விடை இரண்டாக சுருக்கப்பட்டபோது கூட அவர் தவறான பதிலை அழுத்துவதற்கு தயாரான நிலையில் அதில் இருந்து பின்வாங்கி சரியான பதிலில் விரல் வைத்தார். கடைசிக்கு முந்திய 500,000 பௌண்ட்கள் பெறுமதியான கேள்வியிலும் இந்தக் குழப்பம் தெரிந்தது.

'பரன் ஹொஸைன் எந்த நகரை திட்டமிடுவதில் பிரபலம் பெற்றவர்?' என்பது தான் கேள்வி. பதில்களில் பெர்லின் நகர் இருந்தது. அந்தப் பெயர் ஜெர்மனி பெயர் மாதிரி இருப்பதால் அவர் பர்லின் நகரையே பதிலாக அனுமானித்தார். ஆனால், அந்த பதிலில் இருந்து பின் வாங்கிய அவர் பாரிஸ் என்ற சரியான பதிலை அழுத்தினார்.




மில்லியனை வெல்லும் கடைசிக் கேள்விக்கான பதிலும் இப்படித் தான். பிழையான பதிலை உறுதியாகச் சொன்ன அவர், சரியான பதிலை அழுத்தினார். இது வெல்லாம் தயாரிப்பாளர்களுக்கு சந்தேகத்தையே ஏற்படுத்தியது.

எனவே, ஒளிபரப்பான நிகழ்ச்சியை மீண்டும் போட்டி உன்னிப்பாக அவதானித்தார்கள். அப்போது தான் இன்க்ரம் கேள்விக்கு பதில் அளிக்கும் முன்னர் பார்வையாளர்களில் இருந்த இருவர் இருமுவது தெரிந்தது. யார் என்று உற்றுப்பார்த்தால் ஒருவர் இன்க்ராமின் மனைவி, மற்றவர் இந்தப் போட்டியில் பங்கேற்க வந்த டெக்வன் விட்டொக். அவர் ஒரு கல்வியாளரும் கூட. அதாவது இந்த இருமல் தான் இன்க்ராம் சரியான பதிலைச் சொல்ல வழிநடத்தி இருக்கிறது.

இதில் சத்தமாக இருமினால் சரியான பதில், மூக்கால் சத்தம் எழுப்பினால் பிழையான பதில்.

கடைசியில் பிரச்சினை பொலிஸ் வரை சென்றது. வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்த இன்க்ரம் மற்றும் அவரது மனைவிக்கு 2003 ஆம் ஆண்டில் இரண்டு ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத் தண்டனையும் 30 ஆயிரம் பௌண்ட் அபராதமும் விதிக்கப்பட்டது. உடந்தையாக இருந்த விட்டொக்கிற்கு இரண்டு ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட 12 மாத சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

பிரிட்டன் இராணுவத்தில் மேஜர் ஒருவராக இருந்த இன்க்ரம் வலுக்கட்டாயமாக பதவி விலகச் செய்யப்பட்டார்.

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

# உலகில் அடிமைகள் இருக்கும் ஒரே நாடு

அடிமைக் கலாசாரம் இரத்தத்தோடு ஊரிப்போன நாடு மொரிட்டானியா. அந்த வட மேற்கு ஆபிரிக்க நாடுதான் உலகில் கடைசியாக அடிமைத்துவத்தை நீக்கியது. பிரான்ஸ் தமது காலனித்துவமாக இருந்தபோது 1905இல் மொரிட்டானியாவில் அடிமைத்துவத்திற்கு தடை விதித்தபோதும் உள்நாட்டு மக்களிடம் அது எடுபடவில்லை. ஆடு, மாடுகளைப் போல மனிதர்களை சொத்தாக வைத்திருந்தவர்கள் ஏகத்திற்கு இருந்தார்கள்.

என்றாலும் 1981 ஆம் ஆண்டில் அடிமைத்துவத்தை ஒழிக்க சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் அந்த சட்டத்தில் டைனோசர் புகும் அளவுக்கு ஓட்டை இருந்தது. அதாவது அடிமைத் தனத்தை பின்பற்றினால் அவர்களை தண்டிக்க சட்டத்தில் எந்தத் தண்டனையும் இல்லை. கடைசியில் 2007 ஆம் ஆண்டு சர்வதேசத்தின் கடுமையான அழுத்தத்தை அடுத்து அடிமைகளை வைத்திருப்பவர்களுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டது.

என்றாலும் இன்றும் கூட அங்கு அடிமைக் கலாசாரம் இருக்கத் தான் செய்கிறது. நாட்டு மக்களின் 2.1 வீதம் அதாவது ஒரு இலட்சம் பேர் வரை இன்றும் அங்கு அடிமையாக இருக்கிறார்கள்.








சிபிஐ விசாரணைக்கு தலைவர் ஏன் சிரிச்சிக்கிட்டே போறார்?
கேள்வியெல்லாம் அவுட்டாகி விட்டதாம்.



அந்தப் பொண்ணுக்கு நீ லவ் லெட்டர் கொடுத்தது உண்மையா?
லவ் லெட்டர் கொடுத்தது எல்லாம் உண்மை, ஆனால் அதில எழுதியிருக்கிறதெல்லாம் பொய்.



"ஏண்டி, இந்த சாப்பாட்டை நாய் கூட சாப்பிடாது!"
"மெதுவா பேசுங்க உங்க அம்மா உள்ளே சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்க."



ஊழல் செய்ய வாய்ப்பு எதுவும் அமையாததால் என்னால் தொடர்ந்து அமைச்சராக பதவி வகிக்க முடியாமல் எனது பதவியை இராஜினாமா செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!



டொக்டர் ஒப்பரேஷன் முடிஞ்சி போஸ்ட்மோடத்துக்கு அனுப்பி வைச்ச ராமசாமி உயிரோட வந்திருக்கிறார். ஆஹா ஒப்பரேஷன் சக்ஸஸ்




தலைவர் அந்தப் பேச்சாளர் மீது கோபமாக இருக்கிறாரே, ஏன்?
பாராட்டு விழாவிலே தலைவர மானமிகு அமைச்சரே என்று சொல்றதுக்கு பதிலா வருமானமிகு தலைவருன்னு சொல்லிட்டாரு...



# டுபாய் அந்தரா நடனக் கல்லூரியின் ஆசான் விம்மி ஈஸ்வரியின் நடன நிகழ்வு



டுபாயிலுள்ள அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஒப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் எல் எல்சி அமைப்பின் "பிரக்ருதி த்வனி 2024, சமுத்ரா மௌக்திகா தி கல்ச்சுரல் ஓட் " என்ற நிகழ்வு, எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் ஹிஸ்டாரிக் தியேட்டரில் நடைபெறவுள்ளது. அனுமதி இலவசம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், தினகரன், தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

எல்லைகளைத் தாண்டிய கடல் திரைகளை கடந்து ஒரு வசீகரிக்கும் பாரம்பாரிய நடன கலைகளுக்குள் உங்களை இந்த நிகழ்வு அழைத்துச் செல்லவுள்ளது. இங்கு இந்தி பாலே நடனம், இந்திய பாரம்பாரிய நடனம், கிளசிக்கல் இசை என பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்தியக் கலைஞரும் நடனம் மற்றும் இசை ஆசானுமாகிய திருமதி விம்மி பகவதிஷ்வர் தலைமையில் துபாயிலிருந்து வருகை தரும் சிறப்புக் கலைஞர்கள் இந்நிகழ்வில் தங்களது கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றவுள்ளனர்.

டுபாயிலுள்ள அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஒப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் எல் எல்சி அமைப்பின் உரிமையாளர் கடந்த 30 வருடங்களாக இந்த நடனக் கலை கல்லூரியை நடத்தி வருகிறார்.

சென்னையில் பிறந்த இவர், 30 வருடங்களுக்கு முன் டுபாய்க்கு சென்று இந்த நடனக்கல்லூரியை ஆரம்பித்துள்ளார். இவருக்கு இவரது கணவர் பெரும் உறுதுணையாக இருந்து வருகிறார். குச்சுப்புடி நடனம் மீது தீவிர ஆர்வம் கொண்ட இவர், குச்சுப்புடி நடனத்தை முறையாகக் கற்றுக் கொண்டு அதன் மூலம் தான் கலை உலகுக்கு பிரவேசித்துள்ளார். உலகத்தில் உள்ள பல்வேறு நாடுகளுக்கும் சென்று இவர் தனது நடன நிகழ்வுகளை நடத்தி வருவதுடன் அந்தந்த நாடுகளில் என்னென்ன நடனங்கள் பிரபல்யமாக பாரம்பாரிய நடனங்களாக ஆடப்பட்டு வருகின்றனவோ, அவற்றையும் கற்றுக் கொண்டு மேடையேற்றி வருவது குறிப்பிடத்தக்கது. இவர் தற்போது இலங்கைக்கு வருகை தந்துள்ளார். எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெறும் நிகழ்விலும் இவர் கலந்து கொள்வார். அதனைத் தொடர்ந்து கொழும்பு சுதர்சி மண்டபம், மாத்தளை காந்தி மண்டபம், கண்டி கலாச்சார மண்டபம் யாழ்ப்பாண இந்திய கலச்சார மண்டபம் ஆகியவற்றிலும் தனது நடன நிகழ்வுகளை நடத்தவுள்ளார்.

இவர் டுபாயில் நடத்தி வரும் இந்த கலைக் கல்லூரியில் நடனம் மட்டுமன்றி கீபோர்ட், கிட்டார், போன்ற இசைக்கருவிகள் இசைக்கவும் பயிற்சி வழங்கி வருகிறார். இங்கு யோகாவும் கற்றுக் கொடுக்கப்படுகிறது.

# தமிழறிஞர் த. துரைசிங்கத்தை நினைவுகூர்ந்து நூல் வெளியீடு





தமிழறிஞர் த. துரைசிங்கத்தை நினைவுகூர்ந்து கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நூல்வெளியீடு ஒன்று அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு முன்னிலை வகித்த இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகர் ஹாசிம் உமர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவனுக்கு முதல் பிரதியை வழங்கினார். நிகழ்வுக்கு தலைமை வகித்த வானதி காண்டீபன், கல்வியமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் எஸ். தில்லை நடராசா, மருத்துவர் வி. ரி. இளங்கோவன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

# ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரியின் குரு தசாப்த விழா



ஸ்ரீ பாத தேசிய கல்வியியற் கல்லூரியின் 18ஆம் தொகுதி மாணவர்களின் தசாப்த ஒன்றுகூடல் ஹில் கூல் கொட்டகலையில் இடம்பெற்றது.மாணவர்களை ஆசிரியர்களாக செதுக்கிய கல்லூரியின் விரிவுரையாளர்களுக்கு 18ஆம் தொகுதி மாணவர்கள் நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

# ஹாஷிம் உமர் பௌண்டேசனால் மடிக் கணினி அன்பளிப்பு








ஹாஷிம் உமர் பௌண்டேசன், பல்வேறு சமூக சமயப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் வறிய மாணவர்களுக்கு உதவும் வகையில் கல்விக்கு கைகொடுப்போம் என்ற திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது.

அதற்கிணங்க அதன் முதல் கட்ட விநியோகப் பணி கடந்த ஜூன் மாதம் 07ஆம் திகதி ஆரம்பமானது. இரண்டாம் கட்ட விநியோகம் நேற்றுமுன்தினம் ஜூலை 12ஆம் திகதி கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள ஹாஷிம் உமர் பௌண்டேசன் தலைமையகத்தில் இடம்பெற்றது.

ஹாஷிம் உமர் பௌண்டேஷனின் ஸ்தாபகரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மடிக் கணனி பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களுள் நடுவர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேருக்கு புரவலர் ஹாஷிம் உமர் மடிக் கணினிகளை வழங்கினார்.

இதன் போது ஜெ.ஏ.முஹம்மட் வெல்லம்பிட்டி, அ.ஹம்தான்கல்முனைக்குடி, ஜே.சிவகுமார் வெள்ளவத்தை, எம்.ஐ.எம். ராதியா அம்பாறை சென்றல் காம்ப், ஜே.ரி.பிரியதர்ஷினி தெரணியகலை ஆகியோர் மடிக் கணினிகளைப் பெற்றுக் கொண்டனர். ஹாஷிம் உமர் பௌண்டேசனின் பொதுச் செயலாளர் ஏ.எம்.ஜௌபரின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில் வேலவர், சிரேஷ்ட ஊடகவியலாளர் ராதா மேத்தா, சமூகஜோதி ரபீக், தொழிலதிபர் வாஜித், இம்போட் மிரர் பிரதம ஆசிரியர் அமீர், உலமா கட்சித் தலைவர் முபாரக் அப்துல் மஜீத், மாணவர்களின் பெற்றோர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பிளவர் குயின் முழு ஆடைப்பால்மா இலங்கை சந்தையில் அறிமுகம்






'பிளவர் குயின்' என்ற புதிய முழு ஆடைப்பால்மாவினைWin int group of கம்பனி இலங்கை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. கொழும்பபு shangrila Hotel இல் ஜூலை மாதம் 15ம் திகதி பிளவர் குயின் முழு ஆடைப்பால்மா அறிமுகம் செய்ப்பட்டது.

இந்த புதிய பிளவர் குயின் முழு ஆடைப்பால்மா குறித்து அறிமுக நிகழ்வில் உரையாற்றிய win int குழு நிறுவனத்தின் பணிப்பாளர் , 'பிளவர் குயின்' என்ற இந்த முழு ஆடைப்பால்மா என்பது தரமானஆரோக்கியமான ஒரு பால்மாவாகும். இந்த பால்மா தற்போது சந்தையில் காணப்படும் பால்மாக்களின் விலைகளை விட குறைந்த நியாயமான விலையில் சந்தைப்படுத்தப்படுகின்றது. தற்போதைய பொருளாதார நிலமையினை கருத்திற்கொண்டு வாடிக்கையாளர்களின் நலன் கருதி இந்த பால்மாவினை குறைந்த விலையில் அறிமுகம் செய்ததாக நிறுவனத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.

# இக்பால் அலியின் இலக்கிய நயம் கொஞ்சும் சிறுவர் பாடல் நூல்




சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான இக்பால் அலி மிகச் சிறந்த பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளர். இவர் கவிதைகள், சிறுவர் பாடல்கள், திறனாய்வுக் கட்டுரைகள், வாழ்வியல் வரலாறுகள் என எழுதி 10 க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார். பல நூல்களுக்கு பரிசில்களையும் பாராட்டுக்களையும் பெற்றுள்ளார். சாதனைகளையும் படைத்துள்ளார். தமிழ் மொழியின் மீது அதீத பற்றுக் கொண்டு கடந்த நான்கு தசாப்த காலத்திற்கும் மேலாக எழுத்துப் பணியிலும் இலக்கியச் செயற்பாட்டிலும், ஊடகப் பணியிலும் தன்னைமுழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வருகின்ற ஒருவர்.

1996 இல் முற்றத்திற்கு வாருங்கள் கவிதைத் தொகுதி வெளிக்கொணர பட்டது. இந்நூலுக்கு இன ஒருமைப்பாட்டு அமைச்சின் கீழ் உள்ள அரச கரும திணைக்களத்தினால் தேசிய விருது வழங்கப்பட்டது. 2001 இல் புள்ளிகளில் சிலபுள்ளிகள் எனும் கவிதைத் தொகுதி வெளிவந்தது.. இந்நூலுக்கான விருதினை யாழ் இலக்கியப் பேரவையினால் வழங்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூலுக்கான விருது வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2002, 2003,களில் 'நான் மூன்று சக்கரக்காரன்',' அன்பு பெருக. நல்ல தொரு' ஆகிய பெயர்களில் மூன்று சிறுவர் இலக்கிய நூல்களை வெளிக்கொணர்ந்தார். இந்த மூன்று நூல்களுக்கு மத்திய மாகாண இந்து சமய கல்வி அமைச்சு சான்றிதழ்கள் வழங்கிகௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து 2023 இல் குரங்குத் தம்பி சிறுவர் பாடல்கள் நூலையும் மற்றும் காலத்தின் கால்கள் திறனாய்வுக் கட்டுரை நூலையும் வெளிக் கொணர்ந்தார். அதேவேளை பேராதனை பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சன் ஊடகவியலாளர் இக்பால் அலிஆகிய இருவரும் இணைந்து மருதூர்க் கொத்தனின் குறுநாவல் தொகுதி ஒன்றையும் மருதூர்க் கொத்தனின் நினைவுகளின் தேரோட்டம் எனும் கட்டுரைத் தொகுதி ஒன்றையும் வெளிக் கொணர்ந்தனர். லேக் ஹவுஸும் காவேரிக் கலாமன்றமும் இணைந்து நடத்திய தொழுநோய் தொடர்பான கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய கட்டுரைகளைத் தொகுத்து விழி என்னும் பெயரில் வெளியிட்ட நூலின் பதிப்பாசிரியர் இவர். பேராசிரியர் கே. எம்.எச். காலிதீன் மற்றும் சஹீட் எம் ரிஸ்மியின் இளம் தலைமைத்துவ ஆளுமை எனும் இரு வாழ்க்கை வரலாற்று நூல்களின் ஆசிரியருமாவார்.

இவை தவிர இலங்கை தென் கிழக்கு ஆய்வு மையத்தின் கடந்த 20 வருடங்களாக தலைவராகக் கடமையாற்றியவர். கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் செயலாளராக இற்றைவரை கடமையாற்றி தமிழ் இலக்கியத்தின் செழுமைக்கு ஊரமூட்டுபவராக செயற்பட்டு வருகிறார்.எல்லாவற்றிற்கும் மேலாக இக்பால் அலியின் படைப்புக்கள் பற்றி இலங்கையின் தென்ழக்குப் பல்கலைக்கழக மாணவியர் இருவர் தனது பட்டப்படிப்புத் தொடர்பாக ஆய்வுகள் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. எம். எப். எப். பர்ஹத் இக்பால் அலி கவிதைகள் ஓர் ஆய்வு என்ற தலைப்பிலும் பாத்திமா அஸ்மா இக்பால் அலியின் சிறுவர் இலக்கியப் பணிகள் ஓர் ஆய்வு என்னும் தலைப்பிலும் சிறந்த ஆய்வேடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

# பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளராக திகழும் கவிஞர் இக்பால் அலி



சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான இக்பால் அலி மிகச் சிறந்த பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளர். இவர் கவிதைகள், சிறுவர் பாடல்கள், திறனாய்வுக் கட்டுரைகள், வாழ்வியல் வரலாறுகள் என எழுதி 10 க்கும் மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார். இனி செந்துாரம் இதழுக்கு அவர் கூறிய கருத்துக்களை பார்ப்போம்.

**1.ஊடகவியலாளராக இருக்கும் உங்களுக்கு எழுத்து துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?**

நான் முதலில் எழுத்துத் துறையில் இருந்துதான் ஊடகத் துறைக்கு வந்தேன் என்று கூறலாம்.

1984 களில் நான் இலக்கியத் துறையில் நாட்டம் கொண்டு கவிதைகள், சிறுகதைகள் , சிறு பாடல்கள் எழுத ஆரம்பித்தேன். அதற்கு தினகரன் வாரமஞ்சரி, சிந்தாமணி, வீரகேசரி, மித்திரன் போன்ற பத்திரிகைகள் களம் அமைத்துத் தந்தன. அதன் பின்னர் இலக்கியச் செயற்பாடுகளிலும் களமிறங்கி ஈடுபட தொடங்கினேன்.

இலக்கியச் செயற்பாட்டுத் துறைக்கு ஊடகத் தேவை மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. 1990 களில் கண்டி மக்கள் கலை இலக்கிய ஒன்றியம் இலக்கியப் பணிகளுக்காக ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவர் கலாபூணசம் இரா.அ. இராமன். செயலாளர் நான். ஆகிய இருவரும் உள்ளோம். கண்டியில் இலக்கிய மேம்பாட்டுக்காக மூன்று தசாப்த காலத்திற்கு மேலாக இற்றைவரையிலும் பங்காற்றி வருகின்றோம்.

அதேபோன்று 1995களில் தென்கிழக்குப் பிரதேசத்தில் தென்கிழக்குப் பல்கலைக் கழகம் தோற்றம் பெற்றது. அத் தோடு தென்கிழக்கு ஆய்வமையம் என்ற அமைப்பு, அங்குள்ள எழுத்தாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சேர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. அதன் தலைவராக சுமார் இரு தசாப்த காலமாக கடமையாற்றினேன். இவ்வமைப்புக்களில் இலக்கியச் செயற்பாட்டை வெளிக் கொணர்வதற்கு பிற ஊடக வியலாளர்களை நாட வேண்டி இருந்தது.



அந்த வகையில் ஊடகத்துறை எனும் போது இலங்கையில் வெளிவரும் சகல தேசிய நாளிதழ் பத்திரிகைகளிலும் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி வருகின்றேன். அதே போன்று இலங்கையிலுள்ள தேசிய இலத்திரனியல் ஊடகங்கள் . வானொலி, மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சமூக வலைத்தளங்களுக்கும் செய்தியாளராகக் கடமையாற்றி வருகின்றேன். அந்த வகையிலேதான் முதலில் உங்கள் அறிமுகம் கூட ஓர் எழுத்தாளர் என்று அல்லாமல் ஒரு பிராந்திய செய்தியாளர் என்ற வகையில் தினக்குரல் பத்திரிகையின் வாயிலாக சந்திப்பு ஏற்பட்டது. அது அன்று ஓர் ஊடக சந்திப்பாக மாறி இன்று இலக்கிய சந்திப்பாக வலுப் பெற்றுள்ளது என்று குறிப்பிடலாம்.

**2. எழுத்துத் துறையில் ஆர்வம் இருந்தாலும் அதனை நூல் உருவாக்க வேண்டும் என்ற அந்த ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது?**

இது உண்மையிலே என்னைப் பொறுத்தவரையில் நல்லதொரு கேள்வி. கடந்த இரு தசாப்த காலமாக எழுத்துத் துறையை விட்டு ஒதுங்கி இருந்து விட்டேன். குறிப்பாகச் சொல்லப் போனால் நீண்டதொரு இலக்கியப் பணியை ஆற்றி ஓய்வினைக் கொடுத்து இரு தசாப்த காலங்களுக்கு மேலாக ஊடகத் துறையில் ஓய்வில்லாமல் தீவிரமாக ஈடுபட்டேன்.

எனினும் நான் செய்தி சேகரிக்கச் செல்லும் தருணத்தில் என்னை காணுகின்ற சந்தர்ப்பங்களில் பேராசிரியர் துரை மனோகரன் மற்றும் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி. ஞானசேகரன் ஆகிய இருவரும் என்னை அருகே அழைத்து' இலக்கியத் துறையில் இருந்து தூரமாகி விட வேண்டாம்.' அறிவுரை கூறி தட்டிக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள். இதில் குறிப்பாகச் சொல்லப் போனால் பேராசிரியர் துரைமனோகரன் கூறும் போது 'ஊடகத் துறையின் மூலம் உங்களுக்கு பயனளிக்க முடியும். இலக்கியத் துறை என்பது நிலையானது. அவை இரண்டும் தேவை. ஒரு பறவைக்கு இரு புறங்களிலும் இறக்கைகள் இருப்பது போல் எந்தளவுக்கு ஊடகத் துறையில் ஆர்வம் காட்டி பறந்து செல்கின்றீர்களோ அவற்றைப் போன்று இலக்கியத் துறையிலும் கைவிடாமல் முனைப்புடன் செயற்பட வேண்டும்' என்று பேராசிரியர் துரை மனோகரன் அறிவுரை கூறுவார் என்பது இங்கு முக்கியமான விடயமாகும்.

இந்நிலையில் கடந்த 2019 இல் ஜனாதிபதித் தேர்தல் காலமும் இந்நாட்டுக்குள் கொரோனா தொற்று தாக்கம் செலுத்திய ஆரம்ப கால கட்டத்தில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியியல் துறையில் இளங்கலை மாணிப் பட்டப் படிப்பினை மேற்கொண்ட எம். எப். பர்ஹத் என்ற மாணவி என்னோடு தொடர்பு கொண்டு எனது கவிதைகள் பற்றி ஆய்வினை மேற்கொண்டுள்ளேன் எனவும் தனக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் என்னிடம் வேண்டிக் கொண்டார்.

அதற்கு இணங்க அவர் எனது இல்லம் வந்து என்னிடம் உள்ள இலக்கியத் துறை சார்ந்த அனைத்து ஆவணங்களையும் எடுத்துச் சென்று ஆய்வினை மேற்கொண்டார். அதன் பிறகு அவர் செய்த ஆய்வு நூலின் ஒரு பிரதியினை ஒப்படைத்து விட்டு அவர் என்னிடம் ஒரு முக்கியமான கருத்தைப் பகிர்ந்து கொண்டார்.

அதாவது 'என்னுடைய படைப்பிலக்கியம் குறித்து பல்வேறு தளங்களில் ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன. நீங்கள் எழுதாமல் இருக்க வேண்டாம். மென்மேலும் தொடர்ந்து எழுதுங்கள் என்று ஓர் அழுத்தமான வேண்டுகோளை முன் வைத்தார். அதனைத் தொடர்ந்து தினகரன் வாரமஞ்சரியின் சிறுவர் உலகப் பகுதியில் தொடர்ந்து சிறுவர் பாடல்கள் எழுதினேன். அதில் பிரசுரமான பாடல்களை தொகுத்து 'குரங்குத் தம்பி' சிறுவர் பாடல்கள் என்ற நூலை வெளிக்கொணர்ந்துள்ளேன்.

மற்றையது. இலங்கையில் வெளிவந்த நூல்கள் பற்றி மதிப்பீடு செய்து ஞாயிறு தினக்குரல், தினகரன் வாரமஞ்சரி, தீம்புனல் மின்னிதழ் பத்திரிகைளுக்கு எழுதிய நூல் மதிப்பீடுகளை தொகுத்து காலத்தின் கால்கள் திறன் நோக்கு என்ற நூலையும் வெளிக்கொணர்ந்துள்ளேன்.

இந்த இரண்டு நூல்களும் சமீபத்தில் வெளிவந்தவையே இன்று சாதாரணமாக நூல் வெளியிடுவது சாதாரண விடயமல்ல. அந்த நூலை கடினத்துடன் வெளியே கொண்டு வந்தாலும் அதற்கு வெளியீட்டு விழா நடத்துவது என்பது ஒரு அசாதாரணமான விடயம். நூல் அச்சிட்ட செலவை விட அதற்கு அதிகம் செலவு செய்ய வேண்டும்.

**3. நீங்கள் இதுவரையில் என்னென்ன நூல்களை வெளியீட்டுள்ளீர்கள்? அது பற்றி சிறு குறிப்புத் தர முடியுமா?**

1996, 2001,ஆண்டுகளில் ஆரம்ப காலத்தில் இரு கவிதைத் தொகுதி நூல்களையும், 2002, 2003 களில் மூன்று சிறுவர் இலக்கிய நூல்களையும் 2001 களில் பேராசிரியர் கே. எம். எச். காலிதீனுடைய வரலாற்று நூல் ஒன்றையும். 'நயனம்' எனும் பெயரில் அச்சில் வெளிக்கொணர்ந்த மூன்று இதழ்களின் கலை இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராகவும், கண்டி இலக்கிய செய்தி மடலின் இணையாசிரியராகவும், தென்கிழக்கு ஆய்வமையச் செய்தி மடலின் ஆசிரியராகவும் இருந்து வெளியிட்டுள்ளேன். இவை தவிர 2023 இல் 'சஹீட் எம். ரிஸ்மியின் இளம் ஆளுமை' என்ற வாழ்க்கை வரலாற்று நூலும் பேராதனை பல்கலைக்கழக தமிழ் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சனும் நானும் இணைந்து மறைந்த எழுத்தாளர் மருதூர்க் கொத்தனின் நூல்களை வெளிக் கொணர்ந்து வருகின்றோம்.

இதன் பதிப்பாசிரியர்களாக நாங்கள் இருவருமாக இருந்து 'அதிரமதிம' என்ற குறுநாவலையும்,'நினைவுகளின் தேரோட்டம்' என்ற கட்டுரைத் தொகுதி ஒன்றையும் வெளிக் கொணர்ந்துள்ளோம். இன்னும் மூன்று நூல்களை வெளிக்கொணரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். ஒன்று அவருடைய நாடகங்கள், குட்டிக் கதைகள், காவியம் போன்ற நூல்கள் வெகு விரைவில் வெளிவரும் என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியாவில் தமிழ் தொண்டன் பைந்தமிழ்ச் சங்கம் மற்றும் நிலா வட்டம் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்தும் 100 குழந்தைக் கவிஞர்களை ஒருங்கிணைத்து 5000 பக்கங்களைக் கொண்ட நூலாக வெளிகொணரும் உலக சாதனை நூலுக்கு 50 குழந்தைப் பாடல்களையும் அனுப்பியுள்ளேன். இந்நூலின் வெளியீட்டு விழா இந்தியாவில் வெகுவிரையில் விமர்சையாக இடம்பெறவுள்ளது.

**4. நீங்கள், கருப்பொருள்களை எவ்வாறு அணுகுகின்றீர்கள்? எவ்வாறு தேர்வு செய்கின்றீர்கள்?**

சிறுவர் பாடல்களைப் பொறுத்த வரையில் பொது வாழ்வில் உண்மையாய் சிறார்கள் தினசரி எதிர்நோக்கும் வாழ்க்கைக் சூழலை கருத்தோவியமாக வரைந்துள்ளேன்.

சிறார்களுக்கிடையே நிலவும் உற்சாகங்களையும் சவால்களையும் மகிழ்ச்சிகரமாய் மாற்றி எதிர்வினைகளுக்கு அஞ்சாமல் மகிழ்ச்சிகரமான எண்ணத்தோடு பாலகர்களின் உலகை வெற்றிக் கொள்வதற்காக கொஞ்சும் மொழி பேசும் நாவினில் இனிய கீதங்களாய் என்னுடைய பாடல்கள் பாடசாலை மட்டத்தில் போதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரியில் சுமார் 25 பாடல்களுக்கு இசை அமைப்பட்டு அங்கு கல்வி பயிலும் ஆசிரியர் மாணவர்கள் மத்தியில் நீண்ட காலம் போதிக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

போர்க்காலம், நவீன தொழில் நுட்பம், சிறார்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்கள், ஒழுக்க மாண்புகள் பாடுபொருள்களாக் கொண்டு அறிவியல் சார்ந்த பாடல்களையே எழுதினேன். அப்பாடல்கள் ஆசிரியர் மாணவர்கள் மத்தியில் பெரும் தாக்கம் செலுத்தின. ஆதலால் தான் நான் எழுதிய சிறுவர் பாடல்கள் சிறுவர் இலக்கியத்தின் வரலாற்றிலும் ஒரு புதிய திருப்பமுனையை ஏற்படுத்தியுள்ளமை குறித்து பேராசிரியர் சபா ஜெயராசா எழுதிய 'சிறுவர் இலக்கிய வளர்ச்சி' எனும் நூலிலும் பேராசிரியர் கலாநிதி எம். எஸ்.எப். சாதியா நான் எழுதிய குரங்குத் தம்பி எனும் நூலின் அணிந்துரையிலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

*தொடர் 15 ஆம் பக்கத்தில்...*

# தமிழ் சினிமாவின் குறுந்திரைப்பட இளம் இயக்குனர் நளீர்

**இலங்கையில் தமிழ் சினிமாவில் குறுந்திரைப்பட இளம் இயக்குனராக இருக்கிறீர்கள். சினிமா துறையில் உங்கள் கவனம் திசை திரும்ப என்ன காரணம் ? அத்தோடு உங்களைப்பற்றிய தகவல்களையும் அறியத் தாருங்கள்.**

நான் புகாரி நளீர். எனது ஊர் மூதூர். Quantity surveyor மற்றும் மாஸ் மீடியா டிப்ளோமா பயின்று இருக்கின்றேன்.

Site engineering and vkc manager ஆக பணிபுரிந்து இருக்கின்றேன். தற்போது சினிமா துறையில அதிதீக ஆர்வத்தோடு பயணிக்கிறேன். இன்று சினிமா துறை கல்வி அரசியல் வியாபாரம் நல்லதாகவும் தீமையாகவும் பயன்படுத்தும் ஊடகமாக திகழ்கின்றது. சாதனை புரிந்து எனது வாழ்க்கையோட சம்பந்தப்பட்ட விடயங்களையும் ஒரு காணொளியோடு ஊடகத்தின் ஊடாக வெளிப்படுத்தகின்ற போதும் இந்த உலகமே அந்த காணொளியை பார்வை விட வேண்டும் அதற்கு நான் சிறந்த இயக்குனராக படைப்புகளை படைக்க வேண்டும்

**உங்களது குறுந்திரைப் படங்களைப் பற்றி கூறுங்கள்?**

30 ரூபாய் கூலி பள்ளிக்கூடம் குறுந்திரைப்படங்களை எழுதி இயக்கி தயாரித்து இருக்கின்றேன். நல்ல வரவேற்புகளை பெற்று வந்தேன். மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் கல்வி நிலையை சுட்டிக்காட்டி பெற்றோர்களின் அர்ப்பணிப்புகளை மாணவர்களுக்கு தெரியப்படுத்தும் குறுந்திரைப்படமாகவே அமைத்திருந்தேன்.



**சினிமா மூலமாக உங்களது எண்ணக்கருக்களை இலகுவாக எத்தி வைத்து இலங்கையின் குறுந்திரைப்பட வரலாற்றில் தடம் பதிக்க முடியும் என நினைக்கிறீர்களா...?**

பல சவால்களையும் பலவிதமான கருத்துக்களை எதிர்ப்பை சந்திக்க நேரிடும் நேரிட்டேன், இன்னும் பல விதமான கருத்துக்களை சமூகத்தில் வெளிப்படையாக சுட்டிக்காட்டி தயாரிக்க இருக்கின்றேன். அதற்கான ஆதரவு இல்லை என்றாலும் பரவாயில்லை எதிர்ப்பை நினைத்து கொஞ்சம் அச்சமாகத்தான் இருக்கின்றது. 30 ரூபாய்க்கு இன்று வரை எதிர்ப்பு இழப்பு இரண்டையும் சந்தித்து இருக்கின்றேன்.



**பேசாத சினிமா பேசத் தொடங்கி இன்று கிராபிக்ஸ் வரை பல மாற்றங்கள் வந்துள்ளன. இந்த சினிமா எந்தளவுக்கு சமூகத்திற்கு பயனுள்ள வழிகாட்டியான விடயங்களை தருகின்றன?**



பெரும்பாலும் வியாபார நோக்கமும் முக்கியம் தானே? மக்களுக்கு பொழுதுபோக்கு நகைச்சுவை, சமூக மூடநம்பிக்கை, நல்ல சிந்தனை முற்பட்ட சினிமா தற்பொழுது வியாபாரத்தை நோக்கமாகும் அரசியல் ஹீரோயிசம் இனம், மதம், சிந்தனைகள் சார்ந்ததாகவும் தொடுதல் காட்சி உள்ள சினிமா ஆகவும் ஒரு சிறிய நல்ல கருத்துக்காக மூன்று மணித்தியாலத்துக்குள் வியாபாரம் கலாச்சார சீர்கேடு மத, இன, கருத்து போதைக்கான நேர ஒதுக்கீடு உணர்வை தூண்டக்கூடிய காட்சிகள் என 99 விதமான சினிமா திரைப்படங்கள் வியாபாரத்தை நோக்காகவே கொண்டுள்ளன.

**5–உங்களது முப்பது ரூபா குறுந்திரைப்படத்தைப் பற்றி கூறுங்கள். ?**



எனது முதலாவது குறும் திரைப்படம் எனது வாழ்வியலோடு சம்பந்தப்பட்ட தாக்கத்திலே கொடுக்கப்பட்ட படைப்பு பல எதிர்ப்பு பல ஏமாற்றம் சந்தித்திருந்தேன். என்னோடு சேர்ந்து படப்பிடிப்பு காதர் முஹைதீன் பாரிஸ் எடிட்டர் முஹமட் அஹ்ஷன் துணை நின்று பணியாற்றினார்.

30 ரூபாய் குறுந்திரைப்படத்திற்கா ஐந்து தேசிய விருதுகளும் எனக்கு கிடைக்கப் பெற்றிருந்தது. சுமார் 101 குறுந் திரைப்படங்கள் பங்கு பற்றிய ஒரு போட்டியில் 12 விருதுகளில் ஐந்து விருதுகள் எனது குறும் திரைப்படத்துக்கு கிடைத்தது.

70 குறுந்திரைப்படங்கள் சிங்கள மொழியும் 31 குறுந்திரைப்படங்கள் தமிழ் மொழியிலும் வந்திருந்தன. அதில் விருது பெற்றவர்கள்

சிறந்த இயக்குனர் ஜுரி விருது: புஹாரி நளீர்

சிறந்த படப்பிடிப்பு: காதர் முஹைதீன் பாரிஸ்

ஜுரி சிறந்த நடிப்புக்கான விருது: தாரணி தாசன்

சிறந்த தொகுப்புக்கான விருது: முஹமட் அஹ்ஷன்

சிறந்த ஒலி அமைப்புக்கான விருதுகள்: புஹாரி நளீர்



**முழுநீள திரைப்படம் தயாரிக்கும் எண்ணமுண்டா .... அதற்கு பல சவால்களை எதிர்கொள்ள வேண்டுமல்லவா....உங்களது அடுத்த கட்ட நகர்வு எதனுடன் சம்பந்தப்பட்டதாக இருக்கும் ?**




இருக்கிறது. ஒரு வருட காலமாக சிறந்த ஒரு திரைக்கதையினை வைத்துக்கொண்டு திரைப்படம் ஒன்றினை உலக மக்களுக்கு தரம் வாய்ந்ததாகவும் தயாரிக்க வேண்டும். அது வழிகாட்டலாக பல உண்மைகளையும் வெளிக் கொண்டு வரவேண்டும்.

எண்ணக்கருவோடு ஒருவனின் போதை திரைப்படத்தினை அமைத்துள்ளேன். ஒரு சிறப்பான ஒரு கதை அம்சங்களையும் இதுவரை யாரும் சொல்லிடாத ஒரு திரைக்கதையினையும் கொடுப்பேன் என்ற நம்பிக்கையில் பயணிக்கின்றேன். போதையில் ஒருவன் சமூகத்தின் அங்கீகரிக்கப்பட்ட சிறந்த படைப்பாகவும் சிறந்த படைப்புகளில் ஒன்றாக இருக்கும் என நம்புகின்றேன்.

தொடர் 15 ஆம் பக்கத்தில்...



✍ பாத்திமா நளீரா

## வெளியானது போட் படத்தின் முதல் பாடல்

தமிழ் சினிமாவில் அதிகப்படியான ரசிகர்களை தன் பக்கம் கொண்டு மக்களின் பேவரைட் காமெடி நடிகராக வலம் வருபவர் தான் நடிகர் யோகி பாபு.

ஆரம்பத்தில் இவரும் காமெடி நடிகராக வலம் வந்து அதற்குப் பிறகு கதாநாயகனாகவும் நடிக்கத் தொடங்கினார். நடிகர் யோகி பாவுக்கும் ஹீரோவாக நடிக்க பல படங்கள் குவிந்து வருகின்றன.

அந்த வகையில் இயக்குனர் சிம்பு தேவன் இயக்கத்தில் நடிகர் ஜோகி பாபு நடித்துள்ள படம் தான் போட். இந்த திரைப்படம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி திரையரங்குகளில் ரிலீசாக உள்ளது.போட் திரைப்படத்தின் டீசரை அண்மையில் படக் குழு வெளியிட்டு இருந்தது. அதற்கு ரசிகர்கள் பலரும் தமது வரவேற்பை கொடுத்து வருகின்றார்கள்.

இந்த படத்தில் யோகி பாபுவுடன் எம்.எஸ் பாஸ்கர், கௌரி கிஷன், மதுமிதா ஆகியோர் நடித்துள்ளார்கள். இந்த படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார்.

இந்த நிலையில், தற்போது போட் படத்தில் இருந்து முதலாவது பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்று வருகின்றது.



## லாஸ்லியா நாயகியாக நடிக்கும் படம்...

விஜய் உட்பட பல பிரபலங்களின் படங்களை தயாரித்த தயாரிப்பு நிறுவனம் தனது அடுத்த படத்தின் அறிவிப்பை வெளியிட்டுள்ள நிலையில் அந்த படத்தின் நாயகியாக பிக்பாஸ் லாஸ்லியா நடிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தளபதி விஜய் நடிப்பில், அட்லி இயக்கத்தில் உருவான 'மெர்சல்' திரைப்படத்தை தயாரித்த ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் விரைவில் ஒரு படத்தை தயாரிக்கும் அறிவிப்பை வெளியிடும் என்று சில நாட்களாக செய்திகள் வெளிவந்து கொண்டிருந்தன.

இந்த நிலையில் ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் அடுத்த படத்தின் பர்ஸ்ட் போஸ்டர் வெளியாகி உள்ளது. இந்த படத்திற்கு 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' என்ற டைட்டில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த படத்தில் ஹரி பாஸ்கர் நாயகனாகவும், லாஸ்லியா நாயகியாக நடிக்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகை லாஸ்லியா ஏற்கனவே 'பிரண்ட்ஸ்' மற்றும் 'கூகுள் குட்டப்பா' ஆகிய படங்களில் நடித்த நிலையில் தற்போது அவர் 'மிஸ்டர் ஹவுஸ் கீப்பிங்' படத்தில் நடிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓஷோ வெங்கட் இசையில், குலோத்துங்க வர்மன் ஒளிப்பதிவில், ராமசுப்பு படத்தொகுப்பில் இந்த படம் உருவாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீண்ட இடைவேளைக்கு பிறகு ஸ்ரீ தேனாண்டாள் பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்தின் மற்ற தகவல்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





## சுசித்ரா சர்ச்சை கருத்துக்கு பதிலடி கொடுத்தாரா த்ரிஷா



பாடகி சுசித்ரா சமீபத்தில் விஜய் மற்றும் த்ரிஷா குறித்து சர்ச்சைக்குரிய வகையில் பேட்டி அளித்த நிலையில் அந்த கருத்துக்கு மறைமுகமாக பதிலடி கொடுக்கும் வகையில் த்ரிஷா தனது சமூக வலைதளத்தில் பதிவு செய்திருப்பதாக கூறப்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் விஜய்யின் பிறந்த நாளன்று நடிகை த்ரிஷா வெளியிட்ட புகைப்படம் ஒன்று பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த புகைப் படத்திற்கு பல்வேறு கதைகள் கட்டப்பட்டது என்பதும் பல வதந்திகளும் பரவியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் கடந்த சில மாதங்களாகவே சர்ச்சைக்குரிய வகையில் கருத்துக்களை கூறி பேட்டி அளித்து வரும் பாடகி சுசித்ரா, விஜய் மற்றும் த்ரிஷா குறித்தும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை பேசியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் த்ரிஷா தனது சமூக வலைத்தளத்தில் செய்த பதிவில் 'உங்களை ஏதாவது ஒன்று செய்ய விடாமல் தடுத்தால், அது முழுக்க முழுக்க மற்றவர்கள் உங்களை பற்றி கூறும் கருத்துக்கள் மட்டுமே' என்று பதிவு செய்துள்ளார்.

மற்றவரின் கருத்துக்களை கண்டுகொள்ளாமல் நாம் நம்முடைய வேலையை செய்து கொண்டு போய்க் கொண்டே இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் கூறப்பட்ட இந்த கருத்து சுசித்ராவுக்கு மறைமுகமான பதிலடி என்று ரசிகர்கள் கமெண்ட்களை பதிவு செய்து வருகின்றனர்.

## ப்ளீஸ் இப்படி கவர்ச்சி காட்டாதைங்க..
### பூர்ணிமாவுக்கு குவியும் அட்வைஸ்

பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மேலும் பிரபலமடைந்தவர் தான் பூர்ணிமா ரவி. இவர் ஆரம்பத்தில் அராத்தி என்ற சேனலை நடத்தி வந்தார். அதில் தனது நடன வீடியோக்கள் தனது புதிய யோசனைகளை பதிவு செய்ததோடு இவர் பதிவிடும் வீடியோக்கள் கிரியேட்டிவ் ஆகவும் எதார்த்தமாகவும் இருந்ததால் ரசிகர்கள் அதை விரும்பிப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

இதில் நல்ல ரெஸ்பான்ஸ் கிடைத்ததால் குறும்படங்களில் நடிக்க ஆரம்பித்தார். அதுக்கும் நல்ல வரவேற்பு கிடைத்தது. அதன் பின்பு சண்டைக்காரி என்ற வெப் சீரியலிலும் நடித்தார்.

இதைத்தொடர்ந்து பிளான் பண்ணி பண்ணனும் என்ற படத்தின் மூலம் வெள்ளித் திரையில் அறிமுகமானார். அது மட்டும் இல்லாமல் நயன்தாராவுடன் அன்னப்பூரணி படத்திலும் நடித்திருந்தார். மேலும் கதாநாயகியாக செவப்பி படத்திலும் நடித்திருந்தார். இந்த நிலையில், தற்போது எந்த பட வாய்ப்புகளும் இல்லாத காரணத்தினால் கவர்ச்சியை கையில் எடுத்துள்ளார்.

அந்த வகையில் ஷர்ட் பட்டனை கழட்டி கவர்ச்சியில் தூக்கலாக இருக்கும் போட்டோக்களை தனது இன்ஸ்டா பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

இந்த போட்டோக்களுக்கு லைக்குகள் குவிந்து வரும் நிலையிலும் திறமையை மட்டும் நம்புங்கள், கவர்ச்சி எதுக்கு என்று சில ரசிகர்கள் அவருக்கு அட்வைஸ் கொடுத்து வருகின்றார்கள்.



# முத்தக்காட்சியில் நடிக்க அனுபமா விதித்த நிபந்தனை

நடிகை அனுபமா பரமேஸ்வரன் முத்தக்காட்சி, படுக்கையறை காட்சிகளில் நடிக்க தயார் என்றும் , ஆனால் அதே நேரத்தில் சில நிபந்தனைகள் விதித்ததை பார்த்து தயாரிப்பாளர்கள் அதிர்ச்சி அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

'பிரேமம்' என்ற மலையாள படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமான அனுபமா பரமேஸ்வரன், தனுஷ் நடித்த 'கொடி' என்ற திரைப்படத்தில் தமிழில் அறிமுகமானார். அதன் பிறகு அவர் 'தள்ளி போகாதே' 'சைரன்' உள்ளிட்ட தமிழ் படங்களிலும், சில தெலுங்கு படங்களிலும் நடித்தார். தற்போது அவர் ஒரே நேரத்தில் ஐந்து படங்கள் நடித்து வருகிறார் என்பதும் அதில் 'பைசன்' 'லாக்டவுன்' ஆகிய இரண்டு தமிழ் படங்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சமீபத்தில் அனுபமா பரமேஸ்வரன் நடித்த 'தில்லு ஸ்கொயர்' என்ற தெலுங்கு திரைப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது என்பதும் இந்த படத்தில் அனுபமா பரமேஸ்வரன் கிளாமரில் அசத்தியிருந்தார் என்பதும் தெரிந்தது. இதனை அடுத்து அவருக்கு கிளாமர் கேரக்டர்கள் குவிந்து வருவதாகவும் குறிப்பாக முத்த காட்சிகள், படுக்கையறை காட்சிகள் கொண்ட கதை அம்சம் அதிகம் வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் தன்னிடம் கதை சொல்ல வரும் இயக்குனர் மற்றும் தயாரிப்பாளர்களிடம் முத்த காட்சிக்கு ஒரு ரேட் , படுக்கையறை காட்சிக்கு ஒரு ரேட் என தனித்தனியாக பிரித்து சம்பளம் கேட்பதாகவும், அவர் கூறும் கணக்கை கூட்டி பார்த்தால் அவருடைய சம்பளம் ஒரு கோடி நெருங்கியதாக கூறப்படுகிறது. இதனை அடுத்து அவரிடம் கதை சொல்ல வந்த இயக்குனர்கள் தெறித்து ஓடுவதாக கூறப்படுகிறது.

ஆனால் இந்த செய்திக்கு அனுபமா பரமேஸ்வரன் தரப்பில் இருந்து மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு படத்தின் கதையைக் கேட்டு, அந்த படத்தில் நடிக்கலாமா? நடிக்க வேண்டாமா? என்று அனுபமா பரமேஸ்வரன் முடிவு செய்ததாகவும் முத்தக்காட்சி படுக்கையறை காட்சிகளுக்கு எல்லாம் தனியாக அவர் சம்பளம் கேட்டதில்லை என்றும் இது அவரது தொழில் எதிரிகள் பரப்பி வரும் வதந்தி என்றும் கூறியுள்ளனர்.

## 27 வருடங்களுக்கு பின் இணைந்த சரத்குமார் தேவயானி

சரத்குமார் மற்றும் தேவயானி இணைந்து நடித்த 'சூரிய வம்சம்' என்ற திரைப்படம் கடந்த 1997 ஆம் ஆண்டு வெளியான நிலையில் 27 ஆண்டுகள் கழித்து தற்போது மீண்டும் ஒரே படத்தில் இருவரும் இணைந்து நடிக்க இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.சித்தார்த் நடிக்க இருக்கும் 40வது திரைப்படத்தின் அறிவிப்பு சமீபத்தில் வெளியானது என்பதும் இந்த படத்தை சாந்தி டாக்கீஸ் என்ற நிறுவனம் தயாரிக்க இருப்பதாகவும் '8 தோட்டாக்கள்' உள்ளிட்ட படங்களை இயக்கிய ஸ்ரீகணேஷ் இயக்க இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது இந்த படத்தில் இணைந்த நான்கு பிரபலங்கள் குறித்து அறிவிப்புகள் வெளியாகி உள்ளன. முதலாவது ஆக இந்த படத்தில் சரத்குமார் இணைகிறார். இன்று சரத்குமாரின் பிறந்த நாளை முன்னிட்டு அவருக்கு வாழ்த்து தெரிவித்து இந்த படத்தின் தயாரிப்பு நிறுவனமான சாந்தி டாக்கீஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது



.இதனை அடுத்து இந்த படத்தில் தேவயானி ஒரு முக்கிய கேரக்டரில் இணைகிறார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த படத்தின் நாயகியாக மீதா ரகுநாத் இணைகிறார். இவர் ஏற்கனவே மணிகண்டன் நடித்த 'குட் நைட்' திரைப்படத்தில் நாயகியாக நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்த படத்தில் இன்னொரு நாயகியாக சைத்ரா அச்சார் என்பவர் இணைந்துள்ளார். இவர் கன்னட திரையுலகின் பிரபல நடிகை என்பது குறிப்பிடத்தக்கது.

சரத்குமார், தேவயானி, மீதா ரகுநாத் மற்றும் சைத்ரா அச்சார் ஆகிய நான்கு பிரபலங்கள் 'சித்தார்த் 40' படத்தில் இணைந்த நிலையில் இன்னும் யார் யார் இந்த படத்தில் இணைகிறார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



## கீர்த்தி ஷெட்டியின் கிளாமர் போட்டோஸ்

தென்னிந்திய சினிமாவில் தற்போது பிரபல நடிகையாக வலம் வருபவர் தான் நடிகை கீர்த்தி ஷெட்டி. இவர் தற்போது தமிழிலும் காலடி எடுத்து வைத்துள்ளார்.

விஜய் சேதுபதி நடிப்பில் தெலுங்கில் வெளியான உப்பெண்ணா என்ற திரைப்படத்தின் மூலமாக சினிமாவில் அறிமுகமாகியுள்ளார் கீர்த்தி ஷெட்டி. இந்த படத்தில் இவருக்கு பல விருதுகளும் கிடைத்துள்ளன.

தற்போது பிரபல நடிகர் ஜெயம் ரவி நடிக்கும் ஜீனி படத்தில் ஒரு கதாநாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார். மேலும் நடிகர் கார்த்தி உடன் இணைந்து வா வாத்தியார் என்ற படத்தில் கமிட்டாகி உள்ளாராம்.

இந்த நிலையில் தற்போது நடிகை கீர்த்தி ஷெட்டி கிளாமர் புகைப்படங்களை வெளியிட்டு உள்ளார். இது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

# பெண்ணின் சுதந்திரம் எது?



மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா! என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை.

பெண், வாழ்க்கை, சுதந்திரம் (Woman, Life, Freedom ) என்பது அடக்கி வைக்கப்பட்ட திறமை உணர்வுகளின் ஒட்டுமொத்த விடுதலை என்றும் சொல்லாம். அத்துடன் வரையறைக்குள் அடக்க முடியாத வேதனையுணர்வு என்றும் சொல்லலாம்.

பெண்களை பூட்டி வைத்த காலம் முடிந்து இன்று சுதந்திரமாக பெண்கள் வலம் வருகிறோம். பெண்களாகிய எங்கள் சுதந்திரத்தை நாம் பெற்று விட்டோமா! பாரதியின் கனவு நனவாகி விட்டதா என்று சிந்தித்தால்!!!

பெண்கள் ஆண்களைப் போல ஆடை அணிகின்றோம்,தலைமயிரை வெட்டிக் கொள்கின்றோம் , நினைத்த இடங்களுக்கு போய் வருகிறோம். இதுவா எங்கள் சுதந்திரம் என்று சிந்தித்தால் நிச்சயம் இதுவல்ல. பெண் சுதந்திரம் இன்னும் அடிமை பட்டே கிடக்கிறது என்று தான் சொல்ல வேண்டும்.

ஆம்!!!

கல்வியில்,

பெண்கள் தொழில் துறைகளில் தெரிவு செய்வதில் பின்னடைவு,

சம்பளத்தில் பாலின வேறுபாடு,

பெண் தலைமை துவத்தை விரும்பான்மை, பெண்கள் உயர்பதவி அடைய போட்டி, பொறாமை, சுயமுடிவுகள் எடுக்க முடியாமை, தனித்து வாழ்தலை ஏற்காமை என்று பட்டியல் இட்டுக் கொண்டே போகலாம்.

யோசித்து பார்த்தால் பெண் சுதந்திரம் என்கிற புரிந்துணர்வின் தவறே இதற்கு காரணம் எனலாம். அல்லது பெண்ணுக்கான உரிமைகளின் அடிப்படை சமூகத்தில் ஊடுருவ வில்லை எனலாம்.

நாம் யோசிக்க வேண்டிய க் கட்டாயத்தில் இருக்கிறோம்.

குடும்ப வரையறை, சமூக வரையறை எனக் கட்டுப்பாடுகளுக்குள் அடங்கி, சுயத்தை, சுதந்திரத்தைத் தொலைத்த மங்கையர்களின் நிலையைப் பற்றியோ அல்லது உணர்வுகளைப் பற்றியோ எப்போதாவது யோசிக்கிறோமா! அல்லது பேசுகின்றோம் ?

ஆணுக்கும் பெண்ணுக்கும் சதை, குருதி, எலும்பு, வலி எல்லாமே ஒன்றுதான்.

பிறப்பில் ஆணும் பெண்ணும் ஒரே உயிரினம்தானே. பின் ஏன் வேற்றுமை என்பது தெரியவில்லை.

பெண்ணை `பலவீனப் பாலினமாக மாற்றியது யார்!

கற்கும் கல்வியைத் தொடங்குவதிலிருந்து எங்கு செல்வது, யாரிடம் பழகுவது, என்ன முடிவுகள் எடுப்பது, எவற்றை தவிர்ப்பது, என்கிற கேள்விகளுக்கு யார் யாரோ பெண்ணை இயக்கி கொண்டே இருக்கிறார்கள்.

குடும்ப, சமூக கட்டுப்பாடுகளுக்குட்பட்டு, தன் ஆசைகளைப் பொத்தி பொத்தி வைத்து ஏன் சில வேளைகளில் தீயிட்டு தானே கொளுத்தி கொள்கிறாள்.

யாரோ ஒருவருக்காய், ஒரு குடும்பத்திற்காய், இந்த சமூகத்தின் ஒரு பகுதிக்காய் வெளிச்சமாய் மாறி நிற்கிறாள் பெண்.

பெண்களின் மனதில் எதிர்பார்க்கும் சுதந்திரம் என்ன!பெண்களைப் பொறுத்தவரை, அவர்களின் சுதந்திரத்திற்கான வரையறை என்ன?

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னே பெண் நிற்பது போலவே ஒரு பெண்ணின் வெற்றிக்குப் பின் ஆண் துணையாக நிற்கலாம். ஆனால், அவளின் வெற்றி எதைச் சார்ந்து இருக்க வேண்டும் என்பதை வேறொருவர் தீர்மானிக்கப்படுகின்ற வேளைகளில் அவள் தன் சுயத்தை இழந்து தவிக்கிறாள்.

அவளின் முடிவுகளை சுயமாக எடுக்க முடியாமல் தடுக்கப்படுவது பெண்ணினத்தின் சாபமே "பெண் சுதந்திரம் என்பது விக்கிரமாதித்தன் கதைகளில் வருவது போன்று ஏழு கடலுக்கு அப்பால் உள்ள கிளியின் உயிரில் பூட்டி வைக்கப்படவில்லை.

உற்று நோக்கினால் அவளுடைய நண்பன், தந்தை, சகோதரன், காதலன், கணவன், சக பணியாளர், மகன் எனப் அவளின் கூடவே பயணிக்கும் சில உறவுகளின் கையில் சிக்கி தவிப்பது கொடுமை.

மெல்லவும் முடியாமல் சொல்லவும் முடியாமல் அவளின் சுயம் அங்கே யாரும் அறியாமலே பூட்டப்படுகிறது அல்லது மட்டுப்படுத்தப் படுகிறது.இதனூடாக அவளால் இயங்க முடியாமல் திறமைகளை வெளிக்கொணர முடியாமல் தனக்குள்ளே முடங்கி துவண்டுப் போகிறாள்.

தொழில் துறைகளில் ஒரு பெண் வெற்றியடைந்து நிமிர்ந்து முன்னாள் பார்க்கையில் 1000 ஆண்கள் வெற்றியடைந்து அவளுக்கு முன்னாள் செல்கிறார்கள். சில துறைகளில் இந்த சதவிகிதம் மிகவும் அதிகமாக இருக்கிறது. காரணம் வெற்றியை நோக்கி நகரும் பெண்கள், நகர்த்தப்படும் பெண்களின் வீதம் குறைவு.

வறுமை, இயலாமை என்பவற்றை தாண்டி குடும்பத்தின் தடை அல்லது குடும்பத்தை மீறி செயற்பட முடியாத மனநிலை இதற்கு காரணமாய் இருக்கிறது.

கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...



# பெண்களுக்கான எடை குறைப்பு



பெண்களுக்கான எடை குறைப்பு பற்றி இணையத்தில் ஏராளமான தகவல்கள் இருந்தாலும், அதிலிருந்து எளிமையான, பயனுள்ள முறைகளைத் தேர்ந்தெடுப்பதென்பது மிகவும் சவாலானது. எனவே, எடை இழப்பதற்காக அறிவியல்பூர்வமாகவும் மற்றும் நிலையான வழியிலும் இருக்கும் பின்வரும் வழிமுறைகளைப் பெண்கள் பின்பற்றினால் மிகவும் உதவியாக இருக்கும்:

**1.தண்ணீர் குடிக்கவும்**

உணவுக்கு முன்பு தண்ணீர் குடிப்பதால் அதிக கலோரிகளைக் கொண்ட உணவைச் சாப்பிடுவதைத் தடுக்கலாம். மேலும், இது அதிக கலோரிகளை எரிப்பதற்கும் உதவுகிறது. உணவுக்கு முன்பு தண்ணீர் குடிப்பவர்களின் உடல் எடையானது 44% வேகமாகக் குறைகிறது.

**2.பிளாக் காபி (பாலில்லாத காபி)**

பிளாக் காபியில் குளோரோஜெனிக் அமிலம் உள்ளது, இது எடையைக் குறைக்க உதவுகிறது. இந்த அமிலம் உடலில் குளுக்கோஸ் மற்றும் கொழுப்பு செல்கள் உருவாவதைத் தாமதப்படுத்துகிறது. காபியானது பசியை நன்கு கட்டுப்படுத்துவதற்கு உதவுகிறது.

**3.இடைப்பட்ட உண்ணாவிரதத்தைத் தேர்ந்தெடுக்கவும்**

இடைப்பட்ட உண்ணாவிரதமானது 12 மணி நேரத்திற்குப் பிறகு உடலின் கொழுப்பு செல்களை ஆற்றலுக்காக எரிக்க உதவுகிறது. சாப்பிடும் நேரத்தின் போது, அதிகமாக சாப்பிடாமல் இருக்கும்படி கவனமாக இருக்க வேண்டும். உண்ணாவிரதம் இருக்கும்போது ஒருவர் தண்ணீர் மற்றும் கலோரி இல்லாத பானங்களை குடிக்கலாம்.

**4.சுத்திகரிக்கப்பட்ட கார்போஹைட்ரேட்டுகளை குறைத்துக் கொள்ளவும்**

பாஸ்தா, பீட்சா, வெள்ளை ரொட்டி, சிப்ஸ் மற்றும் ஃப்ரைஸ் போன்ற உணவுகளுக்குப் பதிலாக, முழு தானிய உணவுகளான ஓட்ஸ், கினோவா, பழுப்பு அரிசி போன்றவற்றை சாப்பிடுவது பெண்களின் எடையைக் குறைக்க பெரிதும் உதவும்.

**5. எதிர்ப்புக்கான பயிற்சி**

குறைந்த காயங்களுடனான தசைகளைப் பெறுவதற்கு இது சிறந்த வழியாகும். எரிந்த பிறகு அதிகரிப்பதன் மூலமாகவும் எடை இழப்புக்கு உதவுகிறது. தொடர்ந்து உடல் எடையை குறைப்பதற்கு தினமும் குறைந்தபட்சம் 30 நிமிட பயிற்சி போதுமானது.

**6. குளுட் புரதங்கள்**

கடல் உணவு, இறைச்சி, முட்டை மற்றும் பால் ஆகியவை புரதத்திற்கான நல்ல ஆதாரங்களாகும். அதிக புரோட்டீன் நிறைந்த உணவானது ஒரு நபருக்கு வயிறு நிறைந்துவிட்ட உணர்வைத் தந்து பசியைக் குறைக்கும். புரோட்டீன்கள் மெதுவாக எடை அதிகரிப்பதற்கு காரணமாக உள்ளன மற்றும் பெண்களின் எடை இழப்பிற்கும் உதவுகிறது.

**7. ஆழ்ந்த உறக்கம்/நல்ல தூக்கம்**

குறைந்த பட்சம் ஆறு முதல் எட்டு மணி நேரம் வரைக்கும் போதுமான தூக்கம் தூங்குவதும் கூட எடை இழப்புக்கு உதவுகிறது. போதுமான தூக்கத்திற்கு ஒரு அட்டவணையை அமைத்துக் கொள்ளவும். தூக்கமின்மையானது வளர்சிதை மாற்றத்தை மெதுவாக்கும் மற்றும் நீர் தேக்கத்தை ஏற்படுத்தும்.

**8. காலை உணவுக்கு முட்டை**

முட்டையில் நல்ல உயர்தரமான புரதங்கள், ஆரோக்கியமான கொழுப்பு, தாதுக்கள் மற்றும் வைட்டமின்கள் போன்றவை அடங்கியுள்ளன. ஒரு பெரிய முட்டையில் சுமார் 74 கலோரிகள் உள்ளன. இது உங்களுடைய கலோரிகளைக் குறைக்கும் மற்றும் இதில் ஊட்டச்சத்து அதிகமாக இருக்கும். எடை இழப்புக்கு பெண்கள் இரண்டு முழு முட்டைகளைச் சாப்பிடுவதும் மிகவும் பாதுகாப்பானது.

**9. நார்ச்சத்தினைச் சேர்த்துக் கொள்ளுங்கள்**

30 கிராம் நார்ச்சத்தினை பெண்கள் உட்கொண்டால் இது அவர்களின் எடையைக் குறைக்க உதவும். நார்ச்சத்து, ஒருவரை நீண்ட நேரத்திற்கு பசியில்லாமல் நிறைவாக உணரவைக்கிறது மேலும் இது குடல் பாக்டீரியாக்களுக்கு ஆரோக்கியமானது. இது புற்றுநோய் மற்றும் நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது. ஆப்பிள்கள், பீன்ஸ், இனிப்பு உருளைக்கிழங்கு, கீரை, இலை காய்கறிகள் போன்றவை நார்ச்சத்துமிக்க சிறந்த ஆதாரங்களாகும்.

**10.ஜர்னலிங்**

சாப்பிடும் உணவைக் கண்காணிக்கும் போது, சுயநினைவுடன் இருப்பதற்கு இது எளிதான வழியாகும்.

11.உணர்வுப்பூர்வமாக சாப்பிடுதல்

பெண்கள் சாப்பிடும்போது ஏற்படும் கவனச் சிதறல்களைத் தவிர்க்க வேண்டும், குறிப்பாக தொலைக்காட்சி பார்ப்பது போன்றவற்றை. சாப்பிடும் போது உணவில் கவனம் செலுத்தி சாப்பிடுவதால் அளவுக்கதிகமாக சாப்பிடுவது தடுக்கப்படுகிறது.

**12. க்ரீன் டீக்கு மாறுங்கள்**

இது ஆன்டிஆக்ஸிடண்டுகள் நிறைந்த மூலப்பொருளாகும். ஒவ்வொரு நாளும் மூன்று முதல் ஐந்து கப் வரை க்ரீன் டீ குடிப்பது அதிகபட்ச நன்மைகளைத் தருவதற்கு உதவும்.

**13.குறைந்த அளவு கார்போஹைட்ரேட் இருக்கும் உணவில் கவனம் செலுத்துங்கள்**

குறைந்த அளவு கார்போஹைட்ரேட் இருக்கும் உணவைச் சாப்பிடுவதால், பெண்கள் அதிகமாக கார்போஹட்ரேட் சேர்த்துக் கொள்வது தடுக்கப்படுகிறது. இதய நோய் மற்றும் நீரிழிவு ஏற்படாமல் தடுப்பதும் நீண்ட கால நன்மையாக இருக்கும். முழு தானியங்கள், பழங்கள், பருப்பு வகைகள், பால், கொட்டைகள் மற்றும் விதைகள் போன்றவை கார்போஹைட்ரேட் இருக்கும் உணவுப்பொருட்களாகும்.

# "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழா






















**இஸ்மதுல் றஹுமான்**

கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட "தூண்டில்கள் துடிக்கின்றன" கவிதை நூல் வெளியீட்டு விழாவும், கவியரங்கும் ஞாயிற்றுக்கிழமை கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலாபூஷணம் எம். ஜே. எம். தாஜுதீன் தலைமையில் கவிஞர் போருத்தொட்ட ரிஸ்மி அரங்கத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக ஓய்வு நிலை தேர்தல் ஆணையாளர் நாயகமும், தேர்தல் ஆணைக் குழுவின் முன்னாள் உறுப்பினருமான எம். எம். மொஹமட் (நளீமி) கலந்து கொண்டு நூலின் முதல் பிரதியை தலைவரிடம் பெற்றுக்கொண்டு வெளியிட்டு வைத்தார்.

அதிதிகளாக கலந்துகொண்ட தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர், ஊடகவியலாளரும் ஒலிபரப்பாளருமான அஷ்ரப் சிஹாப்தீன், வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் கலா பூஷணம் கவிமணி என். நஜ்முல் ஹுசைன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் 'ஈழத்து நூன்' கலா பூஷணம் எம். ஏ. எம். நிலாம், கம்மல்துறை அல்பலாஹ் கல்லூரியின் அதிபர் எம். யு. பாயிஸ் (நளீமி), பலகத்துறை பெரிய பள்ளிவாசல் தலைவர் எம் முஹம்மத் ஆகியோர் சிறப்புப் பிரதிகளை பெற்றுக்கொண்டார்கள்.

கவிஞர்கள் பலரும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப் பட்டார்கள்.

# ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் "செப்டம்பர் கறுப்பழகி!" நாவல் வெளியீட்டு விழா











ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணனின் “செப்டம்பர் கறுப்பழகி!” நூல் வெளியீட்டு விழா தினகரன் தினகரன் வாரமஞ்சரி ஆசிரியர் தெ. செந்தில் வேலவர் தலைமையில் இலங்கை நெய்னார் சமூக நலக்காப்பகத்தின் ஏற்பாட்டில் கொழும்பு 13, கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்தில் நடைபெற்றது.

படங்கள் : நஸார்

# ஸ்கை தமிழ் விருது வழங்கும் விழா இம்முறை இலங்கையில்

கடந்த வருடம் கட்டாரில் உள்ள ஆளுமைகளை கௌரவித்து மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்ற ஸ்கை தமிழ் விருது விழா இம்முறை இலங்கையிலுள்ள ஆளுமைகளை தெரிவு செய்து அவர்களை கௌரவிக்கவுள்ளது.

★விருது வகைகள்:

- ★ ஊடகம் மற்றும் பத்திரிகை
- ★ இலக்கியம்
- ★ கலை மற்றும் கலாச்சாரம்
- ★ விளையாட்டுத்துறை
- ★ சமூக சேவை
- ★ விவசாயம்
- ★ கல்வி & தொழில்நுட்பம்
- ★ வணிகம் மற்றும் தொழில்முனைவோர்
- ★ சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்

இவ்விருதிற்கு நீங்கள் தகுதியானவர் எனக்கருதினால் கீழுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் சுயவிபரங்களுடன் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களையும் எமக்கு அனுப்பிவையுங்கள்

★விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி:

23 ஜூலை 2024 31 ஆகஸ்ட் 2024

★இன்றே உங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவையுங்கள்.

★மேலதிக தகவல்களுக்கு:

www.awards.skytamilnews.com
Whatsapp: 0757000791 / +97431060249
https://www.instagram.com/skytamilawards
https://www.facebook.com/skytamilawards





# இலக்கிய உலகிற்கு வானவில்லாய் வந்து சொல்லிக் கொள்ளாமலே சென்ற கவிஞர் இஸ்மத் பாத்திமா

கவிஞர், எழுத்தாளர் மற்றும் அதிபரான இஸ்மத் பாத்திமாவின் மறைவுச் செய்தி இலக்கிய உலகில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. அவர் எழுத்துலகில் பிரவேசித்து குறுகிய காலத்தில் தனக்கென தனியிடம் பிடித்துக் கொண்டவர். சிரித்த முகத்துடன் பண்பாக பழகும் அவர் கல்வித் துறையைப் போலவே எழுத்துத் துறையையும் வெகுவாக நேசித்தார்.

தினகரன் புதுப்புனலில் அவரின் பல கவிதைகள் பிரசுரமாகியுள்ளன. அதற்கு அடியேனுக்கும் பங்களிக்க வாய்ப்புக் கிடைத்தது. அதனை இஸ்மத் பாத்திமா அடிக்கடி நன்றியுடன் நினைவு கூர்ந்ததுண்டு. சமூக பிரச்சினைகள், பொது விடயங்கள், பெண்களின் உரிமை என அவரின் கவிதைகள் எப்பொழுதும் ரசனையுடன் இருக்கும். அடிக்கடி என்னுடன் தொடர்பு கொண்டு உரிமையுடன் கதைப்பார். கவிதைகளுக்காக மாத்திரமன்றி தான் பணியாற்றும் பாடசாலைகள் தொடர்பான செய்திகளை பிரசுரிக்கவும் அவர் தொடர்பு கொள்வார். இலக்கியத்துறையில் மாத்திரமன்றி ஊடகத்துறையிலும் அவர் பெரிய நட்புவட்டாரத்தை கொண்டிருந்தார். அவரின் கவிதை நூல் வெளியீடுகளில் நிறைந்திருந்த இலக்கியவாதிகள்,எழுத்தாளர்கள், கவிஞர்கள் என திரண்ட கூட்டம் அதற்கு சான்று.



இஸ்மத் பாத்திமா ,குருணாகல் பானகமுவவில் பிறந்த எழுத்தாளர். இவரின் கணவர் எம்.ஏ. முஹம்மது றிப்தி தர்கா நகர் ஆசிரியர் வாண்மை மத்திய நிலையத்தின் முகாமையாளராக பணியாற்றினார்.

பானகமுவ அந்நூர் முஸ்லிம் மகாவித்தியாலயம், நாம்புளுவ,பசியாலை பாபுஸ்ஸலாம் முஸ்லிம் மகா வித்தியாலயம், மடவளை மதீனா தேசிய கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி கற்றார். பேராதனைப் பல்கலைக்கழத்தில் கலைமாணி சிறப்புப் பட்டம் பெற்றுள்ள இவர் ஆங்கில ஆசிரியர் சேவையை பல பாடசாலைகளில் தொடர்ந்த எழுத்தாளர் ஆங்கில ஆசிரிய ஆலோசகராகவும் பிரதி அதிபராகவும் அதிபராகவும் பல பாடசாலைகளில் சேவையாற்றியிருந்தார்.



"இரண்டும் ஒன்றும்" என்ற கவிதைத் தொகுதியின் ஊடாக எழுத்துத்துறைக்குப் பிரவேசித்துள்ளார். "சற்று பொறு பாலிகா", "உயர் கல்விக்கு அனுமதி தாரீர்" ஆகிய தலைப்பில் பாடசாலை சம்பந்தமான கவிதைகளை வெளியிட்டுள்ளார்.

இவரது கவிதைகள் தினகரன், சுடர்ஒளி, விடிவெள்ளி, மெட்ரோ நியூஸ் பத்திரிகைகளிலும் அல் ஹஸனாத், ஞானம், பூங்காவனம் போன்ற சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவை இலக்கிய மன்றம், இணையத்தளம், லண்டன் முஸ்லிம் குரல், வளர்பிறை சஞ்சிகை, நிகழ்ச்சி போன்ற ஊடகங்களின் ஊடாகவும் இவரது கவிதைகள் இடம்பெற்றுள்ளன.

இத்தனைக்கும் நாம் ஒரே ஒரு தடவை தான் நேரில் சந்தித்திருக்கிறோம். எம்.ஏ.எம். நிலாமின் நூல் வெளியீட்டு விழாவில் தான் அவரை முதலும் இறுதியுமாக சந்தித்தேன். அனைவருடனும் மரியாதையாக பழகும் பண்புடையவர்.

ஓரிரு வருடங்களாக அவருடனான தொடர்பு குறைந்திருந்தது. கவிதை எழுதுவதை குறைத்திருந்தார் . அல்லது முழுமையாக நிறுதியிருந்தார் போலும்.

இந்த நிலையில் தான் அவரின் மரணச் செய்தி காதில் விழுந்தது. பொய்யாக இருக்கக் கூடாதா என்று மனம் சொன்னது. அவருக்கு இறைவன் உயர்ந்த சுவனத்தை அளிக்க பிராத்திப்போம்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# காலி ஹிரிம்புர ' மெரீஜ் 11 கழக' கிரிக்கெட் சுற்றுப் போட்டி















காலி ஹிரிம்புர ' மெரீஜ் 11 கழகம்' வருடாந்தம் ஏற்பாடு செய்யும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. இந்த போட்டியில் பிரதேச இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர். இருநாட்கள் போட்டிகள் மிக விறுவிறுப்பாக நடந்து முடிந்தன. இந்த நிகழ்வில் விசேட விருந்தினர்களான காலி மாநகர முன்னாள் உறுப்பினர் சிராஜ் மற்றும் நிபுணத்துவ வைத்தியர் றமீஸ் புர்கான் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இவர்களுக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர். வயது வித்தியாசமின்றி வயது முதிர்ந்தவர்களும் தமது திறமைகளை வெளிக்காட்டினர்.ஊரின் ஒற்றுமையையும் ஊரின் நலனையும் கருத்திற் கொண்டு தொடராக நடைபெறும் இந்தப் போட்டியின் இறுதியில் வெற்றியாளர்களுக்கு விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. மொஹமட் பிராஸ் மெரீஜ் 11 கழகத்தின் தலைவராகவும் செயலாளராக எம்.என்.எம். அஜ்மல் ஆகியோர் வகிக்கின்றனர். இந்த அமைப்பு பல்வேறு சமூக சேவைப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

ரொம்ப பிஸி. எம்.எஸ்.பாஹிம்

# ரூமியின் வைரங்கள்



( அ)
நடு வழியே ஞான
வழி உள்ளார்ந்த
மென்மை
ரகசியக்
காயத்தைக்
கண்டடையும்
போது
வேதனையே பாறையைப்
பிளந்து விடும்
ஆஹ்! அப்போது
மெல்ல மெல்ல
வெளிப்படட்டும் ஆன்மா
காதலின் மாபெரும்
அருட்கொடை
தொட்டதையெல்லாம்
புனிதமாக்கிவிடும்
அதன் ஆற்றல்தான்
நான் உனது
என்னையே என்னிடம்
திருப்பித் தராதே!
அகத்தில் காதலின்
தீயைப்பற்ற வைத்து
எண்ணங்களை
எரித்துத்தள்ளு
இது உன்னுடைய பாதை
உன்னுடையது மட்டுமே
உன்னுடன் நடக்கலாம்
பிறர் அதில்
உனக்காக நடக்க
முடியாது எவரும்
அவ்வப்போது வருகிறது
ஒரு நேரம்
காதலுக்கு
அடிபணிவதைத் தவிர
வேறெதுவும்
அர்த்தமுடையதல்ல
அப்போது
அப்படியே செய்
ஒவ்வொரு
கணமும்
உளி கொண்டு
வடிவமைக்கிறேன்
என் விதியை
என் ஆன்மாவின்
தச்சன் நானே
நடு வழியே
ஞான வழி
இறைக் காதலுக்கு
வெளியே
ஒவ்வொரு காதலும்
துன்பமே
உன் வாழ்வில்
தீப்பிடிக்க வை
உன் தழலுக்கு
ஊதி விடுவோரைத் தேடு
பறவைகள் பாடுவது போல்
பாட விரும்புகிறேன் நான்
யார் கேட்கிறார்கள்
அவர்கள் என்ன
நினைக்கிறார்கள்
என்று கவலைப்படாமல்
வேதனை ஓர் அன்பளிப்பு
அதில் உள்ளது
மறைவான அருள்
மௌனமே
இறைவனின் மொழி
மற்றதெல்லாம்
மோசமான
மொழிபெயர்ப்புக்களே
(வைரங்கள் சுடரும்)




# 'கடிநாய் கவனம்'




'நாய் பார்க்கிற வேல'

பத்து வயசில் கதிர்காமத் தம்பி விதானையார் வீட்டுக் கேற்றில் வாசித்த வசனம்...

'நாய் வீட்டைக்காக்கும் 'முதலாம் வகுப்பு சிலேட்டில் எழுதிய வாசகம்....

'நாய் நன்றியுள்ள மிருகம்' நன்றியில்லா மனிதர்களைப் பார்த்து உம்மம்மா அடிக்கடி சொல்லுற வாசகம்....

நாய் நாய்ட வேலய பாக்கணும் கழுதை கழுதயிட வேலைப் பாக்கணும் எங்கட டிஸிப்பிலீன் தாஸீம் சேர் அடிக்கடி சொல்லுவார்.

நான் இப்போ பெரியாஸ் பத்திரி வாங்கில போலிங்கில குந்தியிருக்கிறன்.

"ஹலோ மச்சான்''''

என்னடா சுகமாடா...ரிங் கிட்ட போனைக் காதில் வச்ச போது கேட்ட குரல் பால்யத்தின் பரிச்சயம்...'

..'ஓமோம்...நீ...'

...'ஓமுடா நான் சுகம் தான்....'

கொஞ்சம் கதைக்க விட்டுக் குரலப் புடிச்சிட்டன் நான்...

'.....எனக்கோ நாய் பார்க்கிற வேல...உனக்கு..

'எனக்கோ நாய் புடிக்கிற வேல....'

கதய மிஸ்ஸியின் அழைப்பாணை தடுத்தது.

உள்ளே போக டொக்டர்... கேட்டார்.

'ஆளக் கண்டீரோ..

ஆளெப்படி....எதில பல்லுப் பட்டது..

'பல்லுப்பட்டுச்சோ...நகம் பட்டுச்சோ தெரியா. நெருப்பால சுட்டமாதிரி வலி...

'உசிரோட இருக்கோ'

டொக்டர்ர கேள்விக்கு பதிலில்ல...

'அதிட உசிரப்பாத்தா என்ற உசிர்? இதென்ன மசிர்க் கேள்வி...'

டொக்டர் ஏதோ எழுதினார்..

நேஸி இரண்டு கையிலயும் மாறி மாறி ஏத்தினாள்...வலிச்சது.

'நாயச் சாவாமல் பார்த்துக்கொள்ள வேணும் ' என்றாள்.

'இதென கோதாரி...'

முன்னம் வாப்பா சொன்ன வார்த்த ஞாபகத்தில வந்தது' உனக்கென்ன நாய் பார்க்கிற வேலையா...நாய் மாதிரிச் சுத்தித் திரிஞ்சிட்டு சாமத்துலவாராய்...'படலயத் தட்ட அவரும் வார்த்தய விடுவார்.

மிஸ்ஸி தந்த கார்ட்டில் போட வேண்டிய ஊசி மற்றும் தேதி இருந்தது...நாலு தடவை வரவேணும்.

வரரேக்க அந்த நாய் உயிரோட இருக்கா எட்டு பார்த்துக் கொண்டு வரோணும். நல்ல தொழில்.

மிஸ்ஸி பிறகும் மீள வலியுறுத்தினாள்...

'நாயப்பார்த்துக்கொள்' ஏதோ புள்ளயப் பார்க்கிற மாதிரிச் சொன்னாள் நேஸி.

நடந்தது இதுதான்...

சரியா எட்டு மணிக்கு பிப்ஸ் எடுக்கிற றொஸ்டர் அண்டைக்கு எனக்கு.

நான் குரல் யாவாரி.குரல நீட்டி ஸலாத்தோட தொடங்கிற அவசரத்தில BAM 2962 டை முறுக்கிறன். இடையில தாவுன ஒல்லிக்கறுப்பு அல்லது நெருப்புக் கொல்லி அது.போட்டிருந்த மூன்று பார் செருப்புக்கிடையால வாயப் போட்டு பல்ல எடுத்து கீறிட்டு.

கிறீஸ் என்டொரு வலி.

பக்கத்து திட்ட சனம் கூறிற்று.

'சவுக்காரம் போட்டுக்கழுலவும்'

உடன் கொஸ்பிறலுக்கு போகவேணும்'

'இந்த நாய் விஷம் உம்மோடு பத்து....'

எனக்கு விஷர் பிடிச்சிடும் போல் இருந்திச்சு.

மணிக்கூட்டப்பார்க்கிறன் தடுமாறி விழுந்ததில் பார் பிஞ்சு தொங்கிச்சு.நேரமும் தொங்கல்தான். பிப்ஸ் ஞாபகம் வர எல்லாத்தையும் மறந்து 2962டை முறுக்கிறன்.

பிப்சோட தொடங்கிற்றேன்...

'நிகழ்ச்சிகளில் முதலில்...'

TQ 45தை ஒலிபரப்பு விட்டேன்.

'முதலில கடியைப் பாருடா.. என்றது மனசு.

ஓடிப்போய் சோப்புத் துண்டு தேடி நுழைக்க நுரைக்க கழுவுறன்.

ஒரு மணி கடக்க சேதி

நஸீர் நானா தொடங்கினார்.

செய்தி போவுது

'கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக பிரதேச வாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.....

செய்தி காதில் விழுது நான் மீளவும் BAMயை முறுக்கிறன்.

'மெடிகல் க்ளினிக்' நிரம்பி வழியுது. வழமையான டொக்டர் இல்ல ஒருமாதிரி போலிங் கடக்கிறன்.

சொன்னார்' தம்பி இதென்ன காயத்தையும் காணல்ல,..ம்...ரத்தமும் வரயில்ல என்டுராய்...

இதுதான் மோசமான நிலம் உடன கொஸ்பிற்றலுக்குப் போம்....அதுக்கு முதல்ல பொலிசில் போய் என்றியொண்டு போடும்.இதோடா நாலுபேர் இண்டைக்கு... நாய்க்கு விஷரோ தெரியா...' எனக்கு தல சுத்தியது.

போனன் பொலிசுக்கு. நஸீர்நானாட செய்தியையும் சொன்னன்.குட்டி டொக்டருட தகவலையும் சொன்னன். பொலிசு நாய் மாதிரிச் பாத்து உறுமினான். 'இங்க ஊரெல்லாம் கள்ளர். கள்ளரப்பிடிக்க உதவுவது கட்டாக்காலிகள் தான. நாய்ப்பார்வ பாத்தான். என்ன...'அப்ப நாய்ப்பொலிசு...'

எழும்பி பிறகு 2962 டை முறுக்காத்தான் இங்க இந்த வாங்கில குந்தினன்..

நடந்தது இதுதான்.

பிறகென்ன நாய்பாக்கிற வேல...

பிறகொரு நாள் ரிங்ரிங்...' கலோ மச்சான் நாய் முடிக்க உங்க உந்த ரோட்டுப்பக்கம் தான் வாரன்....உனக்கென்ன வேல்..'

'ஓமடா..எனக்கு நாய் பார்க்கிற வேல....

**பொன்மீரா**

# காணாமல் போன இளையோர் இலக்கியம்

இலக்கியத்தின் பயன் வளப்படுத்துவதெனில் இளைய சமூகத்தை வளப்படுத்ததக்க இலக்கியங்கள் நமது தமிழ் மொழியில் போதியவாறு வெளிவருகின்றனவா என்கிற கேள்வி உள்ளது.

இளையோரை/ மாணவரை மையப்படுத்திய எழுத்துகளுக்கென்று பண்புகளுள்ளன. அத்தகைய பண்பமை இலக்கியம் இளையோரின் வாசிப்பையும் நேசிப்பையும் தூண்ட வல்லன.

இன்று வாசிப்புப் பழக்கம் அருகுவதான கருத்தியல் பொதுவாக சிறுவர்கள் வாசிப்பதில்லை என்ற குற்றம் சுமத்துவதாகவுள்ளது. எனினும் இதன் அக, புறக்காரணிகள் மீது கவனம் செலுத்தவும் வேண்டும்.

அவ்வாறு பார்க்கும் போது இன்றைய தொழிநுட்ப மேலாதிக்கச்சூழலில் இளையோரைக் கவரத்தக்க வகையான இலக்கியங்களின் தேவை மிகுந்த கவனிப்புக்குரியது.

இளையோர் இலக்கியம் காணாமல் போய்விட்டதா என்கிற ஆதங்கத்துக்கிடையில் இப்போது வந்திருக்கிறது.

"காணாமல்போன கன்சுல்" இளையோர் நாவல்.

கிழக்குப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2023இல் வெளியிட்டுள்ள இப்பனுவல் இளையோர் வாசிப்புக்குப் பரிந்துரைக்கத்தக்கது.

நாவலின் பேசுபொருள், கதை நகர்ச்சி, மொழிக்கட்டமைவு, சிறுவர் உளவியல் மற்றும் புத்தாக்க சிந்தனைப்புலமென அ.வா.



முஹ்சீன் படைப்பு மிகுந்த கனதியான அவதானிப்பைக் கொண்டுள்ளது. இன்றைய வாழ்வொழுங்கில் மாணவர் மீதான உலகு சிதைவுறுகிற சூழலைப் பொதுவாகக் காண முடிகிறது.

பிள்ளை வளர்ப்பு, பிள்ளைக்கல்வி, பிள்ளை உளவியல், பிள்ளைச்சுதந்திரமென ஒவ்வொன்றின் மீதும் அழுத்தம் செலுத்தப்படுகிறது. இதன் விளைவாக குடும்பச்சிதைவும் கல்விப் பின்னடைவும் அதிகமாகிவிட்டதெனலாம்.

இந்தப்பின்புலத்தில் முஹ்சீன் என்கிற சமூக உளவியல் பண்பாட்டு எழுத்தாளரின் கன்சுல் பாத்திரம் இளையோரை மட்டுமன்றி மூத்தோரின் வாசிப்பையும் கோரிநிற்கிறது.

முஹ்சீன் சொல்வது போல"...இத்தகைய பின்னணியில் இளையோர்களின் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டுவது இந்நாவலின் பிரதான இலக்காக இருக்கிறது. அதே நேரத்தில், வளர்ந்தோரும் வாசிக்கும் விதத்தில் இந்நாவலைக் கட்டமைத்திருக்கிறேன்.

உளவியல் அம்சங்கள், விருப்பங்கள், ஆர்வங்கள், நடத்தைகள் போன்றவற்றில் கவனமான அக்கறையுடன் இந்நாவலை எழுதியிருக்கிறேன்"

முஹ்சீன் இன் நாவல் நம்மை வாசிக்கச் செய்கிறது. கன்சுலின் கவலை முதல் கன்சுலின் பிரியாவிடை வரையான 15 உபதலைப்புகளில் கதை வளர்கிறது.

இளையோருக்கான மொழியை நூலாசிரியர் கையாள்கிறார்.

ஆற்றொழுக்கான எளிமையானவாசிப்பைத் தூண்டத்தக்க மொழியொன்று இந்நாவலில் இயங்குகிறது. சிறுவர் வாசிப்பைத்தூண்டும் உத்தி இது.

இளையோருக்கான இலக்கியங்கள் தமிழில் மிகக் குறைவாகவுள்ள சூழலில் சிறுவர் மனவுலகொன்றை முஹ்சீன் அவர்கள் உயிர்ப்புடன் படைத்தளிக்கிறார்.

ஆனால் அயல் சிங்கள மொழியில் இளையோருக்கான இலக்கியம் பரந்துபட்ட வளர்ச்சி கண்டுள்ளது என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

குறிப்பாக இளையோரிலக்கியம் என்கிற தலைப்பிலான விருதுகள் வழங்கப்படுவதனைக் கூடக் காணமுடியும் சாகித்ய மற்றும் கொடகே விருதுப்பட்டியல்கள் சிங்கள மொழியில் இளையோர் இலக்கியம் மேம்பட்டுள்ளதைச்சுட்டும்.

இளையோர் கவிதை,சிறுகதை, நாவலென அதன் உட்கூறுகளில் இத்தகைய பரந்துபட்டநிலையைக்காணலாம். இவ்வாறு ஒப்பிடுகையில் தமிழில் இளையோர் இலக்கியம் வைப்பு வெளி குறுகியே நிற்கிறதெனலாம்.

இந்த இடைவெளியில் முஹ்சீன் இயங்குகிறார் என்பது அவதானத்துக்குரியது வாழ்த்துக்கள்.

# கலைஞர் கலைக்கமலின் கீத்ராத் 61









தினகரன் தினகரன் வாரமஞ்சரி , சக்தி தொலைக்காட்சி ஊடக அனுசரணையில் RANAR MIGRATION CENTRE இயக்குநர் நஸீர் , ALLIED TRADING INTERNATIONAL PVT LTD ஹாஜி இப்திகார் அஹ்மத் பிரதான அனுசரணையில் , சமூக சேவகி ஷாமிலா ஹுசைன் , பிரபல தொழிலதிபர்கள் செல்லமுத்து ரவீந்திரன் , இறையருள் கவிமணி ரமீஸ்ஹாஜி , ஸைட் சிவாஜி மௌலானா இணை அனுசரணையில் இலங்கையின் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் கீத்ராத் 61 அண்மையில் ஜே.ஆர். ஜெயவர்தன மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் , பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. எச். எம். பௌஸி கலந்துகொண்டார். செல்லமுத்து ரவீந்திரன் தலைமையில் , டாக்டர் , கவிஞர் தாஸிம் அஹ்மது , ரமீஸ் ஹாஜி முன்னிலையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக சிங்கப்பூர் பிரபல பாடகர் ஃபரிஹுல்லா கலந்துகொண்டு இசைமுரசு பாடல்களைப்பாடினார். கலைஞர் கலைக்கமல் , ஹாஜி ஃபரிஹுல்லாஹ் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டதுடன் கஹடோவிட்ட சமூகசேவை மாதர் அணியின் சார்பில் ஷாமிலா விருது வழங்கினார். எலைட் சப்ரி இப்திகார் அஹ்மத் , ரமீஸ்ஹாஜி , யாசீன்பாய் சமூக சேவைக்காக கௌரவிக்கப்பட்டனர். இசையமைப்பாளர்கள் பஸால் ஜின்னாஹ் , அயாஸ் சவாஹிர் , பென்ஸ்லி , ஹாரிஸ் மாஸ்டர் , டியூனர்ஸ் பௌமி , சுவிஸ் யோகா , அஸார் கௌஸ் சிறப்பாக இசை வழங்கினர். நிகழ்ச்சியை இலங்கை வானொலி பிரபல அறிவிப்பாளர் கலையழகி வரதராணி, கலைஞர் அமீர்கான் மருமகன் பாடகர் ரிப்கான் தொகுத்து வழங்கினர்.





## பன்முக ஆளுமை கொண்ட எழுத்தாளராக திகழும் கவிஞர் இக்பால் அலி

(06 ஆம் பக்க தொடர்ச்சி)

**5. 2023 இல் தென்கிழக்குப் பல்கலைக்கழக பாத்திமா அஸ்மா என்ற மாணவி எனது சிறுவர் இலக்கியம் பணி தொடர்பில் ஓர் ஆய்வினை மேற்கொண்டு 183 பக்கத்தில் ஆயவுக் கட்டுரை நூலொன்றை சமர்ப்பித்துள்ளார்.**

**அதே போன்றுத்தான் மற்றுமொரு மாணவி 2022 இல் எனது கவிதை இலக்கியம் தொடர்பிலும் 117 பக்கத்தில் ஆய்வுக் கட்டுரை நூலொன்றை சமர்ப்பித்துள்ளார். கவிதைத் துறையிலும் எனது பாடுபொருட்கள் பல தரப்பட்டன. பெண்ணியம், போர்க்காலம், பொருளாதாரம், அரசியல், சமூகம், கல்வி, மலையகம் என அவை விரியும்.. இவ்வாறான படைப்புக்களை தொடர்ந்து வெளிக் கொணர வேண்டும் என்ற நோக்கம் உங்களுக்கு இருக்கின்றதா?**

நிச்சயமாக,

நாளாந்தம் அணுகும் செய்திகளை அதனை ஒரு படைப்பாக செய்தி அல்லாமல் ஒரு சமூக கருத்தாக அதை எடுத்து அதனை வெளியிட வேண்டும் என்று நினைத்துள்ளீர்களா?

அப்படி வெளிக்கொணர வேண்டிய சமூகப் படைப்புக்கள் ஏராளம் ஏராளம். விசேடமாக ஒரு சம்பவத்தை மட்டும் சொல்லுகின்றேன். மாற்றுத் திறனாளிகளின் சர்வதேச தினத்தில் செய்தி சேகரிக்கச் செல்வேன். அப்பொழுது அவர்களுடைய செயற்பாடுகளை அவதானித்து அதைச் செய்தியாக்குவதிலும் படம் பிடிப்பிலும் ஈடுபடுவேன். அந்தக் காட்சிகளை படம்பிடிக்கின்ற போது எனக்கு ஏற்படும் உணர்வும் வலியும் என்னை அறியாமல் என் கண்களில் கண்ணீர் வழிந்தோடும். அந்த உருக்கமான காட்சியை எனது சிறுவர் பாடல் நூலில் எழுதியுள்ளேன். இப்படி தினசரி; செய்திகள் சேகரிக்கச் செல்லும் போது காணும் காட்சிகள் பல்லாயிரம். அவை எல்லாவற்றையும் வெளியே செய்தியாகக் கொண்டு வந்தாலும் படைப்பாக கொண்டு வரமுடியாமல் தவிக்கின்றேன். நேரம், இடம்கொடுக்க வில்லை. இருப்பினும் தற்போது நூல்களைக் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன்.

**6.எழுத்துத் துறையில் உங்கள் குடும்பப் பின்னணி ஏதேனும் இருக்கின்றதா?**

எனக்கு குடும்பப் பின்னணி இல்லை. ஆனாலும் நான் கல்வி கற்ற கல்முனை சாஹிராக் கல்லூரியும் கண்டி சித்திலெப்பை மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகள்தான் எனக்கு இலக்கிய ஆர்வத்தை ஏற்டுத்தியமை என்று கூறலாம்.

**7. உங்களது சக பிராந்திய ஊடகவியலாளர்கள் உங்களது எழுத்தை எவ்வாறு வரவேற்கின்றனர்? நீங்கள் வடித்த நூல்கள் பற்றி அவர்கள் கூறும் கருத்துக்கள் என்ன?**

தீம்புனல் பிரதம ஆசிரியர் சூரன் ஏ. ரவிவர்மா 'தீம்புனலில் இக்பால் அலி எழுதிய சுமார் 25 க்கும் மேற்பட்ட ஆக்கங்கள் பிரசுரமாகின. ஊடகத்துறையில் முழுமையாக தன்னை அர்ப்பணித்த இக்பால் அலி. திறானாய்வு செய்வதற்கு எப்படி நேரத்தை ஒதுக்குகிறார் எனத் தெரியவில்லை.

தம் ஆக்கங்களையும் திறனாய்வு செய்ய வேண்டும் என்று பல எழுத்தாளர்கள் விரும்புகிறார்கள். இக்பால் அலி பணி தொடர வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

இதே போல் 'தமிழ் வின்' இணையத்தள செய்தியாசிரியர். இதுவரையிலும் நூல்வெளியீடு தொடர்பான செய்திகளை நாங்கள் வெளிக்கொணர்ந்ததில்லை.

முதன் முதலில் எனது நூல் வெளியீட்டு நிகழ்வினையே பிரசுரம் செய்துள்ளோம். அதற்கு அதிகளவிலான வாசகர்கள் எம்மோடு இணைந்து கொண்டார்கள் என்று தெரிவித்து புளங்காகிதம் அடைந்தார். உங்கள் தமிழன், தமிழ் முரசு, தினகரன், செந்தூரம். விடிவெள்ளி. வீரகேசரி இலத்திரனியல் வானொலி என ஊடகங்கள் அனைத்தும் எனது முயற்சிகளுக்கும் இச்சந்தர்ப்பத்தில் அவர்களின் குடும்பத்தில் ஒருவர் என்பதை உணர்ந்து கொண்டு பெரியதொரு ஊக்குவிப்பைச் செய்தார்கள் என்று கூறிக் கொள்வதில் நான் மகிழ்ச்சியையைத் தெரிவித்துக் கொள்வதோடு நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## தமிழ் சினிமாவின் குறுந்திரைப்பட....

(07 ஆம் பக்க தொடர்ச்சி)

**7—மதுவருந்தும் காட்சியும் புகை பிடிக்கும் காட்சியும் இல்லாத சினிமா இல்லை எனலாம். இப்படி ஒரு உணர்வை சமூக மத்தியில் தூண்டிவிட்டு காட்சியின் ஒரு மூலையில் மதுவருந்துவது உடல் நலத்திற்கு கேடு என்று வேறு போடுகிறார்கள். இதனைப்பற்றி உங்கள் கருத்து என்ன ...?**

முற்றிலும் உண்மை. எனது திரைப்படத்திலும் இதற்கு முன்னர் எடுத்த குறுந் திரைப்படத்திலும் ஒரு போதை சம்பந்தமான பெற்றோரின் கதை. அதில் போதை அருந்துவதாகவோ எந்தக் காட்சியும் இல்லை. இவ்வாறு இல்லாமலே வெற்றி பெற்றிருந்தேன். குவியம் அகம் விருதுகளையும் பெற்றிருந்தேன். இன்று வருகின்ற பெரும்பாலான சினிமாக்களும் போதையில் வருகின்ற வருமானத்தை வைத்து படத்தினை தயாரிக்கின்றார்கள் போல இருக்கின்றது. இன்று அரசாங்கத்துக்கும் கூட அதனூடாக கிடைக்கின்ற வருமானமும் கூடுதலாகவே இருக்கின்றது. அது மட்டும் இல்லாமல் தற்போதைய சினிமாக்களில் அதன் பெயர்களும் உச்சரிக்கப்படுகிறது. காட்சியிலும் காட்டப்படுகின்றது.

**8—ஒரு திரைப்படத்திற்கு உள்ள சவால்களை கஷ்டங்களை விமர்சகன் பார்க்கத் தவறிவிட்டான்.....என்ற ஆதங்கம் மனதில் எழுந்த சந்தர்ப்பம் உண்டா....?**

சிலரின் விமர்சிப்பவர்களுக்கு அவர்களுக்கு நான் பதிலளித்தால் அவர்கள் அதற்கும் ஒரு விமர்சனத்தை வைப்பார்கள். அது அவர்களின் வேலை.

விமர்சனங்கள் பாராட்டத்தக்கது. அது தரமானதாகவும் நியாயமானதாகவும் இருக்க வேண்டும்.

ஒரு திரைப்படத்தில் ஒரு இயக்குனர் சகலவற்றுக்கும் பொறுப்பாக இருப்பார். ஒரு திரைக்கதை நூறு வீதம். மற்றைய இணை நடிகர்கள், மொழி. இது போன்ற அனைத்து விடயங்களும் 10, 10 விதங்களில் தாக்கம் செலுத்தும். ஒரு கதையில் தவறு அல்லது திரைக்கதையில் கோளாறு இருக்குமாயின் மற்ற அனைத்தும் தோற்றுவிடும். கதை சிறப்பாக இருந்தாலும் இதில் தவறிடுகின்ற போதும் அதுவும் நேரடியாக இயக்குநரையை பாதிக்கும். ஒரு திரைப்படத்துக்குப் பின்னால் பலரின் அர்ப்பணிப்புகள் இருக்கும். அது அனைவரின் அர்ப்பணிப்பும் சுமந்து இயக்குனர் அதே கனவளவு அர்ப்பணிப்பை செய்ய வேண்டும்.

**9—ஒரு முழுநீள சினிமாவில் சொல்லப்படும் கருத்துக்கள் குறுந்திரைப்படத்தில் விரைவாக சொல்ல முடிகிறதா....?**

சிறந்த கருத்துக்களை சொல்ல முடியும். இன்று ஒரு குறுந் திரைப்படத்துக்கான கதையை முழு நீல திரைப்படமாக இயற்றப்படுகிறது. இன்று இருக்கின்ற தொழில்நுட்ப வளர்ச்சியில் மனித அறிவு வளர்ச்சிக்கு குறுகிய நேரத்தில் ஒரு கதை சொல்வதே சிறந்தது. அதனை பார்வையாளர்கள் முழு நீள திரைப்படமாக அவர்களின் மனதுக்குள் கண்ணுக்குள் உணர வைக்க முடியும்.

**10—இலங்கை சினிமா துறையை பொருத்தளவில் இன்னும் பல மாற்றங்கள் நிகழவேண்டும் என்று எண்ணிய சந்தர்ப்பம் எது?**

நிச்சயமாக

இலங்கை சினிமா என்று அழைக்கக்கூடிய சினிமாவாக எல்லா மாவட்டங்களிலும் எடுக்கப்படுகின்ற அழைக்கப்பட வேண்டும்.

விகடன் விருதுகள் போன்று இலங்கையிலும் நல்ல சினிமாக்களுக்கு விருதுகள் வழங்கப்பட வேண்டும்.

**11—உங்களுக்கு கிடைத்த சாதனை விருதுகள் மற்றும் நேர்காணலின் இறுதியாக என்ன சொல்ல வருகிறீர்கள் ?**

சிறந்த இயக்குனராகவும் ஒளித் தொகுப்பாளராகவும் விருதுகளை பெற்றிருக்கின்றேன்.

எனது திரைப்படத்திற்காக அதில் பங்காற்றியவர்களுக்காக எட்டு விருதுகள் பெற்றிருக்கின்றார்கள். கடுமையான உழைப்பு விடா முயற்சி அதன் மீது உள்ள எண்ணம் அதன் மீது உள்ள நமது அறிவு, தன்னம்பிக்கை. இது எந்த ஒரு விடயத்தில் இருந்தாலும் வெற்றியை சுவைக்காமல் ஒரு மனிதன் இறப்பதில்லை.

# மன்னாரில் இன்று ஜூனியர் சுப்பர் சிங்கர் போட்டி






C J Pramoters & Dhedjassam Event Solutions அமைப்பு சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடனும் தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் வடமாகாணத்தில் நடத்தி வரும் ஜுனியர் சுப்பர் சிங்கர் போட்டியின் இரண்டாவது குரல் தேர்வு யாழ்ப்பாணம், மருதனார்மடத்தில் உள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்தப் போட்டியின் மூன்றாவது குரல் தேர்வு குளிரூட்டப்பட்ட மன்னார் நகர சபை மண்டபத்தில் நேற்று நடத்தப்பட்டது. அந்தப் போட்டியின் தொடர் நிகழ்வும் இன்றும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன் இறுதிப் போட்டி 2024 செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய கலாசார நிலையத்தில் நடத்தப்படும். இந்த இறுதிப் போட்டியில், புகழ்பெற்ற கர்நாடக இசைப் பாடகி. டி. கே. பட்டம்மாளின் பேத்தியான நித்யஸ்ரீ மகாதேவன், தமிழ் திரைப்பட பாடகரும் விஜய் தொலைக்காட்சியில் நடைபெற்ற சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பட்டத்தை வென்றவருமான திவாகர், சுப்பர் சிங்கர் புகழ் தென்னிந்திய பின்னணிப் பாடகர் சத்தியபிரகாஷ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



நடிகை நயோமி கணேஷன் சகோதர மொழி முழு நீள சிங்கள படத்தில் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். அது பற்றிய கலந்துரையாடல் அண்மையில் முன்னாள் அமைச்சர் ரவிகருணாநாயக அலுவலகத்தில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள்.






ஸயூரிகா கதிர்காம கந்தனுக்கு முடி காணிக்கை செலுத்திய போது......


Vinothan Rasmika

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜுலை மாதம் 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.